

# காஸா

## ஒரு துயரத்தின் அலறல்

# காஸா

## ஒரு துயரத்தின் அலறல்

தொகுப்பு

**மௌலவி சையத் அப்துர் ரஹ்மான் உமரி**

**அபூஷேக் முஹம்மத்**

வெளியீடு

*மேற்கு பதிப்பகம்*

மதுரை

*புதிய சமுதாயம் அறக்கட்டளை*

கோயமுத்தூர்.

தொடர்பு எண்: 9787675791, 7871611173

# காஸா

## *ஒரு துயரத்தின் அலறல்*


தொகுப்பு

**மௌலவி சையத் அப்துர் ரஹ்மான் உமரி**

**அபூஷேக் முஹம்மத்**



வெளியீடு

*மேற்கு பதிப்பகம்*

மதுரை

*புதிய சமுதாயம் அறக்கட்டளை*

கோயமுத்தூர்.

தொடர்பு எண்: 9787675791, 7871611173

**காஸா:** ஒரு துயரத்தின் அலறல்!

*தொகுப்பு*
அஷ்ஷைஃக் சையத் அப்துர் ரஹ்மான் உமரி
சகோதரர் அபூ ஷைக் முஹம்மத்

*விலை*
Rs 100.00

*பக்கங்கள்*
160

*முதல் பதிப்பு*
ஜனவரி, 2015 ரபீஉல் அவ்வல் 1436

*ஒளி அச்சு*
ஸைஃப் செந்தில், 9698912124

*வெளியீடு*
**மேற்கு பதிப்பகம்,** மதுரை.
*பேச*: 9597668881

*அச்சு*: Iqbal Printers, Chennai

merkubooks@gmail.com

*மற்றும்*
***புதிய சமுதாயம் அறக்கட்டளை,*** கோயமுத்தூர்.
தொடர்புக்கு : +91-78716 11173, 9787 6757 91

*விற்பனையும் வினியோகமும்*
**தடம் பதிப்பகம்**
5, காஜிமார் தெரு (பெரியபள்ளி எதிரில்)
மதுரை 625 001. தொடர்புக்கு: 98655 05450

***பொங்கு கருணையாளன், தொடர் கிருபையாளனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால்***

# பதிப்புரை

*அன்பிற்கினிய சகோதரர்களே!*

*அஸ்ஸலாமு அலைக்கும் (வரஹ்)*

புகழனைத்தும் அகில உலகங்களையும் படைத்து, பரிபக்குவப் படுத்தும் அல்லாஹ் ஒருவனுக்கே!

இறைவனைப் போற்றிப் புகழ்ந்தவாறு ‘மேற்கு’ பதிப்பகத்தின் முதல் வெளியீடான இந்நூலை தமிழ் முஸ்லிம் சமூகத்திற்கு வழங்குகிறோம்.

உயிர்களனைத்தையும் படைத்த ஒரே இறைவனின் கலிமாவை மேலோங்கச் செய்யும் சிந்தனைப் போக்குடைய நூல்களைப் பதிப்பிப்பது ‘மேற்கு’ பதிப்பகத்தின் நோக்கமாகும்.

ஏற்கனவே முஸ்லிம் உலகில் நன்கு நிறுவப்பட்ட கோட்பாடுகளையும் நம்பிக்கைகளையும் அடுத்த தளத்திற்கு எடுத்துச் செல்லும் தீவிர முயற்சியுடன் செறிவுடைய நூல்களை வாசகர்கள் இனி எதிர்பார்க்கலாம் - இன்ஷா அல்லாஹ்!

‘தீவிரவாதம்’ என்கிற சொல்லை முஸ்லிம்களுக்கு எதிரான வலிமையான ஆயுதமாக்கி, உலகெங்கும் உள்ள முஸ்லிம் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் மீது இழைக்கப்படும் அநீதிக்கும் - அவர்கள் மீது தொடுக்கப்படும் பயங்கரவாதத் தாக்குதலுக்கும் எதிராக ஒலிக்கும் கலகக் குரலாக உதயமாகிறது ‘மேற்கு’ பதிப்பகத்தின் இந்நூல். அல்ஹம்துலில்லாஹ்!

முஸ்லிம் உலகில் ஃபலஸ்தீன பூமிக்கான இடம் என்ன, அதை அடைவதில் உள்ள சிக்கல்கள், உள் பிரச்சனைகள் என்ன, தவற விடப்பட்ட தருணங்கள் என்னென்ன, இனி செய்ய வேண்டியது என்ன போன்றவை இஸ்லாமியப் பார்வையிலிருந்து விரிந்து செல்கிறது இந்நூலில்.

ஃபலஸ்தீனம் தொடர்பான வரலாறு, பூகோள, அரசியல் பார்வையோடு நம் ஈமானையும் உரசிச் செல்லும் மௌலவி சையத் அப்துர் ரஹ்மான் உமரீயின் வழக்கமான எழுத்து இந் நூலை மேலும் விறுவிறுப்பாக்குகிறது. அவருக்கு அல்லாஹ் கிருபை செய்வானாக!

இந்நூலுக்காகப் பணி புரிந்த அனைவருக்கும் இறைவனின் அருள் நின்று நிலவுவதாக!

படியுங்கள்!

எல்லாக் காட்சிகளையும் அதன் மறைபொருளோடு புரிந்து கொள்வதில்தான் வெற்றிக்கான சூட்சுமம் உள்ளது

கலிமாவை மேலோங்கச்செய்யும் சிந்தனைப் போக்கையும், தவறாக புரிந்துகொள்ளப்பட்டிருக்கும் இஸ்லாமிய அரசியல் கருத்தாக்கத்தை சரியாக விளங்க வைக்கும் முயற்சியிலான நூல்களையும் பதிப்பப்பதிலும் இந்த *மேற்கு பதிப்பகம்* ஈடு படும். இன்ஷாஅல்லாஹ் !

சகோதரர்கள் அனீஸ் அஹமதோடு இணைந்து, எமது நெடுங் காலத் திட்டமான *மேற்கு பதிப்பகத்தின்* முதல் வெளியீடாக, உலகலாவிய இஸ்லாமிய அரசியலை விரிவாக அலசும் 'காஸா' வை பதிப்பதில் மகிழ்ச்சியடை கிறோம். சமகால தமிழ்ச் சமூகத் தில் நிலவும் நமக்கான அரசியல்/இலக்கிய வெற்றிடத்தை சிறு துறும்பாகவேனும் நிரப்ப விரும்புகிறோம். நோக்கம் நிறைவேற எல்லாம் வல்ல அல்லாஹ்வை பிராத்திப்பதோடு, அதற்கான வழிகாட்டுதலையும் உங்களிடம் எதிர்பார்க்கிறோம்.

உங்கள் சகோதரன்,

**பீர் முஹம்மது கமால்**

மதுரை.

# முன்னுரை

வரலாற்றில் மனித சமூக வாழ்வில் ஆரம்ப காலத்தை அலசி பார்க்கையில் முதல் மனிதர் ஆதம் அவர்களின் மகன் ஆபில், காபில் முதல் ஒருவன் இன்னொருவனை அநியாயமாக கொலை செய்து தன் வன்மத்தை போக்கி கொண்டு அநீதியை நிலை நிறுத்துவதும் குருதியை மண்ணில் ஓட்டுவதும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றது. அது ஒரு பெண்ணிற்காக இரு நபர்கள் மோதிக்கொண்ட செய்தியாக பார்த்தாலும் நடந்த கொலையில் ஒருவர் பிறர் மீது கொண்ட பொறாமையே காரணம். மேலும் அது பிறர் உரிமையை பறிக்கும் வண்ணம் மனித உரிமை மீறலாக உருவெடுத்தது. இது பூமியில் முதல் அநியாயமாக அவதரித்தது.

அடுத்த கட்ட வரலாறுகளை பார்க்கும் பொழுது சமூகங்கள் பெருகி பண்பாடுகளும், வாழ்வியல் முறைமைகளும், அரசாட்சி யும் மனிதர்களுக்கு இடையே நாடுகளுக்கு இடையே கோலோச் சும் பொழுது பொறாமையால் பிறரை அடக்கி ஆளும் எண்ணம் பிறக்கும் பொழுதும் பிறரின் உரிமைகளை அதாவது உயிர்களாக, உடமைகளாக, நாட்டின் எல்லைகளாக, செல்வங்களாக உரிமை களை பறித்து இரத்தம் ஓட்டி ஒரு குழு இன்னொரு குழுவை அநி யாயமாக கொன்று குவித்து அநீதியை நிலை நிறுத்தும் நிலை இன்று காலம் தொட்டே தொடர்ந்து கொண்டே இருக்கின்றது.

அரபு தேச வரலாற்று சமூகங்களில் இஸ்மவேலர்க்கும் இஸ் ரேவேலர்க்கும் இடையே தொடரும் கொள்கை சார்ந்த எதிர்ப்பு களும் நில அபகரிப்பின் உரிமை மீறல்களும் இன்று உலகம் கவனிக்க வேண்டிய மிக முக்கியமான விஷயங்கள். அது நிகழ் காலத்தில் ஃபலஸ்தீன மக்களின் தேசிய பிரச்சினையாக இருக் கின்றது. அது வெறும் தேசிய பிரச்சினை அல்ல. அந்த பகுதி வாழ்மக்களின் உரிமை முழக்கம் மற்றும் கொள்கை யுத்தம் ஆகும்.இந்த நிகழ்விலும் நாம் கவனம் கொள்ள வேண்டிய விஷயம் ஒரு சமூகம் பிற சமூகங்களை அக்கிரமமாக கொன்று குவிக்கும் ரத்த சரித செய்திகள் ஆகும்.

இந்த தொடர் வரலாற்று செய்திகள் ஆய்வில் நியாயத்திற்கு குரல் கொடுப்பதும் அநியாயத்தின் குரல் வலையை நெரிப்பதும் மனிதாபமான மனதின் சிந்தனையின் விடையாக இருக்கின்றது.

இன்றைய காலகட்டத்தில் நீதியை நிலை நிறுத்த பலவழி முறைகள் கையாளப்படுகின்றன. அதிகார வர்க்கத்தை கேள்வி கேட்கும் ஊடகத்துறை அவற்றுள் முக்கிய இடத்தை வகிக்கின்றது. ஆனால், அநீதத்தை தட்டிகேட்கும் வக்கற்ற நிலையில்தான் உலக ஊடகங்கள் இருக்கின்றன. காரணம் தவறு செய்யும் அதிகார மையங்கள் உலக ஊடகங்களை இயக்குகின்றன.

2014 ஆம் ஆண்டின் காஸா யுத்தமும் மனித உரிமை மீறல்களும் குழந்தைகளின் அலறல்களும் எல்லை தாண்டி கேட்காத சப்தங்களாய் மாறின. ஃபலஸ்தீன முஸ்லிம்களின் உரிமையை உலக அரசியல் மையம் எதிர்ப்பதும் அவர்கள் விஷயத்தில் மௌனம் காப்பதும் இஸ்லாமிய கொள்கை எதிர்ப்பின் முக்கிய செயல் வடிவமாகவே ஆகிவிட்டது.

ஒரு கொள்கை எதிர்ப்பின் வேறொரு வடிவமாக நில ஆக்கிரமிப்பு, மனித உயிர்களின் ரத்த ஓட்டம், குருதி வடியும் குழந்தைகளின் அலறல் என தொடர்கின்றது. இதனை உலக அரசியல் மையங்களும் உலக ஊடகங்களும் மறைத்து இன்றும் வேடிக்கை பார்க்கின்றன. நீதியும் உண்மையும் அடக்கப்படும் போது உண்மையை உரக்க சொல்லும் குழுக்கள் ஆங்காங்கே ஏற்படுவது நீதிக்கான நியதி. தனிநபர்கள் முதல் துறை சார்ந்த வல்லுனர்கள் வரை உண்மைக்கு உறுதுணையாக நிற்க பலமான வழிமுறைகள் ஏற்படுவது நீதி வெல்லும் என்பதற்கான அத்தாட்சி!.

அவ்வகையில் மக்கள் கவனத்தை காஸாவின் பக்கம் திருப்பும் பல பணிகள் போர்க்காலத்தில் நடைபெற்றன. அம்மக்களை காக்கும் பணிகளில் மருத்துவர்கள்,செவிலியர்கள், ஹமாஸ் வீரர்கள், ஆம்புலன்ஸ் ஓட்டுனர்கள், சமூக சேவகர்கள் என பலரும் முத்திரை பதித்தனர். ஊடகவியலாளர்கள் பலர் கள செய்திகள் தரும் முயற்சியில் இஸ்ரேலிய ஏவுகணை தாக்குதலில் நீதிக்கான பாதையில் உயிர் துறந்தனர். காஸா யுத்ததில் நீதிக்கான ஊடகவியலாளர்கள் செய்த பணிகள் மறைந்து போகாத வீர வடுக்கள்!. இந்த உலக ஊடகங்கள் இஸ்ரேலியர்களுக்கு ஆதரவாக உண்மை

செய்திகளை மறைக் கும் பொழுது அல் ஜஸீரா, ஷிஹாப் நியூஸ், குத்ஸ் நியூஸ், ஃபலஸ்தீன் டிவி, ஆர் என் என், எகிப்து மற் றும்ஃபலஸ்தீன் நியூஸ் ஏஜென்சிகள் போன்ற செய்தி நிறுமங் களும் ஊடகவியலாளர்களும் களத்தில் இறங்கி காஸா மக்க ளுக்கு ஆதரவு தந்து உண்மையை உலக அரங்கிற்கு சொன்னது கவனிக்கப்பட வேண்டிய விஷயம். மேலும் காதா உவைஸ், அஹ்மத் மன்சூர் போன்ற பத்திரிக்கையாளர்கள் திறம்பட தம் கருத்துகளை காஸாவிற்கு ஆதரவாக வைத்து உலகின் கவனத்தை ஈர்த்தனர். நீதிக்கான மீடியாக்கள் குறைந்த பட்சமே இருந்தாலும் அவை காஸா மக்களின் நியாயத்தை உலகம் அறிய செய்தன!.

செய்திகள் அரபு மொழி நீதிக்கான ஊடகங்களில் சிலவற்றில் வந்தாலும் உலக ஊடகங்களில் அவற்றை பரப்பவில்லை. அதேநேரத்தில் இந்தியாவில் ஊடகங்கள் செய்திகளை வெளி யிட தயார் இல்லை.போர் நேரத்தில் இரவு பகலாக தமிழ் அவ் வப்போது நேரலையாக முகநூலில் தமிழ் பேசும் உலகிற்கு காஸா குறித்த மக்கள் நிலையையும், ஹமாஸின் போர் அறிக்கைகளை யும் ஃபிளாஸ் நியூஸ் செய்திகளாக என் நண்பர்கள் மூலம் உலகிற்கு தரும் வாய்ப்பு உருவானது.

செய்திகளை கவனிக்க வைக்க செய்த வார்த்தை உத்திகளும், எழுச்சியான சொற்களும் நையாண்டி எதிர்ப்புகளும் மக்களி டையே வேகமாக செல்ல காரணமாய் இருந்தன. தமிழகத்திலும் இலங்கையிலும் உள்ள செய்தி வலைதளங்கள் என் வலைப் பக்க முகநூல் செய்திகளை தொடர்ந்து பரப்ப ஆரம்பித்தன.

காஸா குறித்த செய்திகளை தொகுப்பது என்பது மகத்தான பணி! எழுத்தாளரும் இஸ்லாமிய அறிஞருமான சையத் அப்துர் ரஹ் மான் அவர்கள் பற்பல கட்டுரைகளைத் தொகுத்து 150 பக்கங்க ளுக்கு குறையாத நூல் ஒன்றை உருவாக்கியுள்ளார். தமிழ் பேசும் சமூகம் படிக்கும் வகையிலும் பொது உலக அரசியல் தளத்திற்கு உண்மையை எடுத்துரைக்கும் வகையிலும் இந்த நூல் திகழும் என்பதில் ஐயம் இல்லை. இந்த நூல் குறித்த ஆக்கங்களில் எமது உழைப்பும் இருப்பது எங்களுக்கு நிறைவாய் இருக்கின்றது.

முகாமை: மதுரை **அபூ ஷைக் முஹம்மத்**

بسم الله الرحمن الرحيم

# முகவுரை

*இஸ்லாமிய சமூகத்தை ஐந்து அடிப்படைகளில் இஸ்லாம் ஒன்று திரட்டுகின்றது. கடவுட் கோட்பாடு (அகீதா), சட்ட திட்டங்கள் (ஷரீஆ), இஸ்லாமியப் பண்பாடு (ஹழாறஹ்), சமூகம் (உம்மஹ்) மற்றும் இஸ்லாமிய அரசு (தாருல் இஸ்லாம்)*

*அனைத்து கோணங்களிலும் அனைத்து பொருள்களிலும் ஒன்று பட்ட சமூகமாக இஸ்லாமிய உம்மத் திகழும் காலம் வரை இச்சமூகம் 'ஒருடலாகவே' காட்சிதரும். ஒரு பகுதி, ஓர் உறுப்பு நலம் குன்றினாலும் மற்றெல்லா உறுப்புகளும் கிளர்ந்தெழுந்து சரிசெய்யும் முயற்சியை மேற்கொள்ளும்! ஏதேனும் ஒரு பகுதியில் இருந்து 'வாஹ் இஸ்லாமாஹ்' (இஸ்லாமிய சமூகமே!) என்னும் அலறல் எழுந்தால் முழு இஸ்லாமிய உலகமும் விரைந்தோடி வந்துசேரும்!*

*ஆர்ப்பாட்டங்கள், சாலை மறியல்களுக்கான 'மக்கள் திரள்' அல்ல, இஸ்லாமிய மேலாண்மைக்கான, இறை வார்த்தையை மேலோங்கச் செய்வதற்கான ஒன்றுதிரள், இது!*

*இப்படித் திரண்ட இஸ்லாமிய சமூகம்தான் எண்பதாண்டுகளுக்குள் ரோமானிய பேரரசை தன் ஆளுமையின் கீழ்க் கொணர்ந்தது. ஏறக்குறைய எட்டு நூற்றாண்டுகள் போரிட்டு அமைக்கப்பட்ட ரோமானியப் பேரரசை 80 ஆண்டுகளுக்குள் வென்றது, இஸ்லாமிய சமூகம்!*

*வரலாற்றை விரியுங்கள்!. சிலுவைப் போர்களின் போதும் தாதாரியப் படையெடுப்புகளின் போதும் இஸ்லாமிய சமூகம் வீறுகொண்டு போரிட்ட காட்சிகளை ரத்தமும் சதையுமாக இன்றும் பார்க்கலாம்.*

*முதலாம் உலகப்போருக்குப் பின், போரில் தோற்ற முஸ்லிம்கள், பலவாறு சிதைக்கப்பட்டு உருக்குலைப்பு (முஸ்லா) செய்யப்பட்டார்கள். பண்பாட்டு ரீதியாகவும் கோட்பாட்டு ரீதியாகவும் இவ்வுருக்குலைப்பு அமைந்திருந்தது.*

*1924 க்குப் பிறகு பெயருக்கு லேபிள் போல் ஒட்டிக் கொண்டிருந்த துருக்கிப் பேரரசு வீழ்த்தப்பட்டபிறகு இந்த உருக்குலைப்பையே தங்கள் உருவமாக நம்பியேற்றுக்கொள்ளும் நிலைக்கு சிறுகச் சிறுக முஸ்லிம்கள் தள்ளப்பட்டார்கள். அதன் விளைவை இன்று நம் கண்களால் அகலப் பார்க்கின்றோம். இந்திய முஸ்லிம்கள் என்று சொல்வதற்கு கொஞ்சமும் நாம் வெட்கப்படுவதில்லை!*

*ஸ்பெயினில் தொடங்கிய வீழ்ச்சி இன்று இஸ்ரேலில் தனது கோர முகத்தைக் காட்டி வெறித்தனமாக கூச்சலிடுகின்றது. நாம் எதைப் பற்றியும் கவலைப் படாமல் மௌலூதைப் பற்றியும் மீலாதைப் பற்றியும் தர்க்கித்துக் கொண்டுள்ளோம். பித்அத்களை எதிர்ப்பதாக சொல்லிக் கொள்வோர் இஸ்லாமிய அரசை வீழ்த்த ஆயிரக்கணக்கான டாலர்களை கொட்டிக் கொடுக்கின்றார்கள். அவர்களுக்குப் பின்னால் நின்று தொழுவதைப் பற்றி நாம் கேள்வி கேட்பதே கிடையாது.*

*அண்ணல் நபிகளார் குறிப்பிட்டதைப் போல, வெறிகொண்ட விலங்குகள் அனைத்தும் மூர்க்கமாக இஸ்லாமிய உம்மத்தின் மீது பாய்ந்து கொண்டுள்ளன. நமக்கு ஏதும் நேர்ந்துவிடவில்லையே என்று இன்னமும் நிம்மதியோடு வீட்டில் முடங்கிக் கிடக்கின்றோம், நாம்!*

காஸா- ஒரு துயரத்தின் குரல் என்னும் சிறுநூலை தொகுத்து அளித்தபிறகு கடமை ஒன்றை நிறைவேற்றிவிட்ட சிறு உணர்வு ஒன்று தோன்றுகின்றது. *'காஸா- ஃபலஸ்தீன வரலாற்றின் ஒரு முக்கிய அத்தியாயம்'* என்னும் தலைப்பில் தில்லியிலிருந்து வெளிவரும் *தஅவா* நாளிதழ் கடந்த அக்டோபர் மாதம் சிறப்பு மலர் ஒன்றை வெளியிட்டது. அதைப் படித்த மாத்திரத்தில் எவ்வடிவத்திலாவது அதனை தமிழில் தரவேண்டும் என்னும் உந்துதல் இயல்பாக உள்ளத்தில் பீறிட்டது. *ரமழான்* மாதத்தில் *காஸா*வில் வாழும் முஸ்லிம்களை கொன்று குவிப்பதில் மும்முரமாக இஸ்ரேல் ஈடுபட்டிருந்தது.

*ரமழான்*பெருநாளை மகிழ்ச்சியோடு கொண்டாட முடியாமல் பலர் தவித்ததையும் கண்டேன். பெருநாள் தொழுகையின் போது சகோதரர் இஸ்மாயீல் இம்தாதி ஆற்றிய காஸாவைப் பற்றிய

உரையைக் கேட்டு பலர் கண்ணீர் சிந்தியதையும் ஸ்தம்பித்துப் போய் நகராமல் நின்றிருந்ததையும் அம்மக்களுக்காக திரட்டப் பட்ட நிதித் துண்டில் அள்ளி அள்ளி போட்டதையும் கண்டேன். உரையாளர், கேட்பாளர் என அனைவரிடமும் தங்களால் முடிந் தது இவ்வளவுதான் என்னும் உணர்வு ஏறக்குறைய குறுகுறுத்துக் கொண்டிருந்தது.

அச்சமயத்தில் முகநூல் பக்கங்களை சகோதரர் *அபூ ஷைக் முஹம்மத்* வருத்தத்தாலும் துயரத்தாலும் நிரப்பிக் கொண்டி ருந்தார். உலகின் பல பகுதி மக்களையும் அவை கரைய வைத்துக் கொண்டிருந்தன.

உண்மையில் இவர்கள் அனைவரும் எழுதியதைத்தான் நான் இங்கே திரட்டி, தமிழ்ப்படுத்தி வாசகர்களின் பார்வைக்கு வைத்துள்ளேன். *தஅவா* நாளிதழில் வெளியான கட்டுரைகளை எழுதிய ஆசிரியர்களும் சகோதரர் *அபூ ஷைக் முஹம்மது*வும் தான் இந்நூலுக்கு உரியவர்கள். உடனுக்குடன் இந்நூலின் மெய்ப்பை சரிபார்த்து விரைந்து திருத்தி உதவிய சகோதரர் *அனீஸ் அஹ்மது*வும் நன்றிக்குரியவர்.

நம்மால் கவலைகளைப் பரப்பத்தான் முடிகின்றது, தீர்வை அல்ல என்பதை கடைசியில் வருத்தத்தோடு சொல்லிக் கொள் கின்றேன். காஸாவைப் பற்றி எழுதப்படுகின்ற எந்நூலும் அவர் களின் துயரத்தை தீர்த்துவிடாது, அவர்களுக்குரிய வாழ்க்கைக் கான உத்தரவாதத்தைத் தந்துவிடாது.

அதிகாரத்தையும் ஆற்றலையும் அபகரித்து வைத்திருப்பவர் களைக் கண்டு நம்மைப் போன்ற எளியவர்கள் நெஞ்சம் குமுறிய வாறு விசும்பத்தான் முடியும். அவர்களுக்கும் மேலான அதி ஆற்றல் படைத்த வல்லோனிடம் கரமேந்தி கதறமுடியும்.

அதைத்தான் அதனை மட்டும்தான் இந்த நூல் செய்கின்றது.

**சையத் அப்துர் ரஹ்மான் உமரி**

غَفَرَ اللّٰهُ لَهُ وَلِوَالِدَيْهِ

# ஃபலஸ்தீன வரலாற்றின் முதன்மைப் பக்கம் – காஸா!

*உலகளாவிய இஸ்லாமிய சமூகம் தன் வரலாற்றின் முக்கிய மானதொரு கட்டத்தைக் கடந்து சென்று கொண்டிருக்கையில் காஸா நிகழ்வு இடம்பெற்றுள்ளது. இன்று உலகில் மனிதகுல எதிர்ப்புச் சக்திகள் இரண்டு அணிகளாக நின்று கொண்டு தங்கள் திட்டங்களை செயல்படுத்தி வருகின்றன. முழு உலகத்தையும் எதிர்ப்பே இல்லாமல் தன் பிடிக்குள் கொண்டு வருகின்ற முயற்சியில் அமெரிக்கா, இஸ்லாமை தாக்கத் தொடங்கி யுள்ளது. இந்து நாளிதழ் சொல்வதைப்போல, 'புவியரசியல் விளையாட்டுகளில் அமெரிக்கா மட்டுமே எதற்கும் கட்டுப் படாமல் விளையாடிக் கொண்டிருக்க முடியும் என்ற நிலை உருவாகி யிருக்கிறது'. (தி இந்து நாளிதழ், டிசம்பர் 9, 2014)*

இஸ்லாம் செயற்படுத்தப்படுவதை எப்படியாவது தடுத்தாக வேண்டும்; *மனிதர்களின் வாழ்க்கையில் அது வாழ்வியல்* கோட்பாடாக கோலோச்சுவதை தடுத்துநிறுத்தியே ஆகவேண் டும் என்னும் தனது கோர செயல்திட்டத்தை படிப்படியாக அது, *நிறைவேற்றி வருகின்றது. 13 ஆண்டுகளுக்கு முன்பு நியூயார்க் நகரத்தின் இரட்டைக் கோபுரங்கள் தகர்க்கப்பட்ட நாடகத்தைத்* தொடர்ந்து, *'பயங்கரவாதத்திற்கு எதிரான போர்'* என்னும் பெயரில் இஸ்லாமிற்கெதிரான போரைத் தொடங்கியுள்ளது.

இன்னொரு பக்கம், *'அகன்ற இஸ்ரேல்'* என்னும் தனது *கனவை நனவாக்குவதற்காக பகிரங்கமான பயங்கரவாத* செயல்களைக் கூச்சமில்லாமல் இஸ்ரேல் செய்துவருகின்றது.

*அரசியல், இராணுவம், பொருளாதாரம், அயலுறவு என எந்தத் துறையிலும்அமெரிக்காவிற்கு சவால்விடும் நிலையில் இன்று உலகில் யாருமில்லை! அதுபோன்றே இஸ்ரேலிய பயங்கர வாதத்தை எதிர்கொள்ளும் நிலையில் அரபுலகத்திலோ வட*

ஆப்பிரிக்காவிலோ எந்த முஸ்லிம் நாடும் இல்லை! சிலகாலம் முன்புவரை சிறிய அளவிலாவது அதனை எதிர்த்துவந்த நாடுகள்கூட இப்போது அதன் பிடிக்குள் அடங்கிவிட்டன.

சூழ்நிலை மென்மேலும் கொடூரமாகிக்கொண்டே போகின்றது. அளவற்ற இயற்கை வளங்களை இறைவன் அரபு நாடுகளில் கொட்டி இருக்கிறான். இஸ்லாமிய புண்ணிய ஸ்தலங்களுக்கு பணிவிடை செய்கின்ற, பாதுகாக்கின்ற பொறுப்போடு இஸ்லாமிய உலகத்திற்கு எதிரான தாக்குதல்களை எதிர் கொண்டாக வேண்டிய பொறுப்பையும் அவர்கள்மீதே சுமத்தியிருக்கிறான். ஆனால் அவர்களோ தம் பொறுப்பை மறந்து, அமெரிக்கா மற்றும் இஸ்ரேலுடைய அடியாட்களாய் மாறி, உலக அரங்கில் முழு இஸ்லாமிய சமூகம் இழிவிற்கும் அவமானத்திற்கும் ஆளானாலும் பரவாயில்லை என்று தங்கள் கருவூலங்களை நிரப்பிக் கொண்டுள்ளார்கள்.

ஸிஐஏ, மொஸாட் மற்றும் இஸ்லாமிற்கெதிரான பகை நிறுவனங்களின் துணையோடு எகிப்து நாட்டில் *இஃக்வானுல் முஸ்லிமீன் (இஸ்லாமிய சகோதரர்கள்)* ஆட்சியை நசுக்கி, இஸ்லாமிற்கெதிரான ராணுவம் வலுக் கட்டாயமாக ஆட்சியில் அமர வைக்கப்பட்டுள்ளது. இப்போது ஃபலஸ்தீனத்தின் *ஹமாஸ்* ஆட்சிக்குக் குறி வைக்கப்பட்டுள்ளது.

இஸ்லாமிய ஆட்சி, இஸ்லாமிய சமூகம் எனப் பேசுவோர் அப்பகுதியில் இருக்கவே கூடாது. அப்போதுதான் தங்கள் மன்னராட்சிக்கு எந்தவிதமான ஆபத்தும் நேராது என்பது ஒன்று. இரண்டாவது, தான் நினைத்தபடி அகன்ற இஸ்ரேலை உருவாக்கு வதற்கு இஸ்ரேலுக்கும் தடை இருக்காது.

இன்று இஸ்லாமிய சமூகம் சந்திக்கும் அவல நிலை இதுவே. அதன் வரலாற்றில் இதற்கு முன்பும் எத்தனை எத்தனையோ அவலங்கள் கடந்து சென்றிருக்கின்றன. அவையாவும் வெளியிலிருந்து எதிரிகளால் நேர்ந்தவை. உள்ளிருக்கும் நயவஞ்சகர்களின் கைகள் கண்டிப்பாக அவற்றில் இருக்கவே செய்தன என்றாலும் அவை யாருமறியாமல் மறைவாகவும் ஓரளவிற்கும் தான் இருந்தன. ஆனால், இன்றோ நயவஞ்சகர்களின் *'ரோல்'* பரந்துபட்டும் பகிரங்கமாகவும் உள்ளது. அது மட்டுமல்ல,

பொது முஸ்லிம்களின் மார்க்க அடையாளத்தை முழுவதுமாக அழித்தொழிக்கும் வலிமையோடும் உள்ளது. கணக்கற்ற இயற்கை வளங்களையும் அவர்கள் பெற்றிருக்கின்றார்கள்.

வேறு வழியில்லாமல் இஸ்லாமிய அறிஞர்கள் பலரும் அதனை ஆதரித்தாக வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார் கள். இஸ்லாமிய உலகம் சந்திக்கின்ற இரண்டாவது, அவல நிலை இதுவாகும்.

'காஸா' - இன்று இஸ்லாமிய பகைவர்கள் அனைவரின் கவனத்தை கவர்ந்திருப்பதற்கும் காரணமில்லாமல் இல்லை! ஒரு சிறிய பகுதிக்குள் இருந்தாலும் இஸ்லாமிய உணர்வு, இஸ்லாமிய ரோஷத்தின் அடையாளச் சின்னமாக ஜகானாக 'ஹமாஸ்' திகழுகின்றது. அதனுடைய தனித்துவ ஆட்சி முறை, குறைவான வாய்ப்புகளைக் கொண்டே குடிமக்களின் குறை களைத் தீர்க்கின்ற விதம், அரசு நிர்வாகம் போன்றவை உலக மக்களின் கவனத்தை ஈர்த்து வருகின்றன. இன்றுவரை உலகம் இப்படிப் பட்டதோர் அரசைக் கண்டதில்லை.

இதேபோன்றதோர் உதாரணத்தை இதற்கு முன்பாக எகிப்தின் இஃக்வான்களின் ஓராண்டு கால, 'மூர்ஸி' அரசாங்கம் செய்து காட்டியது. அதனைப் பொறுக்க முடியாத ஷைத்தானிய சக்திகள் கவிழ்த்து கும்மாளம் போட்டுக் கொண்டுள்ளன.

அதன்பின், ஸியோனிச பகைவர்களின் கொக்கரிப்புகளுக்கு மத்தியில் ஹமாஸ் பொறுப்பாளர்கள் ஒரு செம்மையான அரசாங்கத்தை நடத்தி வருகின்றனர். அதுமட்டுமல்ல, ராணுவ அளவிலும் தங்கள் சொற்ப பலத்தைக் கொண்டு 'அற்புதங்களை' நிகழ்த்திக்காட்டி உலகத்தையே திகைக்க வைத்துவிட்டனர். இவர்கள் இப்படிப்பட்ட 'அற்புதத்தை' நிகழ்த்துவார்கள் என்பதை பயங்கரவாத இஸ்ரேல் கூட எதிர்பார்க்கவில்லை.

ஆனால், ஒன்றை மறந்துவிடக்கூடாது. வல்லரசுகளின் தோள் களில் சவாரித்தவாறு அட்டூழியம் புரிகின்ற ஒரு பயங்கரவாத அரசை களத்தில் எதிர்கொள்வதோ வெல்வதோ அவ்வளவு எளிதான காரியமல்ல. பகைவர்கள் தங்கள் திட்டங்களை மறு பரிசீலனைக்கு உட்படுத்தி பல்வேறு பெரும்பெரும் மாற்றங்

களை இதற்குள் செய்திருப்பார்கள். வழக்கப்படி அரபு வளை குடாவின் பெரிய பெரிய செல்வந்த 'முஸ்லிம்' ஆட்சியாளர்கள் தங்களால் இயன்ற உதவி ஒத்தாசைகளை வழங்கிக் கொண்டிருப்பார்கள்.


உலகலாவிய முஸ்லிம் வெகுமக்கள், பாதிக்கப்பட்டோருக்குத் துணையாக பகைவர்களுக்கு எதிரணியில்தான் நின்கின்றார்கள். ஆனால் அதனால் எப்பயனும் விளையப்போவதில்லை! தார்மீக ஆதரவு மட்டுமே கிடைக்கும்.

எனவே, இஸ்லாமிய சமூகத்தைச் சேர்ந்த ஒவ்வொருவரும் - அவர் எங்கிருந்தாலும் எந்நிலையிலிருந்தாலும் - தன்னால் இயன்றளவு தார்மீக ஆதரவைத் தந்தாகவேண்டியது கடமையாகும்! அறிஞர்களும் செல்வாக்கு படைத்தோரும் தங்கள் 'வட்டத் திற்கு உட்பட்டவர்களிடமும் தங்கள் குரலோசை எட்டும் இடங்கள் வரையிலும்' ஃபலஸ்தீனத்தைப் பற்றியும் சிறப்பாக, காஸாவைப் பற்றியும் உண்மைத் தகவல்களைப் பகிர்ந்தாக வேண்டும், உணர்த்தியாக வேண்டும். இஸ்லாமிய சமூகம் இன்று சந்திக்கின்ற அவல நிலையின் ஒரு பகுதியே காஸா என்பதை உணர்த்த வேண்டுமே தவிர, ஏதோ ஒரு பகுதி மக்கள் பாதிக்கப்படுகின்றார்கள் என்ற அளவில் அல்ல.

பெரும்பாலான உலக மக்கள் இது விஷயத்தில் மௌனமாக இருக்கின்றார்கள் என்றால் அதற்குரிய காரணங்களாவன: (1) உலகின் பெரும்பகுதி மக்கள் மேலை நாட்டினரால் கட்டுப்படுத்தப்படும் ஊடகங்களை நம்புகின்றார்கள். (2) பெரும்பாலான மக்களுக்கு உண்மை நிலவரம் புரிவதே கிடையாது. (3) உலகின் பெரும்பாலான நாடுகள் ஒன்று, அமெரிக்காவின் நண்பர்களாக இருக்கின்றன அல்லது அதைப் பார்த்து பயப்படுகின்றன. மத்திய ஆசியாவிலும் உலகமெங்கிலும் முஸ்லிம்களுக்கு எதிராக அது செய்கின்ற அட்டூழியங்களைக் கண்டும் காணாததைப் போன்று இருப்பதற்கு இதுவே காரணம். அறிவுஜீவிகளின் நிலையும் இதுவே. (4) ஒருசில நாடுகளின் ஆட்சியாளர்கள் (பொது மக்கள் அல்ல) இஸ்லாமிற்கெதிரான நிலைப்பாட்டில் உள்ளதும் காரணம். இவ்விஷயத்தில் அவை அமெரிக்காவோடு ஒத்துழைப்பதையே விரும்புகின்றன. இவற்றுள் சில வல்லரசாக

வேண்டும் என்பதற்காக அமெரிக்காவிற்கு ஒத்து ஊத விரும்புகின்றன. (5) உலகில் பெரும்பாலான நாடுகள் இவ்விஷயத்தில் மௌனம் சாதிக்கும் போது, அதுவும் வளைகுடா அரபு நாடுகளே அமெரிக்காவோடும் இஸ்ரேலோடும் நட்புறவைப் பேணும் போது நாம் மட்டும் எதற்காக வாயைத் திறக்கவேண்டும் என்றும் ஒரு சில நாடுகள் எண்ணுகின்றன.

ஆக, உலக நாடுகளின் ‘சகோதரத்துவ உணர்வு’ எழுச்சி பெறும் நிலையில் இல்லை.



# காஸா – முற்றுகை!

*உலகின் மிகவும் பண்டைய நகரங்களுள் ஒன்றாக காஸா கருதப் படுகின்றது. ஆசியா, ஆப்பிரிக்கா ஆகிய உலகின் இரு பெரும் கண்டங்கள் சங்கமிக்கும் இடத்தில் அமைந்துள்ளது. மத்திய தரைக்கடல் மார்க்கமாக ஐரோப்பாவோடும் தொடர்பைப் பெற்றுள்ளது. எனவே புவியியல் ரீதியாக மிகமுக்கிய இடத்தில் அமைந்துள்ளது, காஸா!*

*உலகலாவிய வியாபார மையமாகவும் ராணுவக் கேந்திரமாக வும் பண்டைக்காலத்தில் இருந்தே புகழ் பெற்றுள்ளது. புராதன முக்கிய பெரு வழிகள் மூன்று இந்நகரில் ஒன்று சேருவது ஒரு முக்கிய காரணம். வியாபாரக் குழுக்கள் எதுவாகயிருப்பினும் இந்நகரை கடந்து சென்றே ஆகவேண்டும். அதுபோன்றே பெரும் பெரும் ராணுவ துருப்புகள் இதனை கடந்தே போயாக வேண்டும். இக்காரணங்களினால் இது மையக் கேந்திரமாக விளங்கியதில் வியப்பொன்றும் இல்லை. இன்றைய மொழி வழக்கில் சொல்வதென்றால் அந்நாளில் இது ஒரு மெட்ரோ சிட்டி-யாகத் திகழ்ந்துள்ளது எனலாம்.*

*கன்ஆன் பகுதி மக்கள் கி.மு 3000 ஆண்டுகளுக்கு முன்பாக இந்நகரை எழுப்பினார்கள் என வரலாற்றாசிரியர்கள் கூறுகின் றார்கள். பிறகு எகிப்து நாட்டு பாரவோன் மன்னர்களின் ஆதிக்கத் தின் கீழ் வந்தது. கி.பி 7ம் நூற்றாண்டில் அரபுக்களின் ஆதிக்கத் தின் கீழ் வந்தது. 12ம் நூற்றாண்டில் புகழ்பெற்ற சிலுவைப் போர்கள் நடைபெற்றன. கிறித்துவர்கள் இதனைக் கைப்பற்றி னார்கள். 16ம் நூற்றாண்டில் உஸ்மானிய கிலாஃபத்தின் கீழிருந் தது. முதலாம் உலகப்போரில் உஸ்மானிய கிலாஃபத் வீழ்ச்சி யுற்றதால் நேச நாடுகளின் கைப்பிடிக்குள் சிக்கி துண்டாடப் பட்டது. பிரிட்டனின் ஆதிக்கத்தின் கீழ் வந்தது.*

*1947 ஆமாண்டு நடைபெற்ற முதல் அரபு-இஸ்ரேல் போரின் பிறகு, எகிப்து நாட்டின் ஆளுகைக்குள் வந்தது. ஆனால், 1967*

ஆமாண்டு நடைபெற்ற ஆறுநாள் போரிற்குப்பிறகு, இஸ்ரேல் இதனைக் கைப்பற்றிக் கொண்டது. இன்றுவரை அதன் பிடிக்குள் தான் இருக்கின்றது.

1993 ஆமாண்டு பி.எல்.ஓ மற்றும் இஸ்ரேலுக்கு இடையே அமெரிக்காவின் தலையீட்டில் ஓர் ஒப்பந்தம் கையெழுத்தானது. *'ஒஸ்லோ ஒப்பந்தம்'* என அது அழைக்கப்படுகின்றது. இதன்படி காஸாவையும் மேற்குக் கரைப் பகுதியையும் படிப்படியாக ஃபலஸ்தீனத்திற்குத் தர இஸ்ரேல் சம்மதித்தது. ஃபலஸ்தீனர்கள் அதனை ஆளும் உரிமையைப் பெற்றார்கள்.

ஆனால், ஆக்கிரமிக்கப்பட்ட ஃபலஸ்தீனப் பகுதியில் இருந்து இஸ்ரேல் வெளியேறுவதும் ஃபலஸ்தீன ஆட்சி அமைவதும் தள்ளிப் போய்க் கொண்டே இருந்தது. ஆகையால், ஃபலஸ் தீனத்தில் பல்வேறு போராட்டக் குழுக்கள் உதயமாயின. *'இன்திஃபாழா'* என அழைக்கப்பட்ட, மக்கள் எழுச்சியும் உத்வேகம் பெற்றது. அம்மக்கள் எழுச்சியின் ஒரு வடிவமே, *ஹமாஸ்!* காஸாவிலிருந்தும் மேற்குக் கரைப் பகுதியில் இருந்தும் இஸ் ரேலை வெளியேற்றவேண்டும் என்பதே இப்போராட்டக் குழுக் களின் குறிக்கோள். அதற்கேற்றாற்போல தன் துருப்புகளை இஸ்ரேல் திரும்பப் பெற்றுக்கொண்டது, யூதக் குடியேற்றங் களையும் காலி செய்தது.

இதற்கிடையே, 2006 ஆமாண்டு ஜனவரி மாதம் ஃபலஸ் தீனத்தில் உள்ளாட்சித் தேர்தல் நடைபெற்றது. *ஃபதஹ்* கட்சி யோடு ஹமாஸூம் தேர்தலில் போட்டியிட்டது. வெற்றிவாகை சூடி யது. இஸ்ரேல் இதனை புறக்கணித்ததோடு அமெரிக்கா உள் ளிட்ட ஐரோப்பிய நாடுகள் அனைத்தும் இத்தேர்தலையும் தேர் தல் முடிவுகளையும் ஒத்துக் கொள்ளாமல் புறக்கணித்தன.

காஸா முற்றுகை - அதுவும் உலகம் காணாத வகையில் பெரு முற்றுகை- தொடங்கியது. ஏற்கனவே காஸாவில் ஃபலஸ்தீனர் களின் நடமாட்டத்தை கழுகுக்கண் கொண்டு இஸ்ரேல் கண் காணித்து வந்தது. இப்போதோ அது மேலும் தீவிரப்படுத்தப்பட் டது. அவர்களது நடமாட்டத்தை முடிந்தளவு குறைப்பதற்காக பல்வேறு உத்திகள் கையாளப்பட்டன. காஸா மற்றும் மேற்குக் கரை எல்லைகள் மின்சார வேலிகளால் அடைக்கப்பட்டன. 24

மணி நேர கண்காணிப்பு கோபுரங்கள் அமைக்கப்பட்டன. இஸ்ரேலுக்குள் நுழையும் வழிகளில் கடுமையான காவல் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. சுருக்கமாக சொல்வதென்றால் காஸாவில் ஹமாஸ் ஆட்சிக்கு வந்ததும் அதனை ஒரு திறந்த வெளி சிறைச்சாலையாகவே இஸ்ரேல் ஆக்கிவிட்டது. நிலம், நீர், வான்வெளி என அனைத்துப் பகுதிகளும் அடைக்கப்பட்டு விட்டன. இஸ்ரேலின் அனுமதியைப் பெறாமல் ஃபலஸ்தீனத்தில் இருந்து யாரும் வெளியேறவோ உள்ளே நுழையவோ முடியாது! அனுமதி பெறாமல் ஒரு பொருளைக் கூட எடுத்துச் செல்ல முடியாது என்றாகி விட்டது நிலைமை. வாழ்வது கடினம் என்றல்ல, வாழவே முடியாது என்றாகி விட்டது.



# ஃபலஸ்தீனம் யாருக்குரியது, இஸ்ரேலுக்கா? முஸ்லிம்களுக்கா?

ஃபலஸ்தீனத்திற்காக நீண்டநெடுங்காலமாக ஃபலஸ்தீனிய முஸ்லிம்களும் யூதர்களும் போராடி வருகின்றார்கள். ஒரு பேச்சுக்கு என்றில்லை, உண்மையிலேயே இரத்த ஆறு ஓடியிருக்கின்றது. தலைமுறை தலைமுறைகள் உயிர்விட்டிருக்கின்றன. இறை நம்பிக்கையாளர்கள் பலர் தங்கள் இன்னுயிர்களை ஈந்திருக்கிறார்கள்.

ஃபலஸ்தீனம் தங்களுடையது என்கின்றார்கள் யூதர்கள். ஆனால், அரை நூற்றாண்டுகளுக்கு முன்பாக வரலாற்றின் எந்த காலகட்டத்திலும் அவர்கள் அப்பகுதியை ஆண்டதாகவோ ஆளுமையோடு தங்கியிருந்ததாகவோ குறிப்புகள் இல்லை.

இதற்கு மாறாக, முஸ்லிம்களுக்கும் அதற்கும் இடையிலான தொடர்பும் உறவும் வரலாறு நெடுக - இஸ்லாமின் ஆரம்ப காலத்தில் இருந்தே - தொடர்ந்து வந்துள்ளது. திருக்குர்ஆனின் 17ம் அத்தியாயத்தின் முதல் வரியே இப்பகுதியைப் பற்றித்தான்.

*'மிகத் தூய்மையானவன்; தன் அடியாரை ஓர் இரவில் அழைத்துச் சென்றவன்! மஸ்ஜிதுல் ஹராமிலிருந்து வெகு தொலைவில் உள்ள மஸ்ஜித் வரையில்! அதன் சுற்றுப்புறங்களை அவன் அருள்வளம் மிக்கதாய் ஆக்கினான். எதற்காக அழைத்துச் சென்றானெனில், தன்னுடைய சான்றுகளை அவருக்குக் காண்பிப்பதற்காக! உண்மையில் அவன் அனைத்தையும் செவியுறுபவன், பார்ப்பவன்'. (திருக்குர்ஆன் 17:1)*

வெகுதொலைவில் உள்ள பள்ளிவாசல் என்பது பைத்துல் முகத்தஸைக் குறிக்கின்றது. அண்ணல் நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் உலகம் முழுவதற்கும் இறைத்தூதராக அனுப்பப்பட்டுள்ளார்கள் என்பதையும் இது

உணர்த்துகின்றது. மக்காவில் உள்ள கஅபாவோடு அண்ணலா ருக்கு என்ன தொடர்பு உள்ளதோ அதே தொடர்பு ஜெருஸலே மில் உள்ள பைத்துல் முகத்தஸோடும் உள்ளது. கூடிய விரைவில் கஅபாவின் சாவியும் பைத்துல் முகத்தஸின் சாவியும் அண்ணலா ரின் கரங்களுக்கு வந்து சேரும் என்னும் முன்னறிவிப்பும் இவ்வசனத்தில் அடங்கியுள்ளது.

மக்கா வெற்றியின்போது கஅபாவின் சாவிகள் அண்ணலாரின் கரங்களுக்கு வந்துவிட்டன. அண்ணலார் மறைந்து ஆறு ஆண்டு களுக்குள் இரண்டாம் கலீஃபா, உமர் ஃபாரூக் அவர்களுடைய காலத்தில் பைத்துல் முகத்தஸுடைய சாவிகளும் வந்து சேர்ந் தன. ஆக, அண்ணலார் உயிரோடு இருந்தபோது கஅபாவின் சாவிகளும் மறைந்த ஒன்றிரண்டு ஆண்டுகளுக்குள் அண்ணலா ரின் உயிர்த்தோழர்களின் கரங்களில் பைத்துல் முகத்தஸ் சாவி களும் வந்துவிட்டன.

ஹிஜ்ரி 17ம் ஆண்டு முஸ்லிம்கள் ஃபலஸ்தீனத்தை வென்றார் கள். ஜெருஸலம் நோக்கி அமீருல் முஃமினீன் உமர் அவர்கள் பயணித்தார். வரலாற்றுச் சிறப்பு மிக்க பயணம் அது. கிறித்துவ பாதியார்கள் உமர் அவர்களின் கரங்களில் அதன் சாவிகளை ஒப்படைத்தார்கள். அப்போது உமர் அவர்கள் நடந்துகொண்ட முறையும் வெளிப்படுத்திய பண்புகளும் இஸ்லாமிய உன்னதப் பண்பாட்டை உலகிற்கு உணர்த்துவன. அக்கிறித்துவ பாதிரியார் களின் உள்ளங்கள் அன்று, கொள்ளைபோயின! அந்த நிமிடமே அவர்களில் பெரும்பாலோர் இஸ்லாமை ஏற்றுக்கொண்டார்கள்.

பைத்துல் முகத்தஸோடு அன்று முஸ்லிம்களுக்கு உருவான தொடர்பு பல நூற்றாண்டுகளாகத் தொடர்கின்றது. இஸ்லாமியப் பண்பாட்டின் மையமாகவே அது மாறிவிட்டது. இடைக்காலத் தில் 1096 ம் ஆண்டு வாக்கில் இஸ்லாம் மற்றும் முஸ்லிம்களுக்கு எதிராக கிறித்துவர்கள் சிலுவைப் போர்களைத் தொடங்கிய போது, சில காலம் அது மற்ற பகுதிகளைப் போன்று ஃபலஸ் தீனமும் கிறித்துவர்களின் கட்டுப்பாட்டின் கீழிருந்தது. முஸ்லிம் கள் ஃபலஸ்தீனத்தை விட்டு வெளியேறினர். ஆனால், இந்த தோல்வியும் வெளியேற்றமும் ஒருசில காலத்திற்கே! விரைவில் தங்கள் தோல்வியை வெற்றியாக மாற்றிக் கொண்டார்கள்.

சுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபி என்றொரு மாவீரர் தோன்றி முஸ்லிம்களுக்கு வெற்றிக்கனியை பறித்துக் கொடுத்தார், மறு படியும் அவர்களை ஃபலஸ்தீனத்தில் குடியமர்த்தினார். இந்தத் தோல்வி கிறித்துவர்களின் முதுகெலும்பையே முறித்துவிட்டது. அதன்பின் பல்லாண்டுகளுக்கு அவர்களால் எழவே முடிய வில்லை. ஃபலஸ்தீனத்தை மட்டுமல்ல அவர்கள் வசமிருந்த வேறுபல பகுதிகளையும் ஸலாஹுத்தீன் அய்யூபி மீட்டெடுத் தார். கடைசியில் 90 ஆண்டுகால ஆக்கிரமிப்பை அடியோடு அகற்றி கிறித்துவ ஆட்சியை வேரோடு பிடுங்கியெறிந்தார். அதன்பின் உஸ்மானிய கிலாஃபத் வீழும் வரை பன்னூற்றாண்டு காலம் ஃபலஸ்தீன புனித பூமி முஸ்லிம்களின் அடைக் கலத்தில் அமைதியாக இருந்தது. இஸ்லாமியப் பண்பாட்டையும் பழக்க வழக்கங்களையும் பாருலகம் முழுக்க பரப்பி வந்தது.

அதன்பின், முதலாம் உலகப்போரின் போது 1917 ஆமாண்டு டிசம்பர் மாதம் 11 ஆம் நாள் கேடுகெட்ட பொழுது விடிந்தது. தங்கள் படை பரிவாரங்களோடு ஆங்கிலேயர் ஃபலஸ்தீனத்தில் நுழைந்து ஆக்கிரமித்துக் கொண்டனர்.

சிறிது காலத்திற்குள்ளாக வேறுபல நாடுகளிலிருந்து விரண் டோடியதைப் போன்று ஃபலஸ்தீனத்தை விட்டும் அவர்கள் விரண்டோட நேர்ந்தது. மத்திய ஆசியாவில் தங்கள் ஆதிக்கம் தொடர வேண்டும் என்றால் அங்கே இஸ்ரவேலர்களுக்கென்று ஒரு தேசம் இருந்தாக வேண்டும் என்னும் முடிவிற்கு அவர்கள் வந்தனர். இஸ்ரேல் என்னும் பெயரில் ஒரு நாட்டை உருவாக்க ஃபலஸ்தீனம்தான் தோதான பகுதி என முடிவெடுத்தனர். அவர்களுடைய ஏகாதிபத்திய கனவை நனவாக்க இதைவிட சிறந்த இடம் வேறு கிடையாது. அந்நாள் முதல் ஃபலஸ்தீன முஸ்லிம்களுக்கெதிராக பல்வேறு கேடுகெட்ட சதித் திட்டங் களை செயல்படுத்தலாயினர். கொடூரமாக முஸ்லிம்களை கொன்று குவிப்பது, பன்னூற்றாண்டுகளாக அங்கு குடியிருந்து வருவோரை விரட்டி அடிப்பது, நாடுகடத்துவது போன்ற நட வடிக்கைகளை தொடங்கினர். ஐக்கிய நாடுகள் சபை இவற்றை எல்லாம் கண்டுகொள்ளவே இல்லை என்பதோடு இதற்கு உகந்த வாறு பல ஏற்பாடுகளை செய்தும் கொடுத்தது. கொஞ்சங்கூட

மனிதநேயமே இல்லாமல் இன்றுவரை தொடர்ந்து அவர்களுக்கு ஒத்தாசை புரிந்தும் வருகின்றது.

இங்கே ஒரு விஷயத்தை நாம் நினைவில் கொள்ளவேண்டும். ஒரு காலத்தில் மற்றவர்களைப் போன்று, முஸ்லிம்களும் பல் வேறு நாடுகளை வெற்றி கொண்டுள்ளார்கள். ஆனால் முஸ்லிம் கள் அடைந்த வெற்றிகளுக்கும் மற்றவர்கள் அடைந்த வெற்றி களுக்கும் இடையே பெரிய வேறுபாடுகள் உள்ளன. நாடுகளை கொள்ளையடிக்கவும் சூறையாடவும் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டவும் தங்கள் ஆட்சிப்பரப்பை விரிவாக்கவும்தான் மற்றவர்கள் நாடுகளை வெற்றி கொண்டிருக்கின்றார்கள். ஆகை யால் அந்நாட்டு மக்களை கொன்று குவிப்பது, அடிமைப்படுத்து வது, பெண்களை வல்லுறவுக்கு உள்ளாக்குவது, மக்களை வலுக்கட்டாயமாக வெளியேற்றுவது, அவர்களை முற்றிலும் வலுவற்றவர்களாக்குவது, அவர்களின் எண்ணிக்கையை குறைப்பது போன்ற நடவடிக்கைகளை தயக்கமே இல்லாமல் செய்திருக்கின்றார்கள்.

இதற்கு நேரெதிராக, முஸ்லிம்கள் வெற்றி பெற்றவிடங்களில் கொடுங்கோல் மன்னராட்சியில் இருந்து மக்களை விடுவிப்பதற் காக போரிட்டிருக்கின்றார்கள். குடிமக்கள் மீது எத்தகைய அராஜகத்தையும் புரியவில்லை, முதியோர் பெண்கள் குழந்தை கள்மீது கைவைக்கவில்லை, எந்த வகையிலும் அவர்களுக்கு இழப்போ இழுக்கோ நேராமல் பார்த்துக் கொண்டார்கள். குடிமக்களோடு பெருந்தன்மையோடும் தாராள மனப் பான்மை யுடனும் நடந்துகொண்டார்கள். அவர்களது உடைமைகளைக் கொள்ளையடிக்கவோ சூறையாடவோ அல்லது அவர்களை இருப்பிடங்களில் இருந்து வெளியேற்றவோ நாடுகடத்தவோ அடிமைகளாக்கி தங்கள் நாடுகளுக்கு கொண்டுசெல்லவோ செய்யவில்லை. அவர்களது மனிதாபிமானத்திற்கு எல்லையே இல்லாமல் இருந்தது. போர் முடிந்தபிறகு, எதிர்த்துப் போரிட்ட எதிரிப்படை வீரர்களில் படுகாயமுற்ற வீரர்களை கொன்று தள்ள எண்ணாமல் தங்கள் கைகளால் சிகிச்சை அளித்தார்கள். அவர் களுக்குத் தேவையான உணவையும் மருந்துகளையும் ஏற்பாடு செய்தார்கள். அது மட்டுமல்ல, அவர்களுக்கு ஒழுக்கத்தை

போதித்தார்கள். தாங்கள் கடைப்பிடித்த உன்னத வாழ்வியல் கோட்பாட்டை அவர்களுக்கு அறிமுகம் செய்தார்கள். எனவே தான் வெற்றி கொள்ளப்பட்ட நாடுகளைச் சேர்ந்த மக்கள் தங்கள்மேல் பொழியப்பட்ட அருள்மழையாகவே முஸ்லிம் படைவீரர்களை எண்ணினார்கள். தங்களோடு தங்கள் நாட்டி லேயே தங்கிவிடுமாறு கேட்டுக்கொண்டார்கள். அவர்கள் அங்கி ருந்து கிளம்ப முயற்சித்தபோது போகவே கூடாது என வற்புறுத் தினார்கள். அது கைகூடாதபோது கண்ணீர் வழிய சோகத்தோடு விடை கொடுத்தார்கள். முஸ்லிம் சமூகம் பெற்ற வெற்றிகளுக் கும் மற்ற சமூகங்கள் பெற்ற வெற்றிகளுக்கும் இடையிலான வேறுபாடு இதுவே. இந்த வேறுபாட்டை கவனத்தில் கொள்ள மறந்துவிடக்கூடாது. முஸ்லிம்கள் தொடுத்த தாக்குதல்கள் அருளாக இருக்க, மற்றவர்கள் தொடுத்த தாக்குதல்களோ வேதனையாக அமைந்தன. காட்டில் வாழும் கொடிய விலங்கு களும் பொந்துகளில் மறைந்துறையும் பாம்புகளும் அவர்களைக் கண்டு அஞ்சின.

ஆக, முதலாம் உலகப்போருக்கு முன்புவரை ஃபலஸ்தீனத் தில் யூதர்கள் எக்காலத்திலும் குடியிருந்ததாக வரலாற்றுக் குறிப்புகள் இல்லை. முஸ்லிம்களோ இஸ்லாமிய வருகை முதற் கொண்டு வசித்து வருகின்றார்கள். ஒன்றிரண்டு மாதங்களோ வருடங்களோ அல்ல, பல நூற்றாண்டுகளாக வாழ்ந்து வரு கின்றார்கள். வெறுமனே முஸ்லிம்கள் அங்கு வாழ்ந்து வர வில்லை. மக்காவிலிருந்து மதீனாவிற்கு புலம் பெயர்ந்த ஹிஜ்ரத் துக்கு முன்புவரை ஏறத்தாழ பதினேழு பதினெட்டு மாதங்கள் ஜெருஸலமை நோக்கியே முஸ்லிம்கள் தொழுது வந்திருக்கின் றார்கள்.

‘மதீனா சென்றபின் அண்ணலார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் 16 அல்லது 17 மாதங்கள் பைத்துல் முகத்தஸை நோக்கி தொழுதார்கள். பிறகு கிப்லா மாற்றப்பட்டது’. *(பராஃ இப்னு ஆஸிப்/ புகாரி, முஸ்லிம்)*

இன்று கஅபாவுக்கு முஸ்லிம்களிடம் என்ன அந்தஸ்த்து உள்ளதோ அதே அந்தஸ்த்து வரலாற்றின் ஒரு காலத்தில் பைத்துல் முகத்தஸுக்கு இருந்துள்ளது. ஃபலஸ்தீனம் தங்களுக்கே

சொந்தம் என்று சொல்ல, யூதர்களுக்கு எந்த உரிமையும் கிடையாது. ஏனெனில் இஸ்ரவேலர்களில் தோன்றிய இறைவனின் பல தூதர்கள் பணியாற்றிய மையக்கேந்திரமாக பைத்துல் முகத்தஸ் திகழ்ந்துள்ளது. இறுதித்தூதர் இஸ்மவேலர்களில் தோன்றினார். அவரது மையக்கேந்திரமாகவும் பைத்துல் முகத்தஸ்-தான் முதலில் இருந்துள்ளது.

இஸ்ஹாக், யஅகூப், யூஸுஃப், தாவுது, ஸுலைமான், ஸகரியா, யஹ்யா மற்றும் ஈஸா (அலைஹிமுஸ் ஸலாம்) என பலப்பல இறைத் தூதர்கள் (இவை ஒருசில பெயர்களே. பெயர் அறியாத இன்னும் பல நபிமார்கள் தோன்றி பணியாற்றியுள்ளனர். அவர்களின் பெயர்கூறாமல் இறைமறை குர்ஆன் குறிப்பிட்டுள்ளது.) பைத்துல் முகத்தஸை மையமாகக் கொண்டு பணியாற்றி, அங்கே அடக்கமாயினர்.

இவர்களின் பலரை யூதர்கள் சொந்தம் கொண்டாடுகிறார்கள். தாங்கள் அவர்களின் வாரிசுகள் என வாதிடுகின்றார்கள். ஆனால், நாம் எழுப்புகின்ற கேள்வி என்னவெனில் இந்த இறைத்தூதர்களுக்கும் யூதர்களுக்கும் என்னதான் தொடர்பு? இந்த இறைத் தூதர்களில் ஒருவரைக் கூட யூதர்கள் நம்பி ஏற்கவில்லை. அவர்களைச் சகித்துக் கொள்ளவும் தயாராயில்லை. மாறாக, அவர்களில் பலரைக் கொன்றுள்ளனர். சரியாகச் சொல்வதென்றால் யார்யாரையெல்லாம் கொல்ல முடிந்ததோ அவர்கள் அனைவரையும் கொன்றுள்ளனர். கொலை செய்ய முடியவில்லை என்றால் நம்பாமல் பொய்ப்பித்துள்ளனர். மூர்க்கத்தனமாக எதிர்த்துள்ளார்கள். யூதர்களின் பண்பே இதுதான் என குர்ஆன் குறிப்பிடுகின்றது.

*‘அடுத்து தொடர்ச்சியாக தூதர்களை அனுப்பினோம். மர்யமின் மைந்தன் ஈஸாவுக்குத் தெளிவான அத்தாட்சிகளை வழங்கினோம். பரிசுத்த ஆவியின் மூலமாக அவரை திடப்படுத்தினோம். உங்கள் மனதுக்குப் பிடிக்காதவற்றை தூதர்கள் கொண்டு வரும் போதெல்லாம் நீங்கள் எகத்தாளத்தோடு நடந்து கொள்வீர்களா? உங்களில் ஒரு குழு பொய்ப்பிக்கின்றது; இன்னும் ஒரு குழுவோ கொலை செய்துகொண்டே இருக்கின்றது’. (அல் குர்ஆன் 2:87)*

யூதர்களில் ஒருவர்கூட நம்பியேற்கவில்லையா? என்றால் அப்படி அல்ல. அவர்களில் பலர் ஏற்கவே செய்தார்கள். ஆனால், இறைத்தூதர் ஒருவரை நம்பியேற்றுக் கொண்டபிறகு அவர், யூதராகவோ கிறித்துவராகவோ இருக்கவே முடியாது. முஸ்லிமாக மாறி விடுவார்.

அவர்கள் தம்மை முஸ்லிம்கள் என்றே சொல்லிக்கொண்டார்கள், முஸ்லிம்கள் என சொல்லிக்கொள்வதையே விரும்பினார்கள். யூத சமயத்தையோ கிறித்துவ சமயத்தையோ அவர்கள் பின்பற்றவில்லை. இஸ்லாமையே பின்பற்றினார்கள், அதனை நோக்கியே மக்களை அழைத்தார்கள்.

*மூஸா (தன் சமூகத்தாரை நோக்கிக்) கூறினார்: 'என் சமூகத்தவரே! நீங்கள் உண்மையில் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொண்டவர்களாக இருந்தால் அவனையே முற்றிலும் சார்ந்து வாழுங்கள் நீங்கள் முஸ்லிம்களாக இருந்தால்.' (அல்குர்ஆன் 10:84)*

*மேலும், நாம் இஸ்ராயீலின் வழித்தோன்றல்களைக் கடலைக் கடக்கச் செய்தோம். ஃபிர்அவ்னும், அவனுடைய படைகளும் அநீதியும், அக்கிரமமும் இழைப்பதற்காக அவர்களைப் பின் தொடர்ந்து சென்றனர். இறுதியில், ஃபிர்அவ்ன் நீரில் மூழ்கத் தொடங்கியபோது அலறினான்: 'இஸ்ராயீலின் வழித்தோன்றல்கள் எந்த இறைவன் மீது நம்பிக்கை கொண்டார்களோ அவனைத் தவிர உண்மையான இறைவன் வேறு யாருமில்லை என்று நானும் நம்பிக்கை கொண்டேன். மேலும் (அந்த இறைவனுக்குக்) கீழ்ப்படியும் முஸ்லிம்களில் நானும் ஒருவன்!' (அல்குர்ஆன் 10:90)*

*'எங்கள் இறைவனுடைய சான்றுகள் எங்களிடம் வந்துவிட்டன; அவற்றின் மீது நாங்கள் நம்பிக்கை கொண்டுவிட்டோம் எனும் காரணத்திற்காகத்தான் நீ எங்களை பழிவாங்க நாடுகிறாய்! எங்கள் இறைவா! எங்களுக்குப் பொறுமையை அருள்வாயாக! மேலும், உனக்கு முற்றிலும் கீழ்ப்படிந்த நிலையிலேயே எங்களை மரணிக்கச் செய்வாயாக!' (அல்குர்ஆன் 7:126)*

*'மாளிகையினுள் நுழைவீராக!' என்று அவளிடம் கூறப்*

*பட்டது. அதனைப் பார்த்தபோது தண்ணீர்த் தடாகம் என்று கருதி, தன் உடையை கெண்டைக்கால்களுக்கு மேல் உயர்த்தினாள். ஸுலைமான் கூறினார்: 'இது பளபளக்கும் கண்ணாடி மாளிகை யின் தரையாகும்!' அதற்கு அவள் கூறினாள்: "என் இறைவனே! (இன்றுவரை) எனக்கு நானே கொடுமை புரிந்து கொண்டிருந் தேன். இனி நான் ஸுலைமானுடன் சேர்ந்து அகிலமனைத்தின் அதிபதியாகிய அல்லாஹ்வுக்கு அடிபணிந்து வாழ இஸ்லாமை ஏற்றுக் கொள்கின்றேன்!' (அல்குர்ஆன் 27:44)*

*அவர்களிடம் நிராகரிப்பு உள்ளதை ஈஸா உணர்ந்தபோது, 'அல்லாஹ்வின் பாதையில் எனக்கு உதவுபவர் யார்?' என அழைப்பு விடுத்தார். 'அல்லாஹ்வின் உதவியாளர்களாக நாங்கள் இருக்கின்றோம், நாங்கள் இறைவனுக்கு முற்றிலும் அடிபணியும் முஸ்லிம்கள் என்பதற்கு தாங்கள் சாட்சியாக திகழுங்கள்' என்றனர் ஹவாரிய்யூன்கள். (அல்குர்ஆன் 3:52)*

*மேலும், 'என்மீதும், என்னுடைய தூதர் மீதும் நம்பிக்கை கொள்ளுங்கள்!' என்று திருத்தொண்டர்களாகிய ஹவாரிகளுக்கு நான் உணர்த்தியபோது அவர்கள் 'நாங்கள் நம்பிக்கை கொண் டோம்; மேலும், நாங்கள் முஸ்லிம்கள் என்பதற்கு நீ சாட்சியாக இருப்பாயாக!' என்றார்கள். (அல்குர்ஆன் 5:111)*

இஸ்ரவேலர்களில் அனுப்பப்பட்ட எந்த இறைத்தூதரும் யூத சமயத்தை நோக்கியோ கிறித்துவ சமயத்தை நோக்கியோ அழைப்பு விடுக்கவில்லை என்பதையே இவ்வசனங்கள் உணர்த்து கின்றன. அவர்கள் முஸ்லிம்களாக இருந்தார்கள், இஸ்லாமை நோக்கியே அழைத்தார்கள். அந்த அழைப்பை ஏற்றுக் கொண்ட வர்களும் முஸ்லிம்கள் என்றே அழைக்கப்பட்டார்கள். யூதர்கள் என்றோ கிறித்துவர்கள் என்றோ அழைக்கப்படவில்லை.

இந்த நபிமார்களுக்கும் இறைத்தூதர்களுக்கும் உண்மையி லேயே வாரிசுகளாக இருக்கும் தகுதி யாருக்கு இருக்கின்றது? என்பதை அறிவுள்ள யாரும் இப்போது எளிதாக தீர்மானித்துக் கொள்ளலாம்.

*இப்ராஹீம் யூதராகவும் இருக்கவில்லை, கிறித்துவராகவும் இருக்கவில்லை! மனம் ஒருமைப்பட்ட ஒரு முஸ்லிமாகத் தான்*

*அவர் இருந்தார். ஓரிறைவனை விட்டுவிட்டு வேறெதனையும் அவர் கடவுளாகக் கருதவில்லை! இப்ராஹீமோடு ஒட்டி உற வாடும் உரிமை அவரைப் பின்பற்றுபவர்களுக்குத்தான் இருக் கின்றது. அப்புறம் இந்த இறைத் தூதருக்கும் இவரை நம்பி யேற்றுக் கொண்டவர்களுக்கும் இருக்கின்றது. நம்பிக்கை யாளர்களின் தோழனாக அல்லாஹ் இருக்கிறான். (அல்குர்ஆன் 3:68)*

வாரிசுகளாவது ஒருபுறம் இருக்கட்டும். இந்த யூதர்கள் அந்தத் தூதர்களின் எதிரிகளாக அல்லவா, இருந்துள்ளார்கள்? இவர் களில் ஒருவரின் பெயரையும் உச்சரிக்கும் தகுதிகூட யூதர்களுக்கு கிடையாது. விதிவிலக்கே இல்லாமல் அனைத்து தூதர்களையும் இவர்கள் எதிர்த்துள்ளார்கள். அவ்வளவு, ஏன்? மூச்சுக்கு மூச்சு இவர்கள் மேற்கோள் காட்டுகின்ற தவ்ராத்தை கொண்டு வந்த மூஸா அவர்களையும் எதிர்த்துள்ளார்கள்.

தாங்கவேமுடியாத தொல்லைகளை மூஸா அவர்களுக்கு கொடுத்துள்ளார்கள். வேறுவழியே இல்லாமல் விரக்தியுற்று அவர் கூறியதை குர்ஆன் பதிவு செய்துள்ளது.

*'நம்பிக்கை கொண்டவர்களே! மூஸாவுக்கு தொல்லை அளித்தவர்களைப் போன்று நீங்கள் ஆகிவிடாதீர்கள். அவர்கள் இட்டுக் கட்டிக் கூறிய விஷயங்களிலிருந்து அல்லாஹ் அவரை விடுவித்து விட்டான். மேலும், அல்லாஹ்விடத்தில் அவர் கண்ணியத்துக்குரியவராய் இருந்தார்'. (அல்குர்ஆன் 33:69)*

வேறார் இடத்தில், மூஸா அவர்களின் முறையீடாக,

*மேலும், மூஸா தன் சமூகத்தாரிடம் இவ்வாறு கூறியதை நினைவு கூருங்கள்: 'என் சமூக மக்களே! நான் அல்லாஹ்விட மிருந்து உங்களுக்காக அனுப்பப்பட்ட தூதராவேன் என்பதை நீங் கள் நன்கு அறிந்துகொண்டே எனக்கு ஏன் துன்பம் அளிக்கின்றீர் கள்?' (அல்குர்ஆன் 61:5)*

மூஸாவையே மதிக்காத சமூகம் அவர் கொண்டுவந்த தவ்ராத் தை எங்கே மதிக்கப்போகின்றது? செய்தார்கள், அதனையும் இவர்கள். தவ்ராத்தை திரித்தார்கள், அதில் புதுப்புதுக் கருத்து களைத் திணித்தார்கள், தங்கள் மனோ இச்சைகளை எல்லாம்

வேதக்கருத்துகளாக உருமாற்றினார்கள். இன்று இவர்களிடம் இருக்கின்றதே, அது தவ்ராத்தே கிடையாது. மூஸா அவர்களுக்கு கொடுக்கப்பட்ட தவ்ராத்தில் உள்ள பலப்பல விஷயங்கள் இன்றைய தவ்ராத்தில் இல்லை, அதில் இல்லாத பலப்பல விஷயங்கள் இன்றைய தவ்ராத்தில் இருக்கின்றன. இதனை நாம் நன்றாகப் புரிந்து கொண்டாக வேண்டும். பலரும் இவ்விஷயத்தில் தவறிழைத்து விடுகின்றார்கள்.

இன்றும் நம்மிலும் பலபேர் மூஸா, தாவுது, ஸுலைமான் (அலைஹிமுஸ் ஸலாம்) ஆகியோரை யூதர்களின் இறைத்தூதர்கள் என்று சொல்லிவிடுகின்றார்கள். கிடையவே கிடையாது. இவர்கள் யாவரும் நமது நபிமார்கள். யூதர்களுக்கும் இவர்களுக்கும் யாதொரு தொடர்பும் கிடையாது. இறைவனின் தூதர்களோடு யாரும் இனரீதியாக, குலரீதியாக தொடர்பு கொள்ளவே முடியாது. ஈமான் வழியாகவும் தக்வா வழியாகவும் தான் தொடர்பு கொள்ளமுடியும். அவர்கள் கொண்டுவந்த போதனைகளையும் கருத்துகளையும் யார் யாரெல்லாம் நம்பியேற்றுக் கொண்டு பின்பற்றுகின்றார்களோ அவர்கள்மட்டும்தான் அவர்களைச் சொந்தம் கொண்டாட முடியும். அவற்றை நம்பாதவர்களும் பின்பற்றாதவர்களும் உரிமை கொண்டாடவே முடியாது.

இன்றும் பலபேர் யூத சமயத்தையும் கிறித்துவ சமயத்தையும் வான்வழி சமயங்களாகக் கருதுகின்றார்கள். கிடையாது; கிடையவே கிடையாது. யூத சமயமும் கிறித்துவ சமயமும் இறைவன் அருளிய சமயங்களே கிடையாது. இவற்றுக்கும் இறைவனுக்கும் இறைவனின் தூதர்களுக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை. தீனுல் இஸ்லாம் (இறைவனுக்கு முற்றிலும் கட்டுப்படுகின்ற நேர்வழி) ஒன்றே ஒன்றுதான். அதனைத் தெளிவாக அறிவிக்கின்ற ஒரே இறைமறையான வான்மறை குர்ஆன். *'இறைவனிடம் ஏற்றுக்கொள்ளப்பட்ட மார்க்கம், இஸ்லாம் மட்டுமே.' (3:19)*

இஸ்லாமல்லாத வேறு மார்க்கங்கள் அனைத்தும் மனிதர்களால் உருவாக்கப்பட்டவை. இறைவனுக்கும் அவற்றிற்கும் எள்ளளவும் தொடர்பு கிடையாது. அவற்றைப் பின்பற்றுவதால் மனிதர்கள் நேர்வழியை அடையவே முடியாது. யூத சமயமும்

கிறித்துவ சமயமும் மனிதர்களால் உருவாக்கப்பட்ட மற்ற சமயங்களைப் போன்றவையே.

இஸ்லாம் மட்டும்தான் இறைவனால் அனுப்பட்ட மார்க்கம். எனவேதான் இங்கே அனைவருக்காகவும் கதவுகள் திறந்துள் ளன. யாரும் பாகுபடுத்தப்பட மாட்டார். இன்றும் யூதர்கள் தங்கள் வெறித்தனமாக எதிர்ப்பைக் கைவிட்டுவிட்டால் கண்ணிய மிக்க குடிமக்களாக ஃபலஸ்தீனத்தில் வாழ ஆசைப் பட்டால் முஸ்லிம்களைக் காட்டிலும் நல்ல அரவணைப்பாளர் களை - பெருந்தன்மையாளர்களைப் பார்க்கவே முடியாது.

ஆனால், இஸ்லாமிய ரோஷத்தையும் ஈமானிய வேகத்தையும் அவர்கள் போட்டிக்கு அழைத்தால் வலுக்கட்டாயமாகவும் ஆக்கிரமித்தும் இந்த புனிதப் பகுதியை யூத தேசமாக மாற்ற ஆசைப்பட்டால் எந்த விலை கொடுத்தேனும் இஸ்லாமிய சமூகம் அதனைத் தடுத்துநிறுத்தும். இந்த இழிவை ஒருக்காலும் முஸ்லிம் சமூகம் பொறுத்துக் கொள்ளாது. கடைசி மூச்சு இருக்கும்வரை போராடிக் கொண்டிருக்கும்.

முஸ்லிம் நாடுகளை ஆளுகின்ற ஒன்றிரண்டு ஆட்சியாளர்களின் ரத்தம் வெளிறிக்கிடக்கின்றது என்பதைக் கண்டு யூதர்கள் ஏமாந்துவிடக் கூடாது. இஸ்லாமிய சமூகத்தில் பாய்ந்தோடு கின்ற குருதி செக்கச் செவேல் என்றுதான் இன்னமும் இருக் கின்றது. அது ஈமானிய வெப்பத்தின் நிறம். தங்கள் ஈமானைக் காப்பாற்றுவதற்காக அக்குருதியை எந்த களத்திலும் இறைக்க அவர்கள் தயாராகவே இருக்கின்றார்கள். ஈமானைக் காக்க எந்த சொத்தையும் விற்க ஆயத்தமாகவே இருக்கின்றார்கள். இஸ்லாமை எதிர்த்து எந்த மன்னனும் எந்த சாம்ராஜ்யமும் வெற்றி பெற்றதில்லை என்பதற்கு வரலாறு சான்றளிக்கின்றது. இறைவனின் உதவி கிடைக்கு மென்றால் உலகத்திற்கு படிப் பினையை புகட்ட மறுபடியும் ஒருமுறை இஸ்லாம் தயாராகவே இருக்கின்றது.

# ஃபலஸ்தீனத்தில் ஸியோனிச சூழ்ச்சிகள்

*ஃபலஸ்தீன், இறைத்தூதர்களின் பூமி! உலகில் தோன்றி உன்னதமான மனிதருள் பலர் இங்குதாம் வாழ்ந்துள்ளார்கள். இன்றோ அந்நிலப்பகுதி ‘பிரச்சனை’ என்பதன் மறுபெயராக மாறிவிட்டது. கொடுங்கோன்மை, கொலை, இரத்தம், வலி, வேதனை போன்றவற்றை மனதிற்கொள்ளாமல் ஃபலஸ்தீனத்தைப் பற்றி இன்று சிந்தித்தே பார்க்கமுடிவதில்லை. உலகின் மிகவும் சிக்கலான, புராதன பிரச்சனையாக இன்று ஃபலஸ்தீன் கருதப்படுகின்றது.*

*உலகின் முப்பெரும் சமயங்களான யூத சமயமும் கிறித்துவ சமயமும் இஸ்லாம் சமயமும் தத்தமது சமூகப் பண்பாட்டு மோதல்களோடு இப்பகுதியில் அணிவகுத்து நிற்கின்றன. இப்ராஹீமின் வாரிசுகளாக தங்களை கருதிக்கொள்பவர்களால் தங்களுக்குள்ளாகவே அமைதியை நிலைநாட்டிக் கொள்ள இயலவில்லை - என்றே உலகம் கருதுகின்றது.*

*இப்ராஹீமின் வாரிசுகள் என மார்தட்டிக் கொள்கின்ற ஒரு கூட்டம் - யூதர்கள் இன்று இப்பகுதியில் தங்கள் தாயாதி மக்கள் பிள்ளைகளை நிம்மதியாக வாழவிடாமல் எல்லாவகையான அட்டூழியங்களையும் செய்து வருகின்றது. ஃபலஸ்தீனத்தில் அரங்கேற்றப்படும் ஸியோனிச சூழ்ச்சிகள் என்னென்ன? என்பதை புரிந்து கொள்வதற்கு முன், அப்பகுதியின் புவியியல் வரலாற்றையும் நிலைமை இன்று இந்தளவு அபாயகரமாக ஆகிவிட்டதன் பின்னணியையும் அறிந்துகொண்டாக வேண்டும்.*

*உலகின் செழிப்பான பண்டைய நிலப்பகுதிகளுள் ஒன்று, ஃபலஸ்தீன். கி.மு 2500 அதாவது இன்றைய கணக்கில் 4500 ஆண்டுகளுக்கு முன்பிருந்து இப்பகுதியில் அரபுக்கள் வாழத் தொடங்கினார்கள். இப்பகுதிக்கு அவர்கள் ‘கன்ஆன்’ எனப்*

பெயரிட்டார்கள். அரபுக்களை அடுத்து, ஆசியா மைனர் பகுதியில் இருந்து ஒருசிலர் குடியேறினார்கள். நாடோடி களாகவும் கால்நடைகளை மேய்ப்பவர்களாகவும் இருந்ததால் இவர்கள் வட்டார மொழி வழக்கில் *'ஃபலஸ்தியர்கள்'* என வழங்கப்பட்டார்கள். இடையர்கள் எனப்பொருள். பிற்காலத்தில் இதுவே இப்பகுதிக்கும் பெயராகி விட்டது. *ஃபலஸ்தீனம்* உருவான வரலாறு, இது.

முன்பிருந்தே குடியிருந்த அரபுக்களும் ஆசியா மைனரிலிருந்து புதிதாக குடியேறிய ஃபலஸ்தியர்களும் ஒன்றோடு ஒன்றாக கலந்துவிட்டார்கள். இப்பகுதி 'கன்ஆன்' என்றும் 'ஃபலஸ்தீன்' என்றும் வழங்கப்பட்டது. நாட்பட நாட்பட *கன்ஆன்* என்னும் பெயர் அருகி *ஃபலஸ்தீன்* என்னும் பெயரே நிலைத்துவிட்டது.

கி,மு 2000 ஆண்டு வாக்கில் அதாவது 4000 ஆண்டுகளுக்கு முன்பு *'சாமிய'* சமயங்களின் பதிவுகளின்படி இப்ராஹீம் அவர்கள் இராக்கிலிருந்து புலம் பெயர்ந்து இப்பகுதியில் குடியேறினார். தமது மூத்த மகன் இஸ்மாயீலை மக்காவிலும் இளையமகன் இஸ்ஹாக்கை ஃபலஸ்தீனத்திலும் அவர் குடியமர்த்தினார். *இஸ் ஹாக்கின்* மகனான *யஅகூப்* அவர்களுடைய இன்னொரு பெயரே, *இஸ்ராயீல்*. அவரது சந்ததியினர் இஸ்ராயீலின் வழித் தோன்றல்கள் (பனூ இஸ்ராயீல் அல்லது இஸ்ரவேலர்கள்) என்றழைக்கப் பட்டனர். யஅகூபின் மகன், *யூஸுஃப்*. காலமாற் றத்தினால் அவர் எகிப்துக்கு இடம்பெயர்ந்தார். அங்கே ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, அவர் தமது தந்தையாரையும் குடும்பத் தாரையும் எகிப்துக்கு வரவழைத்து அங்கேயே குடியமர்த்தினார்.

நீண்ட நெடுங்காலம் எகிப்தில் யஅகூப் அவர்களின் வாரிசுகள் செல்வாக்கோடு திகழ்ந்தார்கள். ஆட்சிப் பொறுப்புகளிலும் அரசு நிர்வாகத்திலும் அவர்களே முதன்மை பெற்றிருந்தார்கள். மண்ணின் மைந்தர்களான 'கிப்தியர்களின்' உள்ளங்களில் ஒரு வகையான எரிச்சலும் தேசியவாதமும் தோன்றிவளர இது காரண மாகியது. கிப்திய தேசியவாதம் வளர்ந்து ஆட்சியை கைப்பற்றிக் கொண்டது. அதன்பின் அந்நியர்களான கன்ஆனியர்கள் அடிமை களாக ஆக்கப்பட்டார்கள். தேவையற்ற சந்தேகங்களுக்கும் துன்புறுத்தல்களுக்கும் ஆளானார்கள்.

யூஸுஃப் (அலை) எகிப்தை அடைந்த 400 ஆண்டுகளுக்குப் பின், மூஸா (அலை) அவர்களின் காலத்தில் கொத்தடிமைகளாக இருந்த இஸ்ரவேலர்கள் விடுதலைக் காற்றை சுவாசித்தார்கள். எகிப்தை விட்டு இஸ்ரவேலர்களை வெளியேற்றி மறுபடியும் ஃபலஸ்தீனத்தில் குடியமர்த்துவதாக அண்ணல் மூஸா (அலை) சபதம் பூண்டார்கள். ஒரு நீண்ட நெடிய போராட்டத்திற்குப் பிறகு ஃபலஸ்தீனத்தில் இஸ்ரவேலர்களுக்கு இடம்கிடைத்தது. அங்கே அவர்கள் தமது ஆட்சியை நிறுவினார்கள்.

ஃபலஸ்தீன வரலாற்றில் தாவுது மற்றும் ஸுலைமான் அவர்களின் ஆட்சிக்காலமே இஸ்ரவேலர்களின் பொற்காலம். இவர்களின் ஆட்சி ஏறக்குறைய 120 ஆண்டுகள் நீடித்தது. ஸுலைமானின் ஆட்சிக் காலத்தில் ஜெருஸலேம் நகரில் 'ஸுலைமானின் ஹைக்கல்' (Salomon Temple) நிறுவப் பட்டது. இது ஸுலைமானின் தலைமைச் செயலகமாக திகழ்ந்தது.

கி.மு 350 இல் ஜெருஸலேம் நகரின் மீது படையெடுத்த பாபி லோனிய மன்னர் பனூகத் நேசர் அதனை நாசமாக்கி (சாலமன் டெம்பிள்) பைத்துல் முகத்தஸையும் இடித்து தரைமட்டம் ஆக்கினார். இஸ்ரவேலர்கள் மறுபடியும் அடிமைகளாக்கப் பட்டார்கள். ஈரானின் மன்னர் சைரஸ் 50 ஆண்டுகள் கழித்து பாபிலோனை (தற்போதைய இராக்) வெற்றிகொண்டு இஸ்ர வேலர்களை விடுவித்தார். ஜெருஸலேம் நகரில் குடியேறவும் பைத்துல் முகத்தஸை நிர்மானிக்கவும் அனுமதி அளித்தார்.

பைத்துல் முகத்தஸ் மட்டுமின்றி சுற்றுப்புறங்களிலும் இஸ்ரவேலர்கள் குடியேறினர். கி.பி 70 ஆமாண்டில் ரோமர்கள் இப்பகுதியை முற்றுகை இட்டனர். ஜெருஸலேம் நகர் வானி லிருந்து இடிவிழுந்ததைப் போன்று துவம்சம் செய்யப்பட்டது. யூதர்கள் இனப்படுகொலை செய்யப் பட்டனர், எஞ்சியோர் நாடு கடத்தப்பட்டார்கள். அதன்பின், நான்காம் நூற்றாண்டில் ரோமர்கள் கிறித் துவ மதத்தைத் தழுவினர். நாட்டின் தேசிய மதமாக கிறித்துவம் மாறிவிட்டது. யூதர்கள் அங்கே குடியிருக்க அனுமதிக்கப்படவில்லை.

கி.பி. ஏழாம் நூற்றாண்டின் நடுமத்தியில் (கி.பி 638) உமரின் ஆட்சிக் காலத்தில் முஸ்லிம்கள் இந்நகரைக் கைப்பற்றியபோது

இது, கிறித்துவர்கள் வசம் இருந்தது. கி.பி. 70 ஆமாண்டில் யூதர்கள் நாட்டைவிட்டு துரத்தப் பட்ட பிறகு பைத்துல் முகத்தஸ் பாழடைந்து போய்க்கிடந்தது. உமர் அந்நகரை அடைந்து, பள்ளி யிருந்த இடத்தை தேடிப்பிடித்து அதனை சுத்தப்படுத்தினார். அப்பகுதியின் ஒரு மூலையில், இறைத்தூதர் ஸுலைமான் அவர்களின் பள்ளிவாசல் இருந்த இடத்தில் தொழுகை நடத்தி னார். இப்பகுதியே இன்று 'மஸ்ஜிதுல் அக்ஸா' என்றழைக்கப் படுகின்றது. அதன்பின் 1917 ஆமாண்டு வரை இடையில் ஒரு சில காலம் தவிர்த்து (88 ஆண்டுகள்) தொடர்ந்து முஸ்லிம்கள் வசமே ஜெருஸலேம் இருந்து வருகின்றது. கி.பி. 1099 ஆமாண்டில் திருச்சபையால் தூண்டப்பட்ட கிறித்துவ மன்னர்கள் ஜெருஸ லேம் மீது போர்தொடுத்து கைப்பற்றிக் கொண்டார்கள். ஆனால் 88 ஆண்டுகளுக்குப்பின், ஸலாஹுத்தீன் அய்யூபியின் தலைமை யில் முஸ்லிம்கள் மீண்டும் அதனை வசப்படுத்திக் கொண்டனர்.

கி.பி 70 ஆமாண்டில் ரோமர்கள் நகரைக் கைப்பற்றியபோது யூதர்கள் அனைவரையும் படுகொலை செய்தார்கள், உயிர் பிழைத்தோரை நாடு கடத்தினார்கள். நாடிழந்த இந்நிலை நெடுங் காலம் தொடர்ந்தது. ஏறக்குறைய 1800 ஆண்டுகள் உலகத்தின் பல்வேறு பகுதிகளிலும் நாடின்றி நகரமின்றி நாடோடிகளாக யூதர்கள் அலைந்து திரிந்தார்கள். நாடிழந்த இந்நிலை யூதர் மரபில் 'மகத்தான அலைக்கழிப்பும் மையமிழப்பும்' (Diaspera) என குறிக்கப்படுகின்றது.

உலகின் பல பகுதிகளிலும் அவர்கள் மீது அநீதமும் அநியாய மும் இழைக்கப்பட்ட அதே காலகட்டத்தில் முஸ்லிம்களின் ஆளுகைக்குட்பட்ட நாடுகளில் அவர்கள் மிகவும் நிம்மதியாக வாழ்ந்தார்கள். வாழ்க்கையில் முன்னேறவும் வளர்ச்சிப் படிக் கட்டுகளை விரைவாக தாண்டிச்செல்லவும் உகந்த தருணங்கள் இஸ்லாமிய உலகில்தான் அவர்களுக்கு வாய்த்தன. இருபதாம் நூற்றாண்டில் ஜனநாயகம் தலைதூக்கி, மனித உரிமைகள் பேசப்பட்டபோது பல நாடுகளில் யூதர்களுக்கு நல்வாழ்க்கை கிடைத் தது. இருப்பினும் தொழிற்புரட்சிக்குப் பின் ஐரோப்பா வின் பல நாடுகளிலும் யூதர்கள் கொடுமையான முறையில்தான் நடத்தப்பட்டார்கள்.

*தங்கள் இழிநிலையையும் அடிமை வாழ்வையும் தொடர்ந்து யூதர்கள் சிந்தித்து வரலானார்கள். தங்கள்மீது இழைக்கப்படு கின்ற கொடுமைகளையும் அநீதிகளையும் குறித்து சிந்திக்கலா னார்கள். இவ்வுணர்வு ஒரு சமூக இயக்கமாக 19 ஆம் நூற்றாண் டில் பரிணமித்தது. அக்காலகட்டத்தில் ஜெர்மன் உள்ளிட்ட பல ஐரோப்பிய நாடுகளில் யூதர்களின் நிலை சொல்லிக் கொள்ளும் படி இல்லை.*

## இஸ்ரேல் எப்படி உருவானது?

*ஹங்கேரி நாட்டைச் சேர்ந்த வழக்கறிஞர் தியோடர் ஹெர்ஸல் (Theodor (Binyamin Ze'ev) Herzl) என்பார் உலகமெங்கும் உள்ள யூதர்களைச் சந்தித்து சமூக உணர்வைத் தூண்டத் தொடங்கினார். தமக்கென ஒரு தேசம் தேவை என்பதை வலியுறுத்தினார். அந்நோக்கதை அடைவதற்காக ஸியோனிசம் (Zionist Organization - ZO) என்னும் ஓர் இயக்கத்தை உருவாக்கினார். ஜெருஸலேம் பகுதி யிலுள்ள ஒரு மலைக் குன்றின் பெயர், ஸியோன். அங்கே ஒரு கோட்டை இருந்தது. அதனை ஸுலைமான் வெற்றி கொண்டதாக யூதர்கள் நம்புகின்றார்கள்.*

*ஸியோனிச இயக்கம் பற்றிய முறையான அறிவிப்பு 1897 இல் வெளியானது. called for the establishment of a home for the Jewish people in Palestine secured under public law.*

*அமைதியோடும் நிம்மதியாகவும் வாழ ஒரு தேசம் ஏனெனில் அப்படிப்பட்டதொரு நம்பிக்கை பிறக்க அப்போதைய சூழ் நிலை காரணமாக இருந்தது. பல ஐரோப்பிய நாடுகள் உலகின் பல பாகங்களையும் ஆக்கிரமித்து அங்கிருந்த பழங்குடிகளை துரத்திவிட்டு தம் மக்களை குடியேற்றி வந்தன.*

*ஆரம்பத்தில் ஆப்பிரிக்காவிலுள்ள 'உகாண்டா' நாட்டை தேர்வு செய்யுமாறு பிரிட்டன் சொன்னது. ஆனால் உகாண்டா, அர்ஜென்டினா அல்லது தென்னமெரிக்காவின் ஏதே னும் ஒரு பகுதி - எதுவுமே ஸியோனிச இயக்கத்தினரை ஈர்க்கவில்லை. ஏனெனில் ஃபலஸ்தீனத்தை தங்கள் நாடாக்கிக் கொள்ளவேண் டும் என்பதற்காக பல்வேறு முயற்சிகளை அவர்கள் எடுத்திருந் தார்கள். ஆகையால் இந்த ஐடியாவை அவர்கள் எடுத்த*

உடனேயே புறக்கணித்து விட்டார்கள்.

**ஏன் ஃபலஸ்தீனம்?**

ஏனெனில் ஃபலஸ்தீனத்தோடு யூதர்களின் சமய உணர்வுகள் பின்னிப் பிணைந்திருந்தன. ஃபலஸ்தீனத்தில் அவர்களை ஒன்று திரட்டும் அற்புத சக்தி ‘சமய உணர்வு!’ எனவே யூதர்கள் தற்போது வாழும் நாடுகளை துறந்துவிட்டு ஃபலஸ்தீனத்திற்கு குடியேறிவிட வேண்டும். பல நூற்றாண்டுகளாக அவர்கள் ஆவலோடு எதிர்பார்த்து வருவதும் இதுவே.

இயக்கத்தினர் நேரடியாக போய் உஸ்மானிய கலீஃபா ஸுல்தான் அப்துல் ஹமீதைப் பார்த்தார்கள். ஃபலஸ்தீனப் பகுதியில் தாங்கள் குடியேற அனுமதிக்குமாறு கோரினார்கள். அதற்குப் பகரமாக உஸ்மானிய அரசாங்கம் பட்டிருந்த பெரும் கடனை அடைப்பதாக சொன்னார்கள். காது கொடுத்தே கேட்கவில்லை, ஸுல்தான். முடியாது என ஒரே வார்த்தையில் முடித்துக் கொண் டார்.

இந்த வழியில் நுழையமுடியாது என்றாகிவிட்டபிறகு, வேறு வழி இருக்கின்றதா? அல்லது உருவாக்க முடியுமா? என யோசித்தார்கள். ஐரோப்பாவை உற்றுப் பார்த்தார்கள். சாம்ராஜ்ய வெறியில் புடைத்துக் கொண்டிருந்த பிரிட்டனும் பிரான்ஸும் அவர்கள் பார்வையில் பட்டது. அந்நாடுகளோடு கைகுலுக்கிக் கொண்டார்கள். ரஷ்யாவோ அல்லது பிற ஐரோப்பிய நாடுகளோ யூதர்களை நன்முறையில் நடத்தாததும் அவர்களை கொஞ்சம் மட்டம் தட்டியே வைத்ததும் இன்னொரு காரணம். தங்களுக் கென ஃபலஸ்தீனத்தை உருவாக்கியே தீருவது என்ற அவர்கள் வெறி கூடிப்போனது.

இஸ்ரேல் உருவானதைப் பற்றி பொதுவாக சொல்லப்படும் கதை இதுதான். ஆனால் இதில் பெரும்பாலான கருத்துகள் உண்மையில்லை.

**இஸ்ரேல் பற்றிய ஊடகங்களின் பத்து பெரிய பொய்கள்**

மைக்கல் கோலன் (Michel Collen) ஒரு பெல்ஜிய எழுத்தாளர் ஒரு ஊடகவியலாளரும் கூட. Israel - Let’s Talk About It என்ற புத்தகத்தில்

இஸ்ரேல் பற்றி பொய்யான தகவல்கள் பரப்பி இஸ்ரேலுக்கு அனுதாபம் தேடிக்கொடுத்துக் கொண்டிருக்கிற அமெரிக்க, ஐரோப்பிய ஊடகங்களைக் கடுமையாகச் சாடியுள்ளார். இதை தனது புத்தகத்தில் 'பத்து பெரிய பொய்கள்' என்ற தலைப்பின் கீழ் துல்லியமாக விவரித்துள்ளார்.

1. இஸ்ரேல் என்ற நாடு ஐரோப்பாவில் யூதர்கள் படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து உருவாக்கப்பட்டது என்னும் முற்றிலும் தவறானது, பொய்யானது. ஏனெனில் 1897 ஆண்டி லேயே தேசியவாத யூதர்கள் ஃபலஸ்தீன பூமியை ஆக்கிரமிக்க திட்டமிட்டு விட்டார்கள். 1897 ஆம் ஆண்டு சுவிசர்லாந்து பேசல் (Basel, Switzerland) நகரில் இடம்பெற்ற முதலாவது சியோனிச காங்கிரஸ் மாநாட்டில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

2. இஸ்ரேல் என்ற நாட்டின் உருவாக்கத்தை நியாயப்படுத்த முன்வைக்கப்படும் அடுத்த பொய், இஸ்ரேல் என்பது யூதர்களின் முன்னோர்களின் பூமி. யூதர்களை கி.பி.70 இல் ரோம தளபதியான டைடஸ் யூதர்களின் சொந்த பூமியிலிருந்து வெளியேற்றியதாக ஒரு வரலாறு பரவலாக கூறப்பட்டு வருகின்றது. இது ஒரு கதை! யூத வரலாற்றாசிரியர்களில் மிகவும் பிரசித்தி பெற்ற ஷலோமோ சாண்ட் என்பவரின் கருத்துப்படி யூதர்கள் ஃபலஸ்தீனத்தில் இருந்து வெளியேறியதாக வரலாற்றில் இல்லை, ஆகவே தாய் பூமிக்கு திரும்புவது என்பதே அர்த்தமற்றது என்கிறார் அவர்.

ஃபலஸ்தீன மக்களே ஆதி யூதர்களின் உண்மையான பரம்பரை, 1947இல் ஐரோப்பாவிலிருந்து வந்தவர்கள் அல்லர். இந்த பூமியில் வாழ்த்த மக்கள் இதைவிட்டு எங்கும் செல்லவில்லை என்கிறார் ஷலோமோ சாண்ட். யூத தேசம் என்ற ஒரு தேசம் வரலாற்றில் எங்கும் இருந்ததே கிடையாது என்கிறார் அவர்.

யூதர்களுக்கு சொந்தமான மொழி, கலாச்சாரம் மற்றும் வரலாறு எதுவுமே இல்லை. அவர்களிடம் இருந்தது மதம் மட்டுமே.

3. ஃபலஸ்தீனை யூதர்கள் ஆக்கிரமித்த போது அது, மனித சஞ்சாரமற்ற விவசாயத்துக்கு பொருந்தாத ஒரு பூமியாகவே இருந்தது. இது மேற்கத்தைய மீடியாக்கள் முன்வைக்கும் மூன்றாவது பொய். ஏனென்றால் 19ம் நூற்றாண்டில் ஃபிரான்ஸ்

உள்ளிட்ட உலகின் பல்வேறு பகுதிகளுக்கு ஃபலஸ்தீனத்தின் விவசாயப்பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டதற்கு ஆதாரங் கள் நிறையவே உள்ளன.

4. ஃபலஸ்தீனியர்கள் தமது சொந்த பூமியை அவர்களின் விருப்பத்தின் பேரிலே விட்டுச்சென்றதாக சிலர் கூறுவது நான்காம் பொய். பலரும் இதனை நம்புகிறார்கள், நான் கூட நம்பியிருந்தேன். இஸ்ரேலிய வரலாற்றாசிரியர்களே இதனை மறுக்கின்றனர். *பென்னி மொரிஸ்* மற்றும் *இலான் பெப்பே* ஆகியோரின் கருத்துப்படி ஆயுதங்களையும் பயமுறுத்தியும் தான் ஃபலஸ்தீன மக்களை யூதர்கள் வெளியேற்றினர். அவர்கள் தாமாக வெளியேறவில்லை.

5. மத்தியகிழக்கில் காணப்படும் ஒரே ஒரு ஜனநாயக நாடு இஸ்ரேல். அதை நாம் பாதுகாக்கவேண்டும். இது அடுத்த பொய். எந்தவொரு ஜனநாயக நாட்டுக்கும் ஒரு சட்டம் உண்டு, வரை யறுக்கப்பட்ட எல்லைகளும் உண்டு. உலகில் உள்ள அனைத்து ஜனநாயக நாடுகளிலும் இதனைப் பார்க்கலாம், இஸ்ரேலைத் தவிர. இஸ்ரேல் விரிந்துகொண்டே போகின்ற, இதுவரை வரையறுக்கப்படாத நாடு. இனவாதம் ஒன்றுதான் இஸ்ரேலின் சாதனை.

6. அமெரிக்கா, இஸ்ரேலைப் பாதுகாப்பதன் மூலம் மத்திய கிழக்கில் ஜனநாயகத்தைப் பாதுகாக்கிறது. இது ஒரு மாயை கலந்த பொய். இஸ்ரேலுக்கான அமெரிக்காவின் வருடாந்த செலவு மூன்று பில்லியன் டாலர்கள். ஜனநாயக அமெரிக்காவின் இந்த பணம் அவ்வருடம் முழுவதும் அப்பாவி ஃபலஸ்தீன மக்களைக் கொல்லவே பயன்படுகின்றது. ஆனால் மத்திய கிழக்கில் அமெரிக்காவின் முக்கிய நோக்கம் ஜனநாயகம் அல்ல, அங்குள்ள எண்ணெய் வளம்.

7. அமெரிக்க ஃபலஸ்தீனுக்கும் இஸ்ரேலுக்கும் இடையே ஒரு நிரந்தர உடன்பாட்டை மேற்கொள்ள போராடிவருகிறது. இது முற்றிலும் உண்மைக்கு புறம்பானது. ஐரோப்பிய ஒன்றியத்தின் முன்னாள் வெளிநாட்டு கொள்கைவகுப்பாளரான *ஜாவியர் சொலோனா* 'இஸ்ரேல் என்பது ஐரோப்பிய ஒன்றியத்தின் 21 ஆவது நாடாகும்' என்கிறார். ஐரோப்பிய ஆயுத

உற்பத்தியாளர் களுக்கும் இஸ்ரேலிய இராணுவத்துக்கும் இடையே பல உடன்பாடுகள் உள்ளன.

8. Antisemitism இது மேற்கத்தைய ஊடகங்கள் கையாளும் இன்னொரு இஸ்ரேலிய அனுதாப ஆயுதம். நீங்கள் ஃபலஸ்தீன வரலாற்றை நன்கு ஆராய்ந்து இஸ்ரேல் பற்றிய உண்மைகளை உலகுக்குச் சொன்னாலோ அல்லது ஃபலஸ்தீன - இஸ்ரேல் பிரச்சனையில் இஸ்ரேலிய நலனைமட்டும் நோக்காகக் கொண்டு செயற்படும் அமெரிக்க மற்றும் அதன் கூட்டாளிகளின் முகத் திரையை கிழித்தாலோ கிடைக்கும் பட்டமே Antisemitism. இதைக்கொண்டு உங்கள் வாய்களை மூட நினைக்கின்றனர்.

9. வன்முறை மற்றும் பயங்கரவாதம் தொடர்பாக மேற்கத்தைய ஊடகங்கள் பெரும்பாலும் ஃபலஸ்தீனையே குற்றம்சாட்டு கின்றனர். அப்பாவி மக்கள் மீது பயங்கரவாதத்தையும் வன் முறையையும் ஏவுவது யார் என்று உலகத்திற்கே தெரியும்.

10. ஃபலஸ்தீன - இஸ்ரேல் பிரச்சனையை தீர்க்க வழியில்லை. தற்போது அடிக்கடி எழுப்பப்பட்டுவரும் ஒரு பொய்க் கருத்தா கும் இது. ஃபலஸ்தீன - இஸ்ரேல் பிரச்னைக்கு அல்ல, இஸ்ரே லாலும் அதன் கூட்டாளிகளாலும் உருவாக்கப்பட்டு நடை முறைபடுத்தப்பட்டு வரும் வெறுப்புக்கும் காழ்ப்புணர்ச்சிக்கும் தான் தீர்வே கிடையாது. ஃபலஸ்தீன - இஸ்ரேல் பிரச்சனைக்கு தீர்வு காண வேண்டும் என்றால், முதலில் இஸ்ரேலைப் பற்றியும் அதன் கொலைகார கூட்டாளிகள் பற்றியும் பேசவேண்டும். இவர்களின் உண்மை முகங்களை ஊடகங்களில் வெளிப்படுத்த வேண்டும். இந்த கூட்டணியால் அப்பாவி ஃபலஸ்தீன மக்கள் படும் துயரங் கள் வெளிக் கொணரப்பட வேண்டும். (கருத்து மூலம்: எம். ஹிமாஸ் நிலார்/ Naharvu. com)



உலக அரங்கில் வேறு சில மாற்றங்கள் வேக வேகமாக நடை பெறத் தொடங்கின. ஐரோப்பாவில் தோன்றிய தொழிற் புரட்சி, பொருட் களுக்கான புதிய புதிய சந்தைகளை உருவாக்கும் போட்டியை நாடுகளிடையே உண்டாக்கியது. ஒரு புதிய அரசியல், பொருளாதார சக்தியாக தன் பெயரை ஜெர்மனி எழுதிக் கொண்டிருந்தது. அதற்கும் சந்தை தேவைப்பட்டது. ஆனால், ஏற்கனவே பல நாடுகளை பிரிட்டனோ பிரான்ஸோ தங்கள் சந்தைகளாக ஆக்கிவிட் டிருந்தன. இதன் விளைவாக உலகப் போர் தவிர்க்க இயலாத தாகிவிட்டது.

ஜெர்மனி, இத்தாலி, ஆஸ்திரியா ஓரணியில் திரண்டன. உலகப் போர் மூணடது. ஜெர்மனியோடு தான் கொண்டிருந்த தொடர்பு களால் துருக்கிப் பேரரசும் இந்த அணியில் இடம் பெற்றது. அரசியல் ரீதியாகப் பார்த்தால் யாரோடும் அணிசேராமல் நடு நிலைமை வகித்திருக்கவேண்டும். அதுதான் அப்போது துருக் கிக்கு நல்லது. ஏனெனில் பிரிட்டனும் பிரான்ஸூம் ஏற்கனவே துருக்கிக்குச் சொந்தமான *ஹிலால்* பகுதியை (இராக், சிரியா மற்றும் ஃபலஸ்தீன்) நோக்கி கண்களை உருட்டிக் கொண்டிருந்தன.

தங்களுக்கு தேவையானவற்றை அடைவதில் விதிகளையோ ஒழுக்கத்தையோ பார்த்துக் கொண்டிருப்பதில்லை என்ற முடி விற்கு அவை எப்போதோ வந்துவிட்டிருந்தன. ‘என்ன ஆனாலும் சரி! தங்களோடு சேர்ந்து துருக்கிக்கு எதிராக புரட்சி செய்யுங்கள். போர் முடிந்த கையோடு அரபுப் பகுதிகள் முழுவதையும் ஒன்றிணைத்து ஓர் அரசாக்கி உங்களை ஆட்சிக் கட்டிலில் அமர்த்துகின்றோம்’ - என மக்காவின் முக்கிய ‘தலை’யான ஹூஸைன் இப்னு அலீ-யோடு பிரிட்டன் ரகசிய ஒப்பந்தம் செய்து கொண்டது.

மறுபக்கம் யூதர்களோடு உரையாடிக் கொண்டிருந்தார்கள். பிரிட்டனின் பல அரசியல் புள்ளிகளின் பாக்கெட்டுகளையும் யூதர்கள் வழிய, வழிய நிரப்பினார்கள். போர் முடிவிற்கு வந்துவிட்டால் ஃபலஸ்தீனத்தில் யூதர்களுக்கென ஓர் அரசை அமைக்க பிரிட்டன் கண்டிப்பாக உதவும் என வாக்களித்தார்கள். இந்த ‘உதவிக்கு’ பகரமாக, ஸியோனிச இயக்கத்தின் பொறுப் பாளராகவும் வேதியியல் பேராசிரியராகவும் இருந்த *வொய்ஸ்*

மென் (Chaim Weizmann) பல ரசாயன கண்டுபிடிப்புகளை பிரிட்டனுக்கு கொடுத்து உதவினார் என்றும் அதன் காரணத்தினால் தான் போரில் பிரிட்டன் மிக எளிதாக வெற்றி பெற்றது என்றும் சொல்லிக் கொள்கிறார்கள்.

இதற்கிடையே இன்னொரு வேடிக்கையும் நடைபெற்றது. அரபுப் பகுதிகளை தமக்கிடையே பங்கிட்டுக் கொள்வது என பிரிட்டனும் பிரான்ஸும் ஒப்பந்தம் செய்துகொண்டன. *ஸாய்கஸ் பீகாட் ஒப்பந்தம் (The Sykes–Picot Agreement)* என இது வழங்கப்படுகின்றது. முதல் உலகப்போரின் போதே இதுவும் அமுலுக்கு வந்துவிட்டது. இதன்படி இராக்கும் ஃபலஸ்தீனும் பிரிட்டனுக்கு சொந்தம். சிரியாவும் லெபனானும் பிரான்ஸுக்கு போய்ச்சேரும்.

எதற்காகவும் காத்திராமல் தங்கள் பணியை யூதர்கள் தொடங்கி விட்டிருந்தார்கள். உலகத்தின் பல்வேறு பகுதிகளிலும் -குறிப்பாக ரஷ்யாவில் அல்லல் பட்டுக் கொண்டிருந்த யூதர்களை ஃபலஸ்தீனத்தில் குடியேறுமாறு அழைப்பு விடுத்தார்கள். அதற்கான அனைத்து வகை உதவிகளையும் செய்வதாக வாக்களித்தார்கள்.

கி.பி 70 ஆமாண்டிற்குப் பிறகு குறிப்பிட்டுச் சொல்லும் அளவில் யூதர்கள் ஃபலஸ்தீனத்தில் குடியிருக்கவே இல்லை என்பதைக் கண்டோம். முஸ்லிம்களின் ஆட்சியின் போது ஒன்றிரண்டு யூதக் குடியிருப்புகள் இருந்தன. எனவேதான் 1881 ஆமாண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் போது யூதர்களின் மொத்த எண்ணிக்கை 85 ஆயிரம்தான் இருந்தது. முதல் உலகப் போர் முடிந்ததும் யூதர்கள் குடியேறுவதற்கான அனைத்து வாசல்களையும் அகலமாக திறந்துவைத்தது, பிரிட்டன். பெருமளவில் யூதர்கள் சாரிசாரியாக குடியேறத் தொடங்கினார்கள்.

சின்ன சின்ன காரணங்களை எல்லாம் ஊதிப்பெரிதாக்கி முஸ்லிம்களிடம் இருந்த நிலங்களை பிரிட்டன் அரசாங்கம் பிடுங்கிக் கொண்டது. பிடுங்கிய நிலங்கள் அனைத்தும் யூதர்கள் குடியேற கொடுக்கப் பட்டன. மார்க்கெட் விலையை விட பெரியதொகையை அள்ளிக் கொடுத்து முஸ்லிம்களின் நிலங்கள் விலைபேசப்பட்டன. ஏதோ நடக்கின்றது என்பதை முஸ்லிம்கள்

உணரலானார்கள். நிலைமையை உணர்ந்து சுதாகரித்துக் கொண்ட அவர்கள் 1936 ஆமாண்டில் முழு சுதந்திரத்தைக் கோரி கிளர்ச்சி செய்யத் தொடங்கினார்கள். 1939 வரை கிளர்ச்சி நடந்தது. முஸ்லிம்களோ சிதறிக் கிடந்தார்கள், எதிரே இருப்பதோ வலு வான ஒரு சாம்ராஜ்யம். என்னவாகும்? அதுதான் ஆனது.

யூதக் குடியேற்றங்கள் வேகவேகமாக நடைபெறுவது எளி தாகிப் போனது. இரண்டாம் உலகப் போர் தொடங்கியது. ஜெர் மனியில் யூதர்கள் பல்வேறு கொடுமைகளுக்கு ஆளாக்கப் பட்டார்கள். அவர்கள் அனைவரும் ஃபலஸ்தீனத்தை நோக்கி படையெடுத்தார்கள். 1948 ஆமாண்டிற்குள் ஃபலஸ்தீனத்தில் யூதர்களின் எண்ணிக்கை 7 லட்சத்து 50 ஆயிரமாக உயர்ந்து விட்டது.

யூதர்கள் அதிக அளவில் உள்ளதால் அவர்களுக்கென ஒரு தனி நாடு உருவாக்கப்பட்டே ஆகவேண்டும் என பேசுவதற்கு இதனை வாய்ப்பாக ஆக்கிக் கொண்டது, பிரிட்டன். அங்கிருந்து ‘கிளம்புவதற்கு’ முன்பாக ஒரு நாட்டை உருவாக்கி ஐக்கிய நாடுகள் சபையில் அதற்குரிய அங்கீகாரத்தையும் பெற்று தந்து விடுவோம் என்றார்கள். ஃபலஸ்தீனத்தை இரண்டு துண்டு களாக்கி ஒன்றை யூதர்களுக்கு ‘தூக்கிக்’ கொடுத்துவிட்டு, அதற்கு முறையான சட்ட அங்கீகாரத்தையும் பெற்றுக்கொடுத்துவிட்ட பிறகே வெளியேறினார்கள். குரங்குப் பங்கீடு மட்டுமல்ல, கொடூரப் பங்கீடும் கூட. மூன்றிலொரு பங்கு யூதர்களுக்கு ஃபலஸ்தீனத்தின் 56 சதவீதப் பாகத்தைக் கொடுத்தார்கள். இரண்டு பங்கு முஸ்லிம்களுக்கோ மொத்தம் 44 சதவீதப் பாகமே எஞ்சியிருந்தது.

ஃபலஸ்தீன், ஃபலஸ்தீனர்களுக்குரியது. அந்நாடு முழுக்க அவர்களுக்கே கொடுக்கப் படவேண்டும். அங்கிருந்தும் இங்கி ருந்தும் வந்து குடியேறிய யூதர்களுக்கு எதற்கு பங்கு கொடுக் கப்படவேண்டும்? முடவன் காதில் ஊதிய சங்கு அல்ல இது, ஊதினால் உங்கள் வாயையே கிழித்துவிடும் முரடர்களின் காது.

ஆரம்பத்தில் ஏதோ அமைதியாக இருந்தார்கள் என்றெல்லாம் ஸியோனிசர்களைப் பற்றி சொல்லமுடியாது. ஃபலஸ்தீனம் கிடைத்தாகி விட்டதே என்றெல்லாம் பேசாமலிருக்க அவர்கள்

தயாராகவே இல்லை. எகிப்து, சினாய் பள்ளத்தாக்கு, சிரியா மற்றும் இராக்கின் பகுதிகளை எல்லாம் ஒன்றிணைத்து 'அகன்ற இஸ்ரேல்' நாட்டை உருவாக்க வேண்டும் என திட்டம் தீட்டி னார்கள். அதற்காகத்தான் இவ்வளவையும் செய்து கொண்டிருக் கின்றார்கள். வெறிபிடித்த யூதர்கள் சிலர், இந்த வரைபடத்தில் *மதீனாவையும் கைபரையும்* சேர்த்திருக்கின்றார்கள்.

இந்த நோக்கத்தை முன்னிறுத்தி, 1948 ஆமாண்டு தனிநாட்டை அறிவித்த கையோடு ஃபலஸ்தீனத்தின் 77 சதவிகிதப் பகுதிகளை தங்கள் கட்டுப் பாட்டிற்குள் கொண்டு வந்தார்கள். அதன்பின் 1967 ஆமாண்டு நடைபெற்ற அரபு-இஸ்ரேல் போரின் முடிவில் முழு ஃபலஸ்தீனத்தையும் எகிப்து நாட்டின் *சினாய்* பள்ளத் தாக்கை யும் (Sinai Peninsula) சிரியா நாட்டிலுள்ள *கோலான்* மலைக்குன்றுகளையும் (Golan Heights) கைப்பற்றிக் கொண் டார்கள். அதன்பின் நடந்த சமாதான பேச்சு வார்த்தைகளின் முடிவில் *சினாய்* பள்ளத் தாக்குப் பகுதியை எகிப் துக்கு திருப்பிக் கொடுத்துவிட்டார்கள் என்றாலும், *கோலான்* மலைக் குன்று களையோ *மேற்குக்கரைப்* பகுதியையோ *காஸா* பகுதியையோ திருப்பித்தர முன்வர வில்லை.

அதன்பின், 1988 ஆமாண்டு நடைபெற்ற *இன்திஃபாழா* என்னும் மக்கள் எழுச்சி உத்வேகம் பெற்று இப்பகுதிகள் அவர்கள் கைகளைவிட்டு போய் விடும் போலிருந்த நிலையில் *யாஸிர் அரஃபாத்*-தோடு ஓஸ்லோ நகரில் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். பெயரளவில் அங்கே ஃபலஸ்தீனர்களின் சுதந்திர அரசாங்கம் அமைக்க ஒப்புக்கொண்டார்கள். அப் போதும்கூட இஸ்ரவேலர்களின் முழுக்கவனமும் ஜெருஸலேம் பகுதியை யும் அதன் சுற்றுப்புற பகுதிகளையும் முடிந்தவரை தங்கள் கட்டுப்பாட்டிலேயே வைத்திருக்கவேண்டும் என்பத தாகத்தான் இருந்தது. கூடவே, காஸா பகுதியையும் தங்கள் ஆதிக்கத்திலேயே வைத்துக் கொண்டார்கள்.

ஒருபக்கம் ஸியோனிச சதித்திட்டங்கள் நிறைவேற அமெரிக் காவும் ஐரோப்பிய நாடுகளும் பேருதவியாக இருக்கின்றன என்றால் மறுபக்கம் எல்லாவற்றையும் இழந்தபின்பும் ஃபலஸ் தீன சமூகம் ஒன்றுதிரண்டு ஒரே சக்தியாக உருத்திரளவில்லை

என்றே சொல்லியாக வேண்டும். பல போராட்டங்களின் போதும் அண்மையில் நடைபெற்ற காஸா முற்றுகையின் போதும் தங்கள் சொந்தப்பிரச்சனைகளைக் கைவிட்டுவிட்டு ஃபலஸ்தீனர்கள் ஒன்றுதிரண்டு போராடியதை மறுக்கமுடியாது என்றாலும் ஃபலஸ்தீனர்கள் ஒற்றுமையோடு இல்லை என்பதே யதார்த்தமாகும். அக்கம்பக்கமுள்ள அரபு நாடுகளிடமிருந்து அவர்களுக்குக் கிடைத்திருக்கவேண்டிய உதவி ஒத்தாசைகளும் கிடைப்பதில்லை என்பதையும் சொல்லியாக வேண்டும். ஒற்றுமை, உதவி-ஒத்தாசை ஆகிய இவ்விரு அம்சங்களும் ஸியோனிசசதிகளை முறியடிக்கும் இப்போராட்டத்தில் முக்கிய இடம் வகிக்கின்றன. இல்லையெனில் கூடியவிரைவில் அரபு வளைகுடா முழுக்க 'காஸா' ஆனாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.



# ஸியோனிச ஆதிக்கமும் அரபுலக அரசியல் அமைப்பும்

இதற்கு முந்தைய நிகழ்வுகளுக்கு முற்றிலும் நேர்மாறான காட்சிகளை இப்போது பார்க்கமுடிகின்றது. அண்மையில் நடந்த 'காஸா' முற்றுகைப் போர் நமக்கு ஒரு விஷயத்தை பொட்டில் அறைந்தாற்போல உணர்த்துகின்றது. ஸியோனிசத்தை யார் எதிர்த்தாலும் எந்த வடிவில் எதிர்த்தாலும் 'பயங்கரவாத' முத் திரையை குத்திக்கொள்ள வேண்டியிருக்கும் என்பதே அது. ஸியோனிச பயங்கரவாதத்தை எதிர்ப்போர் யாராக இருந்தாலும் அடையாளமே இல்லாமல் அழிக்கப்பட்டுவிடுவார்கள்.

ஹமாஸை எதிர்த்து ஓர் உலகலாவிய சதி, திட்டமிட்ட வியூகம் ஸியோனிச பயங்கரவாதத்தின் பக்கபலமாக இருப்பதை கண் கூடாக பார்க்க முடிகின்றது. நம்மில் பலர், 'அந்நியர்களைப்' போன்று காட்சி தருகின்ற அநியாயத்தையும் பார்க்கமுடிகின்றது. எகிப்திற்கும் காஸாவிற்கும் இடையே ஒரு பெருவழிப் பாதை. முதுகெலும்பு என்றே அதனை வர்ணிக்கலாம். அந்தப் பாதையை எகிப்து மூடிவிட்டது. ஸியோனிச அரசியல் பார்வை யாளர்கள் என்ன சொல்கின்றார்கள், 'எகிப்திய அரசாங்கத்தின் துணை யோடு இஸ்ரேல், காஸாவின் மீது சட்ட ரீதியான கட்டுப்பாடு களை விதிக்கும். இஸ்ரேலுக்கு மட்டுமல்லாமல் எகிப்துக்கும் இது மிகவும் தேவை'.

அதிர்ச்சியளிக்கும் இன்னொரு காட்சியையும் கண்டோம், நாம். காஸாவிற்கு போகவிருந்த மருந்துப் பொருட்களை அனு மதிக்காமல் *மஹ்மூத் அப்பாஸின்* அரசாங்கம் தடை செய்து விட்டது. அதுமட்டுமல்ல, ஐ.நா சபையில் அப்பாஸ் அரசாங் கத்தைச் சேர்ந்த தூதர், *இப்ராஹீம் குறைஷா கமால்* வெட்கமே இல்லாமல் சொல்கிறார், 'இஸ்ரேல் மீது ஹமாஸ் தொடுக்கின்ற ராக்கெட் தாக்குதல்கள் மனிதகுலத்திற்கெதிரான படு பயங்கர குற்றமாகும்!'

இவை ஒவ்வொன்றையும் ஹமாஸுக்கெதிரான ஸியோனிச சதிகாரர்களின் திட்டங்களோடும் கருத்துகளோடும் ஒப்பிட்டுப் பாருங்கள். இரண்டிற்கும் இடையே எவ்வளவு ஒற்றுமை இருக்கின்றது. இதுவரைக்கும் *பைத்துல் முகத்தஸ்* மீது இஸ்ரேலிய ஸியோனிச பயங்கவாத அரசாங்கம் தொடுத்த தாக்குதல்களை ஒருபக்கமும் ஸியோனிச அரசாங்கத்திற்கு அரபு நாடுகளின் ஆட்சியாளர்கள் செய்துவருகின்ற ஒத்துழைப்புகளை ஒரு பக்கமும் வைத்து இரண்டையும் மாறிமாறி பாருங்கள். கிறு கிறுத்துப்போய் தலைசுற்றி கீழே விழுந்துவிடுவீர்கள்.

1920 ஆமாண்டு ஃபலஸ்தீனத்தில் அரபு மக்களின் முதல் எழுச்சி தோன்றியது. எதிர்த்தரப்பில் யூதர்கள் இருந்தார்கள், அவர்களின் பின்னால் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் நின்றிருந்தது. அந்த கலகத்தில் இரு தரப்பிலும் மொத்தம் 250 பேர் காயமடைந்தார்கள். 9 யூதர்கள் நரகத்திற்குப் போய்ச் சேர்ந்தார்கள். ஃபலஸ்தீனத்தைச் சேர்ந்த நான்கு ஷுஹதாக்கள் தங்கள் குருதியால் மக்கள் எழுச்சிக்கு முன்னுரை எழுதினார்கள். *ஷுஹதாக்களின் முதலணியினர்* என்றே அவர்களை மக்கள் நினைவுகூருகின்றார்கள். ஆனால் எப்படியோ இந்தப் போராட்டத்தீயை அணைப்பதில் யூதர்களும் பிரிட்டிஷ் அரசாங்கமும் வெற்றிபெற்று விட்டார்கள்.

மறுபடியும் 1929 ஆமாண்டு மக்கள் கிளர்ந்தெழுந்தார்கள். 1936 வரை இந்த எழுச்சி வீறுகொண்டிருந்தது. மற்ற அரபு நாடுகளின் உதவி தங்களுக்கு தேவையே இல்லை என்பதை இந்த எழுச்சியின்போது ஃபலஸ்தீனியர்கள் நிரூபித்துக் காட்டினார்கள். நூற்றுக் கணக்கான ஷுஹதாக்கள் தங்கள் குருதியால் ஃபலஸ்தீனத்தை நனைத்தார்கள். *ஷைக் இஸ்ஸுத்தீன் மஷாமஹ், ஷைக் மூஸா காழிம்* போன்ற உன்னத ஆன்மாக்கள் இந்த மக்கள் எழுச்சிக்கு தலைமை தாங்கினார்கள். கொஞ்சம் கொஞ்சமாக இவ்வெழுச்சி வேகம் பெற்றுக் கொண்டிருந்தது. ஒரு கட்டத்தில் அரபு உலகி லேயே ஈடிணையற்ற மிகப்பெரிய இயக்கமாக இது உருவெடுத் தது. ஒரு சமயம், தொடர்ந்து ஏழு மாதங்கள் இடைவிடாமல் ஜிஹாதிய களத்தில் நின்று கொண்டிருந்தார்கள்.

யூதத் தலைமை மற்றும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் நிம்மதியும் உறக்கமும் தொலைந்தே போனது. அப்புறம் என்ன? அரபுத்

*தலைவர்கள் மேடைக்கு வந்தார்கள், ஓர் அற்புத அவல நாடகத்தை அரங்கேற்றினார்கள். நீதி கிடைக்கும்! உங்கள் உரிமைகளை நாங்கள் மீட்டித்தருவோம் என புரட்சியின் நாயகர்களிடம் நம்பிக்கை விதைகளை விற்றார்கள். ஃபலஸ்தீன மக்களுக்கு ஒரு கடிதத்தையும் எழுதினார்கள். 'நிரந்தர நிம்மதியும் அமைதியான வாழ்க்கையும் உங்களுக்கு கிடைத்தே தீரும் என்னும் வாக்குறுதியை நாங்கள் அளிக்கின்றோம். ஏனெனில் எங்கள் தோழனான பிரிட்டனை நாங்கள் பெரிதும் நம்புகின்றோம். நீதியும் நியாயமும் கட்டாயம் கிடைக்கும் என்று அவர்கள் செய்துள்ள அறிவிப்பிலும் எங்களுக்கு பெருத்த நம்பிக்கை இருக்கின்றது!' (காண்க: முஹாழறாத் ஃபீ தாரீஃக் ஃபலஸ்தீன், பக் 186)*

*கடைசியில் இந்த மக்கள் எழுச்சி, பிரிட்டன் அரசாங்கத்தை நம்பிய அரபுத் தலைவர்களால் அடக்கப்பட்டது. அன்று நடத்தியதையே இப்போதும் அக்கயவர்கள் நடத்தின. ஹமாஸுடைய ஆயுத பலத்தை குறைக்கவும் ஸியோனிச சதித்திட்டங்கள் வெற்றி பெறவும் தங்களால் ஆன 'பணிவிடைகளை' அரபு நாய்கர்கள் செய்துமுடித்தன!*

*அரபு லீக் தோற்றுப்போன அந்த 1948 ஆண்டுப் போர் மிகவும் சுவாரஸ்யமானது. முஜாஹிதீன்களும் ஒருசில அரபுத் துருப்புகளும் பைத்துல் முகத்தஸை வெற்றிகரமாக முற்றுகையிட்டிருந்தார்கள். ஏறக்குறைய ஒரு லட்சம் யூதர்கள் முற்றுகையிடப்பட்டிருந்தார்கள். இதோ, அரபுக்கள் வெற்றி பெறுவார்கள் என்றிருந்தது, நிலைமை. முஜாஹிதீன்களின் தலைமை கமாண்டர் அஹ்மத் அப்துல் அஜீஸ் உதவிப் பொருட்கள் எதுவும் நகரை அடையாமல் அடைத்துவிட்டிருந்தார். பசியும் பட்டினியும் அவர்களை அலைக்கழித்தன. எந்நேரமும் புனித நகரம் முஜாஹிதீன்களின் கரங்களில் விழுந்துவிடும் என உலகமே எதிர்பார்த்துக் கொண்டிருந்தது. செஞ்சிலுவைச் சங்கம் புனித நகருக்கு தண்ணீர் அனுப்பும் முயற்சியில் தோற்றுப்போனபோது இந்த எதிர்பார்ப்பு மேலும் வலுப்பெற்றது.*

*உதவிகோரி டெல்அபிப் தலைநகருக்கு கடிதங்கள் பறந்துகொண்டிருந்தன. உடனடி சமாதானத்திற்கான முயற்சிகளில் இறங்குமாறு ஆர்ப்பாட்டங்களும் கோரிக்கைகளும் வலுத்துக்*

கொண்டிருந்தன. நான்கு வாரங்களுக்கு போர்நிறுத்தம் செய்யுமாறு பிரிட்டன் பாதுகாப்பு அவை மசோதா தாக்கல் செய்தது. 1948 மே 29 ஆம் நாள் பிரிட்டன் பாராளுமன்றம் இம்மசோதாவை நிறைவேற்றியது. கூடவே இன்னொரு அறிவிப்பையும் வெளியிட்டது. தன்னோடு ஆயுத ஒப்பந்தம் செய்துள்ள (எகிப்து, ஜோர்டான், இராக்) போன்ற அரபு நாடுகளுக்கு ஆயுதங்களை இனி, பிரிட்டன் வழங்காது.

இதனைத் தொடர்ந்து நடைபெற்ற அரபு நாட்டுப் பிரதிநிதிகளின் கூட்டத்தில் பிரிட்டன் பாராளுமன்றம் முன்வைத்த சமாதானத்தை ஒப்புக் கொள்வதாக அறிவித்தார்கள். இந்த ஒப்புதல், படுமோசமான தோல்வியை விட்டு யூதர்களைக் காப்பாற்றியது. அச்சமயத்தில் அமெரிக்க கவுன்ஸிலர் ஒருவர் ஜெருஸலேம் நகரில் தங்கியிருந்தார். அவர் தெளிவான வார்த்தைகளில் இதனை வெளிப்படுத்தினார், 'பிரிட்டன் பாதுகாப்பு அவையின் சமாதான மசோதா அரபு ராணுவத்தின் பிடியிலிருந்து யூதர்களை காப்பாற்றிவிட்டது!'. (நஜ்முன் ஜதீதுன் ஃபிஷ் ஷர்க்கில் அவ்ஸத்)

அந்நிலையை நன்றாக விளங்கிக்கொள்ள 'அர்கூன் லியூமி' என்னும் யூத தீவிரவாதக் குழுவின் தலைவர் 'மணாஹீம் பேகைன்' என்பாரின் வாக்குமூலத்தை பார்வையிடலாம். 'பல யூத நகரங்களில் இருந்தும் யூத குடியிருப்புகளிலிருந்தும் தொடர்ந்து இந்த செய்தி வந்துகொண்டே இருந்தது. யூதர்கள் படுமோசமாக கவலையிலும் சோகத்திலும் பயத்திலும் பதற்றத்திலும் மூழ்கிப்போய் கிடக்கின்றார்கள். ஜெருஸலேம் மற்றும் அதன் சுற்றுப்புறங்களைப் பற்றி சொல்லவே வேண்டாம். உண்ணவோ குடிக்கவோ அவர்களிடம் எதுவுமே இல்லை. யூத ராணுவம் முற்றிலும் செயலிழந்து கிடப்பதையும் எங்கு பார்த்தாலும் அரபு துருப்புகளே காட்சி அளிப்பதையும் அவர்கள் கண்களால் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அரபு படையினரின் குண்டு வீச்சுகள் அவர்களது பயத்தை பன்மடங்கு அதிகரித்துக் கொண்டிருந்தன. எந்த விலையைக் கொடுத்தேனும் சமாதானத்தை பெற்றுத்தாருங்கள் என எல்லா இடங்களிலும் யூதர்கள் போராட்டங்களை நடத்திக் கொண்டிருந்தார்கள். 'பின் கோர் யூன்' உடனடியாக என்னை புனித நகருக்குப் போகுமாறு கேட்டுக்

*கொண்டார். அங்கு போய் பார்த்தால் நிலைமை இன்னும் மோச மாகக் கிடந்தது. கடும் கோபத்தில் கொந்தளித்துக் கொண்டிருந் தார்கள், யூத குடிமக்கள். உடனடியாக 'மார்ஷல் லா' சட்டத்தை அமுல்படுத்தினேன். ஊரடங்கு உத்தரவு நகரையே தழுவியிருந் தது. முடிந்தளவு எங்கள் இளைஞர்களுக்கு போர்க்கருவிகளை தருவித்துக் கொடுத்தேன். ஆனால் அரபு ராணுவத்தின் தாக்குதல் களைத் தவிர வேறு எந்த சத்தமும் கேட்கவே இல்லை. போர்க் கருவிகளோ தளவாடங்களோ எங்களிடம் இல்லவே இல்லை. சாப்பிடவோ குடிக்கவோ கூட ஒன்றும் இல்லை.*

*இன்னொரு பக்கம், அனைத்து தரப்பிலிருந்தும் யூத சமாதானக் குழுக்கள் ஃபலஸ்தீனர்களிடம் சமாதானத்தை யாசித்துக் கொண் டிருந்தன. சிறிது காலத்திற்காவது போரை நிறுத்துமாறு கெஞ்சிக் கொண்டிருந்தன. அப்போதுதான் இந்த இழிநிலையை விட்டும் அவமானத்தை விட்டும் தப்ப முடியும் என்பது தெளிவு. ஒரு வழியாக சமாதானம் ஆனது. நாங்கள் புனித நகரத்து மக்களுக்குத் தேவையான உணவுகளையும் மற்ற விஷயங்களையும் தருவிக்க முடிந்தது!'. (ஜரீதத்துல் ஹயாத்)*

இங்கே ஓர் அரபு வரலாற்றாசிரியரின் விமர்சனத்தை எடுத் தெழுதுவது பொருத்தமாக இருக்கும். போர்க்களத்தின் ஒரு முக் கிய பாகத்தில் அவர் அப்போது இருந்தார். அரபுப் பிரதிநிதிகள் ஒப்புக்கொண்ட இந்த சமாதானத்தை விமர்சித்து அவர் எழுதி னார். *'இந்த ஒப்புதல் ஒரு 'பெருங் குற்றம்!' சரியாகச் சொல்வ தென்றால் அரபு பிரதிநிதிகள் தாங்களாக தங்கள் தலையில் அள்ளிப்போட்டுக்கொண்ட இதனை இதைவிடக் கடுமையான சொற்களில்தான் குறிப்பிடவேண்டும்!' (கழிய்யா ஃபலஸ்தீன்)*

எப்படியோ 1948, ஜூன் மாதம் 9 ஆம் நாள் சமாதான முடிவிற்கு வந்த கையோடு மறுபடியும் போர்ப்பொறிகள் தெறிக்கலாயின. இப்போது காட்சிகள் சற்றே வேறுபட்டிருந்தன. ஸியோனிச படைகளுக்கு முன்னால் அரபுத் துருப்புகள் செயலிழந்து நின் றன. அப்போதும்கூட முஜாஹிதீன்களும் அவர்களால் தூண்டப் பட்ட ஃபலஸ்தீன பொது மக்களும் துணிந்து நின்றார்கள். என்ன ஆனாலும் சரி, யூதப்படையினரை எதிர்த்தே தீருவது என வரிந்து கட்டிக் கொண்டார்கள். அவர்கள் வெளிப் படுத்திய தீரத்தையும்

தைரியத்தையும் கண்டு யூதப் படைகள் மட்டுமல்லாமல் உலக நாடுகளே வியந்து மூக்கில் விரலை வைத்தன.

மிகச்சரியான தருணத்தில் எகிப்து மன்னர் ஒரு கட்டளையை பிறப்பித்தார். ஃபலஸ்தீனத்தில் இருந்து உடனடியாக இஃக்வானுல் முஸ்லிமீன் இயக்கத்தினர் வெளியேற வேண்டும். அத்தோடு நிற்கவில்லை, அவ்வியக்கத்தை தடைசெய்து அனைத்து சகோதரர்களையும் சிறையில் தள்ளினார். வேரோடும் வேரடி மண்ணோடும் இயக்கத்தை பிடுங்கித் தூரயெறிவதற்கான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப் பட்டன. புதுப்புது நீதி மன்றங்கள் அமைக்கப்பட்டு அவசர அவசரமாக வழக்குகள் ஃபைஸல் செய்யப்பட்டன. வரலாற்றில் அக்காட்சிகளை இன்றும் பார்க்கமுடியும். ரொம்ப தூரம் தேடிப்போக வேண்டியதில்லை. இதோ, இப்போது எகிப்தில் நடக்கின்ற காட்சிகளை பார்த்தாலே போதும்.

என்ன செய்து என்ன பயன்?. இன்றும் மக்கள் மனங்களில் இஸ்லாமிய இயக்கங்கள் உயிரோடு ரத்தமும் சதையுமாக உலவிக் கொண்டுள்ளன. பகைவர்களுக்கு எதிரான எல்லா பொது மக்கள் திரள்களிலும் போராட்டங்களிலும் இஸ்லாமிய இயக்கத்தினரின் கைகளே காணப்படுகின்றன. தடைகள், தண்டனைகள், கட்டுப்பாடுகள், வழக்குகள், சிறைகள் என நாலாபுறங்களில் இருந்தும் அவர்கள் சுற்றிவளைக்கப்படுகிறார்கள். ஃபலஸ்தீனத்தின் விடுதலைக்குரலை ஒரேயடியாக ஒடுக்க வேண்டும் என்றால் இந்த இஸ்லாமிய இயக்கத்தினரை உலக அரங்கில் இருந்தே துடைத்து எறிந்தாகவேண்டும் என்பது தெளிவாகவும் திட்டவட்டமாகவும் தெரிந்து போயிற்று.

இதற்காக கொடூரமான வழிமுறைகள் கடைப்பிடிக்கப் படுகின்றன. எகிப்திய அதிபர் ஸாதாத், 1977 ஆமாண்டு ஸியோனிச அமைப்புகளோடு சந்திப்பு ஒன்றை நடத்தினார். போர்நிறுத்தத்தைப் பற்றி பேசுவதற்காகத் தான் இந்த சந்திப்பு. யாருக்காக இந்த போர்நிறுத்தம்? இதனால் யாருக்கு லாபம்? இஸ்லாமிய இயக்கங்களுக்கா? இல்லை, ஸியோனிச சக்திக்கா? ஸியோனிச சக்திகளுக்கு சாதகமாக இருக்கின்ற போர் நிறுத்தத்தை அன்வர் ஸாதாத் ஏன் முன்னெடுக்க வேண்டும்? ஃபலஸ்தீனத்தின் விடுதலைக்கு

அவர் முயற்சிக்கின்றாரா, யூதர்கள் அமைதியோடும் நிம்மதி யோடும் வாழ வேண்டும் என்று சிந்திக்கின்றாரா?.

'ஃபலஸ்தீன சுயாட்சி' - என்பது ஒரு முக்கிய திருப்புமுனை. 1993 ஆமாண்டு மிகுந்த ஆரவாரத்தோடு இது, அமுலுக்கு வந்தது. ஸமனன் லா யுஜாதுஹா வ அரபூ பில்பகாயிஹா (எவ்விலை கொடுத்தேனும் விடுதலையைப் பெறுவோம் எங்கள் அரபுத் தோழர்கள் தோள்கொடுப்பர் எப்போதும்) ஃபலஸ்தீனத்தில் வீரியத்தோடு இயங்கி வருகின்ற இஸ்லாமிய இயக்கங்களை பிடுங்கி தூரயெறிவதற்காகத்தான் இந்த முழக்கம் எழுப்பப் பட்டது. என்னென்னவோ செய்தும் யூதர்களால் அடைய முடி யாத ஒரு விஷயத்தை எளிதாக முடித்துக் கொடுப்பதற்காகத்தான் இது எழுப்பப்பட்டது.

எப்படியோ அரசாங்கம் அமைந்துவிட்டது. அதன்பின்புதான் அதன் கொடூரம் வெளியே வந்தது. ஒன்றிரண்டு இஸ்லாமிய இயக்கத்தினரை அல்ல, ஒட்டுமொத்த ஃபலஸ்தீன மக்களையும் ஒழித்துக்கட்டுவதுதான் அரசாங்கத்தின் நோக்கம் என்பது தெளி வாகத் தெரிந்தது. பிறகு அதன் விளைவுகளையும் உலகம் கண் டது. 2002 இல் யாஸர் அரஃபாத்தை ஷெரோன் கைது செய்த போது படுமோசமான சீரழிகள் நடைபெற்றன. தொடர்ந்து 'பயங் கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கை' என்னும் பெயரில்தான் இஸ்லாமிய இயக்கத்தை ஒடுக்கும் முயற்சியில் அரசாங்கம் ஈடு பட்டது. ஃபலஸ்தீன விஷயத்தில் இந்த 'நடவடிக்கை'யை தொடர்ந்து பார்க்கமுடிகின்றது என்பது ஆச்சரியம் தான்.

இவற்றைக்காட்டிலும் ஆச்சரியத்தை தரும்விஷயம், இஸ்லா மிய இயக்கத்தை ஒழிப்பதற்கென்றே செயல்படுகின்ற மற்றமற்ற அமைப்புகள்தாம். உள்ள நிலைமையை அறியாததாலும் மக்கள் உள்ளத்தை அறியாததாலும் வெட்கமேயின்றி இவர்கள் இக் கைங்கரியத்தை செய்து வருகின்றார்கள். புனித பூமியை கொஞ் சம் கொஞ்சமாக அரிக்கின்ற கேடுகெட்ட முயற்சிக்கு தாம் ஒத் துழைப்பு தருகின்றோம் என்பதையும் அவர்கள் அறியவில்லை. இம்முயற்சிகள் வெற்றிபெற்றால் ஸியோனிச சக்திகள் வலுப் பெற்று ஒருநாள் புனித பூமியிலிருந்து தாங்களும் விரட்டப்படு வோம் என்பதையும் இவர்கள் அறியவில்லை.

# ஃபலஸ்தீன பிரச்சனை

*ஃபலஸ்தீன் தொடர்பாக கட்டுரைகள் எழுதிவரும், டாக்டர் முஹ்ஸின், தமது 'ஹகாயிக் வஸ்ஸவாபித் ஃபில் கழிய்யத்துல் ஃபலஸ்தீனிய்யா' என்னும் நூலில் பல்வேறு விஷயங்களை அலசுகிறார்.*

**யூதர்களுக்கென்று ஒரு நாடு!**

தமக்கென ஒரு நாடு வேண்டும் என்னும் சிந்தனை கடந்த நூற்றாண்டுகளில் யூதர்களிடையே வலுவடைந்தது. கீழ்வரும் விஷயங்கள் அவற்றுள் கவனிக்கத் தக்கவை.

***(1) யூதர்களின் தனிப்பண்பு:*** யூதர்களின் சூழ்ச்சிகளும் நரிக்குணமும் தெரியாத விஷயமல்ல. எந்த ஒரு சமூகமாக இருந்தாலும் அவர்களால் கலந்து பழகமுடியாது. தங்கள் இயல்பான தன்மையை கைவிட்டு பிற மக்களோடு மக்களாக கலந்து பழக முன்வர வேண்டும் என்பதற்காகவே அவர்களுக்குள் ஓர் இயக்கம் தோன்றியது. *'ஹெஸ்கிலா'* என்பது அதன் பெயர். ஆனால் அவ்வியக்கம் வெற்றி பெற முடியாமற்போனது. அதன் கருத்துகள் எடுபடாமல் போனதன் பின்புதான் தமக்கென ஒரு நாடு கண்டிப்பாக தேவை. அப்போதுதான் தாங்கள் நிம்மதியாக வாழமுடியும் என்னும் கருத்து வலுப்பெற்றது.

***(2) புதிய இனக்கொள்கை:*** ஐரோப்பாவில் கடந்த நூற்றாண்டுகளில் குறிப்பாக 19ம் நூற்றாண்டில் புதிய புதிய இனக்கொள்கைகள் முளைத்தன. கிறித்துவ அரசாங்கள் பல உதயமாயின. அதைக் கண்ட யூதர்கள் தமக்கும் ஒரு நாடு இருந்தால் நன்றாகயிருக்கும் என சிந்திக்கலானார்கள். புரோடெஸ்டென்ட் 16 ஆம் நூற்றாண்டில் இருந்தே இதனை முன்வைத்து வந்தார்கள். இந்த வாய்ப்பை பொன்னான தருணமாக எண்ணி அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டார்கள். அதன் விளைவாக 1897 ஆமாண்டு *ஸியோனிச இயக்கம் (Zionist Organization)* பிறந்தது. ஃபலஸ்தீனத்தில் யூதர்

களுக்கென ஒரு தனி நாடு என்னும் கோட்பாட்டை உலக அளவில் பரவலாக்கி அதற்குத் தேவையான ஆதரவைத் திரட்டும் முயற்சியில் இவ்வியக்கம் முனைப்பு காட்டியது.

***(3) மேலை நாடுகளின் சதி:*** மேலை நாடுகளின் சதியும் முக்கிய இடம் வகிக்கின்றது. யூதர்களின் தனித்தன்மையை, அவர்கள் சதிக்குணத்தை மேலை நாடுகள் நன்கு உணர்ந்திருந்தன. இவர்கள் என்றைக்கும் அரசாங்கத்திற்கு தொல்லையாகத்தான் இருப்பார்கள் என்பதை அவர்கள் பட்ட அனுபவம் சொன்னது. ஆகையால் தனிநாடு என்று யூதர்கள் சொன்ன மாத்திரத்தில் மேலை நாடுகள் ஒப்புக்கொண்டன. அதற்கான அனைத்து வாய்ப்புகளையும் உருவாக்க தயாராயின.

அவர்களுக்கு இரட்டை லாபம். ஒருபக்கம் யூதர்களின் தொல்லையும் தீர்ந்துவிடும். இன்னொரு பக்கம் முஸ்லிம்களுக்கு நடுவே இவர்களை செருகுவதால் பல நூற்றாண்டுகளாக முஸ்லிம்களோடு தொடருகின்ற பகைமையையும் தீர்த்துக் கொள்ள முடியும். விலாவில் செருகப்பட்ட குறுவாள்.

***(4) யூதர்கள் பட்ட துயரங்கள்:*** யூதர்களின் தனித்தன்மையினால் எந்த அரசாங்கமாக இருந்தாலும் ஒருகட்டத்திற்கு மேல் இவர்களை சகித்துக் கொள்ளவே இயலாது. இவர்கள் எங்கும் நிம்மதியாக வாழ்ந்ததே கிடையாது என்பதை வரலாறே சொல்கின்றது. பிற்காலத்தில் ரஷ்யா போன்ற நாடுகளில் யூதர்கள் பலவாறான சித்திரவதைகளுக்கு ஆளாக்கப் பட்டார்கள். *ஹோலோ காஸ்ட்* என்னும் நாடகத்தை நடத்தி தாங்கள் சொல்லொணா வேதனைகளுக்கு ஆளானோம் என அவர்களே புலம்பிக் கொண்டார்கள். இப்படியாக தங்களுக்கென தனி நாடு கட்டாயம் வேண்டும் என்பதற்கான காரணங்களை உருவாக்கிக் கொண்டார்கள்.

## ஏன், ஃபலஸ்தீன்?

தனிநாட்டை அமைக்க எப்பகுதியை தேர்வு செய்வது? அவர்களுக்கு முன்பாக பல தேர்வுகள் இருந்தன. ஆனால் அவர்கள் ஃபலஸ்தீனத்தையே முடிவு செய்தார்கள். அதை பிரிட்டனும் பலமாக ஆதரித்தது. எல்லாவகையான உதவிகளையும் செய்தது. இதன் பின்னணியில் சமயக் காரணங்கள் இருந்தன. *சாலமன்*

டெம்ப்பிள் எனப்படும் பைத்துல் முகத்தஸ் இப்பகுதியில்தான் இருக்கின்றது.

மேலை நாடுகளின் சதித்திட்டம் ஒன்றும் இதன் பின்னணியில் இருந்தது. தங்கள் எண்ணப்படி யூதர்கள் அகன்ற இஸ்ரேல் அமைப்பதில் வெற்றி பெற்றால் அரபு நாடுகளுக்கிடையே அரசியல் கொந்தளிப்பே ஏற்பட்டு விடும். ஆசியாவிலுள்ள முஸ் லிம் நாடுகளையும் ஆப்பிரிக்காவிலுள்ள முஸ்லிம் நாடுகளை யும் அவர்கள் பிரித்துவிடுவார்கள். தங்கள் சதித் திட்டங்களால் இப்பகுதியை நிம்மதி இழக்கச் செய்துவிடுவார்கள்.

நடந்ததும் இதுவே. இஸ்ரேல் நாடு உருவானபின்பு, அரபு நாடு களின் நிம்மதி பறிபோய்விட்டது. என்னென்ன அரசியல் விளை வு கள் ஏற்பட்டன? என்பது ஒருபுறம் இருக்க, அரபுக்களுடைய அரசியல் அரங்கு குழம்பிப் போனதென்னவோ உண்மைதான்.

ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட எகிப்து அரசாங் கம் கவிழ்க்கப் பட்டது, உலகத்தின் மிகப்பெரிய இஸ்லாமிய இயக்கம் பயங்கரவாத இயக்கமாக அறிவிக்கப்பட்டது, அவ் வியக்கத்தின் உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டு பயங்கரமான சித்திரவதைகளுக்கு ஆளாக்கப்பட்டது, முஸ்லிம் நாடுகளில் மக்கள் விரும்புகின்ற அரசாங்கங்கள் அமையாமல் பார்த்துக் கொள்ளப்பட்டது, இஸ்லாமிய நாடுகள் பொருளாதார ரீதியில் மற்ற நாடுகளை சார்ந்தே இருந்தாக வேண்டும் என்னும் நிலைமை உருவாக்கப்பட்டது - என இவ்வனைத்து பிரச்சனை களிலும் இஸ்ரேலுக்கு தனிப்பங்கே இருக்கின்றது.

‘சுற்றிலுமுள்ள முஸ்லிம் நாடுகளின் வலிமையை முடிந்தளவு குறைத்துக் கொண்டே இருக்கவேண்டும், மேலும் குறைக்க வேண்டும், அதன் பின்பும் குறைக்கவேண்டும். அதில்தான் இஸ்ரேலின் நலன் அடங்கியிருக்கின்றது. அவ்வாறே, இஸ்லா மிய உலகம் ஒன்றுபட வேண்டும் என்றால் வலிமையைத் திரட்டவேண்டும் என்றால் இஸ்ரேல் மூலமாக இஸ்லாமிய நாடுகளின் மீது திணிக்கப்படும் சதித்திட்டங்கள் அனைத்தையும் ஒன்றுமில்லாமல் செய்யவேண்டும். அவற்றை நீர்த்துப்போக வைக்கவேண்டும்’ என்கிறார், டாக்டர் முஹ்ஸின் சாலிஹ்.

ஃபலஸ்தீன் பிரச்சனையை சிலர், யூதர்களின் சமயப் பிரச்சனை யாகப் பார்க்கின்றார்கள். அது சரியே, என்றபோதிலும் ஒரு நூற் றாண்டாக தொடருவதைப் பார்க்கையில் சமயப் பிரச்சனை என் பதைவிட அரசியல் பிரச்சனை என்பதே முக்கியத்துவம் பெறு கின்றது. இஸ்லாமிய எதிர்ப்பு என்பதே இதன் அடித்தளம். மேலை நாடுகள் இவ்விஷயத்தில் இஸ்ரேலை ஒரு துருப்புச் சீட்டாகத்தான் பயன்படுத்துகின்றன.

## ஸியோனிச இயக்கமும் மேலை நாடுகளும்

இஸ்ரேல் நாட்டை உருவாக்கும் முயற்சிகள் 1880 ஆண்டி லிருந்தே கருக் கொண்டன. உலகின் பல பகுதிகளிலும் வசிக்கும் யூதர்கள் அந்நாடுகளை விட்டு வெளியேறி ஃபலஸ்தீன் வந்து விடவேண்டும் என உலக அரங்கில் ஓர் இயக்கம் இதற்கென நடத்தப்பட்டது. பிரிட்டன் வல்லரசு தன் ஆதிக்கத்தைப் பயன் படுத்தி ஃபலஸ்தீனத்தில் நிலங்களை யூதர்களுக்கு வளைத்துக் கொடுத்தது.

அதன்பின், 1897 ஆமாண்டு *தியோடர் ஹெர்ஸல்* தனது புகழ்பெற்ற ஸியோனிச இயக்கத்தை (Zionist movement) முறைப் படி தொடங்கினார். அகன்ற இஸ்ரேல் என்பதே அதன் குறிக் கோள். கூடவே *சாலமன் கோவிலைக்* கட்டுவது என்பதையும் சேர்த்துக் கொண்டார்கள். முதலாம் உலகப்போர் வரை குறிப் பிடத்தக்க முன்னேற்றம் எதனையும் ஸியோனிச இயக்கத்தால் அடைய முடியவில்லை.

1914 ஆமாண்டு முதலாம் உலகப்போர் மூண்டபோது 'யூதர் களுக்கென தனிநாடு' என்னும் கருத்தைக் கொண்டிருந்த யூதத் தலைவர், *வொய்ஸ் மென்* (Chaim Weizmann) உலகலாவிய ஏகாதி பத்தியங்களோடு பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டார். (இஸ்ரே லின் முதல் ஜனாதிபதி இந்த வொய்ஸ்மேன்) ஆரம்பத்தில் *ஜெர்மனி* கொஞ்சம் ஒத்துழைத்தது. ஆனால் அது வேலைக்கா வாது எனப்புரிந்துகொண்ட யூதத்தலைவர்கள் பிரிட்டனோடு ஒப்பந்தம் செய்தார்கள். உலகம் முழுக்க உள்ள யூதர்கள் இப் போரில் எப்படி எல்லாம் முடியுமோ பிரிட்டனுக்கு உதவு வார்கள். வெற்றி பெற்றவுடன் யூதர்களுக்கான தாய் நாட்டை அமைப்பதில் *பிரிட்டன்* கை கொடுக்கவேண்டும் என்பதே

ஒப்பந்தம்.

துருக்கி அரசாங்கம் இருக்கும்வரை இது சாத்தியப்படாது என்பதை பிரிட்டனும் யூதர்களின் ரகசிய அமைப்புகளும் நன்றாக அறிந்திருந்தன. முதலாம் உலகப்போரின் போது பலப்பல பலவீனங்கள் இருந்தபோதும் குறிப்பிடத் தக்க சக்தியாக துருக்கி இருந்தது. இஸ்லாமிய உலகின் அடையாளமாகவும் சின்னமாக வும் கருதப்பட்டது.

இதனை எதிர்கொள்ள அரபு தேசியவாதமும் துருக்கி இனவாத மும் திட்டமிட்டு தூண்டப்பட்டன. இவ்வாறு இரண்டு கருத்து களையும் எதிரும் புதிருமாக கொண்டுவந்து நிறுத்தினார்கள்.

இன்னொரு பக்கம், பிரிட்டன் அரசு, மக்காவின் அரசியல் தலைவரோடு பேசியது. எழுத்துபூர்வமான வாக்குறுதியை வழங்கியது. துருக்கியோடு சேராதீர்கள். விலகி நில்லுங்கள். போர் முடிந்ததும் உங்களுக்கென தனி அரசாங்கம் அமைத்துக் கொடுக்கப்படும் என்பதே அந்த வாக்குறுதி. அரபுக்கள் துருக் கியை எதிர்த்து கலகம் செய்தார்கள். ஃபலஸ்தீன், இராக் மற்றும் சிரியா போன்ற பகுதிகளை பிரிட்டன் வென்றது.

முதல் உலகப் போர் முடிந்ததும் யூதர்களோடு செய்த ஒப்பந் தத்தை பிரிட்டன் நிறைவேற்றியது. 'பால்ஃபோர் அறிக்கை' என்னும் பயங்கர அறிக்கை 1917 ஆமாண்டு நவம்பர் 2 ஆம் நாள் வெளியிடப்பட்டது. இஸ்ரேல் என்னும் நாட்டை உருவாக்க நடப்பட்ட முதல் கல் அது. ஒரு வருடம்கூட ஆகியிருக்காது. அதற்குள்ளாக அதாவது 1918 செப்டம்பர் மாதத்திற்குள் ரகசிய வழிகளில் யூதர்களை ஃபலஸ்தீனத்தில் குடியேற்றத் தொடங்கி விட்டது, பிரிட்டன்.

மறுபக்கம், மக்காவின் தலைவரோடு செய்திருந்த ஒப்பந் தத்தை தூக்கிக் குப்பையில் போட்டுவிட்டு பிரான்ஸ் நாட்டோடு ஒரு புதிய ஒப்பந்தத்தைச் செய்துகொண்டது, பிரிட்டன். 1916 ஆமாண்டு மே மாதம் சாயிக்ஸ்-பீகோ (Sykes–Picot Agreement) ஒப்பந்தம் கையெழுத்தானது. அதன்படி சிரியா, இராக் போன்ற பகுதிகளை பிரிட்டனும் பிரான்ஸூம் தமக்குள் பாகம் பிரித்துக் கொண்டன.

அதேசமயம், ஃபலஸ்தீனம் உலகலாவிய பகுதியாக அறிவிக்கப்பட்டது. பிறகு 1920 ஆமாண்டு ஏப்ரல் மாதம் ஸான்ரேமோ ஒப்பந்தத்தின்படி தன் கட்டுப்பாட்டில் ஃபலஸ்தீனத்தை எடுத்துக்கொண்டது, பிரிட்டன். 1922 ஆமாண்டு ஒருசில நிபந்தனைகளின் அடிப்படையில் ஃபலஸ்தீனத்தின் அதிகாரத்தை ஐக்கிய நாடுகளின் அவை (லீக் ஆஃப் நேஷன்ஸ்) பிரிட்டனிடம் ஒப்படைத்தது. அதாவது, அதுவரை ரகசியமாக செய்துவந்த யூதக் குடியேற்றப் பணியை இனி, பகிரங்கமாக செய்வதற்கான அனுமதியை ஐ.நா பிரிட்டனுக்கு வழங்கியது.

மௌலானா சையத் அபுல் அஃலா மௌதூதி (ரஹ்) இதுபற்றி எழுதுகையில், 'ஐக்கிய நாடுகள் சபை, ஃபலஸ்தீனத்திற்கான அரசாங்க உரிமையை பிரிட்டனுக்கு வழங்கி கொஞ்சம்கூட வெட்கமேயின்றி கீழ்வரும் வழிகாட்டுதல்களை வழங்கியுள்ளது. 'ஃபலஸ்தீனத்தை யூதர் தேசமாக மாற்றுவதற்கான வாய்ப்புகளை முடிந்தளவு எளிமைப்படுத்த வேண்டும்; ஸியோனிச இயக்கத்திற்கு சட்டரீதியான அந்தஸ்த்தை வழங்கி அரசாங்கப் பொறுப்புகளை பகிர்ந்துகொள்ளவேண்டும்; அதனுடைய ஆலோசனைகளையும் ஒத்துழைப்பையும் பெற்றுக்கொண்டு யூதர்களின் தாய்த்தேசத்தை உருவாக்கி முடிக்கவேண்டும்!' காலங்காலமாய் அங்கு வாழ்ந்துவரும் பூர்வீக மக்களைப்பற்றி என்ன அறிவுறுத்தல் வழங்கப் பட்டுள்ளது, தெரியுமா? 'அவர்களுக்கு சமய உரிமையும் வாழும் பொது (சிவில்) உரிமையும் மறுக்கப்படக்கூடாது. அரசியல் உரிமைகளைப் பற்றி பேச்சே இல்லை. அமைதியை நிலைநாட்டுவதற்காக உருவாக்கப்பட்டுள்ள ஐக்கிய நாடுகளின் அவை தருகின்ற நியாயம் இதுதான். வெளியிலிருந்து அழைத்துவரப்பட்டு குடியேற்றப்படும் யூதர்களுக்கு அரசியல் உரிமைகளை தருவார்களாம். மண்ணின் மைந்தர்களான பூர்வீக குடிகளுக்கு அவ்வுரிமை கிடையாதாம். ஒரு பேச்சுக்குக்கூட அரசியல் உரிமைகள் அவர்களுக்கு கொடுக்கப்படவே இல்லை' (யூதர்களின் சதித் திட்டம்)

1918 ஆமாண்டிலிருந்து 1948 வரை யூதர்கள் ஃபலஸ்தீனத்தில் குடியேறுவதற்கான அனைத்து வாய்ப்புகளையும் தோதாக உருவாக்கிக் கொடுத்தது, பிரிட்டன். 1918 ஆமாண்டு யூதர்களின்

எண்ணிக்கை, 55 ஆயிரம். 1948 ஆண்டு இது 6 லட்சத்து 46 ஆயிரமாக அதிகரித்தது. அதாவது 8 சதவிகிதமாக இருந்தோர் 32 சதவிகிதமாயினர். இதேபோன்று இப்படித் தான் என்றில்லாமல் யூதர்களுக்கு நிலங்களும் தாரை வார்க்கப்பட்டன. இந்த 30 ஆண்டுகளை கழிப்பது ஃபலஸ்தீனர்களுக்கு படுபயங்கர சோதனையாக இருந்தது. எந்த நிமிடம் என்ன நடக்கும் என்று யாருமே ஆரூடம் சொல்லமுடியாது. அவர்களது வலிமையைக் குறைக்கவும் போக்கவும் எல்லாவகையான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. இதற்கு நேர்மாறாக யூதர்களின் அரசியல், சமூக, பொருளாதார, ராணுவ, கல்வி நிலை கூடிக் கொண்டே போனது. அவர்கள் எல்லா துறைகளிலும் எல்லா வகைகளிலும் முன்னேறிக்கொண்டே போனார்கள். ஒரு சின்ன கணக்கு போதும், இதை அளவிடுவதற்கு. 1948 ஆமாண்டு அவர்கள் அபகரித்தும் ஆக்கிரமித்தும் உருவாக்கிய தங்கள் 'சொந்த' தேசத்தை உலக அரங்கில் அறிவித்தபோது நன்கு பயிற்றுவிக்கப்பட்ட முறையான 70 ஆயிரத்திற்கும் அதிகமான படைவீரர்கள் ராணுவத்தில் இருந்தனர்.

### ஃபலஸ்தீனர்களின் போராட்டம்!

நன்கு திட்டமிடப்பட்ட சதி, மிகத் திறமையாக அரங்கேற்றப் பட்டு ஃபலஸ்தீனம் ஆக்கிரமிக்கப்பட்டது. உலக நாடுகள் அனைத்தும் மௌனமாக அல்ல, பரிபூரணமாக ஆதரவை இதற்கு தந்து உதவின. ஆனால் ஃபலஸ்தீனர்கள் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தையும் ஏற்கவில்லை, யூத ஸியோனிச சதித்திட் டங்களுக்கு முன்னால் மண்டியிடவுமில்லை. முதல் நாளிலி ருந்தே அவர்கள் விடுதலைக் கொடியை ஏந்தி, எதிர்த்து நின்றார் கள்.

1920 ஆமாண்டிலிருந்தே மூஸா காழிம், அமீனுல் ஹுஸைபி மற்றும் அவர்களின் தோழர்களின் தலைமையில் விடுதலைக் கான போராட்டத்தில் ஈடுபட்டார்கள். 1920, 1921, 1929, 1933 ஆகிய ஆண்டுகளில் வலுவான போராட்டங்கள் நடைபெற்றன. 1936 முதல் 1939 முடிய விடுதலைப் போராட்டத்திற்கு இஸ்ஸுத்தீன் அல்கஸ்ஸாம் மற்றும் அப்துல் காதிர் அல் ஹுஸைனீ தலைமை தாங்கினார்கள். எந்த அளவிற்கு மக்கள் போராட்டம் வல்லரசு

களை அழுத்தியது என்றால், பத்து ஆண்டுகளுக்குள் இதனை முழுமையாக தீர்த்துவிடுகின்றோம் என 1939 ஆமாண்டு *பிரிட்டன்* ஒப்புக்கொள்ள நேர்ந்தது. குறிப்பிட்ட பகுதிகளைத் தவிர மற்ற ஃபலஸ்தீனப் பகுதிகளை யூதர்களுக்கு விற்கமாட்டோம் என்றும், ஐந்து ஆண்டுகளுக்கு யூதர்கள் யாரும் ஃபலஸ்தீனத்திற்கு வரவே கூடாது என்பதையும் *பிரிட்டன்*அப்போது, ஒப்புக்கொண்டது. எனினும் 1945 ஆமாண்டு இதனை பொருட்படுத்தாமல் தன் பொறுப்பிலிருந்து முழுதாக *பிரிட்டன்* விலகி விட்டது. அந்த இடத்தில் *அமெரிக்கா* வந்து உட்கார்ந்தது.

**ஐக்கிய நாடுகள் சபை!**

தனது பொறுப்பிலிருந்து *பிரிட்டன்* விலகியதன் பின்விளைவு 1947, நவம்பர் மாதம் பல்லைக் காட்டியது. ஐக்கிய நாடுகள் சபையின் பொதுக் குழு ஃபலஸ்தீனத்தை ஃபலஸ்தீனத்தை இரண்டாகப் பிரித்து அறிக்கை வெளியிட்டது. வெட்கமேயில்லாத அநியாயம் என்றுதான் அதனை சொல்லியாக வேண்டும். கூச்சமேயில்லாமல் 54 சதவிகிதப் பகுதிகளை பிரித்து யூத தேசத்திற்கு கொடுத்தார்கள். வெறுமனே 45 சதவிகிதப் பகுதி ஃபலஸ்தீன முஸ்லிம்களுக்கு மிஞ்சியது. *பைத்துல் முகத்தஸ்* பகுதியை (ஒரு சதவிகிதம்) சர்வதேசப் பகுதியாக அறிவித்தார்கள்.

‘முதலில் தீர்க்கமான இறுதிக்கட்டளை இது என ஐக்கிய நாடுகள் சபை அறிவிக்கவில்லை. இரண்டாவதாக, ஐக்கிய நாடுகள் சபையின் அடிப்படை நெறிமுறைகளோடு இது முரண்படுகின்றது. விடுதலை என்பது அனைத்து நாடுகளின் அடிப்படை உரிமை, அவ்விடுதலையை நாட்டு மக்களே தீர்மானிக்க வேண்டும் என்பதே ஐக்கிய நாடுகள் சபையில் அடிப்படை நெறிமுறை. இன்னொரு பெரிய தவறு என்னவெனில் இவ்விஷயத்தில் மிகமுக்கிய பங்குவகிக்கும் ஃபலஸ்தீன மக்களோடு ஆலோசனை செய்யப்படவே இல்லை. இது தொடர்பாக அரசிதழ் (referendum) எதுவும் வெளியிடப்படவில்லை. வெளியிலிருந்து சிறுபான்மையினராக நாட்டில் குடியேறிய யூதர்களுக்கு நாட்டின் முக்கியமான செழிப்பான நிலப்பகுதிகள் யாவும் அநியாயமாகவும் அராஜகமாகவும் ஐ.நா. சபையால்

வழங்கப்பட்டன!' என்கிறார் டாக்டர் முஹ்ஸின் சாலிஹ்.

## முறைதவறிப் பிறந்த தேசமும் அரபு நாடுகளும்!

கடைசியில் அது, நடந்தேவிட்டது. 1948, மே மாதம் 14 ம் நாள் -படுபயங்கரப் பின்னணியோடு பல்லாண்டுகள் திரைமறைவாகவும் திட்டமிட்டும் நடத்தப்பட்ட அந்த சதி- தன் கோரப்பற்களோடும் கொடூர முகத்தோடும் ஜனித்தது. அரபு நாடுகள் அதனை எதிர்கொண்ட விதத்தைப் பார்த்தால் எக்கச்சக்கமான சந்தேகங்கள் தோன்றுவதை தவிர்க்க முடியவில்லை.

அனுபவமின்மை, அக்கறையின்மை, அறியாமை, ஒற்றுமையின்மை போன்றவற்றால் 1948, மே மாதம் 14ம் நாள் யூதப் படையிடம் அரபுப் படைகள் அவமானகரமான தோல்வியைத் தழுவின. 77 சதவிகிதப் பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டு வெற்றித்திமிரோடும் வெறியோடும் தன் பிறப்பை அறிவித்தது, இஸ்ரேல். எட்டு லட்சம் ஃபலஸ்தீனர்களை பிறப்பிடங்களை விட்டு நாட்டை விட்டு துரத்தியது. அப்போது ஒட்டு மொத்த ஃபலஸ்தீனர்களின் எண்ணிக்கையே ஏறத்தாழ 14 லட்சம்தான். அது மட்டுமல்ல ஃபலஸ்தீனர்களின் 585 குடியிருப்புகளில் 478 குடியிருப்புகளை முழுவதுமாய் நாசப்படுத்தியது, இஸ்ரேல். 34 இடங்களில் பெரிய அளவில் இனப்படுகொலைகள் நடைபெற்றன. எஞ்சிய ஃபலஸ்தீனர்களாவது உயிர்தப்பிப் பிழைக்கட்டும் என்று ஃபலஸ்தீனத்தின் மேற்குப் பகுதி ஜோர்தான் நாட்டிடமும் காஸா பகுதி எகிப்து நாட்டிடமும் ஒப்படைக்கப் பட்டன. வெந்த புண்ணில் வேல் பாய்ச்சிய கதையாக 1949 ஆமாண்டு ஐக்கிய நாடுகள் சபையில் உறுப்பினராக இஸ்ரேல் அங்கீகரிக்கப் பட்டது.

பாதிப்புகளுக்கும் அநீதிகளுக்கும் ஆளாக்கப்பட்ட ஃபலஸ்தீன மக்கள் 1949 முதற்கொண்டு 1967 முடிய, நீதிக்காகவும் விடுதலைக்காகவும் இடைவிடாத போராட்டங்களில் ஈடுபட்டார்கள். அச்சமயத்தில் அரபு நாடுகளின் பிரதிநிதியாக தன்னை ஜமால் அப்துந் நாசர் அறிவித்துக் கொண்டார். உண்மையில் இவ்விஷயத்தில் கொஞ்சமும் பொறுப்பில்லாமலும் அக்கறையின்றியும்தான் அரபுக்கள் நடந்து கொண்டார்கள். ஃபலஸ்தீன மக்களின் உணர்வுகளை அவர்கள் பொருட் படுத்தவே இல்லை.

அடுத்தகட்ட போராட்டத்திற்கான எந்த வியூகமும் வகுக்கப்பட வில்லை. இஸ்ரேலோ படுபயங்கர தயாரிப்புகளில் தொடர்ந்து மூழ்கியிருந்தது.

1948 முதல் 1964 வரை நிலவிய உணர்ச்சிக் கொந்தளிப்பான காலகட்டத்தில் முறையான எந்தவொரு இயக்கமும் தோன்ற வில்லை. *இஃக்வானுல் முஸ்லிமீன்* இயக்கத்தினர் அறிவித்தும் அறிவிக்காமலும் மக்கள் எழுச்சியை உத்வேகப்படுத்தும் பணியை தொடர்ந்து செய்து வந்தனர். அதன் தொடர்ச்சியாகத் தான் 1957 ஆமாண்டு *'அல்ஃபதஹ்'* இயக்கம் நிறுவப் பட்டது. அப்போது அது, ஆயுதம் தாங்கிய இயக்கம். 1948 ஆண்டு இருந்த நிலையை அடைந்தேதீருவது என்பதுதான் அதன் குறிக்கோள்.

இம்முயற்சிகள் எல்லாம் ஒருபக்கம் நடந்துகொண்டிருக்க, *அஹ்மத் குஷைரி* என்பாரின் தலைமையில் *'முனழ்ழமா அத்தஹ்ரீருல் ஃபலஸ்தீனிய்யா'* என்றொரு இயக்கத்தை *ஜமால் அப்துந் நாசர்* உருவாக்கினார். இம்முயற்சியை ஃபலஸ்தீன பொதுமக்கள் மிகவும் வரவேற்றார்கள். 1968 ஆண்டுக்குள்ளாக பல்வேறு தரப்பினர் அவ்வியக்கத்தில் தங்களை இணைத்துக் கொண்டார்கள். *'அல்ஃபதஹ்'* இயக்கமும் தன்னை அதனோடு இணைத்துக்கொண்டது.

1969 ஆமாண்டு பிப்ரவரி மாதம் அதன் தலைவராக *யாஸர் அரஃபாத்* பொறுப்பேற்றார். ஃபலஸ்தீனர்களின் ஒன்றுபட்ட குரலாக அது எதிரொலித்தது. 1974 ஆமாண்டு ஃபலஸ்தீனர்களின் ஒரே இயக்கமாக அரபு நாடுகள் அதனை அங்கீரித்தன. அதே ஆண்டு *'பார்வை உறுப்பினர்'* (non-member observer state) என்னும் வகையில் ஐக்கிய நாடுகள் சபையும் அதற்கு அங்கீகாரம் வழங் கியது.

இதற்கிடையே 1967 ஆமாண்டு, மூர்க்கமான போர் நடை பெற்றது. முறையாக ஒன்றுதிரளாததாலும் வீரியமாக வியூகத்தை வகுக்காததாலும் அரபுப் படைகள் அதிர்ச்சிகரமான தோல்வி யைத் தழுவின. ஃபலஸ்தீன் முழுவதையும் ஆக்கிரமித்துக் கொண்டது, இஸ்ரேல். மேற்குக் கரையிலும் காஸா பகுதியிலும் கூட இஸ்ரேலின் கொடி பறக்கத் தொடங்கியது. அது மட்டு மல்ல, சிரியாவின் *கோலான்* மலைக்குன்றுகளையும் எகிப்தின்

*சினாய் பள்ளத்தாக்கையும் இஸ்ரேல் கைப்பற்றிக் கொண்டது.*

### மூர்க்கமாகும் பயங்கரவாதம்!

*ஃபலஸ்தீனர்களின் தேசிய அடையாளங்களை யூத மயமாக்கும் முயற்சிகள் 1948 முதல் நடைபெற்றுவி வருகின்றன. ஃபலஸ்தீனர்களின் வரலாற்று சுவடுகளை ஒன்றுமில்லாமல் ஆக்கும் முயற்சிகளும் தொடருகின்றன. பழங்குடியிருப்புகளை அழிப்பது, புது (யூத) குடியிருப்புகளை உருவாக்குவது, உலமெங்கும் உள்ள யூதர்களை தேடிப் பிடித்துக் கொண்டுவந்து இஸ்ரேலில் குடியமர்த்துவது போன்ற சம்பவங்கள் நிற்காமல் தொடருகின்றன.*

*இன்னொரு பக்கம், ஃபலஸ்தீனர்கள் தங்கள் சொந்தநாட்டில் வாழவே அழுது மாள வேண்டியிருக்கின்றது. எந்தவித ஆதர வும் இல்லாமல் மேற்குக் கரைப்பகுதி மக்கள் நிர்க்கதியாய் விடப்பட்டுள்ளார்கள். காஸா-வோ ஒரு திறந்தவெளி சிறைச் சாலையாகவே ஆகிவிட்டது. சாதாரண அடிப்படைத் தேவைகளைக்கூட அங்கே எளிதாக நிறைவேற்றிக்கொள்ள முடியாது.*

*எல்லாவற்றிற்கும் மேலாக, பைத்துல் முகத்தஸ் புனிதப்பள்ளி அருகே கேடுகெட்ட பயங்கரவாத செயல் ஒன்றை இஸ்ரேல் செய்துவருகின்றது. புனிதப்பள்ளி அருகே, 86 சதவிகித நிலப் பரப்பினை இஸ்ரேல் ஆக்கிரமித்துக் கொண்டுள்ளது. 1969 ஆமாண்டு புனிதப்பள்ளிக்கு தீ வைக்கும் கொடிய சம்பவம் நடைபெற்றது. அதன்பின்பு தொடர்ந்து முஸ்லிம்களின் உணர்வுகளை படுகாயப்படுத்தும் வகையில் புனிதப் பள்ளியை கேவலப் படுத்தும் நிகழ்வுகளோ அல்லது இடித்து தரை மட்டமாக்கும் முன்முயற்சிகளோ நடைபெறாதே நாளே இல்லை என்றாகி விட்டது, நிலைமை. அதுபோன்றே தங்கள் 'நாட்டின்' தலைநகராக புனித ஜெருஸலேம் நகரை அறிவிக்கும் முயற்சிகளிலும் இறங்கிவருகின்றது, இஸ்ரேல்.*

### அகதிகள் பிரச்சனையும் ஐ.நா.சபையும்!

*ஃபலஸ்தீன அகதிகள் பிரச்சனையும் ஒரு முக்கிய பிரச்சனையாகும். 2012 ஆமாண்டு எடுக்கப்பட்ட கணக்கின்படி 58 லட்சம் ஃபலஸ்தீனர்கள் மற்ற நாடுகளில் அகதிகளாக இருக்கின்றார்கள்.*

இதுவன்றி, 19 லட்சம் பேர், காஸாவிலும் மேற்குக்கரையிலும் முகாம்களில் இருக்கின்றார்கள். இத்தோடு, இரண்டரை லட்சம் ஃபலஸ்தீனர்கள் 1948 முதல் வீடின்றி அங்குமிங்கும் அல்லல் பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். இன்றுவரை ஒதுங்க ஓரிடம் அவர்களுக்கு அகப்பட்ட பாடில்லை.

உலகத்திலேயே மிகவும் பழைய புராதன பிரச்சனையாக ஃபலஸ்தீன் இருப்பதைப் போலவே, உலகமெங்கும் அகதிகள் எண்ணிக்கையிலும் ஃபலஸ்தீனர்கள் தாம் அதிகளவில் இருக் கின்றார்கள். அவர்கள் தாய்நாடு திரும்பவேண்டும் என்பது குறித்து, இதுவரை 110 தீர்மானங்கள் ஐ.நா. சபையில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. ஒன்றும் விளையவில்லை.

தனது அகம்பாவத்தில் பிடிவாதமாக இருக்கின்றது, இஸ்ரேல். வல்லரசுகளோ எப்போதும் போல் மௌனமாக இருக்கின்றன அல்லது 'சொற்களற்ற' அரசியலில் ஈடுபடுகின்றன. இந்தப் பிரச் சனை 1949 இலிருந்து தொடர்கின்றது என்பதுதான் ஆச்சரியம். 1974 முதல் ஏகப்பட்ட நாடுகள் ஒன்றுசேர்ந்து ஐ.நா. சபையில் தீர்மானத்தை அளித்து வருகின்றன. ஆனால் இன்றுவரை ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவே இல்லை. ஐ.நா. சபை உறுப் பினராக இருந்தும் இவற்றுள் ஒன்றைக்கூட இஸ்ரேல் ஏறிட்டுப் பார்க்கவில்லை. அதைவிடவும் ஆச்சரியம், அமெரிக்காவும் மற்ற வீட்டோ அதிகாரம் பெற்ற நாடுகளும் எந்தக் கவலையும் இல்லாமல் மனித உரிமைகளையும் மானுட ஒழுக்கத்தையும் ஏறிமிதிக்கும் இஸ்ரேலை கைவிட்டுவிடாமல் ஆதரித்து வருவது தான். தொடர்ந்து இஸ்ரேலுக்கு ஆதரவாக இவை தமது வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தி, தீர்மானங்களை தோற்கடித்து வருகின்றன.

### ஃபலஸ்தீனர்களின் போராட்டமும் அரபு நாடுகளும்!

1967 க்கும் 1970 க்கும் இடைப்பட்ட காலத்தை ஃபலஸ்தீன போராட்டத்தின் பொற்காலம் என்றே கூறலாம். ஜோர்தானை மையமாகக் கொண்டு அப்போது நடைபெற்ற போராட்டங்கள் இஸ்ரேலின் தூக்கத்தை அறவே கெடுத்துவிட்டன. ஆனால் 1971 ஆண்டு 'வெளிச்சக்திகளின்' நிர்ப்பந்தங்களுக்கு பலியாகி தன் நிலத்தை பயன்படுத்தக்கூடாது என ஜோர்தான் மறுத்துவிட்டது.

வேறுவழியின்றி போராட்டம் லெபனானை மையமாகக் கொண்டு நடைபெறத் தொடங்கியது. சிறிது காலத்திற்குள்ளாக அங்கும் நிலைமை மாறிவிட்டது. 1978 ஆமாண்டு தெற்கு லெபனான் மீது இஸ்ரேல் தாக்குதல் தொடுத்தது. 1982 ஆமாண்டு போராட்டத்தினை நசுக்குவதாகக் கூறிக்கொண்டு பெய்ரூத் நகரத்தையும் தாக்கத் துவங்கியது. வேறுவழியின்றி லெபனானும் ஃபலஸ்தீனப் போராட்டத்திற்கு உதவி செய்வதை நிறுத்திக் கொண்டது. இவ்வாறு அரபு நாடுகள் எதிலும் நிலைகொண்டு போராட்டத்தை நடத்தமுடியாத நிலை ஏற்பட்டுவிட்டது.

ஃபலஸ்தீன போராட்ட விஷயத்தில் அரபு நாடுகள் நடந்து கொண்ட விதம் விரக்தியைத்தான் தருகின்றது. சில சமயங்களில் மனிதாபிமானமே இன்றி வெளியே தள்ளிவிட்டிருக்கின்றன. 1973 ஆண்டு நடைபெற்ற போரிற்குப் பிறகு நிலைமை சற்றே முன்னேற்றம் கண்டிருந்தது. இப்போரில் கணிசமான வெற்றியை எகிப்து பெற்றது. இதற்கு அடுத்த வருடம்தான் ‘முனழ்ழமா அத்தஹ்ரீருல் ஃபலஸ்தீனிய்யா’ அமைப்பினை அரபு நாடுகள் அங்கீகரித்தன. அதன்பிறகு ஏதோ ஒரு சதிக்கு அரபு நாடுகள் பலியாகி விட்டன என்பது அப்பட்டமாக தெரிந்தது. ஒன்றன் பின் ஒன்றாக இப்பிரச்சனையை அரபு நாடுகள் அனைத்தும் கைவிடத் தொடங்கின.

1968 ஆமாண்டு எகிப்து கையெழுத்திட்ட, கேம்ப் டேவிட் (Camp David Accords) ஒப்பந்தம்தான் ஆகப்பெரும் கொடுமை. அத்தோடு சுத்தமாக இப்பிரச்சனையில் இருந்து கைகளைக் கழுவிக் கொண்டது, பெரிய நாடான எகிப்து.

அப்புறம் இராக்கிற்கும் ஈரானிற்கும் சண்டை. 1980 முதல் 1988 முடிய முழுசாக எட்டாண்டுகள், என்னவென்று எட்டியே பார்க்கவில்லை இந்நாடுகள். அரசியல் ரீதியாக உதவ முன்வரவில்லை என்பதோடு பெட்ரோலின் விலை சரிந்துகொண்டே போனதால் பொருளாதார உதவி அளிக்கவும் அரபு மற்றும் முஸ்லிம் நாடுகள் முன்வராதது அதைவிட பெரிய சோகம்.

1990 இல் குவைத் மீது இராக் போர்தொடுத்ததும் அதுவரை இருந்த கொஞ்ச நஞ்ச உதவிஒத்தாசைகளும் ஒரேயடியாய் நின்று போயின. அரபு நாடுகளின் ஒற்றுமையே கேள்விக்குறியாகிப்

போனது. கூடவே சோவியத் ஒன்றியம் சிதறிப்போனதும் ஃபலஸ்தீனை வெகுவாகப் பாதித்தது.

விடுதலைப் போராட்டங்கள் ஊக்கம் குன்றின; வாய்ப்புகளும் வாசல்களும் மூடப்பட்டுவிட்டன; நாடுகளும் அரசாங்கங்களும் உதவி செய்வதை நிறுத்திக் கொண்டன. உள்நாட்டிலும் வெளி நாடுகளிலும் வெகு முஸ்லிம் மக்களிடையே ஃபலஸ்தீனம் தொடர்பான விழிப்புணர்வு வளரத் தொடங்கியது. *இஃக்வானுல் முஸ்லிமீன்* இயக்கத்தினர் இதற்காக பெரிதும் உழைத்தார்கள். உள்நாட்டில் ஃபலஸ்தீனத்தில் விடுதலையை முன் வைத்து பல்வேறு போராட்டக் குழுக்கள் உதயமாயின. அறுபதுகளில் தோன்றிய *'உஸ்ரத்துல் ஜிஹாத்'* 1980 இல் பிறந்த *'ஹர்கத்துல் ஜிஹாதுல் இஸ்லாமி'* மற்றும் *'அல்முஜாஹிதூனல் ஃபலஸ்தீனிய்யூன்'* ஆகிய இயக்கங்கள் குறிப்பிடத்தக்கவை.

## அயாராத போராட்டம், சமாதானம், ஹமாஸ்!

மக்களின் அடிப்படை உரிமைகள் மற்றும் விடுதலையை தூக்கிப் பிடித்தவாறு 1987 டிசம்பர் முதல் 1993 செப்டம்பர் முடிய வியக்கவைக்கும் *'இன்திஃபாழா'* என்னும் மக்கள் எழுச்சி கருக் கொண்டது. இதற்குள்ளிருந்து இஸ்லாமிய இயக்கவியலாளர்கள் குறிப்பாக *ஹமாஸ்* உருத்திரண்டு வெளிப்பட்டார்கள். அரபுலகிலும் இஸ்லாமிய உலகிலும் மறுபடியும் ஒருமுறை ஃபலஸ்தீனத்தின் நினைவலைகளை தட்டி எழுப்பியது, இந்த மக்கள் எழுச்சி. ஆனால் ஏற்கனவே அரசுப் பொறுப்பில் இருந்த *முனழ்ழமா தஹ்ரீர்* இயக்கமும் இன்னபிற அரபு நாடுகளும் முட்டுக் கட்டைகளை பலமாகவே போட்டன. ஒரு சிறு துரும்பைக்கூட தூக்கிப்போட அவர்கள் அனுமதிக்கவில்லை. மாறாக, அதன் மூலம் முடிந்தவரை அரசியல் பயன்களை அறுவடை செய்யவே முயன்றார்கள்.

*முனழ்ழமா தஹ்ரீர்* அமைப்பு ஆரம்பம் என்னவோ ஆயுதங்களைக் கொண்டுதான் தொடங்கியது. இதன் காரணத்தினால்தான் அப்போது களத்தில் இருந்த *'அல்ஃபதஹ்'* போன்ற இயக்கங்களும் வேறுவழியின்றி இதனோடு வந்து சேர்ந்தன. *யாஸர் அரஃபாத்* அதன் தலைவரானார். ஆனால் கொஞ்சம் கொஞ்சமாக இஸ்ரேலோடு இணங்கிப் போகவும் சமாதானத்தூது விடவும்

துவங்கியது, *தஹ்ரீர்*. கடைசியில் இது எங்கே போய் முடிந்தது தெரியுமா? 1988 ஆமாண்டு ஐ.நா. சபையில் தாக்கல் செய்யப் பட்ட, ஃபலஸ்தீனத்தை இரண்டாக பிரிக்க வழிசெய்யும் 181 வது தீர்மானத்தையும் 1967 ஆமாண்டு தாக்கல் செய்யப்பட்ட ஃபலஸ் தீன அகதிகள் தொடர்பான தீர்மானத்தையும் சமாதான மாகப் போக வலியுறுத்தும் தீர்மானத்தையும் ஃபலஸ்தீன தஹ்ரீர் அரசாங்கம் ஏற்றுக்கொண்டதோடு இஸ்ரேல் நாட்டையும் ஒப்புக் கொண்டது. அத்தோடு 1991 ஆமாண்டு அரபு நாடுகளோடு சேர்ந்துகொண்டு *முத்ரீர்* நகரில் இஸ்ரேலோடு பேச்சுவார்த்தை யிலும் பங்கேற்றது. எந்தவிதமான முடிவையும் எட்டாமல் இந்த பேச்சுவார்த்தைகள் இரண்டு ஆண்டுகள் நடந்துகொண்டிருந்தன.

கடைசியில் 1993 ஆமாண்டு *'ஓஸ்லோ'* நகரில் நடைபெற்ற ஒப் பந்தத்தில் ஃபலஸ்தீன அரசாங்கத்தின் சார்பாக *'தஹ்ரீர்'* பிரதி நிதிகள் கலந்து கொண்டு இஸ்ரேலோடு சேர்ந்து, கையெழுத்து போட்டார்கள். இதன்படி, ஃபலஸ்தீனத்தின் 77 சதவிகித நிலத்தை இஸ்ரேல் வைத்துக்கொள்ளும்; ஆயுதப் போராட் டத்தை ஃபலஸ்தீனர்கள் கைவிட்டுவிட வேண்டும்.

இப்படி, ஃபலஸ்தீன விடுதலையே எங்கள் இலக்கு என பய ணத்தை துவங்கிய தஹ்ரீர் இயக்கம் எல்லாவற்றையும் கைவிட்டு விட்டு ஒதுங்கி ஒரமாய் போய் உட்கார்ந்து கொண்டது. எல்லா பிரச்சனைகளும் தீர்ந்து விட்டன, இனி சமாதானம்தான் என்றும் அறிவித்துவிட்டது.

என்ன ஆனது? ஒருபக்கம் இஸ்ரேலை ஒப்புக்கொண்டாகி விட் டது. இன்னொரு பக்கம், இதே வழியில் தொடர்ந்து பயணித்து மேற்படி மற்ற பிரச்சனைகளையும் தீர்த்துக்கொள்ளவேண்டும், சரியா? என்றவாறு மேற்குக்கரை மற்றும் காஸா பகுதியின் அதிகாரத்தை, *தஹ்ரீர்*வசம் ஒப்படைத்தது, இஸ்ரேல்.

ஃபலஸ்தீன மக்களின் விடுதலை உணர்வு, அவர்களது அடிப் படை உரிமைகள் மீது ஓங்கி சம்மட்டியால் அடித்தது, *ஓஸ்லோ* ஒப்பந்தம். போய் பேச உட்காருவதற்கு முன்னால் நாட்டிலுள்ள மற்ற விடுதலை அமைப்புகளோடும் ஒருதடவை ஆலோசனை செய்துவிட்டு போயிருக்க வேண்டும்; பொது மக்களிடம் கருத்து கேட்டிருக்கவேண்டும். 'யாருக்கோ' வேலை பார்ப்பவர்கள்

*இதையெல்லாம் செய்வார்களா?*

*ஃபலஸ்தீனத்தை தங்கள் உயிருக்கும் மேலாக கருதுகின்றார்கள், மக்கள். அதில் தலையிட எந்த அதிகாரமும் தஹ்ரீருக்கு கிடையாது. ஆகையால், இஸ்லாமிய இயக்கப் பற்றாளர்களும் நாடு விடுதலை பெறவேண்டும் என்னும் வேட்கை கொண்டவர்களும் கம்யூனிஸ்ட்டுகளும் இதனை தீவிரமாக எதிர்த்தார்கள்.*

*தீர்த்தே ஆகவேண்டிய அடிப்படைப் பிரச்சனைகள் எதுவும் பேசப் படவே இல்லை என்பதும் இஸ்ரேலை அங்கீகரிப்பதற்கு அதீத முக்கியத்துவம் கொடுக்கப்பட்டதும் கூட எதிர்ப்புக்குக் காரணங்கள். அதீத முக்கியத்துவம் மட்டுமல்ல, அளவுக்கு அதிகமாகவும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. புனித நகரின் எதிர்காலம் பற்றியோ மேற்குக் கரைப் பகுதியில் அளவுக்கதிகமான குடியிருப்புகளை இஸ்ரேல் நிறுவிவருவதைப் பற்றியோ பேசப்படவில்லை.*

*எத்தனை எத்தனையோ விஷயங்களை 'ஓஸ்லோ' பேசவே இல்லை. எத்தனை எத்தனையோ புதிய பிரச்சனைகளை 'ஓஸ்லோ' உருவாக்கி விட்டது. எடுத்துக்காட்டாக, உலக நாடுகளுக்கு குறிப்பாக முஸ்லிம் நாடுகளுக்கு இஸ்ரேலோடு அரசியல், தூதரக உறவுகளை மேற்கொள்ளலாம் என்னும் அனுமதியை 'ஓஸ்லோ' வழங்கியதைச் சொல்லலாம்.*

### ***இரண்டாம் இன்திஃபாழா!***

*'ஓஸ்லோ' ஒப்பந்தத்திற்குப் பிறகு நிலைமை இனி, சீராகிவிடும் என ஒரு நீண்ட காலம் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் தனது போக்கை மாற்றிக் கொள்ள இஸ்ரேல் தயாராக இல்லை. தொடர்ந்து அது தாக்குதல்களை மேற்கொண்டு வந்தது. ஐந்தாண்டுகளுக்குப் பிறகு நிலைமை முன்பைக் காட்டிலும் படுமோசமாகி விட்டிருந்தது.*

*மனித உரிமைகளை மீறுவதை இஸ்ரேல் ஒரு பொருட்டாகவே கருதவில்லை. பயங்கர தாக்குதல்களும் கொலைகளும் சர்வ சாதாரணமாகி விட்டன. 4160 ஃபலஸ்தீனர்கள் கொல்லப் பட்டிருந்தார்கள், 45 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் காயமடைந்திருந்தார்கள், நாட்டில் 58 சதவிகிதத்திற்கும் அதிகமானோர் வேலை*

யில்லாமல் தவித்தார்கள்.

2000 ஆண்டு மறுபடியும் ஓர் *இன்திஃபாழா* சூல்கொண்டது. பொது மக்களும் ஹமாஸ் இயக்கத்தினரும் உலகமே வியக்கும் அளவுக்கு நெஞ்சுரத்தையும் மனோதிடத்தையும் வெளிப்படுத்தினார்கள். இந்தப் போர் ‘சின்னப்போர்’ அல்ல என்பதை இஸ்ரேல் உணர்ந்துகொண்டது.

இதில் ஃபலஸ்தீனர்கள் பட்ட உயிரிழப்புகள் பொருள் இழப்புகள் ஒரு பக்கம் இருக்கட்டும், இஸ்ரவேலர்களில் 1060 பேர் கொல்லப்பட்டார்கள், 6250 பேர் படுகாயம் அடைந்தார்கள், பொருளாதாரமும் ராணுவமும் பயங்கர பாதிப்புகளை சந்தித்தன. கடைசியில், 2005 ஆமாண்டு அக்டோபர் மாதம் *காஸா*-வை இஸ்ரேல் காலி செய்ய நேர்ந்தது.

இதற்கிடையே 2004 ஆமாண்டு *யாஸர் அரஃபாத்* உயிர்நீத்தார். தொடர்ந்து ஃபலஸ்தீன அதிபர் மற்றும் பாராளுமன்ற தேர்தல் நடைபெற்றது. 2005, மார்ச் மாதம் ஃபலஸ்தீனத்தை சேர்ந்த பல்வேறு போராட்டக் குழுக்கள் கெய்ரோ நகரில் சந்தித்து ஓர் அரசியல் உடன்பாட்டுக்கு வந்தன. அதன் விளைவாக, 2006 ஆமாண்டு நடைபெற்ற தேர்தலில் ஹமாஸ் அறுதிப் பெரும்பான்மை பெற்றது.

*‘ஓஸ்லோ’* ஒப்பந்தம் பிரச்சனையை இஸ்லாமிய நாடுகளின் பார்வையை விட்டு வெகுதூரம் நகர்த்தி விட்டிருந்தது. இஸ்ரேலோடு உறவு கொள்ள உலக நாடுகளுக்கு ஒரு வாய்ப்பையும் உருவாக்கிக் கொடுத்தது. ஃபலஸ்தீன மக்கள் யாரையும் எதிர்பார்க்காமல் தங்கள் பிரச்சனையை தாங்களே கையாள தொடங்கினார்கள். இதன்விளைவான போராட்டக் களத்தில் மட்டுமல்லாமல் அரசியல் களத்திலும் அவர்கள் தங்களுக்காக போராடும் உண்மையான பிரதிநிதிகளை அடையாளம் கண்டுகொண்டார்கள். காஸாவை விட்டு இஸ்ரேலின் வெளியேற்றம், பாராளுமன்றத் தேர்தலில் ஹமாஸின் வெற்றி ஆகியவை ஃபலஸ்தீன் வரலாற்றில் முத்திரையைப் பதித்தன.

**தேர்தல் வெற்றிகளைத் தொடர்ந்து!**

ஹமாஸ் பெற்ற பெருவெற்றி ஐரோப்பிய நாடுகளையும் அரபு

நாடுகளையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியது. அதற்கெதிரான சதிகளில் உடனடியாக இறங்கினார்கள். இஸ்மாயீல் ஹானியா அரசு மீது விதம் விதமான தடைகள் போடப்பட்டன. அரசை நடத்தவே அவர்களை விடவில்லை.

அவ்வரசை இஸ்ரேல் அங்கீகரிக்க மறுத்தது, ஐரோப்பாவும். மஹ்மூத் அப்பாஸை பயன்படுத்தி, பெரிய அளவில் ஓர் அரசியல் சதிவலையைப் பின்னி, காஸா பகுதியை மட்டும் ஆட்சி செய்யுமாறு ஓரந்தள்ளினார்கள். ஆக, ஃபலஸ்தீனத்தில் இரண்டு அரசாங்கங்கள். காஸாவில் ஹமாஸ், மேற்குக்கரையில் அல் ஃபதஹ்.

மேற்குக்கரையின் அரசு சுயநலமிகளால் நடத்தப்படுகின்ற, ஜனநாயகம் என்ற பெயரைச் சொல்லிக்கொண்டு, மக்கள் கருத்துக்கு மதிப்பேயளிக்காத அரசு என்பது விரைவிலேயே தெரிந்து போனது. ஆனால் ஃபலஸ்தீன விடுதலைக்கான சிறந்த வாய்ப்பாக தனக்குக் கிடைத்த ஆட்சியை ஹமாஸ் பயன்படுத்திக் கொண்டது. *காஸா பட்டி (Gaza Strip)* பகுதியில் போராட்டத்தின் உள்ளீடுகளை வேகவேகமாக தீவிரப்படுத்தும் முயற்சியில் இறங்கினார், இஸ்மாயில் ஹானியா.

*காஸா* பகுதியில் ஹமாஸ் வளர்ந்துகொண்டே போவதைக் கண்ட இஸ்ரேல், 2008, டிசம்பர் 27ம் நாள் கடுமையான தாக்குதலைத் தொடுத்தது. ஹமாஸோடு இணைந்து மற்ற போராளிக் குழுக்களும் காஸா பகுதி மக்களும் உறுதியோடு எதிர்த்துநின்று இஸ்ரேலியத் துருப்புகளை விரட்டி அடித்தார்கள். வேறுவழியில்லாமல் சில அரபு நாடுகளை உதவிக்கு அழைத்துக்கொண்டு 2009, ஜனவரி 18ம் நாள் இஸ்ரேல் போர் நிறுத்த உடன்பாட்டை செய்துகொண்டது.

பொதுமக்களிடையே ஹமாஸுக்கு ஆதரவும் அரசியல், ராணுவ வலிமையும் கூடிக்கொண்டே போனது. அரபு வளைகுடாவில் மக்கள் புரட்சி செய்ய ஆயத்தமாகிக் கொண்டிருந்த காலகட்டம், இது. இதன் காரணமாக, எகிப்திலும் இஸ்லாமியப் பற்றாளர்கள் ஆட்சிக்கட்டிலில் உட்கார்ந்தார்கள். இஃக்வான்களின் தலைவர், *மூர்ஸி* பொறுப்பேற்றார். ஹமாஸிற்கு இது மேலும் வலுவைத் தந்தது.

பதற்றமடைந்த இஸ்ரேல் மறுபடியும் 2012, நவம்பர் மாதம் தாக்குதலை தொடங்கியது. இச்சமயம் மிகவும் உறுதியான வலுவான நிலைப்பாட்டை எகிப்து மேற்கொண்டது. அதுவரை கடைப்பிடித்த கொள்கைக்கு மாறாக, ஹமாஸுக்கு ஆதரவாக, எகிப்து குரல் கொடுத்தது. ஆகையால் இஸ்ரேல், முதன்முறை யாக பேச்சுவார்த்தையின்போது சரிசமமான உரிமைகளை ஒப்புக் கொள்ள நேர்ந்தது.

அதன்பின், 2013, ஜுலையில் எகிப்தில் ராணுவம் ஆட்சியை கைப்பற்றியது. தனக்கு ஆதரவான அரசை அங்கே இஸ்ரேல், அமைத்தது. அதனை தனக்கு சாதகமாக பயன்படுத்திக்கொண்டு தேவையான அனைத்து தயாரிப்புகளையும் செய்துமுடித்தபின், 2014, ஜுலை 8ம் நாள் படுபயங்கரமான தாக்குதலை காஸா வின்மீது தொடுத்தது. இப்போது மிகவும் வலுவாகவும் வீரிய மாகவும் இருந்து, இஸ்ரேலின் தாக்குதல். அதே சமயம் ஃபலஸ் தீனர்களின் ஊக்கமும் உறுதியும் அசைக்க முடியாததாக இருந் தன. வேறுவழியின்றி வரலாற்றில் முதல் தடவையாக நாற்புற மும் சூழப்பட்ட நிலையில் பேச்சுவார்த்தைக்கு வந்தது, இஸ் ரேல். எகிப்து மூலமாக போர்நிறுத்த உடன்பாடு எட்டப்பட்டது. நாளுக்கு நாள் ஃபலஸ்தீன் பிரச்சனை வலுவடைய வலு வடைய பிரச்சனையின் உண்மை வடிவம் உலகிற்கு முன்னால் வந்துகொண்டே இருக்கின்றது. ஒன்றிரண்டு முஸ்லிம் நாடு களைத் தவிர்த்து மற்றெல்லா முஸ்லிம் நாடுகளும் இஸ்ரேலின் நிழலில் ஒட்டிக்கொண்டு நின்றிருந்தன. அமெரிக்கா, ஐ.நா, சமாதான பேரவை, மனித உரிமைக் கழகங்கள் அனைத்தும் இஸ்ரேலின் பயங்கரவாதத்தை பார்த்தும் பார்க்காமலும் நின்று கொண்டிருந்தன. ஃபலஸ்தீன மக்களுக்கு ஒன்றுமட்டும் சந்தேக மின்றி விளங்கிவிட்டது. அவர்கள் பிரச்சனையை அவர்கள்தாம் தீர்த்துக் கொள்ள வேண்டும்.

இரண்டாவது இன்திஃபாழாவும் ஹமாஸின் தேர்தல் வெற்றி யும் ஃபலஸ்தீன் வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக இடம் பெற்றுவிட்டன. ஊக்கத்தையும் உறுதியையும் மட்டுமல்ல, ஃபலஸ்தீன மக்கள், முஜாஹிதீன்களுக்கு அரசியல் செல்வாக் கையும் ராணுவ பலத்தையும் சேர்த்தே வழங்கியிருக்கின்றார்கள்.

# ஃபலஸ்தீன் பூமி
# — சத்தியம் மற்றும் அசத்தியத்தின் போர்க்களம்!

*‘ஸியோனிசத்தை உயிரோடு வைத்திருப்பதற்காக, இனவெறி மற்றும் இனப் படுகொலைகளை மிகவும் கொடூரமான வடிவங்களில் தூண்டி வருகின்றது, இஸ்ரேல். ஆனால் இனவெறியை ஒரு கோட்பாடாக நீண்ட காலத்திற்கு கடைப்பிடிக்க முடியாது, அதனால் பிறக்கின்ற ஒழுக்கக் கேடுகளும் அரசியல் சீர்குலைவுகளும் படுமோசமாக இருக்கும் என்பதை அது உணரவேண்டும். இஸ்ரேலின் இந்தப் போக்கு இஸ்ரேலுக்கே ஒருகாலத்தில் பயங்கர சோதனையாக மாறிவிடும். அதன் பொருளாதாரம் பாதாளத்திற்கு போய்விடும் என்பதோடு அதன் ஒழுக்கமும் படுபயங்கர வீழ்ச்சியை சந்திக்கும்.*

*வீழ்ச்சிப் படிக்கட்டுகளில் வேகமாக இஸ்ரேல் இறங்கிக் கொண்டிருக்கின்றது என்ப தில் சந்தேகமே இல்லை. புவியியல் உண்மைகளும் வரலாற்று உண்மைகளும் இஸ்ரேலின் கனவுகளுக்கு எதிராகவே இருக்கின் றன. இதற்கு முன்னால் திருச்சபையினர் தங்கள் சர்வாதிகாரத்தின் கீழ் ஃபலஸ்தீனத்தையும் வேறு பல நாடுகளையும் வென்றிருந்தார்கள் என்பதையும் இஸ்ரேல் உதயமான பின்பும் அவற்றை தங்கள் ஆதிக்கத்தில் வைத்திருந்தார்கள் என்பதையும் இஸ்ரேல் மறந்து விடக் கூடாது. ஆனால், கடைசியில் என்ன ஆனது? புதிய காலணிகளை உருவாக்க வேண்டும் என்னும் தங்கள் கனவுகளுக்கும் மத்திய கிழக்கு நாடுகளில் நிலவும் உறவுகள், புவியியல் உண்மைகளுக்கும் இடையிலான வேறுபாட்டை திருச்சபையினர் பார்க்க மறந்தார்கள். அதனால் ஏற்பட்ட பின்விளைவுகளை சந்தித்தார்கள்!’. (ஃபலஸ்தீன ஆவண மய்யம், 2012/11/01)*

*தகவல் பத்தாண்டுகள் பழையதாய் இருக்கின்றது. ஃபலஸ்தீன் பிரச்சனையோ முக்காலத்திலும் ஒன்றுபோலவே இருக்கின்றது.*

**வெற்றி-தோல்விக் காட்சிகள்!**

எல்லோர் கண்களுக்கும் முன்பாக உள்ளது, இன்று இஸ்ரேலின் நிலை. சில மாதங்களுக்கு முன் (8, ஜுலை, 2014) இரண்டு இஸ்ரேலியர்கள் உயிரிழந்தார்கள் என்பதை சாக்காகக் கொண்டு, காஸா பட்டி- மீது அது, வான்வழித் தாக்குதலை தொடுத்தது. ஹமாஸின் வலிமையை முறித்துப்போட வேண்டும், அதன் ஆயுத பலத்தைக் குறைக்கவேண்டும், காஸா பகுதியில் ஹமாஸின் செல்வாக்கை இல்லாதொழிக்க வேண்டும் என்பவைதான் அதன் குறிக்கோள். இஸ்ரேலே இதனை தெளிவுபடுத்தியிருந்தது.

ஆனால் நடந்தது என்ன? 50 நாள்கள் நடந்த இந்த முற்றுகையில் மேற்கண்டவற்றில் ஒன்றைக்கூட அதனால் அடைய முடியவில்லை. கடைசியில் ஹமாஸோடு போர்நிறுத்த உடன்பாட்டை செய்துகொண்டு வந்தவழியே போய்விட்டது. இந்த முற்றுகையின்போது இஸ்ரேலின் குண்டுகளுக்கு 2,200க்கும் அதிகமான ஃபலஸ்தீனர்கள் பலியாகி விட்டார்கள் என்பது வேறு விஷயம்.

ஹமாஸ் இதனை தங்கள் வெற்றியென அறிவித்ததில் தப்பே கிடையாது. போர்நிறுத்தம் கையெழுத்தானவுடன், 'முற்றுகையை வென்று விட்டோம்! காஸாவை ஜெயித்துவிட்டோம்!!' என அறிவித்தார்கள். ஹமாஸும் மற்ற போராட்ட குழுக்களும் ஆயுதங்களை கீழே வைத்துவிட வேண்டும் என்ற இஸ்ரேலின் கோரிக்கையையும் இஸ்மாயீல் ஹானியா நிராகரித்தார். அதற்காகத்தான் போர்நிறுத்தம் என்றால் அதனை ஏற்க முடியாது என்று சொல்லிவிட்டார்.

'ஹமாஸ், இஸ்ரேலைக் காட்டிலும் அதிக புள்ளிகளை பெற்றுள்ளது. இஸ்ரேலின் உளவுத்துறை மற்றும் ராணுவம் குறித்த விமர்சனங்கள் இன்று இஸ்ரேலில் அதிகரித்துவிட்டன. இஸ்ரேலோடான தூதரக உறவை பல நாடுகளும் பரிசீலிக்க தொடங்கி விட்டன. அதனைத் தாங்கிப்பிடித்துக் கொண்டிருக்கும் அமெரிக்கா மற்றும் பிரிட்டன் ஆகிய இருநாடுகளிலும் இரு தரப்பு உறவு குறித்து அதிருப்தி நிலவுகின்றது. அதேசமயம் ஃபலஸ்தீனர்கள் தங்கள் ஒற்றுமையை திடப்படுத்திக் கொண்டுள்ளார்

கள். பேச்சுவார்த்தையின் போது இஸ்ரேலின் பல நிபந்தனை களை அவர்கள் ஏற்க மறுத்ததற்கு இந்த ஒற்றுமையே மூல காரணம்!' என்கிறார் மத்திய ஆசியாவின் அரசியல் விமர்சகரான ஜேம்ஸ் தோர்ஸி.

இப்போரில் எங்களுக்கு இரண்டரை கோடி டாலர் செலவாகி யுள்ளது என்கிறார் இஸ்ரேலின் பாதுகாப்புத் துறை அமைச்சரான மோஷே யஅலூன் (Moshe Ya'alon). இதுவன்றி, தொழில், உற்பத்தி, வணிகம் என பல்துறைகளிலும் இஸ்ரேலுக்கு இப் போரினால் மிகுந்த நஷ்டம் விளைந்திருக்கின்றது. 50 நாள்கள் நடந்த போரில், ஆறாயிரம் முறை தாக்குதல் நடத்தியிருக் கின்றது, இஸ்ரேல். இவற்றுள் 5000 தாக்குதல்கள் விமானப்படை யும் 1000 தாக்குதல்களை மற்ற பிரிவுகளும் நடத்தியுள்ளன. போருக்குப் பிந்தைய தனது பேட்டியில் மோஷே, ஒவ்வொரு ராக்கெட்டை தடுத்துநிறுத்தும் (Iron Dome) ஆயிரன் டோமுக்கு தலா ஒரு லட்சம் டாலர் செலவாகியிருப்பதாக கூறியிருந்தார். ஆயிரன் டோமைப் பயன்படுத்தி, மொத்தம் 600 ராக்கெட்டுகள் வீழ்த்தப்பட்டன என்று இஸ்ரேல் ராணுவம் தனது அறிக்கையில் தெரியப்படுத்தியிருந்தது. போர் செலவுகளை ஈடுகட், அடுத்த பட்ஜெட்டில் பலத்த வரிவிதிப்பு கள் இருக்கும் என்றும் அரசு தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

## இறைத்தூதர்களின் பூமி!

ஃபலஸ்தீன் பெருநிலத்தில் சத்தியமும் அசத்தியமும் மோதிக் கொள்ளும் காட்சி ஒன்றும் வரலாற்றுக்கு புதிதல்ல. மனித குலம் தோன்றிய காலத்திலிருந்து இப்பூமியில் மனிதர்கள் வசித் திருக்கின்றார்கள். 1948 வரை இப்பூமி முழுவதும் ஃபலஸ்தீன் என்றே வழங்கப்பட்டது.

'ஓரிடத்தில் தங்கி வசிக்காமல் வாழ்வாதாரத்தை தேடி மனிதர் கள் நகரத் தொடங்கிய போது, அரபுக்களில் ஸாம் என்னும் கோத்திரத்தைச் சேர்ந்த கன்ஆனியர்கள் அல்லது பாவுனேகியர் கள் கி.மு 2500 ஆமாண்டில் இப்பகுதியில் வந்து குடியேறினர். அதன்பின், இன்றைக்கு 4000 ஆண்டுகளுக்கு முன்னால் அதாவது கி.மு 2000 ஆண்டுவாக்கில் 'புராத்' நதிக்கரை நகரமான 'உர்' பட்டணத்திலிருந்து இப்ராஹீம் அலைஹிஸ் ஸலாம் இங்கு

வந்து குடியேறினார். தனது மூத்த மகன் இஸ்மாயீலை மக்கா விலும் இளைய மகன் இஸ்ஹாக்கை பைத்துல் முகத்தஸிலும் வசிக்கச்செய்தார். இஸ்ஹாக் அவர்களது மகன் யஅகூப் (அலை). இஸ்ராயீல் என அழைக்கப்பட்டவர், இவரே. இவரது சந்ததியர் இஸ்ரவேலர்கள் என வழங்கப்பட்டனர். யஅகூப், யூஸுஃப், மூஸா, ஹாறூன், தாவுது, ஸுலைமான், ஸகரியா, யஹ்யா, ஈஸா (அலைஹிமுஸ் ஸலாம்) என பல இறைத்தூதர்கள் இப்பூமியில் தோன்றியுள்ளனர். எனவே இது இறைத்தூதர்களின் பூமி என்பதில் சந்தேகமே கிடையாது!'

இறைத்தூதர்களின் பூமி என்பதால்தான் இதனை, வளமுள்ள நிலம் என இறைமறை குர்ஆன் குறிப்பிடுகின்றது. (காண்க: அல் குர்ஆன் 21:71-81)

'உலக மக்கள் அனைவர்க்கும் நாம் பாக்கியம் பொழிந்திருக்கிற பூமி' (அல்குர்ஆன் 21:71) அதாவது, உலகத்து வளங்களையும் ஆன்மீக வளங்களையும் ஒருசேர பெற்றுள்ள பூமி. உலகத்து நிலங்களில் மிகவும் செழிப்பான, வளமான நிலமாக இப்பகுதி உள்ளது. உலகில் தோன்றிய இறைத்தூதர்களில் ஆயிரக்கணக்கானோர் இப்பகுதியில்தான் தோன்றி உள்ளனர். வேறெந்த பகுதியிலும் இவ்வளவு இறைத்தூதர்கள் வந்ததே இல்லை!' என்கிறார் இஸ்லாமிய பேரறிஞர் மௌதூதி (ரஹ்).

பனூ இஸ்ராயீல் அத்தியாயத்தின் முதல் வசனத்தில் இது வளமுள்ள பூமி என குறிப்பிடப்பட்டுள்ளது. *மிகத்தூய்மையானவன்; தன் அடியாரை ஓர் இரவில் அழைத்துச் சென்றவன்! மஸ்ஜிதுல் ஹராமிலிருந்து வெகு தொலைவில் உள்ள மஸ்ஜித் வரையில்! அதன் சுற்றுப்புறங்களை அவன் அருள்வளம் மிக்கதாய் ஆக்கினான். (அல்குர்ஆன் 17:1)*

அருள்வமிக்கதாய் ஆக்கியது மட்டுமல்ல, இஸ்லாமை ஏற்றோருக்கு அங்கு ஆட்சி அதிகாரத்தை தருவதாகவும் வாக்களித்தான். *'ஜபூரில்' நல்லுரை வழங்கிய பிறகு, 'நம்முடைய நல்லடியார்களே இப்பூமிக்கு வாரிசுகள் ஆவார்கள்' என்று எழுதி வைத்துவிட்டோம். (அல்குர்ஆன் 21:105)*

இவ்வசனத்தில் 'பூமி' என குறிப்பிடப்படுவது பைத்துல் முகத்

*தஸ் பகுதியே என பெரும்பாலான விரிவுரையாளர்கள் தெரிவித்துள்ளார்கள். 'பூமி' என்னும் சொல் நிலத்தையும் குறிக்கின்றது. எங்கள் திருப்பூர் பகுதியில் நிலத்தை 'பூமி' என்றுதான் சொல்வார்கள். 'பூமி விற்பனைக்கு' போன்ற விளம்பரங்களை செய்தித்தாள்களில் பார்க்கமுடியும்.*

**நபிமார்களின் சொத்தை பாதுகாத்தல்!**

*பைத்துல் முகத்தஸ் புனித பூமி ஆயிரக்கணக்கான நபிமார்களின் 'சொத்தாக' கருதப்படுகின்றது. செல்வத்தையோ பணத்தையோ நபிமார்கள் விட்டுச்செல்வதில்லை. 'தகுதிகளையும் பண்புகளையும்' தான் தங்கள் சொத்தாக விட்டுச் செல்கின்றார்கள். அந்த தகுதிகளின் அடிப்படையில்தான், வெற்றியும் இறையுதவியும் சாபமும் கோபமும் தண்டனையும் கிடைக்கின்றது அல்லது கிடைக்காமல் இருக்கின்றது.*

*உங்களுக்கு இறைவனின் உதவியும் வெற்றியும் கிடைக்கும் என்னும் நற்செய்தி வழங்கப்பட்டும் அதனை நம்பாமல் இறைவனின் கட்டளையை செயல்படுத்தாமல் இந்த புனித பூமியை நெருங்க மாட்டோம் என்று மறுத்ததால் இஸ்ரவேலர்கள் 40 ஆண்டுகள் நாடோடிகளாக சினாய் பாலைவனத்தில் சுற்றிக் கொண்டிருக்க நேர்ந்தது.*

*அவர்களை நீங்கள் பார்க்கவில்லையா? ஆயிரக்கணக்கில் இருந்தும் சாவுக்கு பயந்து தங்கள் வீடுகளை விட்டு விரண்டோடினார்களே! செத்துப் போய்விடுங்கள் என்றான் அல்லாஹ் அவர்களிடம்! பிறகு, அவர்களை மறுபடியும் அல்லாஹ் உயிர்ப்பித்தான். அல்லாஹ்வோ மக்கள்மீது பெரும் அருளுடையவனாக இருக்கிறான். ஆனால் பெரும்பாலான மக்கள் நன்றி செலுத்துவதே கிடையாது. (அல்குர்ஆன் 2:243)*

*ஒரு தலைமுறையே இந்த இழிநிலையில் வாழ்ந்து சென்றது. அவர்கள் கண்களுக்கு முன்பாக அடுத்த தலைமுறை இறை நம்பிக்கையையும் இறை அச்சத்தையும் நிறைவாகப் பெற்று தம் தகுதிகளை மேம்படுத்திக் கொண்டபோது, புனித பூமியைப் பாதுகாக்கும் பொறுப்பு அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. 'தகுதிகளைப் பெற்று பாதுகாக்க தக்கோராக மாறுதல்' என்பதே அடுத்த*

வரியில் 'வாழ்க்கை' என குறிப்பிடப்படுகின்றது.

'இந்த வசனம் குறிப்படுகின்ற நிகழ்வு இஸ்ரவேலர்களின் ஆரம்பகால வரலாற்றில் நடைபெற்றது. சாமுவேல் அத்தியாயத்தில் இதைக் காணலாம். *சாமுவேல்* நபியின் ஆரம்ப காலத்தில் இஸ்ரவேலர்கள் படுபயங்கர சீரழிவுக்கு ஆளானார்கள். *சாமுவேல்* அவர்கள் குறிப்பிடுவதைப் போல, அவர்களது எண்ணிக்கை அப்போது மூன்று லட்சத்திற்கும் குறையாமல் இருந்தது. ஆனால், *ஷிர்க்* மற்றும் *பித்அத்*களின் காரணமாக அவர்களுடைய ஒழுக்க நிலையும் சமயப்பற்றும் மிகவும் சீர்கெட்டுப் போயிருந்தது.

கூட்டமைப்பாக அவர்கள் இல்லாத காரணத்தினால் அரசியல் நிலையும் சொல்லிக்கொள்ளும்படி இல்லை. பகைவர் அச்சம் அவர்களைப் பற்றியிருந்தது. பயந்தவர்களாகவும் கோழைகளாகவும் அவர்கள் மாறிப்போயிருந்தனர். யாரையும் எதிர்க்கின்ற துணிவே அவர்களிடம் இல்லை. அதிலும் குறிப்பாக ஃபலஸ்தீனர்களைப் பற்றி சொல்லவே வேண்டியதில்லை. ஃபலஸ்தீனர்கள் என்னும் பெயரைக் கேட்டாலே அவர்கள் நடுங்கினர்.

ஃபலஸ்தீனர்கள் அவர்கள் மீது படையெடுத்து கொத்து கொத்தாக அவர்களை அழித்தொழித்தனர். அவர்களிடமிருந்த கர்த்தரின் பேழையையும் பறித்துக் கொண்னர். அந்தப் பேழை அவர்களைப் பொருத்தவரை 'கிப்லா'வாக இருந்துவந்தது. தங்கள் அனைத்து வழிபாடுகளிலும் பலிகளிலும் சடங்குகளிலும் அதனையே அவர்கள் முன்னால் வைத்துக் கொள்வார்கள். அவர்கள் மீதிருந்த பயத்தினால் *எக்ரோன்* முதல் *காத்* வரையிலான பகுதிகளை இஸ்ரவேலர்கள் காலி செய்துவிட்டிருந்தனர். இந்த பயமும் இந்த கோழைத்தனமும் ஏறக்குறைய இருபதாண்டுகள் அவர்களைப் பீடித்திருந்தது.

அதன்பின்பு அவர்களை சீர்படுத்தவும் செம்மைப் படுத்தவும் *சாமுவேல்* நபி முயற்சிகளை மேற்கொண்டார். அவர்களிடமிருந்த ஷிர்க்கையும் பித்அத்களையும் களைந்து அவர்களை தவ்பா செய்ய வைத்தார். பிளவுகளையும் பிரிவினைகளையும் துறந்து ஒன்றுபடுமாறு அறிவுறுத்தினார். அவரது முயற்சிகளுக்கு இறைவன் வெற்றியை அளித்தான். இருபதாண்டு கால அடிமை

வாழ்க்கைக்குப் பிறகு இஸ்ரவேலர்களிடம் எழுச்சியும் வேக மும் தோன்றியது. ஃபலஸ்தீனர்களை எதிர்க்கவும் தாங்கள் இழந்த பகுதிகளை மீட்கவும் அவர்கள் தயாரானார்கள்.

இஸ்ரவேலர்களின் இந்த காலகட்டத்து வரலாற்றையே இவ் வசனங்கள் குறிப்படுகின்றன என்கிறோம். பயத்திலும் கோழைத்தனத்திலும் மூழ்கிக் கிடந்த போது ஈமானிய சாவையும் ஒழுக்க சாவையும் அவர்கள் மீது அல்லாஹ் விதித்தான். *'மூத்தூ'* என்னும் பதம் அதனையே குறிக்கின்றது. இறைவனின் வழி முறை இறைவனின் ஸுன்னத் இதுதான்! இதனையே குர்ஆன் ஓரிடத்தில்.

*'பின்னர் அவர்கள் கோணல் வழியை மேற்கொண்டபோது அல்லாஹ்வும் அவர்களின் உள்ளங்களைக் கோணலாக்கிவிட் டான். மேலும், பாவிகளுக்கு அல்லாஹ் நேர்வழி காட்டுவ தில்லை'. (அல்குர்ஆன் 61:5)* என குறிப்பிடுகின்றது. அதாவது அவர்கள் வழிகேட்டை விரும்பியபோது அல்லாஹ்வும் அவர் களை வழிகேட்டிலேயே விட்டுவிட்டான். பிறகு அவர்களி டையே சமூக எழுச்சிக்கான சமய மறுஉயிர்ப்பிற்கான அழைப்பு வேகம் பெற்றபோது, அவர்கள் மறுபடியும் தங்கள் ஈமானையும் தங்கள் இஸ்லாமையும் புதுப்பித்துக்கொள்வதில் ஆர்வம் காட் டியபோது, அவர்களுக்கு அல்லாஹ் மறுபடியும் 'உயிர்' கொடுத் தான். இங்கு 'அஹ்யாகும்' என்றால் இதுவே பொருள்.

சமூகங்களோடு இறைவன் இவ்வாறுதான் நடந்து கொள்கி றான். ஒரு சமூகம் அடிமையாகக் கிடப்பதையும் இழிந்துபோய் நாறிக் கிடப்பதையும் அதையும் இதையும் கேட்டுக்கொண்டே வாழ்க்கையை ஓட்டுவதையும் ஆண்மையற்றுக் கிடப்பதையும் விரும்பும் என்றால் அவர்கள்மீது அல்லாஹ் இழிவையும் அவமானத்தையும் அப்பி விடுகிறான்.

அதேசமயம் ஒரு சமூகம் உயர்வையும் எழுச்சியையும் தேடு கின்றது என்றால் அதற்காக முழுமூச்சோடு பாடுபடுகின்றது என் றால் அவர்களுடைய வேகத்தையும் ஊக்கத்தையும் இறைவன் அதிகப் படுத்துகிறான். உயர் படித்தரங்களை வழங்கி அவர்களை சோதிக்கிறான்'. (அல்லாமா அமீன் அஹ்ஸன் இஸ்லாஹி / ததப் புருல் குர்ஆன் விரிவுரை / முதல் பாகம்)

‘ஒருவகையில் பார்த்தோமென்றால் முஸ்லிம்களுக்கு முன்பாக வும் வாழ்வு, சாவு என்னும் இரண்டு வழிகள் இருக்கின்றன. சாவுக்கு அவர்கள் பயப்படுகிறார்கள் என்றால் ஒரு விஷயத்தை தெளிவாக மனதில் பதிய வைத்துக் கொள்ளவேண்டும். சாவி லிருந்து அவர்களை யாராலும் காப்பாற்ற முடியாது. இழிவு, அவ மானம், தன்மானமின்மை, நயவஞ்சகம் (நிஃபாக்) ஆகிய ‘சாவு’ கள் அவர்களை அடைந்தே தீரும். சாவைப்பற்றி கவலைப்படா மல் ‘வாழ்க்கைப்’ பாதையை அவர்கள் தேர்ந்தெடுத்தால் அதற் கென கிளம்பிநின்றால் இவ்வுலகத்தில் அவர்களுக்கு அல்லாஹ் ஈமானும் இஸ்லாமும் நிரம்பிய பெரு வாழ்வை வழங்குவான். மறுமையிலோ வெற்றியும் ஈடேற்ற மும் இறையோடும் நிரந்தர வாழ்வை வழங்கி சிறப்பிப்பான்.’ (ததப்புருல் குர்ஆன்)

இஸ்ரவேலர்களின் ஈமானிய சாவைப் பற்றியும் ஒழுக்க சாவைப் பற்றியும் அவற்றிற்கான உயிர் என்னவென்பதைப் பற்றியும் மேலே கண்டோம். ஒரு நிகழ்வின் மூலம் இவை சுட்டிக்காட்டப்பட்டன. ‘உயிரை’ தேர்ந்தெடுக்கவேண்டும் என முஸ்லிம்கள் உணர்த்தப் பட்டார்கள். இறைவனின் பாதையில் உயிரையும் செல்வத்தையும் அர்ப்பணிப்பதன் மூலமாக இந்த ‘உயிரை’ பெற்றுக்கொள்ள முடியும் என்பதும் அவர்களுக்கு உணர்த்தப் பட்டது.

இவ்வசனங்களில் குறிப்பிடுகின்ற நிகழ்ச்சி, தவ்ராத் வேதத்தில் உள்ளதைப்போல சாமுவேல் நபியின் காலத்தில் நடந்தது. (நபி சாமுவேல் அவர்களின் காலம் ஏறக்குறைய கி.மு 889) இஸ்ரே வலர்களில் எழுச்சியையும் ஊக்கத்தையும் அவர் ஊட்டினார். புது உயிரோட்டத்தை அளித்தார். இஸ்ரவேலர்கள் இயக்கம் பெற்றனர். ஃபலஸ்தீனர்களை எதிர்க்க தயாராயினர். அவர்களி டம் இழந்த பகுதிகளில் ஒருசிலதை மீட்டனர். இருப்பினும் இஸ்ரவேலர்கள் நாலாபுறங்களிலும் எதிரிகளால் சூழப்பட்டி ருந்தனர். அவர்களுடைய பல பகுதிகள் இன்னமும் எதிரிகளின் பிடியிலேயே இருந்தன. ஃபலஸ்தீனர்கள் அல்லாது மவ்ஆப், அமோனியர், அதோம், ஷூயாஹ் மன்னர்களால் எந்நேரமும் அவர்களுக்கு ஆபத்து இருந்துவந்தது. அடுத்து சாமுவேல் நபி யும் முதுமையை அடைந்து விட்டார்கள். தமது தலைமைப்

பொறுப்பையும் வழிகாட்டும் பொறுப்பையும் தம் மகன்கள் வசம் ஒப்படைத்துவிட்டிருந்தார்கள். அவர்களால் பொறுப்பை முறைப்படி நிறைவேற்ற இயலவில்லை. எனவே இஸ்ரவேலர் கள் சாமுவேல் நபியிடம் தமக்கு தலைமை தாங்க தக்கதொரு தலைவரை நியமிக்கும்படி முறையிட்டார்கள். அப்போது தான் அவரது தலைமையில் ஜிஹாத் செய்யமுடியும்; பகைவர்களை பழிதீர்க்க முடியும். (காண்க: 1சாமுவேல் அத்தியாயம் 8) அல்லாஹ்வின் வழிகாட்டுதலின்படி ஓர் அமீரை- தாலூத்தை - தலைமை தாங்க நியமித்தார். ஜிஹாதிற்கான கட்டளையையும் பிறப்பித்தார். (ததப்புருல் குர்ஆன்)

'தாலூத் (அலை) கி.மு 1020 முதல் கி.மு 1004 முடிய அரசாண் டார். அக்காலத்தில் அவர் ஜாலூத்தை (கோலியாத்) போரிட்டு அடக்கினார். மூஸா மற்றும் ஹாறூன் (அலை) அவர்களின் நினைவுப்பொருட்களைக் கொண்டிருந்த 'தாபூத்' பேழையை ஃபலஸ்தீனர்களிடம் இருந்து அவர் மீட்டார். அவருக்குப் பின் தாவுது (அலை) இஸ்ரவேலர்களின் மன்னர் ஆனார். முதலில் *ஹெப்ரூன் (Hebron)* நகரையும் பிறகு *பைத்துல் முகத்தஸ்* நகரையும் தமது தலைநகராக்கினார். அது, உலகிலேயே மிகவும் புராதன நகரமாகும்'.

'தாவுது (அலை) கி.மு 1004 முதல் கி.மு 965 முடிய 39 ஆண்டுகள் அரசாண்டார். அதன்பின் அவரது மகன் ஸுலைமான் 965 முதல் 926 வரை 39 ஆண்டுகள் அரசாண்டார். அவருக்குப்பின் இஸ்ர வேலர்களின் அரசு, *யஹூதா* மற்றும் *ஸாமிரிய்யா* என இரண் டாக பிளவுபட்டது. இவ்விரு அரசுகளும் பல்லாண்டுகள், ஒன் றோடு ஒன்று மோதிக்கொண்டிருந்தன. கி.மு 598 இல் *பாபிலோ னிய* அரசர் *பக்த் நேசர்* படையெடுத்து *ஜெருஸலேம்* உள்ளிட்ட அனைத்துப் பகுதிகளையும் வெற்றிகொண்டார். ஆயிரக்கணக் கானோரை சிறைபிடித்து *பாபிலோன்* கொண்டுசென்றார். கி.மு 539 இல் ஈரான் மன்னர் *குஸ்ரூ*, பாபிலோன் நகரை வென்றார். கைதிகளை விடுவித்து *ஜெருஸலேம்* அனுப்பிவைத்தார். கி.மு 332 இல் புனித நகரை அலெக்ஸாண்டர் கைப்பற்றினார். கி.மு 16 ஆமாண்டு ஒரு யூத அரசு இங்கே அமைந்தது. ஆனால் சில காலத்திற்குள்ளாகவே அதனை *ரூமா* பேரரசு அதனைக் கைப்பற்

றிக்கொண்டது. கி.மு 135 ஆண்டிலும் கி.மு 70 ஆண்டிலும் தலை தூக்கிய யூத கலகங்களை அது நசுக்கியது'.

## ஃபலஸ்தீனும் இஸ்லாமும்

பைத்துல் முகத்தஸ் புனித பூமியைப் பாதுகாக்கும் பொறுப்பை இறைவன் மறுபடியும் ஒருமுறை இறைநம்பிக்கையாளர்களிடம் ஒப்படைத்தான். இக்காலகட்டத்தில் இறைநம்பிக்கையும் இறைவனின் நம்பிக்கையைப் பெறுவதற்கான தகுதிகளும் அருகதைகளும் இறைவனுக்கென்றே செயல்படும் தூயஎண்ணமும் இறையச்சமும் உயர்ந்தோங்கி சிகரத்தைத் தொட்டிருந்தன.

ஹிஜ்ரி 15 ஆமாண்டு (கி.பி 636) இரண்டாம் கலீஃபா, *உமர் ஃபாரூக்* பைத்துல் முகத்தஸை வெற்றிகொண்டார். 636 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 20 ஆம் நாள் அரபு படைவீரர்கள் புனித நகரை வென்றெடுத்தனர். இரத்தம் இன்றி பெற்ற வெற்றி, இது. 463 ஆண்டுகள் இடைவிடாமல் இங்கு அரபி மொழியும் இஸ்லாமும் கோலோச்சிக் கொண்டிருந்தன.

தகுதியும் அருகதையும் இழந்துவிடாமல் இருக்கும்வரையே 'பாதுகாக்கும் பொறுப்பு' கிடைக்கும் என்பதை அறியமுடிகின்றது. இடைக் காலத்தில் முஸ்லிம் உலகில் 'ரவாஃபிழ்' என்னும் கடவுள் மறுப்பு சித்தாந்தம் சூடு பிடித்தது. இதன் விளைவாக முஸ்லிம்களிடையே 'ஜிஹாதிய' ஆர்வம் குறைந்தது. பைத்துல் முகத்தஸ் நம் கரங்களில் இருந்து பிடுங்கப்பட்டது.

தகுதியிழப்பு என்பதன் குறியீடாக *ஜிஹாத்* திகழுகின்றது. முஸ்லிம்கள் தங்கள் தகுதியை இழக்கும்போது ஜிஹாத்தை விட்டு விலகுகின்றார்கள். அது தேவையில்லை என்று பேசத் தொடங்குகின்றார்கள்.

இழப்புக்கு என்ன காரணம் என்பதை உணர்ந்த, உம்மத்திற்கு உணர்த்த வல்ல உலமாக்கள் பிறக்கிறார்கள், பணியாற்றுகிறார்கள் என்றால் இன்னும் இறையருள் நம்மீது தொடருகின்றது என்றே பொருள். இறை அருள் மறுபடியும் உம்மத்தைச் சூழ்ந்தது. சிலபல ஆண்டுகளுக்குள் *உம்மத்*, புனித பள்ளியை மீட்டது. *'ஸலாஹ்'* என்றால் தகுதி என்றும் பொருள். *உம்மத்* தகுதி பெற்றுவிட்டது என்பதன் குறியீடாக *'ஸலாஹ்'* தோன்றினார்.

புனிதப் பள்ளியை மீட்டுக்கொடுத்தார். 1187 ஆமாண்டு தன் மீது அப்பப்பட்டிருந்த ஆக்கிரமிப்பு அழுக்கை சுத்தமாக கழுவிக் கொண்டது, புனிதப் பள்ளி. அதன்பின் பல நூற்றாண்டுகள் முஸ்லிம்கள் அதனை பாதுகாத்து வந்தார்கள்.

இரவு-பகல் சூழலுவதைப் போல இறைவனின் (ஸுன்னத்) வழிமுறையும் சூழலுகின்றது. இஸ்லாமிய சமூகம் மறுபடியும் தங்கள் தகுதிகளை தொலைத்தார்கள். அவற்றைப் பற்றி கவலைப்படவில்லை, தொலைத்தவற்றை மீட்பதில் அக்கறை காட்டவில்லை.

அண்ணலெம் பெருமானார் (ஸல்லல்லாஹு அலைஹி ஸல்லம்) அவர்கள் எச்சரித்துச் சென்றுள்ளார்கள். ('ஒருகாலம் வரும் அப்போது) இஸ்லாமின் பிடிமானங்கள் ஒவ்வொன்றாக, ஒவ்வொன்றாக அறுந்து விழுந்து கொண்டே செல்லும். ஒவ்வொரு பிடிமானம் அற்று விழும் போதும் (அதை இறுக்கிக்கட்ட முயற்சி பண்ணாமல்) மக்கள் எஞ்சியுள்ளவற்றைக் கொண்டே திருப்தி அடைந்து கொள்வார்கள்! முதன் முதலாக அறுந்து வீழ்வது ஆட்சியதிகாரம் ஆகும். கடைசியாக அறுந்து வீழ்வது தொழுகை ஆகும்!' (தர்கீப்)

இப்போது வேகமாக வீசி அழுத்தப் புதைத்ததும் ஒரு கடவுள் மறுப்புக் கொள்கைதான். ஆனால் அதன் பெயர்தான் வேறு. மதச்சார்பின்மை, ஆம், இதுதான் அதன் பெயர். இறைவனைக் கொண்டுபோய் 'வழிபாட்டிடங்களில்' அடைத்துவைத்தது, மதச்சார்பின்மை. 'தவ்ஹீத்' என்பது வார்த்தையோடு நின்று போய் வாழ்க்கைக்குள் வராமலேயே போய்விட்டது. 'அல்லாஹ்வை' விட்டுவிட்டு 'வேறுவேறு தெய்வங்களை' வணங்கிவழிபடும் மஸ்ஜித்கள் கூட நம் மஹல்லாக்களில் சர்வ சாதாரணமாய் காட்சி தருகின்றன. 'தீன்' மிகவும் குறுகிப்போய் ஒருசில மக்களிடையே மட்டும் ஏனோதானோவென்று உயிர் பிழைத்து வாழ்ந்து கொண்டிருந்கின்றது.

பழங்காலத்திலிருந்து தொடர்ந்து வருகின்ற 'திரிபுகளும்' புதிது புதிதாய் கண்டுபிடிக்கப்படுகின்ற 'திரிபுகளும்' இறைத்தூதரின் 'ஸுன்னத்தை' மூடி மறைத்து ஒளித்து ஓரங்கட்டி தாங்களே 'இஸ்லாம்' என்று சொல்லிக் கொள்ளத் தொடங்கிவிட்டன. கை

விடப்பட்ட மார்க்கமாக 'இஸ்லாம்' ஆகிவிட்டது, கண்டு பிடித்துத் தர வல்ல 'ஜிஹாதை'யும் நாம் வெறுக்கத் தொடங்கி வெகுநாள்களாகின்றது.

நமது இழப்புகளின் பட்டியல் இப்போது மிகவும் நீண்டுவிட்டது! அது, நிற்பதாகவும் இல்லை, மேலும் நீளுகின்றது.

**பிரிட்டிஷ் ஆதிக்கமும் பால்ஃபோர் அறிக்கையும்**

முதலாம் உலகப் போரைத் தொடர்ந்து, 1917 ஆமாண்டு ஃபலஸ்தீனத்தை தன் வசம் எடுத்துக் கொண்டது, பிரிட்டன். பிரிட்டிஷ் வெளியுறவுத் துறை அமைச்சரான *ஆர்தர் ஜேம்ஸ் பால்ஃபோர்* (Arthur James Balfour), இங்கிலாந்து ஸியோனிச கூட்டமைப்பைச் (Zionist Federation of Great Britain and Ireland) சேர்ந்த லார்ட் ரோத்சைல்ட் (Baron Rothschild) என்பாருக்கு ஒரு கடிதம் எழுதினார். அதுவே பிற்காலத்தில் *பால்ஃபோர் அறிக்கை* (Balfour Declaration) என புகழ்பெற்றது. யூதர்களுக்கென ஒரு தனிநாட்டை உருவாக்குவதில் பிரிட்டனுக்கு ஒத்த கருத்து இருக்கின்றது என்பதே அதன் உட்கருத்து. கீழே அவ்வறிக்கையையும் அதன் மொழிபெயர்ப்பையும் காணலாம்.

*His Majesty's government view with favour the establishment in Palestine of a national home for the Jewish people, and will use their best endeavours to facilitate the achievement of this object, it being clearly understood that nothing shall be done which may prejudice the civil and religious rights of existing non-Jewish communities in Palestine, or the rights and political status enjoyed by Jews in any other country.*

வெளியுறவு அமைச்சகம்

2, நவம்பர், 1917

மதிப்பிற்குரிய ரோத்சைல்ட்,

மேன்மை பொருந்திய பிரிட்டிஷ் அரசு சார்பாக கீழ்க்கண்ட அறிவிப்பை வெளியிடுவதில் பெருமிதம் கொள்கின்றேன். ஸியோனிச யூதர்களின் எதிர்பார்ப்புகளை நாங்கள் பெருந்தன்மையோடு பரிசீலிப்போம். எங்கள் அமைச்சரவையிலும் இது சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ஃபலஸ்தீனத்தில் ஒரு யூதநாட்டை உருவாக்குவதில் பிரிட்டிஷ் அரசு ஆர்வம் கொண்டுள்ளது. இதற்காக தன்னால் முடிந்தளவு வாய்ப்புகளை அது, உருவாக்கும். ஒன்றை மட்டும் கருத்தில் கொள்ளவேண்டும். ஃபலஸ்தீனத்தில் தற்போது வசித்து வரும் யூதர்களற்ற(முஸ்லிம்) மக்களின் குடியுரிமை மற்றும் சமய உரிமைகளுக்கோ வேறு நாடுகளில் வசிக்கும் யூதர்களின் அரசியல் உரிமைகளுக்கோ பங்கம் வந்துவிடக்கூடாது.

ஸியோனிச கூட்டமைப்பிற்கு இத்தகவலை தாங்கள் அளித்து விடுவீர்கள் என்றால் மிகவும் நன்றிக்கடன் பட்டவனாக இருப்பேன்'

*தங்கள் உண்மையுள்ள, ஆர்தர் ஜேம்ஸ் பால்ஃபோர்*

**ஸியோனிச ஆதிக்கம்!**

பிரிட்டனின் அனுமதியோடு ஃபலஸ்தீனம் மீதான ஸியோனிச ஆக்கிரமிப்பு சிறிதுசிறிதாக ஆரம்பித்தது. முதலில் அவர்கள் பல இடங்களிலிருந்தும் ஃபலஸ்தீனத்தை நோக்கி இடம் பெயரத் தொடங்கினார்கள். 1920, 1921, 1929 ஆண்டுகளில் ஃபலஸ்தீனத்தை நோக்கி யூதர்களின் இடப்பெயர்ச்சியும் அதற்கெதிரான போராட்டங்களும் நடைபெற்றன. 1947 வரை இதேநிலைதான்.

1947 ஆமாண்டு ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை, ஒரு தீர்மானத்தின் மூலம் ஃபலஸ்தீனத்தை இரண்டு துண்டுகளாக்கியது. அரபுக்களுக்கு ஒரு நாட்டையும் யூதர்களுக்கு இஸ்ரேலையும் அறிவித்தது. இப்பகுதியில் இருந்த தனது படை களை 1948 இல் பிரிட்டன் வாபஸ் பெற்றது. 1948 ஆமாண்டு மே மாதம் 14 ம் நாள் சுதந்திர இஸ்ரேல் அறிவிக்கப்பட்டது. அதன் பின்பு தங்கள் நாட்டை வலுப்படுத்தவும் ஃபலஸ்தீனர்களின் நாட்டை அபகரிக்கவும் அவர்கள் மீது அட்டூழியங்களை கட்டவிழ்த்து விடுவதுமான யூதர்களின் கொடுமை தொடர்கின்றது.

இடைக்காலத்தில் சில நாடுகள் இஸ்ரேலோடு போர் தொடுத்தும் பார்த்தன. ஆனால் அதனால் ஒன்றுமே விளையவில்லை. ஆரம்பத்தில் இருந்தே மேலை நாடுகளின் போக்கு முஸ்லிம்களுக்கு எதிரானதாகவும் ஐக்கிய நாடுகளின் போக்கோ ஒன்றும் புரியாததாகவும் இருந்து வருகின்றது. ஆனால், முஸ்லிம் நாடு

களின் போக்கும் ஃபலஸ்தீனத்திற்கு ஆதரவாக இல்லை என்பது தான் ஆச்சரியம். ஒருசில நாடுகள் பகிரங்கமாக வும் ஒருசில திரைமறைவிலும் இஸ்ரேலுடன் கைகோர்த்துக் கொண்டுள் ளன. ஃபலஸ்தீனத்திற்கு எதிரான சதிவேலைகளிலும் இவற் றிற்கு பங்கிருக்கின்றது என்பது நம்பவே முடியாத, ஆனால் நம்பித்தான் ஆகவேண்டிய ஆச்சரியம். இதனால் தங்களையும் தங்கள் நாட்டையும் பாதுகாக்கும் முயற்சியில் ஃபலஸ்தீனர்கள் தனித்து விடப் பட்டார்கள்.

## இஸ்லாமிய விழிப்புணர்வு!

*துக்க நாள் -மே 14, 1948-* (யவ்முந் நுக்பஹ்) ஏற்படுத்திய காயங்கள், வடுக்கள், சோகங்கள் ஆறும்முன்பே *துயர நாள்* (யவ்முந் நுக்ஸஹ்) 1967 ஆமாண்டு ஜுன் மாதம் 10 ம் நாள் வந்து விடிந்தது. ஆனால் இந்த காயங்களும் வடுக்களும் கவலை களுக்கோ அழுகைக்கோ காரணமாக அமையாமல் 'இஸ்லாமிய விழிப்புணர்வு' தோன்றக் காரணமாய் அமைந்தன. '*ருஜுஃ இலல்லாஹ்!*' (இறைவனிடம் திரும்புங்கள்) என்னும் முழக்கங் கள் எழுப்பப்பட்டன. ஆண்கள், பெண்கள், முதியோர் என்றில் லாமல் குழந்தைகளும் களத்தில் இறங்கினார்கள். ஃபலஸ்தீன விடுதலை இயக்கம் உருவானது. *அல்ஃபதஹ், ஹிஸ்புல்லாஹ்* ஆகிய அமைப்புகள் தோன்றின. இவற்றின் இறுதி வடிவமாக *'ஹமாஸ்'* உருத்திரண்டது. *ஜிஹாதுல் இஸ்லாமி* அமைப்பும் இதன் வெளிப்பாடே.

## இன்திஃபாழா இயக்கம்!

*'ஜபாலியா'* என்பது அந்த சிற்றூரின் பெயர். எதைப்பற்றியும் கவலைப் படாமல் ஒரு டிரக் வேகமாக வந்துகொண்டிருந்தது. ஓரமாக சில கூலியாட்கள் வேலை பார்த்துக்கொண்டிருந்தார்கள். முஸ்லிம்களின் உயிர்களுக்கெல்லாம் விலையே கிடையாது என்பது அந்த 'டிரக்கிற்கு' தெரியாமலா, இருக்கும்? யூதர்களின் டிரக்தானே அது? ஏறித் துவம்சம் செய்தபிறகே நின்றது. உள்ளுக்குள் கனன்று கொண்டிருந்த தீப்பொறியை இச்சம்பவம் பெருநெருப்பாய் பற்றவைத்துவிட்டது. ஆண்களும் பெண் களும் குழந்தைகளுமாய் ஃபலஸ்தீனத்தின் வீதிகளிலும் தெருக் களிலும் கைகளில் கற்களோடு நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு யூத

ராணுவ வீரர்களையும் கவச வாகனங்களையும் எதிர் கொண்டார்கள். இதே ஏதோ ஒரே ஒரு நாள் நடைபெற்ற ஒற்றை சம்பவம் அல்ல. இது *முதல் இன்திஃபாழா.*

ஃபலஸ்தீனர்களின் அகத்தினுள் குடிகொண்டிருந்த 'இஸ்லாமிய விழிப்புணர்வு' சன்னம் சன்னமாக வளர்ந்து ஓர் இயக்கமாக வெளியே தெறித்தது. 1991 ஆமாண்டை நெருங்க நெருங்க, மிகத் தெளிவான ஒரு பேரியக்கமாக அது உருமாறிவிட்டது. அதைக் கண்ட உலகம் திகைப்புப் புதைகுழிக்குள் மறைந்தே போனது.

யூதர்களோடு சேர்ந்து இந்தப் பாடத்தை மேலை நாட்டினரும் படித்தார்கள். சமாதானப் பேச்சு வார்த்தைகள், ஃபலஸ்தீனர்களுக்கான அரசு என்றெல்லாம் 'நெருப்பை' மூடிமறைக்க என்னென்னவோ தகிடு தத்தங்களை செய்தார்கள். அவையனைத்தும் அவர்களைப் பார்த்து, பல்லிளித்தனவே தவிர, *இன்திஃபாழா* எனும் இந்த மக்கள் எழுச்சியை ஒடுக்க முடியவில்லை.

இன்திஃபாழாவிற்காக உயிரைக் கொடுத்து உழைக்குமாறு இஸ்லாமிய விழிப்புணர்வு ஃபலஸ்தீனர்களைத் தூண்டியது. விடுதலையைப் பெறாது ஓய்வதில்லை என ஒவ்வொருவரும் சபதம் பூண்டார்கள்.


*ஏரியல் ஷேரோன்* - யூதர்களின் 'ஹீரோ!' ஓர் அறிவிப்பை வெளியிட்டார். புனிதப்பள்ளியின் வளாகத்தில் 'சாலமன் திருக்கோவிலை' கட்டுவதற்கான அடிக்கல்லை நாட்டப்போகின்றோம் - என்பதுதான் அந்த அறிவிப்பு. அது வெற்றிபெற்றதோ இல்லையோ இரண்டாம் இன்திஃபாழாவிற்கான அற்புதமான வாய்ப்பை உருவாக்கிக் கொடுத்தது. 2000 ஆமாண்டு புனிதப் பள்ளி வளாகத்தில் கருக்கொண்ட *இரண்டாம் இன்திஃபாழா* வெகு விரைவில் ஃபலஸ்தீன் முழுவதும் பரவியது. 2005 ஆம் ஆண்டை நெருங்குவதற்குள், வியத்தகு மாற்றங்களுக்கு அது காரணமாகிவிட்டது. இஸ்ரேல்-ஃபலஸ்தீனத்திற்கிடையிலான உறவு, பிரச்சனைக்கான உண்மைக் காரணம் எனப் பல்வேறு விஷயங்களின்பால் உலக மக்களின் கவனத்தை ஈர்ப்பதில் வெற்றி பெற்றது.

*'யூதர்களின் புரோடொகால்'* என்று புகழ்பெற்றிருந்த யூதர்களின் வாழ்விலக்கை இனி, அடைவது மிகக்கடினம் என்னும் உணர்வையும் அது தோற்றுவித்தது. *நைல் நதி முதல் ஈப்ரடீஸ் நதிவரை! மதீனாவையும் கைபரையும் உள்ளடக்கி!* என்றெல்லாம் அந்த புரொடொகால் வரைபடம் விரிந்திருந்தது. *ஹமாஸ், ஹிஸ்பு ஜிஹாதுல் இஸ்லாமி, ஹிஸ்புல்லாஹ்* ஆகிய அமைப்புகள் துன்ப நாள் மற்றும் துயர நாள்களின் வடுக்களைப் போக்கி ஃபலஸ்தீனிலும் லெபனானிலும் ஒரு புதிய அத்தியாயத்தை எழுதின. 2000, மே மாதம் அவமானப்பட்டு லெபனானை விட்டு வெளியேற வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஸியோனிச ஆக்கிரமிப்புப் படைகள் தள்ளப்பட்டன. லெபனானின் *ஹிஸ்புல்லாஹ்* அமைப்பே இதற்கு முழுக்காரணம். 2006 ஆமாண்டு நடந்த 33 நாள் முற்றுகையிலும் கூட சொல்லத்தக்க வெற்றி எதுவும் அவர்களுக்கு கிட்டவில்லை. 2005 ஆண்டில் காஸாவைவிட்டு அவர்களாகவே வெளியேற வேண்டியிருந்தது. 2008 ஆமாண்டு நடந்த போரிலும் ஃபலஸ்தீனர்களை எதிர்த்து அவர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

*'இன்திஃபாழா* இயக்கம் பைத்துல் முகத்தஸ் புனித பூமியில் ஸியோனிச அரசாங்கத்தை மண்ணைக் கவ்வ வைத்துள்ளது. அந்நிலத்தை ஸியோனிச தீய சக்திகள் ஆக்கிரமித்தபோதே மக்கள் போராட துவங்கிவிட்டார்கள். ஃபலஸ்தீன மக்களை கொன்று குவித்ததோடு நிற்காமல், *இன்திஃபாழா* எழுச்சியில் மக்கள் தீவிரமாக பங்கேற்க விடாமல் தடுப்பது, கூடவே அதனை எதிர்கொள்வதில் தன்னுடைய பலவீனங்களை முடிந்தளவு மூடி மறைப்பது என யூத அரசாங்கம் செயல்படுகின்றது. தனக்கு ஏற்ற வகையில் செயல்படும் தரப்பினரை ஃபலஸ்தீனத்தில் ஊக்குவிக்கும் முயற்சியிலும் அது இறங்கி வருகின்றது. பைத்துல் முகத்தஸ் பூமியை முழுதாக தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்து வருகின்றது. ஆனால் ஸியோனிச ஆக்கிரமிப்பாளர்களின் எந்தவொரு முயற்சியையும் வெற்றிபெற விடமாட்டோம் என்பதை ஃபலஸ்தீன மக்களும் உலகலாவிய மக்கள் திரளும் ஒன்றுபட்டு தெரிவித்து வருகின்றன. இன்று ஃபலஸ்தீனத்தில் நடைபெறும் நிகழ்வுகளும் அம்மக்கள் தொடர்ந்து ஈட்டிவருகின்ற வெற்றிகளும்

*இன்திஃபாழா* ஒருநாளும் முடிவுறாது, எந்நாளும் தோற்காது என்னும் செய்தியைத்தான் உரத்தகுரலில் சொல்லிவரு கின்றன. முழுவிடுதலையை அவர்கள் அடையும் நாளில்தான் இப் போராட்டம் முற்றுப்பெறும்.' *(urdu.irib.ir)*

இஸ்ரேலின் கொடுமைகளுக்கு எதிரான ஃபலஸ்தீன மக்களின் நெஞ்சுறுதியும் சத்தியத்திற்கும் அசத்தியத்திற்கும் இடையிலான போரில் உயிர்துறந்த ஆண்-பெண்-குழந்தைகளின் தியாகமும் புனித நிலத்தை பாதுகாத்து இஸ்ரேலை தோற்கடித்து துரத்தி யடிக்கும் நீண்ட பயணத்திற்கு உரம் சேர்க்கின்றன என்றால் அது, மிகையாகாது.



# ஃபலஸ்தீன பிரச்சனையும் அரபு நாடுகளும்

*இன்று உலகில் பற்றியெரியும் பெரிய பிரச்சனை, ஃபலஸ் தீனம்தான். அண்மையில் நடைபெற்ற காஸா முற்றுகை அதை மேலும் தீவிரப் படுத்தி விட்டிருக்கின்றது. எந்தளவுக்கு இது பழைய பிரச்சனையாக இருக்கின்றதோ அதே அளவு சிக்கலான பிரச்சனையாகவும் இருக்கின்றது..*

ஆனால், உண்மை இதுவல்ல. தீர்வைக் கண்டுவிடக்கூடாது என்பதற்காக சொல்லப்படுகின்ற சாக்கு, இது. முறைதவறிப் பிறந்த ஒரு நாட்டை - இஸ்ரேலை - ஆதரித்து உலக நாடுகளும் ஐ.நா சபையும் இந்தளவுக்கு போகும் போது, ஏற்கனவே வர லாற்றில் இடம்பெற்ற நெடுங்காலமாக உலக வரைபடத்தில் இடம் பெற்றிருந்த ஃபலஸ்தீன் நாட்டை பாதுகாக்க ஏன், கவலைப்படவேண்டும்? எனவே இது ஒரு பொய்க்கருத்து.

மனித குல வரலாற்றை எவ்வளவு கேலி செய்கின்றார்கள், பாருங்கள். பிரச்சனை யூதர்களுடையது. இன்றோ, ஃபலஸ்தீனர் களின் பிரச்சனையாக மாற்றிவிட்டார்கள். உண்மையில் இதற் கும் ஃபலஸ்தீனர்களுக்கும் எந்த தொடர்பும் கிடையாது.

அடுத்த சிக்கல் என்னவென்றால், நாளுக்கு ஒரு விதமாய் சிந் தித்து புதுப் புது சதிகளைத் தீட்டி ஃபலஸ்தீனர்களை வசமாய் மாட்டி விடுகின்றார்கள். பிரச்சனையின் போக்கு மாறுகின்றது, தன்மை மாறுகின்றது, மாறிமாறி யோசிக்கும் நிலைக்கு உலக நாடுகளும் உலக மக்களும் தள்ளப்படுகின்றார்கள். இதன் காரண மாக பிரச்சனையில் சிக்கித் தவிக்கின்ற மக்களுக்கு உதவுவோர் குறைந்துபோகின்றார்கள்.

இன்று, ஃபலஸ்தீன் மக்கள் உதவுவோர் யாருமின்றி, தனித்து விடப் பட்டுள்ளார்கள். ஃபலஸ்தீனம் நாளுக்கு நாள் சிறிதாகிக் கொண்டே போகின்றது. ஆக்கிரமிப்பை அதிகரித்தவாறு

இஸ்ரேல் நாளுக்கு நாள் விரிந்துகொண்டே போகின்றது. பெருங் கடலில் ஆங்காங்கே மிதக்கின்ற குட்டி குட்டி தீவுகளைப் போன்று 'ஒன்றிரண்டு' புள்ளிகளாக ஃபலஸ்தீன் காட்சியளிக் கின்றது.

## பிறப்பும் சாகடிப்பும்!

இஸ்ரேல் 'பிறந்த' போதிருந்த உலக வரைபடத்தையும் இன் றைய வரைபடத்தையும் கொஞ்சம் ஒப்பிட்டுப் பாருங்கள். நாடே இல்லாத நாடோடிக் கூட்டமான யூதர்களுக்கு அன்று ஐ.நா. சபை எவ்வளவு நிலத்தை ஒதுக்கியிருந்ததோ அந்த அளவு நிலம்கூட இன்று அந்நாட்டு பூர்விக குடிமக்களான ஃபலஸ்தீனர் களிடம் இல்லை.

குட்டி 'இஸ்ரேல்' ஃபலஸ்தீனம் முழுவதையும் முழுங்கி விட்டது. தாங்கள் பிறந்த இடத்தை விட்டு காலங்காலமாக வாழ்ந்த இடத்தை விட்டு வெளியேறி நிற்கின்றார்கள், ஃபலஸ் தீனர்கள். அதாவது நாடற்றவர்கள் நாட்டுக்கு உரிமையாளர் களாகி விட்டார்கள். நாட்டுக்கு உரியவர்களோ நாடற்று நில மற்று நாதியற்று நடுத்தெருவில் நிற்கின்றார்கள். அந்த 'தெரு' வும் அவர்களுடையது இல்லையாம்.

இவையெல்லாம் ஒரே இரவில் நடந்துமுடியவில்லை. 1947 முதல் இன்று வரை நடந்தது அனைத்தும் உள்ளங்கை நெல்லிக் கனி போல் அனைவர் கண்களுக்கு முன்பாகவும் உள்ளது. யாரும் வாயைத் திறக்கவில்லை, எதிர்த்துப் பேசவில்லை. இரு தரப் பாரில் யாராவது ஒருவர் முறையிட்டால் சரி, சரி, என்ன அது? என்று விசாரிக்க வருவார்கள். அவ்வளவுதான்.

அநியாய, கொடுங்கோல் இஸ்ரேலுக்கு ஆதரவாக நீண்ட கரங் களோ ஏராளம். பாதிக்கப்பட்ட ஃபலஸ்தீனர்களுக்கு ஆதரவாக ஒருவர் கூட வரவில்லை. வந்திருந்தால் நிலைமை இன்று இந்தளவு மோசம் அடைந்திருக்காது.

1947 ஆண்டில் கொஞ்சம் கூட தரும-நியாயங்களைப் பார்க்கா மல் ஃபலஸ்தீனை உடைத்து இஸ்ரேல் என்றொரு நாட்டை ஐ.நா உருவாக்கு கின்றது. அதற்கு அடுத்த வருடமே, ஐ.நா. சபை உறுப்பினர் அந்தஸ்த்தை தந்தார்களே, அது எப்படி? அதைவிடக்

கொடுமை இன்றுவரை ஃபலஸ்தீனத்திற்கு உறுப்பினர் அந்தஸ்த்தும் அங்கீகாரமும் கொடுக்கப் படவில்லையே ஏன்?

இன்று ஃபலஸ்தீனத்தை *ஃபதஹ்* அமைப்பினர் ஆளுகிறார்களே, அதற்கு என்ன பெயர்? ஃபலஸ்தீன ஆணையமாம் (அத்தாரிட்டி). சுயாட்சி என்றுகூட சொல்வதில்லை, ஆணையம் என்கின்றார்கள்.

ஆக, ஃபலஸ்தீனர்கள் மீது இஸ்ரேல் செய்வது அநியாயம் என்றெல்லாம் போகிறபோக்கில் சொல்லிவிட முடியாது. இஸ்ரேல் அளவு, ஏன் இஸ்ரேலைக் காட்டிலும் அதிகளவு அநியாயத்தை ஐ.நா. சபையும் உலக நாடுகளும் செய்திருக்கின்றன. இன்றுவரை அப்பகுதியில் நடைபெற்ற சண்டைகளுக்கும் அதில் செத்துப்போன ஆன்மாக்களுக்கும் வீட்டைவிட்டு துரத்தப்பட்டு நிலமற்று நாதியற்று நிற்பவர்களுக்கும் எங்களுக்கும் சம்பந்தமே இல்லை என்று உலக மக்கள் சொல்லவே முடியாது.

தங்கள் நிலத்துக்காக தங்கள் நாட்டுக்காக தங்கள் உயிர் வாழ்க்கைக்காக ஃபலஸ்தீன மக்கள் போராடியபோது, ‘பயங்கரவாதிகள்’ என்று முத்திரை குத்தப்பட்டார்களே, அது யாருக்கும் தெரியாத விஷயமா?

உங்கள் கண் முன்னால்தானே அவர்களுடைய போராட்டத்தை பயங்கரவாதம் என்றார்கள்?

இஸ்ரேல், ஒவ்வொரு முறை அத்துமீறிய போதும் ஆக்கிரமித்த போதும் புதுப்புது யூதக்குடியிருப்புகளை நிறுவிய போதும் அமைதி நடவடிக்கை, பாதுகாப்பு நடவடிக்கை என்றெல்லாம் சித்தாந்தம் பேசி எதிர்ப் போராட்டத்தை தடுத்துநிறுத்தி அங்கீகரித்தார்களே, அது உங்களுக்குத் தெரியாதா?

இப்படியெல்லாம் செய்துதானே இன்று பார்க்கின்ற இந்த இஸ்ரேலை உருவாக்கினார்கள்? தங்களுக்கும் ஒரு நாடு வேண்டும் எனப் போராடும் நிலைக்கு ஃபலஸ்தீனர்களை தள்ளினார்கள்?

கேட்காமலேயே எல்லாமும் கிடைக்கின்றது, இஸ்ரேலுக்கு. எந்த பகுதியின் மீது கைவைத்தாலும் எந்த நிலத்தை அபகரிக்க நினைத்தாலும் அதை சொந்தமாக்கிக் கொள்கின்றது. ஃபலஸ்

தீனர்கள், அதை எதிர்த்துக் குரல் கொடுத்தாலோ தங்கள் உரிமை களுக்காக போராடினாலோ உலகம் அதனை குற்றம் என்கின்றது. இதைக்காட்டிலும் கொடுமை வேறென்னய்யா வேண்டும்? இதைவிடக் கூத்து வேறெங்கெய்யா நடக்கும்?

தங்கள் உரிமைகளுக்காக ஃபலஸ்தீனர்கள் ஒன்றுசேருவதைக் கூட உலகம் சந்தேகக்கண் கொண்டுதான் பார்க்கின்றது. தங்கள் விருப்பப்படி அரசாங்கம் அமைக்கக்கூட அவர்களுக்கு உரிமை இல்லையாம்.

**ஃபலஸ்தீன் பிரச்சனையின் உண்மைநிலை!**

இன்றைய உலகம் நம்புகின்ற கொள்கைகள், கோட்பாடுகளின் அடிப்படையில் ஃபலஸ்தீன் பிரச்சனை ஒரு தேசியவாதப் பிரச்சனை. அப்படித்தான் இன்று அப்பிரச்சனையை முன்வைக் கின்றார்கள். ஆனால் அப்படி அந்த ஒரு கோணத்தில் மட்டுமே பிரச்சனையை அணுகிவிடக் கூடாது, அணுகிவிட முடியாது. வேறுபல கோணங்களில் இருந்தும் அணுகியாக வேண்டும்.

அவற்றுள் முதலாவது, அப்பகுதிக்கும் இஸ்லாமுக்கும் உள்ள தொடர்பு. இஸ்லாமின் முதல் கிப்லாவாக (முன்னோக்கி தொழும் திசை) அப்பகுதி இருந்துள்ளது, அதற்காக பல போர் களை முஸ்லிம்கள் நடத்தி உள்ளார்கள், இஸ்லாமிய வரலாற்றின் இஸ்லாமிய பேரரசின் தவிர்க்க முடியாத பாகமாக அது இருந் துள்ளது. இப்பேற்பட்ட இடத்தை மீட்பது என்பது தேசியவாதம் தொடர்பான ஒரு பிரச்சனையாக மட்டும் இருந்து விட முடியாது. அப்படி இருந்தால் அப்பகுதிக்காக ஒட்டு மொத்த உலக முஸ்லிம் களும் வருந்தமாட்டார்கள், கவலைப்பட மாட்டார்கள், பதற்ற மடைய மாட்டார்கள், போராடுகின்ற ஃபலஸ்தீன முஸ்லிம் களுக்காக அக்கறையையோ பரிவையோ காட்டமாட்டார்கள்.

அரசியல் ரீதியாக பார்க்கும்போது வேண்டுமானால் ஃபலஸ் தீன் பிரச்சனை ஒரு தேசியவாதப் பிரச்சனையாக தோன்றலாம். முஸ்லிம்களைப் பொருத்தவரைக்கோ இது ஒரு சமயப் பிரச் சனை! உலக முஸ்லிம்கள் அனைவருக்குமான சமூகப் பிரச் சனை. உலக முஸ்லிம்கள் அனைவரும் இதனை உணருகின்றார் கள், முஸ்லிம் ஆட்சியாளர்களைத் தவிர.

தேசியவாதத்தின் அடிப்படையில் அணுகினாலும்கூட - இன்றைய உலகின் அரசியல் பார்வை அப்படித்தானே இருக்கின்றது - இது ஃபலஸ்தீனர்களின் பிரச்சனை மட்டுமல்ல, ஒட்டுமொத்த அரபுக்களின் பிரச்சனையாகும்.

ஆனால், அவர்களோ கால ஓட்டத்திற்கு பலியாகி அதனை கை விட்டு விட்டார்கள். 1947 ஆமாண்டு ஃபலஸ்தீனத்தை துண்டாடி யூதர்களுக்காக புதிதாக ஒரு நாட்டை உண்டாக்குவது என்னும் கோரமுடிவை ஐ.நா. எடுத்தபோது, யூதர்கள்-அரபுக்கள் என்று தானே அது, குறிப்பிட்டது. யாராவது அதனை மறந்துவிட முடியுமா? அதன்பின்பும் பல பத்தாண்டுகள், 1993 இல் ஒஸ்லோ ஒப்பந்தம் கையெழுத்தாகும்வரைக்கும் இதுதானே நிலை?

கிழக்கு ஜெருஸலேம், மேற்குக்கரை மற்றும் காஸா உள்ளிட்ட ஃபலஸ்தீன நாட்டை அமைப்பது தங்கள் கடமை என்றே அனைத்து அரபு நாடுகளும் கருதிக் கொண்டிருந்தன. அதற்காக பல போர்களையும் செய்தன. இன்றோ நிலைமை எந்தளவு மாறிப்போய் விட்டிருக்கின்றது? கத்தார் நாட்டைத் தவிர வேறு எந்த அரபு நாடும் ஃபலஸ்தீன் விஷயத்தில் வாயைத் திறக்கவோ வேறு ஏதாவது செய்யவோ முன்வருவதே இல்லையே.

அவர்களுடைய மார்க்க ரோஷமும் இன்று நீர்த்துப்போய் விட்டதே. ஃபலஸ்தீனுக்காக போராடுகின்ற, இஸ்ரேலை எதிர்க்கின்ற இஃக்வானுல் முஸ்லிமூன், ஹமாஸ் போன்ற இயக்கங்களை அமெரிக்கா மற்றும் மேலை நாடுகளைப் போன்று அரபு நாடுகளும் பயங்கரவாத அமைப்புகளாகத் தானே பார்க்கின்றன? விரிவடைந்து கொண்டேயிருக்கும் இஸ்ரேலிய பயங்கரவாத பேரரசைக் காட்டிலும் இஸ்லாமிய மேலாண்மைக்காக போராடுபவர்களைத்தானே அவர்கள் தங்களுக்கு ஆபத்தாக கருதுகின்றார்கள்? இல்லையென்றால் எகிப்தில் இஃக்வான்களை ஆட்சியிலிருந்து அப்புறப்படுத்துவார்களா? ஹமாஸ் விஷயத்தில் நிர்ப்பந்தங்களை திணிப்பார்களா?

இதோ அண்மையில் நடைபெற்ற காஸா முற்றுகையின் போது எத்தனை அரபு நாடுகள் ஃபலஸ்தீனத்திற்கு உதவின? இஸ்ரேலுக்கு எதிராக குரலை எழுப்பின? ஃபலஸ்தீனர்கள் மார்க்க சகோதரர்கள், அல்லவா? ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள், அல்லவா?

*சரி, இது ஃபலஸ்தீனர்களின் பிரச்சனை என்றே வைத்துக் கொள்வோம். இதனைத் தீர்ப்பதில் இன்றுவரை உலகம் என்ன செய்தது? 'ஒன்றும் இல்லை!' என்பதுதானே பதில். பிரச்சனையைத் தீர்ப்பதற்கு ஏதாவது செய்திருந்தால் அதன் பாதிப்பு கண்டிப்பாக குறைந்த அளவிலாவது இருந்திருக்கும், அல்லவா? நாளுக்குநாள் சிக்கலாகிக் கொண்டே போயிருக்காது, அல்லவா?*

*ஃபலஸ்தீனம் என்று ஐ.நா. வரையறுத்த நாட்டுப்பகுதி எங்கே? அங்கே வசித்து வந்த மக்களெல்லாம் எங்கே? பாதிக் கப்பட்ட ஃபலஸ்தீன மக்களுக்காக ஐ.நா சபையில் தாக்கல் செய்யப்பட்ட தீர்மானங்கள் எல்லாம் என்னவாயின? ஃபலஸ்தீன் விஷயத்தில் பேச்சுவார்த்தை நடத்த ஓடோடி வருகின்ற அமெரிக்காவுக்கும் ஐரோப்பிய நாடுகளுக்கும் சுதந்திர ஃபலஸ்தீனத்தை அமைக்கவேண்டும் என்ற எண்ணம் சுத்தமாக கிடையாது. அப்படி நினைத்திருந்தால் 'ஃபலஸ்தீன அத்தாரிட்டி' Palestinian National Authority (PNA) ஐ.நா. பொதுச் சபையில் உறுப்பினராக எடுத்த முயற்சிகளுக்கு முட்டுக்கட்டை போட்டிருக்காது, பொருளாதார தடைகளை விதிப்போம் என ஃபலஸ்தீனத்தை மிரட்டியிருக்காது, அதற்கெதிராக வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தியிருக்காது.*

*1993 ஆமாண்டு அப்போதைய இஸ்ரேல் பிரதமரான இஸ்ஹாக் ராபினுக்கும் யாஸர் அரஃபாத்துக்கும் இடையே நார்வே நாட்டு தலைநகர் ஓஸ்லோ-வில் சமாதான ஒப்பந்தம் கையெழுத்தானது. மிகப்பெரிய அருஞ்செயல் என இதனை அனைவரும் பாராட்டிக்கொண்டார்கள். இதற்காக இவ்விருவருக்கும் 'சமாதானத்திற்கான' நோபல் பரிசையும் வழங்கினார்கள். பிரச்சனை தீர்ந்ததா? இதனால் ஏதாவது ஒரு தீர்வை எட்ட முடிந்ததா? சமாதானம் பிறந்ததா? ஒப்பந்தம் கையெழுத்தாகி 21 ஆண்டுகள் முடிந்துவிட்டன. அதைப்பற்றி உலகம் என்றைக்காவது கவலைப் பட்டதா? அக்கறை காட்டியதா? நிலைமையை பரிசீலித்ததா? ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதில் இருக்கும் முட்டுக்கட்டைகளை அகற்ற முயற்சித்ததா?*

*எப்போது பார்த்தாலும் பேச்சுவார்த்தை, பேச்சுவார்த்தை என்ற பல்லவி தான். பேச்சுவார்த்தைகள் ஓய்வதே கிடையாது. தீர்வு*

கள் பிறப்பதே கிடையாது. ஓஸ்லோ ஒப்பந்தத்திற்குப் பிறகு எத்தனை ஃபலஸ்தீன நிலப்பகுதிகள் ஆக்கிரமிக்கப் பட்டுள் ளன? எத்தனை தூரத்திற்கு இஸ்ரேல் பரவிவிட்டது? எத்தனை யூத கிராமங்கள் புதிதாக உருவாகியுள்ளன? கொஞ்சூண்டு அதி காரத்தைத் தவிர ஃபலஸ்தீனர்களுக்கு வேறு எதுவும் கிடைக்க வில்லையே. இஸ்ரேல் விரிவடைந்துகொண்டே போகின்றது, ஃபலஸ்தீனோ குறுகிக் கொண்டே போகின்றது.

ஆனால், இஸ்ரேலுக்கு ஆபத்து! இஸ்ரேலுக்கு பாதுகாப் பில்லை! என்ற கூக்குரல்களுக்கு மட்டும் ஓய்வே இல்லை. தனது பாதுகாப்பிற்காக ஃபலஸ்தீனர்களை கண்டபடி சுட்டுத் தள்ளு கின்ற, சகட்டுமேனிக்கு கொன்று குவிக்கின்ற அதிகாரத்தை இஸ்ரேலுக்கு உலகம் அளித்திருக்கின்றதா, இல்லையா?

அதேசமயம் தங்களுக்கென்று இருக்கின்ற கொஞ்சூண்டு நிலத்தை பாதுகாத்துக் கொள்ளும் உரிமை கூட- உயிர்களையும் உடைமைகளையும் பாதுகாத்துக் கொள்ளும் உரிமை கூட ஃபலஸ்தீனர்களுக்கு தரப்படுவதில்லை. தங்கள் நாட்டுக்குள் அவர்கள் ஏதாவது செய்தால் இஸ்ரேல் தாக்குகின்றது, நாட்டுக்கு வெளியே ஏதாவது செய்தால் அமெரிக்கா மிரட்டுகின்றது.

நாட்டுக்குச் சொந்தக்காரர்கள் 67 ஆண்டுகளாக தங்களுக்கு ஒரு தேசம் வேண்டும் என தவித்துக் கொண்டிருக்கிறார்கள். நாடே இல்லாதவர்கள் சகல சௌகரியங்களோடு ஒரு நாட்டை உரு வாக்கி ஆண்டு கொண்டிருக்கின்றார்கள். ஃபலஸ்தீனத்தை விழுங்கிய பிறகு, இப்போது ஃபலஸ்தீனர்களையும் விழுங்கிக் கொண்டிருக்கின்றது, அந்நாடு. ஃபலஸ்தீனர்களின் கிராமங்கள் காலிசெய்யப்பட்டு அங்கே யூதக் குடியிருப்புகள் அமைக்கப்படு கின்றன. அவர்களைப் பாதுகாக்கின்ற பொறுப்பு இஸ்ரேலு டையதாம்.

சமீபத்தில் நடைபெற்ற காஸா போருக்கு என்ன காரணத்தை இஸ்ரேல் சொன்னது, ஞாபகமிருக்கின்றதா? ஆக்கிரமிக்கப்பட்ட பகுதியில் குடியேற்றப்பட்ட யூதர்களில் மூன்றுபேர் கொல்லப் பட்டு விட்டார்கள் என்றது. -பிறகு இதுவும் பொய் எனத் தெரிந்துபோனது- கொன்றது *ஹமாஸ்* என்றது. போர் தொடுத்து, 2100 மனித உயிர்களை கொன்று குவித்தது.

தனது மக்களை பாதுகாக்கும் கடமை என்று அமெரிக்காவும் ஐரோப்பாவும் இப்போரை ஆதரித்தன. அட, ஐ.நா. சபை, ஃபலஸ்தீன பகுதிகள் என அறிவித்த எல்லைக்குள் நீ எப்படி போனாய்? உன் குடியிருப்புகளை எப்படி அமைத்துக் கொண் டாய்? என ஒருவனும் கேள்வி எழுப்பவில்லை. அப்படி அமைத்தால் அது எப்படி பாதுகாப்பாக இருக்கும்? உன் மக்களை பாதுகாக்கும் உரிமை உனக்கிருந்தால் அவர்களது நிலத்தை பாதுகாக்கும் உரிமை அவர்களுக்கிருக்காதா? ஏற்கனவே அங்கே பிரச்சனை. இந்நிலையில் யூதர்களுக்குள் மோதல் ஏற்பட்டாலும் அந்தப் பழி ஃபலஸ்தீனர்கள் மீதுதானே விழும்?

அப்படியே இருந்தாலும் 3 பேருக்காக இரண்டாயிரத்து நூறு பேர்களை கொல்வது எந்த ஊர் நியாயம் ஐயா? சரி, ஆக்கிரமித்தது சரி என்றே வைத்துக் கொண்டாலும் ஏற்கனவே அங்கே குடி யிருந்த மக்கள் வெளியேறவும் வேறு இடங்களில் குடியேறவும் போதிய வாய்ப்பும் வசதிகளும் செய்து கொடுக்கவேண்டுமா, இல்லையா? உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் அகதிகளாக அல்லவா, அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்?

உங்கள் ஊரில் யூதர்கள் குடியேறிவிட்டார்கள், அதனால் நீங்கள் வேறு எங்காவது போய் பிழைத்துக் கொள்ளுங்கள் என்று சொல் வீர்களா? இது தான் நியாயமா? அகதி முகாம்களில் வாழும் ஃபலஸ்தீனர்களின் எண்ணிக்கை -ஐ.நா.சபையின் கணக்குப் படி- 50 லட்சம் என்பதை மறந்துவிட வேண்டாம். இவ்வளவு எண்ணிக்கையிலான மக்களை தெருவுக்கு தெரு, வீதிக்கு வீதி அலையவிடுவதுதான் உலகத்தின் நீதியா? ஊதிப்பெருகும் இஸ்ரேலுக்கு தீனி போடுவதுதான் உலகம் செய்யும் ஒரே வேலையா?

இஸ்ரேல் பிறந்தநாள் முதல், அந்நாடு என்னவேண்டுமானா லும் செய்து கொள்ளலாம், எந்த பகுதியை வேண்டுமானாலும் ஆக்கிரமித்துக் கொள்ளலாம், எத்தனை ஃபலஸ்தீனர்களை வேண்டுமானாலும் கொன்று குவிக்கலாம், உலகில் எப்பகுதி யில் வசிக்கும் யூதர்களை வேண்டுமானாலும் கொண்டுவந்து குடியேற்றலாம் - என அனைத்து உரிமைகளையும் அதிகாரங் களையும் தூக்கிக் கொடுத்துவிட்டது, உலகம். அதன்பின்பு,

ஃபலஸ்தீனர்களின் நிலை என்னவானது? அரசியல், பொருளாதாரம், சமூகம், கல்வி என அனைத்துத் துறைகளிலும் சிக்கல். எல்லாவற்றிலும் குழப்பம்.

வாழ இடமே இல்லாதவன் எப்படி சம்பாதிப்பான்? வீடே இல்லாதவன் எப்படி குடித்தனம் நடத்துவான்? எந்நேரத்திலும் உங்கள்வீட்டின் மீது குண்டு விழலாம் என்னும்போது நீங்கள் எப்படி அமைதியாக உட்கார்ந்து படிக்கமுடியும்? பள்ளிக்கூடமே இல்லாதபோது எங்கே கல்வி கற்பீர்கள்? வீட்டுக்கே வழியில்லாதபோது, பள்ளிக்கூடம் எங்கே கட்டுவீர்கள்?

- அங்கே போய் ஒரு ஆறுமாதம் வாழ்ந்து பார்த்தால் புரிந்து போகும், ஃபலஸ்தீனர்களின் பிரச்சனை என்னவென்று.

### ஃபலஸ்தீனமும் மேலை நாடுகளும்!

ஃபலஸ்தீன் விஷயத்தில் உலகம் என்ன செய்தது? என்ற கேள்வியை எழுப்பும்போது அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் வெளிப்படுத்தும் நயவஞ்சகம் முன்னால் வந்தே தீரும். இந்தப் பிரச்சனைக்கு மூலகாரணமே அவர்கள்தானே, அப்புறம் எப்படி நடந்து கொள்வார்கள்? தங்கள் ஆதாயங்களுக்காக மத்திய ஆசியாவில் யூத நாடு ஒன்றை 'சொருகியது' அவர்கள்தானே? அதனை பலப்படுத்த பொருளாதார, ராணுவ, அரசியல் உதவிகளை எல்லாம் செய்தது அவர்கள்தானே?

இஸ்ரேலின் ரகசியத் தோழனாக இருப்பது, அமெரிக்காதானே. அதற்கு ஒரு இக்கட்டு என்றால் ஓடோடி வருவது அமெரிக்காதானே. போர் நிறுத்தமாகட்டும்; பொருளாதார உதவியாகட்டும்; ஒஸ்லோ, கேம்ப் டேவிட் போன்ற ஒப்பந்தங்களாகட்டும்; ஐநா சபையில் தாக்கல் செய்யப்படுகின்ற இஸ்ரேலுக்கெதிரான தீர்மானங்களை தூக்கி தூரயெறிவதாக இருக்கட்டும்; புதிய புதிய ஆயுதங்களை கண்டுபிடித்து சப்ளை செய்வதாக இருக்கட்டும் - இஸ்ரேலின் கேடயமாக மட்டுமல்ல, வாளாகவும் இருக்கின்றது அமெரிக்கா.

அரபுக்கள் இதனை உணருவதேயில்லை. இஸ்ரேல் விஷயத்தில் அமெரிக்கா என்ன சொன்னாலும் நம்பிக்கொண்டு தாங்கள் செய்தாக வேண்டியதை செய்யாதிருக்கின்றார்கள். பின்னால்

நின்றுகொண்டு இவன் எப்படி எதிர்த்துப் பேசுவான்? என்று யோசிப்பதே கிடையாது. தமக்கும் இஸ்ரேலுக்கும் இடையில் நின்றுகொண்டு ஓஸ்லோ, கேம்ப் டேவிட் போன்ற ஒப்பந்தங் களை நயவஞ்சமாக அமெரிக்கா நிறைவேற்றி தங்களை மாக் கான்களாக ஆக்குவதை அவர்கள் புரிந்துகொள்ள மறுக்கின்றார் கள். இவற்றால் பயனடைவது யார், இஸ்ரேலா, அரபுக்களா?

ஓஸ்லோ ஒப்பந்தத்தில் இஸ்ரேலை ஒப்புக்கொண்டால் சுயாட்சியோடு கூடிய அதிகாரம், இன்னுமேனைய உரிமைகள் என்று ஒரு பட்டியலே போடப்பட்டது. அது என்னவானது? அவற்றில் ஒன்றுகூட இன்றுவரை கொடுக்கப்பட வில்லையே, என்ன காரணம்? - ம்ஹூம், யாரும் யோசிப்பதே இல்லை.

பெயருக்கு அமைக்கப்பட்டுள்ள அரசாங்கத்தையும் எப்போது பார்த்தாலும் ஏறி மிதித்துக் கொண்டேயிருக்கின்றது, இஸ்ரேல். எதிர்த்து யாராவது கேள்வி கேட்கின்றார்களா, கிடையாது. அதன் ஜனாதிபதியான யாஸர் அரஃபாத்தை வீட்டுச்சிறையில் அடைத்து விஷக்குண்டுகளை வீசினார்கள். யாராவது மூச்சு விட் டார்களா, கிடையாது. ஃபலஸ்தீன பாராளுமன்ற உறுப்பினர் களை கைதுசெய்து இஸ்ரேல் சிறையில் அடைக்கின்றார்கள், யாராவது வாயைத் திறக்கின்றார்களா, கிடையாது.

ஓஸ்லோ ஒப்பந்தத்தின்போது ஃபலஸ்தீன் வசமிருந்த கிழக்கு ஜெருஸலேம், மேற்குக்கரை போன்ற பகுதிகள் இருந்தன. அவற்றையும் இஸ்ரேல் கபளீகரம் செய்துவிட்டது. என்ன, ஏது என்று யாராவது விசாரித்தார்களா, கிடையாது.

மறுபக்கம் பார்த்தால் இந்த ஏமாற்று ஒப்பந்தத்தை அடிப்படை யாகக் கொண்டு உலகம் முழுக்க அடித்துப்பிடித்துக்கொண்டு இஸ்ரேலுக்கான அங்கீகாரத்தைப் பெற்றாகிவிட்டது. சட்ட அங் கீகாரம், பொருளாதாரம், சமூகம், ராணுவம் என அனைத்து வகையிலும் அது மிகமிக வலிமையானதாக ஆகிவிட்டது.

ஒருகாலத்தில் அமெரிக்கா, ஐரோப்பாவைத் தவிர உலகத்தில் உள்ள எல்லா நாடுகளும் ஃபலஸ்தீனர்களை ஆதரித்தன. இன்றோ நிலைமை தலைகீழ். இஸ்லாமிய நாடுகளைத் தவிர மற்றவர்கள் அனைவரும் இஸ்ரேலை நண்பனாக்கிக் கொண்டு

விட்டார்கள். என்ன ஆனது? இஸ்ரேல் ஃபலஸ்தீனர்கள் மீது என்னதான் அக்கிரமம் புரிந்தாலும் யாரும் எதுவும் கேட்ப தில்லை. சமீபத்தில் நடந்த காஸா போரில் எத்தனை பேர் ஃபலஸ்தீனத்திற்கு ஆதரவாக நின்றார்கள்? முஸ்லிம் நாடுகளும் ஒன்றிரண்டு லத்தீன் அமெரிக்க நாடுகளும்தான். பெரும்பாலான நாடுகள் வாய்மூடி மௌனமாக பார்த்துக்கொண்டிருந்தன. இந்தியா உட்பட பல நாடுகள் பாதிக்கப்பட்ட ஃபலஸ்தீனத் திற்கு உதவுவதைக் காட்டிலும் இஸ்ரேலுடன் கொண்டுள்ள நட்புறவுக்கே முக்கியத்துவம் கொடுத்தன. ஆக, அனைத்து நாடுகளும் ஃபலஸ்தீன் விஷயத்தில் தங்கள் கொள்கையை மாற்றிக்கொண்டுவிட்டன. இஸ்ரேலை நண்பனாக்கிக் கொண் டுள்ளன. ஃபலஸ்தீனர்களைப் பொருத்தவரை இது மிகவும் ஆபத்தானது, அனைவர் வாய்மீதும் போடப்பட்ட தாழ்ப்பாள் இது.

### அரபு அரசுகளின் பங்கு!

மார்க்கப்பற்றும் இஸ்லாமிய விழிப்புணர்வும் இருந்தவரை அரபு அரசாங்கங்கள், ஃபலஸ்தீன பிரச்சனையில் தீவிர அக்கறை காட்டின என்பதில் சந்தேகமில்லை. எப்போது இதனை ஒரு தேசியவாதப் பிரச்சனையாக அவை, கருதத் தொடங்கினவோ அன்றிலிருந்து விலகத் தொடங்கின. ஃபலஸ்தீனத்தைப் பற்றி அறிக்கைகள் வெளியிடுவது, ஐ.நா சபையில் தீர்மானங்களை தாக்கல் செய்வது, விவாதங்களில் ஈடுபடுவது அத்தோடு பாதிக் கப்பட்ட ஃபலஸ்தீன மக்களுக்கு பொருளாதார உதவிகளைச் செய்வது - என்பதோடு இன்று அரபு அரசாங்கங்களின் பணி நின்று விடுகின்றது. இதற்கு மேல் எதைப்பற்றியும் சிந்திக்கவோ செயல்படவோ அவை தயாராகயில்லை.

ஒரு காலம் இருந்தது. ஃபலஸ்தீனர்களின் வலியையும் வேத னையையும் அரபு அரசாங்கங்கள் தங்களது வலியாக தங்களது வேதனையாகக் கருதின. ஃபலஸ்தீனத்தை இஸ்லாமிய உலகி னுள் நிலைநிறுத்த பல போர்களை செய்தன. 1948 முதல் 1967 முடிய இஸ்ரேலுடன் பல போர்கள். இன்றோ பகிரங்கமான வன் முறையில் அப்பட்டமான பயங்கரவாதத்தில் இஸ்ரேல் இறங்கு கின்றது, வலுக்கட்டாயமாக பூமியைப் பிடுங்குகின்றது,

ஃபலஸ்தீன மக்களை நாய்களைப் போல் சுட்டுத்தள்ளுகின்றது - ஆனால் ஒரு அரபு நாடு கூட வாய்திறக்கக் காணோம். இஸ்ரேலை தடுத்து நிறுத்தக் காணோம். எகிப்து உள்ளிட்ட ஒருசில அரபுநாடுகளோ ஃபலஸ்தீன போராளிகளின் எதிரிகளாக மாறிப் போய் கிடக்கின்றன. பல்வேறு கட்டுப்பாடுகளை விதிக்கின்றன. ஃபலஸ்தீன பேராளிகள் நெருக்கடியில் சிக்கித்தவிக்க வேண்டும் என்றும் இல்லாதொழிய வேண்டும் என்றும் ஆசைப்படுகின்றன. காஸா போரின் போது உலகமே கொந்தளித்தது, ஆனால் அரபு நாடுகளில் ஒரு அசைவுமில்லை.

**ஓஸ்லோ ஒப்பந்தம்!**

ஓஸ்லோ, கேம்ப் டேவிட் ஒப்பந்தங்களுக்கு முன்புவரை நிலைமை இப்படி இல்லை. அரபு நாடுகள் தனித்தனி எல்லைகளைக் கொண்டிருந்தன, அவற்றை ஆண்ட அரசாங்கங்களும் வேறுவேறு. ஆனால் ஃபலஸ்தீன் விஷயத்தை அவை, தேசிய வாதப் பிரச்சனையாக பார்க்காமல் கூட்டுப்பிரச்சனையாகவே பார்த்தன. 1967 ஆமாண்டு போரை ஒன்றுசேர்ந்தே நடத்தின. ஆனால் பிற்காலத்தில் ஃபலஸ்தீனத்தில் உருவான அல்லது உருவாக்கப்பட்ட 'தலைமை' நிலைமையை முற்றிலும் தலைகீழாக மாற்றிவிட்டது. அதிகாரத்தை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு யாஸர் அரஃபாத் ஃபலஸ்தீன பிரச்சனையை தேசிய வாதப் பிரச்சனையாக மாற்றினார். அதன் உயிரை உருவி வெளியே வீசியெறிந்தார். அதன்பின் அது, இஸ்லாமிய சமயத்தின் பிரச்சனையாக, முஸ்லிம் சமூகத்தின் பிரச்சனையாக இல்லாமல் போனது.

ஓஸ்லோ ஒப்பந்தத்தால் விளைந்தது இதுவே! தங்கள் சமயப் பற்றாளர்களாக யூதர்களாக 'வர்ணம்' தீட்டிக்கொள்வதில் மட்டும், 'அவர்கள்' வெற்றிபெறவில்லை, ஃபலஸ்தீனத்தின் 'சமய வர்ணத்தை' போக்குவதிலும் வெற்றிபெற்றார்கள்.

அட, முஸ்லிம்களின் முதல் கிப்லாவாக இருந்த, புனிதப் பள்ளியாக இன்றும் திகழுகின்ற ஒரு பகுதியை தேசியவாதத்தை முன்னிறுத்தி எப்படி பின்தள்ள முடியும்? அரபு நாடுகளில் ஒன்றுகூட இப்படி யோசிக்கவே இல்லை. ஃபலஸ்தீன பிரச்சனையில் அரபு நாடுகளின் போக்கு இங்கிருந்துதான் மாறத்

தொடங்கியது. அதற்கான காரணங்கள் இந்த ஒப்பந்தத்தில்தான் அடங்கியுள்ளன.

## ஃபலஸ்தீனத்தின் இன்றைய நிலையும் அரபு நாடுகளும்

ஓஸ்லோ ஒப்பந்தத்திற்குப்பிறகு, ஒருபக்கம் தன்னை முழுக்க முழுக்க யூத சக்தியாக காட்டிக்கொண்டதோடு மறுபக்கம் அமெரிக்க ஐரோப்பிய நாடுகளின் உதவியோடு உலக நாடுகளின் அங்கீகாரத்தையும் ஆதரவையும் இஸ்ரேல் பெற்றுக்கொண்டது. ஃபலஸ்தீனத்தின் மீது உலக நாடுகளுக்கு இருந்த பரிவை கொஞ்சம் கொஞ்சமாக போக்குவதிலும் வெற்றி கண்டது.

ஒருகாலத்தில் உலக முஸ்லிம்கள் அனைவரும் இதனை தங்கள் சொந்தப் பிரச்சனையாக கருதினர், ஒரேகுரலில் முழங்கினர். ஆனால், இன்றோ?

தீவிரமான ஒரு சதித்திட்டத்தின் பின்னணியில் இப்பிரச்சனை யில் இருந்து உலக நாடுகளின் கவனம் திசைதிருப்பப்பட்டது; முஸ்லிம்களின் பார்வையில் பிரச்சனையின் வடிவம் மாற்றி யமைக்கப்பட்டது.

ஃபலஸ்தீனர்களின் வாழ்வு, ஃபலஸ்தீனர்களின் பாதுகாப்பு என்பதை உலகத்தின் கவனத்திலிருந்து அகற்றி இஸ்ரேலின் பாதுகாப்பு, இஸ்ரேல் மக்களின் அமைதி என்பது பதியவைக்கப் பட்டது. ஃபலஸ்தீனர்களுக்கு நாடு கிடைக்கின்றதோ இல் லையோ நிலம் இருக்கின்றதோ இல்லையோ இஸ்ரேல் மக்கள் அமைதியாக நிம்மதியாக வாழவேண்டும்; அதற்கு வழி செய் தாக வேண்டும் என்பது உலக மக்களின் சிந்தனையில் உரு வேற்றப் பட்டது.

இது ஒன்றும் உலகலாவிய இஸ்லாமிய உம்மத்தின் பிரச்சனை அல்ல, இது அரபுக்களின் பிரச்சனை. இதற்கான தீர்வை அவர் களே கண்டு கொள்வார்கள். உலக முஸ்லிம்கள் ஒன்றுபட்ட போராடவேண்டிய அவசியமில்லை - என முஸ்லிம் உலகில் பிரச்சாரம் செய்யப்பட்டது.

இப்பிரச்சாரம் எடுபடத் தொடங்கியது. அரபு நாடுகளைத் தவிர்த்து மற்ற முஸ்லிம் நாடுகள் அனைத்தும் மெதுவாக பிரச்

சனையை கண்டு கொள்ளாமல் விலக ஆரம்பித்தன. ஓஸ்லோ ஒப்பந்தத்திற்குப் பிறகு 1967 ஆண்டு முதல் அரபு நாடுகள் யோசிக்கும் முறையும் மாறத் தொடங்கியது. இது ஃபலஸ்தீனர் களுடைய தேசியப் பிரச்சனை, அவர்கள்தான் இதற்காக போராட வேண்டும் என்று அவர்களது சிந்தனை திசைதிருப்பப்பட்டது.

மேலை நாடுகளின் சூழ்ச்சி கைமேல் பலன் தந்தது. அரபு நாடுகள் வேறு,வேறு. எல்லைகளும் வேறு, வேறு. அப்படி இருக்கையில் ஃபலஸ்தீனுக்காக நாமேன் போராட வேண்டும்? என சிந்திக்கலானார்கள். சமூகத்தையும் சமயத்தையும் மட்டும் பார்த்தவர்கள் எல்லைக் கோடுகளைப் பார்க்கத் தொடங்கினார் கள். ஃபலஸ்தீனுக்காக ஒன்றுபட்ட இஸ்ரேலை எதிர்க்கவேண் டும் என்ற சிந்தனையே அதன்பின் அவர்களுக்கு வரவில்லை.

அதன்பின் ‘சும்மா’ ஒரு பேச்சுக்காக அவ்வப்போது ‘வாய்ஸ்’ தருவதோடு நின்றுகொண்டார்கள்.

இப்போது இன்னும் ஒருபடி மேல் போய்விட்டார்கள். ஃபலஸ்தீன பிரச்சனை என்றுகூட சொல்வதில்லை. அதையும் உடைக்கத் தொடங்கி விட்டார்கள். மேற்குக்கரை பிரச்சனை என்கிறார்கள். மஹ்மூத் அப்பாஸின் பிரச்சனை என்கிறார்கள். சில சமயங்களில் காஸா பிரச்சனை, ஹமாஸின் பிரச்சனை என்கிறார்கள்.

சமீபத்தைய காஸா பிரச்சனையின் போது இதனை கண்கூடாக பார்த்தோமே! காஸா பகுதி மக்கள் போராடிக் கொண்டிருக் கிறார்கள். மேற்குக் கரை மக்களோ உலகத்தின் மற்ற பகுதி மக்களைப் போல வெறுமனே வேடிக்கை பார்த்துக்கொண்டிருந் தார்கள். என்ன சொல்லப் படுகின்றது?

‘இது ஒட்டுமொத்த ஃபலஸ்தீனின் பிரச்சனை அல்ல. இது காஸா பகுதி மக்களின் பிரச்சனை’.

இறைவன் பெரியவன்!

மேற்குக்கரை மக்கள் எவ்விதத்திலும் உதவிசெய்ய முன் வரவில்லை.

அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் இஸ்ரேல் ஆகிய கூட்டுச்சதி காரர்கள் ஃபலஸ்தீன பிரச்சனையை எப்படியெல்லாம் திசை திருப்புகிறார்கள்? எங்கெல்லாம் கொண்டு போகின்றார்கள்? என்பதை யாராலும் கணிக்க முடியாது.

முழு இஸ்லாமிய உலகமும் இந்த சூழ்ச்சி வலைக்குள் சிக்கிக் கொண்டு விட்டது. ஒருமுறை கூட சிந்தித்துப் பார்க்கவில்லை. ஃபலஸ்தீன் பிரச்சனை எங்கிருந்து எங்கு போய்விட் டது? அதன் தன்மை எப்படி யெல்லாம் மாறிவிட்டது? என்பதை யோசிக் கவே இல்லை.

ஒருவேளை அவர்கள் யோசிக்கத் தொடங்கினாலும் இவற் றைப்பற்றி சிந்திக்கத் தொடங்கினாலும் கூட பிரச்சனை இன்று எங்கேயோ போய் விட்டது, காலம் கடந்துவிட்டது. ஆயினும் நம்பிக்கை வற்றுப்போய் விடவில்லை. அமெரிக்கா, ஐரோப்பா, இஸ்ரேல் மூவரும் ஃபலஸ்தீன் விஷயத்தில் எப்படி யெல்லாம் நாடகம் போடுகின்றார்கள் என்பதை உலகத்திற்கு முன்னால் விளக்கிக்கூறி உண்மையை தெளிவாக்க இன்னமும் வாய்ப்பிருக்கின்றது. திரும்பத் திரும்ப வலியுறுத்தினால் அமெ ரிக்காவைப் போல் அழுத்தத்தை கொடுத்துக்கொண்டே இருந் தால் உலகத்தின் அணுகுமுறை கண்டிப்பாக மாற்றமுடியும்.

இஸ்லாமிய சமூகம் தயாராக இருக்கின்றதா? முஸ்லிம்கள் தயாரா? அரபு நாடுகளில் இதற்கான முதல் முயற்சியை செய்யப் போவது யார்?

ஃபலஸ்தீன பிரச்சனையை தீர்ப்பதற்காக முழுமூச்சோடு களம் கண்டவர்கள் அரபு நாடுகள் என்பதை மறக்கவோ மறுக்கவோ முடியாது. போர்வரைக்கும் அவர்கள் போனார்கள். ஆனால் இன்று நிலைமை தலைகீழ். அவர்களுடைய மனச்சாட்சி விலை போய்விட்டது அல்லது உறக்கத்தில் தள்ளப்பட்டு விட்டது. ஃபலஸ்தீனர்களோடு சேர்ந்து நிறுத்தும் அளவுக்கு அவர்க ளுடைய மார்க்கப்பற்றும் வலுவாக இல்லை. முதல் கிப்லாவை மீட்டே தீரவேண்டும் என்கின்ற ரோஷமும் இல்லை.

அரபு நாடுகளில் காணப்படாத இந்த மார்க்கப்பற்றும் ரோஷ மும் இஸ்ரேல் விஷயத்தில் யூதர்களிடம் இருப்பதைப் பார்க்கின்

றோம். உலகம் முழுவதிலுமிருந்து யூதர்களைக் கொண்டுவந்து அவர்கள் அங்கே குடியேற்றுகின்றார்கள். பக்கத்து நாட்டில் இருந்துகொண்டே ஃபலஸ்தீன மக்களின் உணர்வுகளை புரிந்து கொள்ள அரபுக்கள் மறுக்கின்றார்கள்.

தங்கள் மார்க்கச் சகோதரர்களை, இஸ்லாமிய மேலாண்மைக் காக பாடுபடுபவர்களை 'பயங்கரவாதிகள்' என்று சொல்லக்கூட அவர்கள் தயங்குவதில்லை. இஃக்வான்கள் பயங்கரவாதிகள்; ஐ.எஸ் பயங்கரவாதிகள் என்றெல்லாம் சொல்கின்ற அரபு நாடுகள், ஒரு நாளாவது இஸ்ரேல் பயங்கரவாத நாடு என்று சொல்லியிருப்பார்களா?

வளைகுடா பகுதிக்கு மட்டுமல்லாமல் உலகத்திற்கே வேட்டு வைக்கின்ற பயங்கரவாதிகளாக இஸ்ரேலியர்கள் இருக்கின்றார் களே, அதைப்பற்றி ஒருதடவையாவது வாயைத் திறந்திருப்பார் களா? இஃக்வான்களை ஒழிப்பதற்காக களஞ்சியத்தையே திறந்து கொட்டுகின்றார்களே, ஃபலஸ்தீனத்தில் இஸ்லாமிய அரசை அமைப்பதற்காக செலவு செய்திருப்பார்களா?

இஸ்ரேலின் பாதுகாப்பைப் பற்றி அமெரிக்கா பேசும்போது, அதற்காக உலக அரங்கில் குரல் எழுப்பும்போது எந்த அரபு நாடாவது எழுந்துநின்று ஃபலஸ்தீனர்களின் உரிமைகளைப் பற்றி பேசுகின்றதா? ஃபலஸ்தீனர்களை அடியோடு புறக் கணித்துவிட்டு இஸ்ரேலின் உரிமைகளைப் பற்றி மட்டும் பேசு வது நியாயமா?

வளைகுடா பகுதியில் அமைதி நிலவ அரபு நாடுகள் ஒரு 'ரோடு மேப்'பை தயாரித்து வழங்கின. பிறகு அதைப்பற்றி வலியுறுத்தவே இல்லை. அமெரிக்கா அதற்கு மாற்றாக ஒரு ரோடுமேப்பை தயாரித்தது. அப்புறம் இரண்டையும் தூக்கி குப்பைமேட்டில் வீசிவிட்டது. யாரும் எதுவும் கேட்கவில்லை. எப்போது பார்த்தாலும் பேச்சுவார்த்தை பேச்சு வார்த்தை என்கின்றது, அமெரிக்கா. அதுவும் எகிப்தையே நடுவராக முன் னிறுத்துகின்றது. காஸா விஷயத்தில் இஸ்ரேலும் எகிப்தும் நிறைய உடன்படுகின்றன, அதாவது காஸாவை முடக்கி வைப் பதில்!

பரவாயில்லையே நல்லபடியாக தீர்த்துவைக்க அமெரிக்கா முயற்சி செய்கின்றதே என அரபுக்கள் சந்தோஷப்படுகின்றார்கள். அதுவோ பிரச்சனையை தீர்த்துவைப்பதில்லை. பேச்சு வார்த்தை மூலம் முடக்கியே வைக்கின்றது. இஸ்ரேல் தன்னை அகலப்படுத்திக் கொள்ள பேச்சு வார்த்தைகள் தாம் பெரிய துணை! மஹ்மூத் அப்பாஸின் அரசுக்கு இப்போதுதான் இது உறைக்கின்றது.

காஸா போரின்போது லத்தீன் அமெரிக்க நாடுகள் கூட இஸ்ரேலை கண்டித்தன. தூதரக உறவை முறித்துக்கொண்டன. அரபு நாடுகளோ? அமெரிக்கா என்ன சொல்கின்றதோ எப்படி நடக்கின்றதோ அதை அப்படியே பின்பற்றுகின்றன. மேற்குக்கரையின் மஹ்மூத் அப்பாஸின் அரசைத்தான் ஃபலஸ்தீனர்களின் அரசாக அமெரிக்காவும் ஐரோப்பாவும் கருதுகின்றன. அரபுநாடுகளும் அவ்வாறே! ஹமாஸை அவை பயங்கரவாத இயக்கம் என்கின்றன. இதைப் பார்த்து அமெரிக்காவுக்கும் இஸ்ரேலுக்கும் ‘குளிர்’ போய்விடுகின்றது. ‘கிரேட் இஸ்ரேல்’ என்னும் ‘கனவை’ காணத் தொடங்கிவிடு கின்றார்கள். ஃபலஸ்தீன பிரச்சனையிலுள்ள ‘டிரேஜிடி’ இது தான்.

இவற்றை நீங்கள் நம்பாமல் போகலாம். ஆனால் அண்மையில் நடந்த காஸா போர் சிலபல விஷயங்களை நமக்கு உணர்த்தியே உள்ளது. உலகத்தில் போக்கு இவ்விஷயத்தில் எவ்வாறு உள்ளது என்பதும் அரபு நாடுகளின் நிலை என்ன என்பதும் அதில் முக்கியமான அம்சம். யாரும் இதனை நிராகரிக்க முடியாது. ஃபலஸ்தீன பிரச்சனையில் உலக மக்கள் தங்கள் பொறுப்புகளை மறக்கவோ மறுக்கவோ முடியாது. நாங்கள் எங்களால் இயன்றளவு பாடுபடுகின்றோம் என்று அரபு நாடுகள் சமாதானம் சொல்லவும் முடியாது.



# காஸாவிற்கெதிரான இஸ்ரேலிய அடக்குமுறையும் எகிப்தும்

## *2012 மற்றும் 2014 பேச்சுவார்த்தைகள்*

*2012 ஆண்டு நடைபெற்ற பேச்சுவார்த்தை கௌரவம் மிக்கதாய் இருந்தது என்பதை முதலில் தெரிந்துகொள்ள வேண்டும். பேச்சு வார்த்தைகள் தொடங்குமுன்பே எகிப்து அதிபர் முஹம்மத் மூர்ஸி ஒரு விஷயத்தை இஸ்ரேல் அதிபர் நேதன் யாஹூவிடம் தெளிவாக சொல்லிவிட்டிருந்தார். 'ஃபலஸ்தீனத்திற்கு அமைதி கிடைக்காமல் இஸ்ரேலுக்கு அமைதி கிடைக்கவே கிடைக் காது!'.*

*எனவே, உங்களுக்கு உண்மையிலேயே நிம்மதி வேண்டுமென் றால் முதலில் ஃபலஸ்தீனர்களுக்கான அமைதிக்கு உத்தரவாதம் கொடுங்கள். இதன் அடிப்படையில் அந்த உடன்பாடு உண்மை யிலேயே நியாய பூர்வமானதாக இருந்தது. இருதரப்பினரும் அதில் கையெழுத்திட்டார்கள்.*

*2012 ஆமாண்டு இவ்வுடன்பாட்டை எட்டியதில் முஸ்லிம் நாடுகள் மட்டுமல்லாது ஐரோப்பிய நாடுகளும் மூர்ஸியை பாராட்டின. இந்த உடன்பாடு சிறப்பாக இருந்ததற்கும் இரு தரப்பாலும் வரவேற்கப் பட்டதற்கும் காரணம், உடன்பாட்டை உருவாக்கியோர் ஃபலஸ்தீன பிரச்சனையை நன்று புரிந்திருந் ததும் அவர்களை 'அல்இஃக்வானுல் முஸ்லிமூன்' பின்னணி யில் நின்று இயக்கியதும்தான்.*

*கவனிக்கவேண்டிய விஷயம் இன்னொன்றும் இதில் இருக் கின்றது. மூர்ஸி பொறுப்பில் இருந்தவரை இஸ்ரேல் இவ்வுடன் பாட்டை மீறாமல் நடந்துகொண்டது. எகிப்து ராணுவத்தில் இருந்து ஒரு இஸ்ரேலிய ஏஜெண்டை பயன்படுத்தி மூர்ஸியை பதவியில் இருந்து தூக்கிய பிறகுதான் உடன்பாட்டை மீறும் துணிச்சல் இஸ்ரேலுக்கு பிறந்தது.*

2014 ஆண்டிலும் எகிப்தின் 'பெயர்தாங்கிய' அதிபர் அப்துல் ஃபத்தாஹ் ஸீஸி-யை முன்னிறுத்தி ஓர் உடன்பாடு செய்யப்பட்டுள்ளது. ஃபலஸ்தீனர்களின் தன்மானத்தை முடிந்தளவுக்கு சிதைக்கின்ற, இஸ்ரேலின் கோரிக்கைகளை கண்ணை மூடிக் கொண்டு ஆதரிக்கின்ற உடன்பாடு என்பது பார்த்தவுடனேயே தெரிந்துபோய் விடுகின்றது.

இரண்டையும் ஒப்பிட்டுப் பார்த்தால், 2014 ஆண்டின் ஒப்பந்தம் ஒரு விஷயத்தை ஒப்புக்கொள்ளுமாறு ஃபலஸ்தீனர்களை கட்டாயப்படுத்து கின்றது. *பழிதீர்க்கும் நடவடிக்கையில் இறங்கத் தூண்டுகின்ற செயலையே நாங்கள் செய்தோம்!* அதாவது ஃபலஸ்தீனர்கள்தாம் அத்து மீறினார்கள், இஸ்ரேல் அல்ல. காஸாவில் இஸ்ரேல் செய்த அநியாயங்கள், அட்டூழியங்கள், படுகொலைகள், குண்டுவீச்சுகள் அனைத்தும் பதில் நடவடிக் கையே தவிர, தாக்குதல்கள் அல்ல.

அமெரிக்க அதிபர் ஒபாமா அடிக்கடி ஒருதடவை கூட விட்டு விடாமல் சொல்லிக்கொண்டிருந்த வாக்கியம்தான் இது. *நாங்கள் இஸ்ரேலை கண்டிக்க முடியாது. காரணம் அது தனது தற்காப்புக் காகத்தான் தாக்குதல் தொடுக்கின்றது. அதற்கான உரிமை அதற் கிருக்கின்றது.*

அதேசமயம் 2012 உடன்பாட்டில் தனது பயங்கரவாத நடவ டிக்கைகளை இஸ்ரேல் நிறுத்திக்கொள்ளவேண்டும் என்று வலி யுறுத்தப்பட்டிருந்தது. 2014 ஆண்டு ஒப்பந்தத்தில் சிவிலியன்கள் மீது குண்டு வீசுவதை நிறுத்தியாக வேண்டும் என்று கூறப்பட்டி ருந்தது. சுவாரஸ்யமான விஷயம் என்னவெனில் யார்யாரெல் லாம் 'சிவிலியன்கள்' யார்யாரெல்லாம் 'சிவிலியன் கள்' அல்லர் என்பதை இஸ்ரேல்தான் தீர்மானிக்குமாம். கூடவே தாக்குதல் நடத்துபவர்களைதுரத்துகின்ற அதிகாரம் இஸ்ரேலுக்கு வழங்கப் பட்டது. துரத்தும்போது கொன்றுவிட்டாலும் பரவாயில்லை!

2014 ஒப்பந்தத்தில் இஸ்ரேலுக்கு எதிரான பகை நடவடிக்கை கள் என்பதன் கீழாக ஃபலஸ்தீனர்கள் சுரங்கங்களை அமைத்து ஒளிந்திருந்ததும் பட்டியலிடப் படுகின்றது. 2012 ஆண்டு ஒப்பந் தத்தில் இதைப்பற்றிய பேச்சே இல்லை.

காஸாவின் எல்லைப்பகுதியில் ஃபலஸ்தீனர்களின் நடமாட்டம், போக்குவரத்து எவ்விதத்திலும் தடைசெய்யப்படாது என 2012 ஒப்பந்தம் குறிப்பிடுகின்றது. 2014 ஒப்பந்தத்தில் இவ்வாக்கியம் காணப்படவே இல்லை.

அதுபோன்றே வழிப்பாதைகளில் போய்வருவதும் சாமான்களை கொண்டு செல்வதும் கட்டுப்பாடுகளுக்கு உள்ளாக்கப்படும் என்கின்றது, 2014 ஒப்பந்தம். 2012 ஒப்பந்தமோ வழிப்பாதைகளை பயன்படுத்துவதைப் பற்றி பேசுகின்றதே தவிர, கட்டுப்பாடுகளைப் பற்றி பேசவே இல்லை.

ஆக, இரண்டு ஒப்பந்தங்களும் அடிப்படையிலேயே வேறுபடுகின்றன. அதன் நகல் இது என்று சொல்வதற்கு வழியே இல்லை. எகிப்து முன்னின்று நடத்திய பேச்சுவார்த்தைகளை இஸ்ரேல் மனமுவந்து வரவேற்றதற்கு என்ன காரணம் என்பது இப்போது புரிந்திருக்கும். சிவிலியன்கள் யார் என்பதை மட்டுமல்ல, முஸ்லிம் நாடுகளை ஆள்வது யார் என்பதையும் இஸ்ரேல்தான் தீர்மானிக்கின்றது என்பதுதான் உலக முஸ்லிம்கள் புரிந்தாகவேண்டிய உச்சகட்ட கொடுமை.



# ஃபலஸ்தீன வரலாற்றில் காஸாவின் பங்கு!

கேவலமான அடிமை வாழ்க்கையைத்தான் வாழுகின்றோம் என ஒட்டு மொத்த முஸ்லிம் உலகமும் புலம்பிக் கொண்டிருக்கும்போது நாங்கள் சுதந்திரமாக இருக்கின்றோம் என்றும் ஃபலஸ்தீனம் உள்ளிட்ட முழு இஸ்லாமிய உலகின் சுதந்திரத்திற்கான குறியீடாக இருக்கின்றோம் என்றும் காஸா மக்கள் உணர்த்தியிருக்கின்றார்கள்.

மஸ்ஜிதுல் அக்ஸா புனிதப் பள்ளியை மீட்கும் முயற்சியை இஸ்லாமிய உலகமும் அரபு நாடுகளும் ஏகதேசம் கைவிட்டு விட்டபோது, ஃபலஸ்தீனத்தின் ஒரு மிகப்பெரிய பகுதியே அதைப்பற்றி சிந்திப்பதை அறவே தவிர்த்து வரும்போது புனிதப் பள்ளியின் விஷயத்தில் எந்த சமாதானத்தையும் செய்துகொள்ள தயாராக இல்லை என்பதை ‘காஸா’ சொல்லாலும் செயலாலும் அறிவித்திருக்கின்றது.

அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் மற்றும் இஸ்ரேலிடம் பெற்ற ஆயுதங்களின்துணைகொண்டு ஆட்சியாளர்கள் முஸ்லிம் உலகத்தை ஆட்சி செய்யும்போது அந்த ஆயுதங்களின்மீது அளவற்ற நம்பிக்கையை கொண்டுள்ளபோது, அந்த ஆயுதங்களை மீறி அவற்றுக்கு அப்பாலும் ஓர் ஆற்றல் இருக்கின்றது என்பதை ஊர்உலகிற்கு உணர்த்தியுள்ளது, காஸா.

நம்பிக்கை என்றும் ஈமான் என்றும் அதனை சொல்கின்றார்கள். அதற்கு முன்னால் ‘பொருள்’ ஒரு பொருட்டே அல்ல.

இஸ்லாமிய உலகே உள்நாட்டுப் போர்களாலும் பிரிவினை பிளவுகளாலும் பாழ்பட்டு சீரழிந்து கிடந்தபோது ஒன்றுபட்டு ஓரணியில் பகைவரை எதிர்த்துநின்று எதிர் காலத்தை பாதுகாப்பதற்காக தனது, ஆண்களையும் பெண்களையும் முதியோரையும்

குழந்தைகளையும் அர்ப்பணித்து உயர்ந்து நிற்கின்றது, காஸா. தனது குருதியை பாய்ச்சி எதிர்காலத்தை பாசனம் செய்து கொண் டிந்தது.

இஸ்லாமிய உலகம் முழுக்க பெரிய பெரிய பள்ளிவாசல் களையும் விண்ணை முட்டும் கட்டிடங்களையும் பாலங்களை யும் ஹோட்டல்களையும் கட்டிக்கொண்டிருந்தபோது புதிய புதிய தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி பகைவரை எதிர் கொள்ளும் வீரியமிக்க கருவிகளைக் கண்டறிந்து போரில் அவற் றைப் பயன்படுத்தியது காஸா.

எங்கேயிருக்கின்றது, இந்த காஸா? ஃபலஸ்தீன் நாட்டில் தென் மேற்குப் பகுதியில் மனிதர்கள் வாழுகின்ற ஒரு சின்னஞ் சிறு பிர தேசம் காஸா. அவர்களின் பெரும்பாலோர் அகதி முகாம்களில் தான் வாழுகின்றார்கள். நாலாபுறங்களில் இருந்தும் முற்றுகை யிடப்பட்ட நிலையில். ஃபலஸ்தீன நாட்டின் 33.1 சதவிகிதப் பகுதியைக் கொண்ட இப்பகுதியின் மொத்தப் பரப்பளவு 360 சதுர கிலோமீட்டர். அண்மையில் எடுக்கப் பட்ட மக்கள்தொகை கணக்கின்படி இங்கு வாழும் மக்களின் எண்ணிக்கை 17 லட்சத்து 60 ஆயிரம்.

உலகத்தில் வேதனையோடு வியப்பை அளிக்கின்ற ஒரே பகுதி யாக காஸா திகழுகின்றது. மிகக்குறுகிய இந்நிலப்பரப்பில் ஒரு மிகப்பெரிய நாடே புகலடைந்துள்ளது. ஆம், ஃபலஸ்தீனத்தின் 44 மிகப்பெரும் நகரங்கள் இந்நிலப்பில் தஞ்சம் புகுந்துள்ளன. குஸாஆ, பைத்துல் லாஹியா, பைத் ஃகானூன், பனீ ஸஹீலா, இஸ்பான் மற்றும் ஜபாலியா போன்ற பெரும்பெரும் நகரங்கள் இந்நிலப்பில் தற்போது ‘உள்ளன!’. இங்குள்ள ஒவ்வொரு ஏரியா (மஹல்லா) வும் ஒவ்வொரு நகரங்களைக் கொண்டுள் ளது. உலகத்தின் வல்லரசுகள் துணையோடு ஸியோனிசம், வேரோடு பிடுங்கி எறிந்துவிட்ட, உலகத்தின் தலைசிறந்த பண் பாட்டை நினைவுபடுத்துகின்ற நகரங்கள் இவையாவும். இந்நக ரங்கள் இருந்த நிலப்பரப்புகளில் உலகத்தின் பல பகுதிகளில் இருந்தும் கூட்டிக்கொண்டு வரப்பட்ட யூதர்கள் வாழ்ந்து கொண் டிருக்கின்றார்கள். கூட்டிக்கொண்டு வருவது இன்றும் தொடரு கின்றது.

*உலகின் மக்கள் நெருக்கம் மிகுந்த பகுதிகளுள் ஒன்றாக காஸா மதிப்பிடப் படுகின்றது. ஒரு சதுர கிலோ மீட்டர் பகுதியில் கடைசியாக எடுக்கப்பட்ட கணக்கின்படி 26 ஆயிரம் மக்கள் வசிக்கிறார்கள். அகதி முகாம்களிலுள்ள மக்களின் எண்ணிக்கை யும் நிலையும் சொல்லி மாளாது. சதுர மீட்டருக்கு 55 ஆயிரம் மக்கள் அங்கு வசிக்கிறார்கள். இந்த எண்ணிக்கை கூடிக் கொண்டே வருகின்றது. அல்ஜஸீரா அண்மையில் எடுத்த ஒரு கணக்கீட்டின்படி ஒரு கிலோமீட்டர் பகுதியில் 4822 பேர் வசிக் கிறார்கள். உலகில் எங்கும் இல்லாத அளவுக்கு வேலை வாய்ப் பின்மை, வறுமை என பல்வேறு துயரங்கள் அவர்களைத் தாக்கி வருகின்றன.*

*முதல் உலகப்போரை அடுத்து கண்காணிப்பு என்ற வடிவத்தில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இதனை கைப்பற்றியது. 1948 வரை இங்கு அவர்கள் ஆட்சிதான். 1948 ஆமாண்டு நடைபெற்ற அரபு-இஸ்ரேல் போரிற்குப் பிறகு இது எகிப்தின் கட்டுப்பாட்டின் கீழ்வந்தது. 1956 வரை எகிப்து ஆளுமையின் கீழிருந்தது. 1956 ஆமாண்டு நடந்த போரில் இதனை இஸ்ரேல் கைப்பற்றி, ஐந்து மாத காலம் வைத்திருந்தது. 1957 ஆண்டில் இஸ்ரேல் வெளியே றிய பின், மறுபடியும் எகிப்தின் கீழ் வந்தது. 1967 ஆமாண்டு மறு படியும் இஸ்ரேல் கைப்பற்றிக் கொண்டது. உண்மையைச் சொல்ல வேண்டுமென்றால் ஓஸ்லோ ஒப்பந்தத்திற்குப் பிறகும் இந்த 'ஆக்கிரமிப்பு' தொடர்ந்தது என்றே சொல்லியாக வேண் டும். இரண்டாவது இன்திஃபாழா எழுச்சிக்குப் பிறகு, 2005 ஆமாண்டு இஸ்ரேல் காஸாவை விட்டு வெளியேறியது.*

*1993 ஓஸ்லோ ஒப்பந்தத்தின்படி, ஃபலஸ்தீன் பகுதிகளில் ஐந்தாண்டுகளுக்குள் சுதந்திர அரசாங்கம் நிறுவப்பட்டாக வேண் டும். மேற்குக் கரையும் காஸாவும் அதில் அடங்கும். இஸ்ரேல் அதை பொருட்படுத்தவே இல்லை. இரண்டாம் இன்திஃபாழா விற்குப் பிறகு 2005 இல்தான் முதலில், இஸ்ரேல் இங்கிருந்து வெளியேறியது. அடுத்து, 2006 இல் பொதுத்தேர்தல் அறிவிக்கப் பட்டது.*

*இந்த தேர்தலில் ஹமாஸும் பங்கேற்றது. அறுதிப் பெரும் பான்மையோடு ஆட்சிக்கு வந்தது. ஹமாஸின் இந்த வெற்றியை*

ஃபலஸ்தீன (அத்தாரிட்டி) அரசு ஏற்கவில்லை, இஸ்ரேல் மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கும் பிடிக்கவில்லை. இதன் விளைவாக மேற்குக் கரையை ஆண்டுவரும் மஹ்மூத் அப்பாஸ் தலைமையிலான ஃபலஸ்தீன அத்தாரிட்டி அரசுக்கும் ஹமாஸுக்கும் இடையே மோதல் தொடங்கியது. 2007 ஆண்டு ஏற்பட்ட உள்நாட்டுப் போரில் ஏறக்குறைய நூறு உயிர்களை பலி கொடுத்து இதனை ஹமாஸ் அடக்கியது.

காஸாவில் ஹமாஸ் ஆட்சிப்பொறுப்புக்கு வந்தபின், ஃபலஸ்தீன- இஸ்ரேல் பிரச்சனை காஸா-இஸ்ரேல் பிரச்சனையாக உருமாறிவிட்டது. மேற்குக்கரை அரசாங்கம் ஏற்கனவே போராட்டத்தை கைவிட்டிருந்தது. இஸ்ரேல் நாட்டை ஏற்றுக்கொண்டிருந்தது. பிரச்சனைகளை தீர்த்துக் கொள்ள பேச்சுவார்த்தைகளின் துணையை நம்பத் தொடங்கியிருந்தது. அப்பகுதியில் புதிய குடியேற்றங்களை உருவாக்குவதில் இஸ்ரேலுக்கு எதிர்ப்பே இல்லை என்றுதான் சொல்லவேண்டும். ஆனால் காஸாபட்டி பகுதியில் தன்னிஷ்டப்படி நடந்துகொள்ள இஸ்ரேலால் முடியவில்லை.

ஏனெனில், ஃபலஸ்தீனத்தின் முழு விடுதலையை தன் உயிர் மூச்சு என அறிவித்திருக்கும் ஓர் இயக்கம் அங்கு ஆட்சிப் பொறுப்பு ஏற்றிருக்கின்றது. இரண்டாவது போராட்டக் களத்திலிருந்து அது இன்னமும் வெளியேறி விடவில்லை.

2008 ஆண்டின் இறுதியில் காஸா பகுதியை பலங்கொண்டு தாக்கியது, இஸ்ரேல். அப்போரில் ஃபலஸ்தீனத்திற்கு வெற்றி கிடைக்கவில்லை என்றாலும் காஸா பகுதி மக்கள் ஹமாஸின் தோளோடு தோளாக துணை நின்று தங்கள் ஒற்றுமையை உரக்க அறிவித்தார்கள். மக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்று தனது ஆட்சியை நிலைப்படுத்திக் கொண்டது, ஹமாஸ்.

2012 இல் எகிப்தில் இஃக்வான்கள் வெற்றிபெற்று *மூர்ஸி* ஆட்சிப் பொறுப்பை ஏற்றார். ஆட்சிக்கு வந்தகையோடு ஹமாஸோடு நெருங்கிய உறவை வளர்த்துக்கொண்டார், *மூர்ஸி*. *மூர்ஸி*யின் பிரதமரான *ஹிஷாம் கின்தீல்*, காஸாவிற்கு பயணம் மேற்கொண்டார். *காலித் மிஷ்அல்* மற்றும் *இஸ்மாயீல் ஹானி*

யஹ் ஆகியோரோடு கலந்தபின் காஸாவோடு ஒன்றிணைந்து செயல்படுவதாகவும் அனைத்து வகையான உதவிகளையும் காஸாவிற்கு செய்வதாகவும் மூர்ஸி அறிவித்தார்.

உன்னிப்பாக நிலைமையை கவனித்துக் கொண்டிருந்த இஸ்ரேல் பதற்றம் அடைந்தது. 2012 இல் மறுபடியும் காஸாவைத் தாக்கியது. அதற்கு முன்னால் நடந்து போர்களோடு ஒப்பிட்டால் இது மிகவும் 'சின்ன போர்'. இஸ்ரேலுக்கும் ஹமாஸுக்கும் இடையே சமாதானம் செய்ய தானாக முன்வந்தது, மூர்ஸி தலைமையிலான எகிப்து.

காஸா விஷயத்தில் நீதிமிக்க, உறுதியான நிலைப்பாட்டை எகிப்து முன்னிறுத்திய முதல் தருணம், இது. இதன்பின்பு எகிப்துடைய நிலை அதோகதியானது. வளைகுடா நாடுகள் மட்டுமல்லாது இஸ்லாமிய உலகம் முழுக்க அதிர்ந்துபோனது.

நிலைமை தனக்கு சாதகமாக உள்ளதை உணர்ந்துகொண்ட இஸ்ரேல், தனது குடிமக்களை கொன்றதாக குற்றம்சுமத்தி 2014, ஜுலை 8ம் நாள் காஸாவின் மீது வெறியோடு பாய்ந்தது. இஸ்ரேலின் தாக்குதலை, காஸா மக்கள் தீரத்தோடு எதிர்கொண்டார்கள். இஸ்ரேலுக்கும் மேலை நாடுகளுக்கும் முஸ்லிம் நாடுகளுக்கும் வெட்ககரமான ஒரு செய்தியை இப்போர் தனக்குள் வைத்திருந்தது.

தனக்கு எதிரான பிராந்திய, உலகலாவிய, சர்வதேச சூழ்ச்சிகளை காஸா எதிர்கொண்டவிதமும் போர்க்களத்தில்இருந்து அவர்களை விரட்டியடித்த போக்கும் காஸாவின் வரலாற்றில் மட்டுமல்ல, ஃபலஸ்தீனத்தில் வரலாற்றிலும் பொன்னெழுத்துகளாக பொறிக்கப்பட்டு விட்டது. ராணுவ ரீதியில் மட்டுமல்ல, அரசியல், அயல்நாட்டு தூதரக உறவுகள் ரீதியிலும் ஹமாஸ் மிகப் பெரிய வெற்றியை இப்போரில் பெற்றது.

இஸ்ரேலிய பயங்கரவாதம் இல்லாமல் வேறுபல சவால்களையும் காஸா சந்திக்கவேண்டியிருக்கின்றது. அவற்றின் சாராம்சம் கீழே தரப்படுகின்றது.

(அ) காஸா பகுதியை ஆட்சி செய்யும் ஹமாஸை உலக வல்லரசுகளும் ஒருசில முஸ்லிம் நாடுகளும் பயங்கரவாத இயக்கம் என

அவதூறு சுமத்தி வருவது, மிகப்பெரிய சவாலாகும். அதை திறமையாக எதிர்கொள்வதில் தான் அவர்களது அரசியல் வெற்றி அடங்கியுள்ளது.

(ஆ) *அல்ஃபதஹ்* கட்சிக்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான உறவும் *ஃபதஹ்* கட்சிக்கும் ஹமாஸுக்கும் இடையிலான முரண்பாடுகளும் அடுத்த பெரிய சவாலாகும். தனக்கும் *ஃபதஹ்* விற்கும் இடையிலான முரண்பாடுகளைக் களைந்து ஃபலஸ்தீனத்தில் வலுவான ஆட்சி ஒன்றை உருவாக்க *ஹமாஸ்* முயற்சிக்கும் போதெல்லாம் *மஹ்மூத் அப்பாஸைப்* பயன்படுத்தி முட்டுக்கட்டுகளை இஸ்ரேல் போட்டுவிடுகின்றது. கடந்த காலத்தில் *அல்ஃபதஹ்* கட்சியோடு ஓர் உடன்பாட்டை *ஹமாஸ்* செய்து கொண்டது. இது ஹமாஸுக்கு பின்னடைவாகவும் *ஃபதஹ்* கட்சிக்குத் தான் சாதகமாகவும் இருப்பதாக அரசியல் நோக்கர்கள் கருதுகின்றார்கள். எனினும் இதைக்கூட பின்னுக்குத் தள்ளவே *ஃபதஹ்* முயற்சிக்கின்றது. அண்மையில் நடந்த காஸா போரின்போது *மஹ்மூத் அப்பாஸ்* சொன்ன கருத்துகளை தலை கீழாக நின்றாலும் நியாயப்படுத்த முடியாது.

(இ) அடுத்த சவால், காஸா முடக்கப்பட்டுள்ளது. அண்டை நாடான எகிப்தும் ஆக்கிரமிப்பு பயங்கரவாதியான இஸ்ரேலும் காஸாவை முடக்கி உள்ளன. ஒரு திறந்த வெளி சிறைச்சாலை யாக காட்சியளிக்கின்றது, காஸா. உலகின் மற்ற நாடுகளோடு எத்தகைய உறவையும் கொள்ளவிடாமல் அரசியல், பொருளா தார, கல்வி சார்ந்த எந்த தொடர்பையும் ஏற்படுத்த முடியாமல் காஸா முடக்கப்பட்டுள்ளது.

(ஈ) இந்த முடக்கத்தால் சொல்லமுடியாத பல்வேறு கொடும் வேதனைகளை காஸா அனுபவிக்க வேண்டியிருக்கின்றது. அர சாங்க அலுவலர்களுக்கு முறையான சம்பளத்தைக்கூட கொடுக்க முடிவதில்லை. தொழில்துறை முற்றிலும் நசுங்கிவிட்டது ; வேலையில்லா திண்டாட்டம் பெருகுகின்றது; பொருளாதாரம் சரிகின்றது; வணிகம் படுத்துவிட்டது. அடிக்கடி நடைபெறும் இஸ்ரேல் தாக்குதல்களால் வீடுகள், வசிப்பிடங்கள் அனைத்தும் பாழாகிக் கிடக்கின்றன. மக்கள் வாழும் இடமாகவே தோன்ற வில்லை. எங்கு பார்த்தாலும் இடிந்துபோன சரிந்துபோன கட்

டிடக் குவியல்கள்தாம். அவற்றை சரிப்படுத்தத் தேவையான அடிப்படைப் பொருட்களைக்கூட கொண்டுவரமுடியாத நிலை.

(உ) வாழ்வதே குதிரைக்கொம்பாக இருக்க மேலும் சோதனை யாக மின்சாரம், தண்ணீர் போன்ற அடிப்படைத்தேவைகளை தடுத்து நிறுத்தியுள்ளது, இஸ்ரேல். மருந்து மாத்திரைகளும் ஒரு பெரிய சோதனையாக உள்ளன. 'போர்க்காலத்தில் எங்களுக்கு ஏற்பட்ட உயிரிழப்புகளை விட நீண்ட நாள்களாக தொடருகின்ற இந்த முடக்கத்தால் ஏற்படுகின்ற உயிர் இழப்புகளும் பொருள் இழப்புகளும் அதிகம்' என்கிறார் காஸாவைச் சேர்ந்த ஓர் அதிகாரி.

இவையாவும் ஒன்றிரண்டு பிரச்சனைகளே. இருந்தபோதிலும் தீரத்தோடும் உத்வேகத்தோடும் காஸா மக்கள் நடைபோடு வதைப் பார்க்கும் போது வியப்பு தோன்றாமல் இருக்காது. இப் படிப்பட்ட சூழ்நிலையிலும் வளைகுடா நாடுகள் யோசித்தே பார்க்கமுடியாத அளவுக்கு ராணுவத்திறனில் காஸா முன்னேறி இருக்கின்றது. அவர்களோ இன்றளவிலும் பெருந்தொகை களைக் கொட்டிக்கொடுத்தே அமெரிக்காவிடமிருந்தும் இஸ்ரே லிடமிருந்தும் ஆயுதங்களை வாங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

அரசியலிலும் காஸா தனக்கு நிகரில்லை என்பதை நிரூபித்து விட்டது. அந்நாட்டு மக்கள் நாட்டின் முடிவுகளிலும் முன்னேற் றத்திலும் எதிர்கால திட்டங்களிலும் சுதந்திரமாக விரும்பிப் பங் கேற்கிறார்கள். அண்மையில் நடந்துமுடிந்த போரிலும் அதனை அவர்கள் வெளிப்படுத்தி இருக்கிறார்கள். ஹமாஸை ஏற்கவே ஏற்காத ஒரு பயங்கரவாத இயக்கம் என அதனை வர்ணிக்கின்ற இஸ்ரேல், ஹமாஸோடு பேச்சுவார்த்தை நடத்தியாக வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டது, அது விதித்த நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டது. முழுக்க முழுக்க காஸா மக்களே இதற்குக் காரணம்.


கல்வித்துறையிலும் காஸா பீடுநடை போடுகின்றது. 90 சதவி கித கல்வி வளர்ச்சியை எட்டிவிட்டார்கள், அவர்கள். பெரிய பல பல்கலைக் கழகங்கள் அங்கு செயல்படுகின்றன. அவற்றுள் ஜாமிஆ பல்கலைக் கழகம் குறிப்பிடத் தக்கது. (ஷஹீத்) சையத்

அஹ்மத் யாஸீன் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்ட பல்கலை அது. அதுவன்றி எகிப்து நாட்டின் புகழ்பெற்ற 'அழ்ஹர்' பல் கலைக்கழகத்திற்கு ஒப்ப, காஸா அழ்ஹர் பல்கலைக் கழகம், அல்அக்ஸா பல்கலைக் கழகம், ஃபலஸ்தீன் பல்கலைக் கழகம், அல்குத்ஸ் திறந்தநிலைப் பல்கலைக் கழகம் போன்றவை குறிப் பிடத்தக்கவை. தங்கள் எதிர்காலத்தை மட்டுமல்ல, உம்மத்தின் எதிர்காலத்தையும் எந்தளவுக்கு காஸா மக்கள் கவனத்தில் கொண்டுள்ளார்கள் என்பது இவற்றைப் பார்த்தாலே புரிகின்றது.

'காஸா' என்னும் பெயருக்கு பல்வேறு காரணங்கள் சொல்லப் படுகின்றன. (காஸா என்பதே தவறான உச்சரிப்பு. *கஸ்ஸா* - *Gazzah*- என்பதே சரி)

*'மனஅஹ்'* (புகழ்) மற்றும் *'குவ்வஹ்'* (வலிமை) ஆகிய இரு சொற்களின் கூட்டுக்கலவை என்கிறார்கள் ஒருசிலர். *'அஸ் ஸர்வஹ்'* (செல்வம், சொத்து) என்ற சொல்லின் திரிபு *'கஸ்ஸஹ்'* என்கிறார்கள். 'தனித்தேர்வு' என்னும் பொருளைத்தரும் *'அல் முஃகஸ்ஸஹ்'* என்பதே இதன் வேர்ச்சொல் என்றும் சொல் கிறார்கள்.

'தன் தோழர்களில் ஒருவரை மட்டும் தனியே தேர்ந்தெடுப் பதை *'கஸ்ஸ'* என்னும் வினைச்சொல் குறிக்கின்றது!' என்கிறார் மொழியியல் அறிஞர் யாகூத் ஹமவீ. உண்மையில் இதற்கேற்ற வகையில்தான் இந்நிலம் உள்ளது. தன் தனித் தன்மையால் மற்ற அனைத்தையும் விட்டு தனியே காட்சி தருகின்றது.




# விரியும் இஸ்ரேல்;
# சுருங்கும் ஃபலஸ்தீன்!

ஃபலஸ்தீனத்தைப் பற்றிய வரலாறு எந்தளவுக்கு உண்மை யானதோ இஸ்ரேலைப் பற்றிய வரலாறு அந்தளவுக்கு பொய் யானது. ஆனால் என்ன கொடுமை பார்த்தீர்களா? வரலாற்று உண்மையை புராணக் கதையாக்கி விட்டு பச்சைப்பொய்யை உண்மை என மெச்சுகிறார்கள். மத்திய ஆசியாவின் நிலையும் இதுதான்! கதையும் இதுதான். இதனை மறுக்கவும் முடியாது, மாற்றவும் முடியாது.

### ஃபலஸ்தீன் மற்றும் இஸ்ரேலின் வரைபடங்கள்!

மத்திய ஆசியாவின் வரைபடமும காட்சியும் சட்டென்று மாறி விட வில்லை, சிறிது சிறிதாகத்தான் மாறின. தொடக்கத்திலும்




1917
Haifa
Tel Aviv
Gaza
Ramallah
Jerusalem
Bethlehem
PALESTINE
1946
Haifa
Tel Aviv
Gaza
Ramallah
Jerusalem
Bethlehem
PALESTINE
U.N. Partition
Plan 1947
Haifa
Tel Aviv
Gaza
Ramallah
Jerusalem
Bethlehem
1948-1949
Haifa
Tel Aviv
Gaza
Ramallah
Jerusalem
Bethlehem
1967
Haifa
Tel Aviv
Gaza
Ramallah
Jerusalem
Bethlehem
Present
Haifa
Tel Aviv
Gaza
Ramallah
Jerusalem
Bethlehem

மௌனமாகத் தான் உலகம் இதனை பார்த்துக் கொண்டிருந்தது, இப்போதும் பார்த்துக் கொண்டிருக்கின்றது, என்னவோ இதில் எல்லோருக்கும் விருப்பம் இருப்பதைப் போல. இல்லை யென்றால் இவ்வளவு பெரிய மாற்றத்தை காதைக் குடைந்த வாறே பார்த்துக் கொண்டிருப்பார்களா? ஒரே பந்தை அதே சுவரில் திரும்ப திரும்ப அடிப்பதைப் போல, ஃபலஸ்தீனம் பற்றிய தீர் மானங்களை சளைக்காமல் தாக்கல் செய்துகொண்டே இருக் குமா, ஐ.நா?

இஸ்ரேல் உருவானது நம்பமுடியாத யதார்த்தமாக இருப் பதைப் போன்றே ஃபலஸ்தீனின் முடிவும் நம்பமுடியாத உண்மையாகத்தான் இருக்கப் போகின்றது. ‘அதன்’ விரிவையும் ‘இதன்’ சுருக்கத்தையும் விளக்கும் படத்தைப் பாருங்கள்.


1946 இல் ஃபலஸ்தீனம் எப்படி இருந்தது என்பதை முதலாவது படம் காட்டுகின்றது. அதில் யூதர்களின் நிலப்பரப்பு எவ்வளவு என்பதையும் பாருங்கள். தேடித்தான் அதனைப் பார்க்கவேண்டி யிருக்கும். அடுத்த ஆண்டு ஐ.நா ஃபலஸ்தீனத்தையும் இஸ்ரே லையும் தனித்தனியாக பிரித்து அளித்ததை பாருங்கள். வரை படமே மாறிப்போய் விட்டிருக்கின்றது. ஃபலஸ்தீனத்தை விட பெரிதாக தெரிகின்றது, இஸ்ரேல். யூதர்களின் வாழிடங்கள் எதி லிருந்து எதுவரை பரவி விட்டிருக்கின்றன? அதுவும் திடுதிப் பென. ஐ.நா, என்ன நினைத்து, சிறுபான்மை யூதர்களுக்கு இவ்வளவு பெரிய நாட்டைக் கொடுத்ததோ? அந்த ‘நினைப்பில்’ என்னென்ன இருந்தனவோ? அதன்பின் எவ்வளவு வேகவேக மாக இஸ்ரேல் வளருகின்றது, பாருங்கள். 1967 இல் பார்த்தால் இஸ்ரேல் மட்டும்தான் தெரிகின்றது. ஃபலஸ்தீனம் அதற்குள் ‘கரைந்து’ போய் கிடக்கின்றது. நான்காவது படம் 2012 ஆண்டின் படம். ஃபலஸ்தீனம் காணாமலேயே போய்விட்டது. வரை படத்தில் அதன் பெயரை எழுதக் கூட இடமில்லை. ஆக, 1947 ல் ஃபலஸ்தீனம் இருந்த இடத்தில் இன்று இஸ்ரேல் இருக்கின் றது.


இப்போது இரண்டாவது படத்தைப் பாருங்கள். ஃபலஸ்தீனர் களின் நிலங்களை படிப்படியாக இஸ்ரவேலர்கள் பிடுங்கிய கதையை, அங்கெல்லாம் யூதக் குடியிருப்புகளை அமைத்த

கதையை படம் சொல்கின்றது. இஸ்ரேலியப் பெருங்கடலில் ஆங்காங்கே தட்டுப் படுகின்ற சிறுசிறு தீவுகளைப் போன்று ஃபலஸ்தீனர்களின் பகுதிகள் காட்சியளிப்பதைக் காணலாம். இந்த தீவுகளைக் கூட விட்டுவைக்க மனமில்லை, இஸ்ரேலுக்கு. ஃபலஸ்தீனர்களின் பழைய வரைபடத்தை தனது புதிய வரைபடமாக காட்டத் துடிக்கின்றது, இஸ்ரேல். இப்படியாக இஸ்ரேல் பெருத்து பெருத்து 'அகன்ற இஸ்ரேலாக' மாறிக் கொண்டுள்ளது. ஃபலஸ்தீனத்தை இல்லாதொழிக்கவேண்டும் என்கின்ற அதன் கனவும் குறிக்கோளும் நிறைவேறிக்கொண்டே போகின்றது. அகன்ற ஃபலஸ்தீனம் காணாமல் போய்விட்டது. வாழ்வதற்கே இடமில்லாமல் அவர்கள் போராடிக் கொண்டுள்ளார்கள்.

## பெருகும் யூதக்குடிகளும் கருகும் ஃபலஸ்தீனர்களும்

இது ஃபலஸ்தீனர்களிடம் இருந்து பிடுங்கப்பட்ட நிலங்களைப் பற்றிய தகவல். இதுவன்றி இப்பகுதியில் மளமளவென பெருகும் யூதக் குடிகளைப் பற்றியும் நாம் தெரிந்தாகவேண்டும். நினைத்தே பார்க்க முடியாத விதத்தில் இருக்கின்றது அவர்களது வளர்ச்சி. இத்தனை யூதர்கள் எங்கிருந்து வந்து குடியேறினார்கள் என்று உலகமே வியந்துபோய் நிற்கின்றது.






*1845இல் அங்கே மொத்தமே 12 ஆயிரம் யூதர்கள் தான் இருந் தார்கள். 1881 வரை அவர்களது எண்ணிக்கை 25 ஆயிரமாகத்தான் இருந்தது. 1914 இல் யூதர்களின் எண்ணிக்கை, 80 ஆயிரம். அதற்கடுத்த வருடங்களில் இப்படித் தான் என்றில்லாமல் எண் ணிக்கை பெருத்துக்கொண்டே போனது. 1936 இல் பார்த்தால் மொத்தம் நாலரை லட்சம் பேர் இருந்தார்கள். ஆயுதங்களும் வைத்திருந்தார்கள். அதைக்கண்ட பிரிட்டிஷார் முதன்முதலில் தனிநாடு தருவதாகவும் அரபுக்களின் நிலங்களில் 40 சதவிகித நிலங்களைத் தருவதாகவும் 1938 இல் வாக்களித்தார்கள். அதன் பின் வெளியிலிருந்து அங்கே வந்து யூதர்கள் குடியேறத் தொடங் கினார்கள். 1947 இல் ஃபலஸ்தீனை விட்டு வெளியேறுவதாக பிரிட்டிஷார் முடிவெடுத்த போது மறுபடியும் ஒருமுறை ஃபலஸ்தீனம் துண்டாடப்பட்டது.*

*இப்போது மொத்தம் மூன்று துண்டுகள். 1947, நவம்பர் 29 ஆம் நாள் ஐ.நா. சபை அறிவித்த தீர்வின்படி 4500 சதுர மைல் பரப் பளவுள்ள பகுதி அரபுகளுக்குரியது. ஃபலஸ்தீனர்களின் உரிமை மறுபடியும் பிடுங்கப் பட்டது. அவர்களைக் காட்டிலும் (5338 சதுர மைல்) அதிகமாக யூதர்களுக்கு வழங்கப்பட்டது. அவர்க ளுக்கு தனி நாடும் அறிவிக்கப் பட்டது. பைத்துல் முகத்தஸ் புனிதப்*

பள்ளியும் அதைச் சுற்றியுள்ள 289 சதுர மைல் பரப்பளவுள்ள பகுதியும் ஐ.நா.வின் கட்டுப்பாட்டில் இருக்கும் என அறிவிக்கப்பட்டது. பிறகு யாருக்கும் சொல்லாமல் தன் பகுதியை இஸ்ரேலிடமே ஒப்படைத்து விட்டது, ஐ.நா. பச்சைத்துரோகம், ஏமாற்று.

1949 மே 11ம் நாள் ஐ.நா. சபையில் உறுப்பினராக அங்கீகாரம் பெற்றது, இஸ்ரேல். அதற்கு ஓராண்டு முன்னர்தான் அது தனிநாடாக அறிவிக்கப் பட்டபோது அதன் பரப்பளவு, 5338 சதுர மைல்கள். அதுபோன்றே உதயமான போது, அதன் மக்கள் தொகை 5 லட்சம். அவர்களைக் காட்டிலும் ஆறாயிரம் அரபுக்கள் அதிகமாக இருந்தார்கள். ஆனால், இன்று யூதர்களின் எண்ணிக்கை 57 லட்சம். அரபுக்களின் எண்ணிக்கையோ 25 லட்சம்.

சோவியத் யூனியன், இன்னபிற நாடுகளில் இருந்து வந்த யூதர்களின் எண்ணிக்கை இது. அமெரிக்காவிலிருந்தும் (52 லட்சம்) ஐரோப்பாவிலிருந்தும் (15 லட்சம்) வந்து சேரவேண்டிய யூதர்களின் எண்ணிக்கை தனி. தாறுமாறாக அங்கு மக்கள்தொகை கூடிக்கொண்டே போகின்றது.

மேற்குக்கரை பகுதி மீதுதான் இப்போது இஸ்ரேலின் பார்வை. அங்கு தான் நிலங்கள் கண்களை உறுத்துகின்றன. புதுப்புது யூதக் குடியிருப்புகள் அங்கு உருவாகிக்கொண்டே இருக்கின்றன. அண்மையில் காஸா போர் முடிந்தபிறகு அங்கு 4000 குடியிருப்புகளை ஏற்படுத்த உள்ளதாக இஸ்ரேல் அரசு அறிவித்துள்ளது.

விரிவாக்க முயற்சிகளாலும் நிலங்களை அபகரிப்பதாலும் மேற்குக் கரையின் நிலை படுமோசமாகிவிட்டது. அங்கும் மூன்றிலொரு பங்கு யூதர்கள் குடியிருப்பதாக சொல்லப்படுகின்றது. இப்படியே போனால் ஒரு கட்டத்தில் அரபுக்களை விட அங்கு, யூதர்கள் அதிகமாகி விடுவார்கள். ஃபலஸ்தீன அத்தாரிட்டி அரசு வெறுமனே கைகளைப் பிசைந்தவாறு வேடிக்கை பார்க்க வேண்டியிருக்கும்.

கீழே கொடுக்கப்பட்டுள்ள பட்டியலை பார்த்து பங்கீட்டின் போது என்ன நிலைமை? இப்போது என்ன நிலைமை? என்பதை துல்லியமாக விளங்கிக் கொள்ளலாம்.

**பிரிக்கப்படாத ஃபலஸ்தீனத்தில் அரபு-யூத மக்கள்தொகை**

| *ஆண்டு* | *யூதர்கள்* | *அரபுக்கள்* | *மொத்தம்* |
|---|---|---|---|
| *1800* | *6,700* | *2,68,000* | *2,74,700* |
| *1880* | *24,000* | *5,25,000* | *5,49,000* |
| *1915* | *87,000* | *5,90,000* | *6,77,500* |
| *1931* | *1,74,000* | *8,37,000* | *10,11,000* |
| *1936* | *4,00,000* | *8,00,000* | *12,00,000* |
| *1947* | *6,30,000* | *13,10,000* | *19,40,000* |

1947 ம் ஆண்டு ஃபலஸ்தீனத்தையும் இஸ்ரேலையும் தனித் தனியே பிரித்து இரண்டு நாடுகளை ஐ.நா அறிவித்தபோது அளிக்கப்பட்ட பகுதிகள் அவர்கள் மக்கள் தொகைக்கு ஏற்பத் தான் இருந்ததா, என்பதை இந்தப் பட்டியல் மூலம் அறிந்து கொள்ளலாம்.

ஃபலஸ்தீனம் பிரிக்கப்பட்ட பிறகு, அரபுக்கள் மற்றும் யூதர்க ளின் மக்கள் தொகை எந்தளவுக்கு விநோதமான வேறுபாட் டோடு அதிகரித்தது என்பதையும் அறிந்துகொள்ள வேண்டும். உலகம் அதனை கவனிக்கவே இல்லை. அப்பட்டியலை கீழே காணலாம். இஸ்ரேலின் பெருகும் மக்கள் தொகை இதுவே.

**இஸ்ரேலின் மக்கள் தொகை**

| *ஆண்டு* | *யூதர்கள்* | *அரபுக்கள்* | *மொத்தம்* |
|---|---|---|---|
| *1949* | *10,13,900* | *1,59,100* | *11,73,000* |
| *1967* | *23,83,600* | *3,92,700* | *27,76,300* |
| *1973* | *28,45,000* | *4,93,200* | *33,38,200* |
| *1983* | *34,12,500* | *7,06,100* | *41,18,600* |
| *1990* | *39,46,700* | *8,75,000* | *48,21,700* |
| *1995* | *45,22,300* | *10,04,900* | *55,27,200* |
| *2000* | *49,55,400* | *11,88,700* | *61,44,100* |
| *2006* | *51,37,800* | *14,39,700* | *66,52,896* |

ஆரம்பத்தில் தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்து பிறகு இஸ்ரேலிடம் ஐ.நா. ஒப்படைத்துவிட்ட புனித ஜெருஸலேம் நகரின் மக்கள் தொகையும் இதேபோன்று தாறுமாறாகத்தான் இருக்கின்றது. மேற்கு ஜெருஸலேம் நகரை ஃபலஸ்தீனர்களுக்கு உரியதாக ஐ.நா அறிவித்திருந்தது. இஸ்ரேலோ அதனை தனது தலைநகராக ஆக்கும் முயற்சியில் உள்ளது. இப்படி, மக்கள் தொகை தாறுமாறாக சீர்கெட்டு யூதர்களே எங்கும் நிறைந்திருக்கும் போது ஃபலஸ்தீனால் எப்படி சொந்தம் கொண்டாட முடியும்? தன் நாட்டின் தலைநகராக எப்படி அதனை ஆக்கமுடியும்? இது ஒரு மிகப்பெரிய கேள்வி. ஜெருஸலேம் நகரின் மக்கள் தொகையை கீழே காணலாம்.

*<u>ஜெருஸலேம் நகரின் மக்கள் தொகை</u>*

| ஆண்டு | யூதர்கள் | அரபுக்கள் | மொத்தம் |
|---|---|---|---|
| 1860 | 6,000 | 6,000 | 12,000 |
| 1892 | 26,000 | 16,000 | 42,000 |
| 1922 | 34,000 | 29,000 | 63,000 |
| 1942 | 86,000 | 54,000 | 1,40,000 |
| 1948 | 99,830 | 65,170 | 1,65,000 |
| 1967(சூலை) | 2,00,032 | 65,968 | 2,66,000 |
| 1995 | 4,17,000 | 1,74,400 | 5,91,400 |
| 2000 | 4,37,240 | 2,20,260 | 6,57,500 |

இதேபோன்ற தாறுமாறான மக்கள் விகிதாச்சாரம் மேற்குக்கரையிலும் எகிறிக் கொண்டுள்ளது. ஃபலஸ்தீனர்கள்தாம் அங்கு பெரும்பான்மையாக இருக்கிறார்கள். 2006 வரை அவர்களது எண்ணிக்கை 24 லட்சத்து 92 ஆயிரம். யூதர்களோ இரண்டு லட்சத்து 55 ஆயிரத்து 600. இந்த விகிதாச்சாரம் இப்போது மாறி விட்டது. காரணம், மேற்குக்கரையைவிட்டு ஹமாஸை அகற்றிய பிறகு எத்தனையோ ஃபலஸ்தீன குடியிருப்பு பகுதிகள் காலி செய்யப்பட்டுவிட்டன. எத்தனை புதிய யூதக்குடியிருப்புகள் உருவாக்கப் பட்டு விட்டன. இன்றைக்கு புதிய யூத குடியிருப்பு

கள் பெரும்பாலும் மேற்குக் கரையில் தாம் உருவாக்கப்பட்டு வருகின்றன. புதுசு புதுசாக வீடு கட்டும் திட்டங்களை இஸ்ரேல் அறிவித்து வருகின்றது.

ஃபலஸ்தீனத்தில் யூதக்குடியிருப்புகள் கட்டப்படாத ஒரே இடம் ஹமாஸ் ஆட்சியின் கீழிருக்கும் காஸா பகுதிதான். அதுவும் ஒரு காலத்தில் இஸ்ரேலின் ஆதிக்கத்தின் கீழ்தான் இருந்தது. ஏனோ தெரியவில்லை அங்கே குடியிருப்புகளை இஸ்ரேல் அமைக்கவில்லை. ஃபலஸ்தீனர்கள் நெருக்கமாக வாழும் பகுதியாக அது இருப்பதால் அடிக்கடி சச்சரவுகள் ஏற்படும் என இஸ்ரேல் கருதியிருக்கலாம். அல்லது எதிர்காலத்தில் ஃபலஸ்தீன் நாடு உருவாக்கப்பட்டே ஆகவேண்டும் என நிர்ப்பந்திக்கப்பட்டால் காஸா பகுதியோடு முடித்துக்கொள்ளலாம் என்றுகூட அது நினைத்திருக்கலாம்.

மேற்கு ஜெருஸலேத்தைப் போலவே மேற்குக்கரை பகுதியையும் சிறுகச் சிறுக இஸ்ரேல் கபளீகரம் செய்துகொண்டே போகின்றது. அதை உலகம் வெறுமனே பார்த்துக்கொண்டே இருக்கின்றது. இக்கட்டுரையில் உள்ள கணக்கீடுகளும் பட்டியல்களும் பழையவை. விக்கிபீடியா மற்றும் இணையத்திலிருந்து எடுக்கப்பட்டவை. உண்மையிலேயே இன்றைய நிலைமையை துல்லியமாக தீட்டினால் அந்த வரைபடமும் பட்டியலும் இதைவிடக் கொடூரமாகத்தான் இருக்கும். புரிந்து கொள்ளத்தான் வேண்டும், புரிய வைக்க முடியாது.


ஃபலஸ்தீனத்தின் நிலத்தை இஸ்ரேல் மட்டும் அபகரிக்கவில்லை, அண்டை நாடுகளும் அபகரித்துள்ளன. காஸா பகுதியின் ஒருசில பகுதிகளை எகிப்து அபகரித்துள்ளது. ஜோர்டான், மேற்குக்கரைப் பகுதியின் சில பகுதிகளை அபகரித்துள்ளது. ஆக அனைவரும் அத்துமீறி, ஃபலஸ்தீனத்தை பங்கு போட்டுள்ளார்கள். பகிரங்கமாக சிலரும் ரகசியமாக சிலரும்.

ஃபலஸ்தீனத்தில் இதுவரை தோன்றிய தலைவர்கள் அதிகாரத்திற்கு ஆசைப்பட்டு மக்களை ஏமாற்றியுள்ளார்கள். சூழ்நிலைகளை அனுசரித்துக் கொண்டு பிரச்சனையை சிக்கலாக்கி விட்டிருக்கின்றார்கள். ஹமாஸ் போன்ற இஸ்லாமிய இயக்கங்கள் போராட்டக் களத்தில் இல்லை என்றால், இன்திஃபாழா போன்ற

மக்கள் எழுச்சியை அவை உருவாக்கவில்லை என்றால், ஃபலஸ் தீனர்களின் நிலங்களையும் உரிமைகளையும் மீட்பதற்கான போராட்டங்களை நடத்தவில்லை என்றால், எப்போதோ ஃபலஸ்தீனத்தை இஸ்ரேல் கபளீகரம் செய்திருக்கும். அமெரிக் காவும் ஐரோப்பிய நாடுகளும் இதைத்தான் விரும்புகின்றன.

ஆனால், இன்று ஹமாஸின் காரணத்தினால் இஸ்ரேலின் அமைதி கேள்விக்குறியாகி விட்டிருக்கின்றது. ஃபலஸ்தீனப் பிரச்சனை தீராதவரை -இஸ்ரேல் உட்பட- அப்பகுதியில் அமைதி நிலவாது என்பதை உலகம் உணர்ந்துள்ளது.

தமது உயிரை உள்ளங்கைகளில் ஏந்திக்கொண்டு வருவோ ருக்கு முன்னால் இஸ்ரேலின் வலிமையும் ராணுவமும் ஒன் றுமே கிடையாது என்பதை உலகம் தனது கண்களால் பார்த்து விட்டது. எண்ணிக்கையில் கொஞ்சமாக இருக்கும் இஸ்லா மியப் பற்றாளர்கள் இஸ்ரேலை, ‘என்ன?’ என்று கேட்டிருக்கின் றார்கள். ஹமாஸால் உருவாகியுள்ள எழுச்சியும் போராட்டமும் ஃபலஸ்தீன மக்களுக்கான எதிர்காலத்தை கண்டிப்பாக வெளிச்ச மாக்கும்.



# ஃபலஸ்தீனத்தில் தொடரும் மனிதஉரிமை மீறல்கள்!

*தங்கள் ‘குல’ வழக்கப்படி யூதர்கள் இறைவனின் வசனங்களை நிராகரித்து வந்தார்கள், இறைத்தூதர்களை கொலை செய்து வந்தார்கள். இதன் ஒரு பகுதியாக இறைத்தூதர் அண்ணல் மஸீஹ் அலைஹிஸ் ஸலாம் அவர்களை நம்பியேற்று பின்பற்ற முயற் சிக்காமல் கொலைசெய்து சிலுவையில் தொங்கவிட முயன் றார்கள். ஆனால் அவரது பிறப்பிற்கு முன்பே அவரைப் பற்றிய நற்செய்தியை அவரது அன்னைக்கு இறைவன் அளித்திருந்தான்.*

*‘அவரது பெயர் மர்யமின் குமாரன் மஸீஹ் என்பதாம். இம்மை யிலும் மறுமையிலும் புகழுக்குரியவராக, இறைநெருக்கம் மிக்க அடியார்களில் ஒருவராக இருப்பார் அவர். தாய்மடியில் இருக்கும்போதும் பருவத்தை அடைந்தபின்பும் அவர், மக்க ளோடு உரையாடுவார். சான்றோர்களின் கூட்டத்தில் ஒருவ ராகவும் இருப்பார்!’. (அல்குர்ஆன் 3:45,46)*

*மேலும், அல்லாஹ்வுடைய தூதரும் மர்யமின் மகனுமான ஈஸா மஸீஹை நாங்கள்தாம் கொன்றோம் என அவர்கள் கூறியதாலும் (அவர்களை நாம் சபித்தோம்). உண்மையில் அவர்கள் அவரைக் கொலை செய்யவுமில்லை; அவரைச் சிலு வையில் அறையவுமில்லை! மாறாக, அவருடைய நிலைமை அவர்களுக்குச் சந்தேகத்துக்குரியதாய் ஆக்கப் பட்டுவிட்டது. மேலும், எவர்கள் ஈஸா விஷயத்தில் கருத்து வேறுபாடு கொண் டார்களோ அவர்கள் இதுபற்றி சந்தேகத்திலே இருக்கின்றார்கள். யூகத்தைப் பின்பற்றுவதைத் தவிர இதுபற்றி வேறு எந்த அறிவும் அவர்களிடத்தில் இல்லை. நிச்சயமாக அவர்கள் அவரை மஸீஹை கொலை செய்யவேயில்லை. மாறாக, அல்லாஹ் அவரைத் தன் பக்கம் உயர்த்திக் கொண்டான். அல்லாஹ் வலிமை மிக்கவன், நுண்ணறிவாளன். (அல்குர்ஆன் 4:157,158)*

அவர்களது இயல்பை அல்லாஹ் விளக்குகிறான், பாருங்கள்.

*உண்மை என்னவெனில், அவர்களின் நிராகரிப்பின் காரணமாகவே அவர்களின் உள்ளங்கள்மீது அல்லாஹ் முத்திரை வைத்துவிட்டான். எனவே, அவர்கள் மிகக் குறைவாகவே நம்பிக்கை கொள்கின்றனர். (அல்குர்ஆன் 4:155)*

அவர்களது நிலை எந்தளவுக்கு கேவலமாக இருக்கின்றது என்பதையும் பாருங்கள்.

*அவர்களால் உங்களுக்குத் தீங்கு எதையும் இழைத்துவிட முடியாது; சிறுசிறு தொல்லைகள் தருவதைத் தவிர! ஆயினும் உங்களோடு போரிட்டால் அவர்கள் புறங்காட்டி ஓடுவார்கள். பிறகு எங்கிருந்தும் அவர்களுக்கு எந்த உதவியும் கிடைக்காது. அவர்கள் எங்கு காணப் படினும், அவர்கள் மீது இழிவு விதிக்கப் பட்டிருக்கும். அல்லாஹ்வின் பொறுப்பில் அல்லது மனிதர்களின் பொறுப்பில் எங்கேனும் அவர்களுக்கு பாதுகாப்புக் கிட்டினாலே தவிர! மேலும் அவர்கள் அல்லாஹ்வின் சினத்திற்கும் ஆளாகிவிட்டனர். இழிவும் வீழ்ச்சியும் அவர்கள் மீது சுமத்தப் பட்டுவிட்டன. இவற்றிற்கெல்லாம் காரணம் அல்லாஹ்வின் வசனங்களை அவர்கள் நிராகரித்து வந்ததும் அவனுடைய தூதர்களை நியாயமின்றிக் கொலை செய்ததும்தான்; அவர்கள் (இறைவனுக்கு) மாறுசெய்ததாலும் வரம்புமீறிச் செயல்பட்டதாலும் ஏற்பட்ட விளைவுகளாகும் இவை! (அல்குர்ஆன் 3:111,112)*

இறைவனைத் தவிர உண்மையை அழுத்தமாக யார் பேசமுடியும்? யூதர்களின் வரலாறு இக்கேவலங்களால் நிரம்பி நாறுகின்றது.

*ஈரச்சாணியை சுவற்றில் அப்புவதைப் போல, அவர்கள்மீது அவமானம் அப்பப்படுகின்றது! மதிப்பை வழங்கும் பாதையை தேர்வு செய்யாமல் இழிவிற்கான பாதையையே அவர்கள் தேர்வு செய்தார்கள். எனவே எக்கச்சக்கமான இழிவு அவர்கள்மீது அப்பப்பட்டு விட்டது. (ததப்புருல் குர்ஆன்/ மௌலானா அமீன் அஹ்ஸன் இஸ்லாஹி)*

*மஸீஹ் அலைஹிஸ் ஸலாம் அவர்களை யூதர்கள் கொல்ல முயற்சித்தார்கள். சிலுவையில் அறைந்ததாக ஒரு கதையைப்*

பரப்பினார்கள். பிற்காலத்தில் கிறித்துவர்கள், யூதர்களைக் காட்டிலும் அரசியல் மேலாண்மை பெற்றபோது அவர்களை வெறுத்தார்கள். ஜென்மப் பகைவர்களாக மாறினார்கள். யூதர் களை எங்குமே வாழ விடவில்லை. உலகில் எங்கு போனாலும் அவர்களை துரத்திக்கொண்டே இருந்தார்கள்.

அவர்கள் எங்கு போயினும் இழிவையே சந்திக்கவேண்டி யிருக்கும்! அவ்வளவு ஏன், தங்களுடைய மையத்தில்கூட இவர் கள் இழிவையே சந்திக்கின்றார்கள். அவர்களுக்கு கண்ணியம் தருகின்ற ஓரிடம்கூட உலகத்தில் கிடையாது! தமது சொந்தக் கால் களால் இவர்களால் ஓரிடத்தில் கூட நிற்கவோ நிலைகொள் ளவோ முடிவதில்லை! (ததப்புருல் குர்ஆன்/ மௌலானா அமீன் அஹ்ஸன் இஸ்லாஹி)

ஒருவேளை இவர்கள் எங்காவது நிலைகொள்கின்றார்கள் என்றாலும் அது இவர்களது சொந்த முயற்சியாலோ இவர்களுக் கென்று உள்ள சொந்த கண்ணியத்தாலோ அல்ல! மாறாக, இறைப்பற்றாளர்களோடு ஏதாவது ஒப்பந்தம் செய்திருப்பார்கள். அதன்மூலமாக கொஞ்சம் நிம்மதியை அனுபவிக்கமுடியும். அல்லது தங்களுக்கு அருகில் வசிக்கின்ற சமூகங்களோடு ஏதா வது ஒப்பந்தத்தை செய்திருப்பார்கள். அது இவர்களைக் காப்பாற் றிக் கொண்டிருக்கும். அதுவும் குறுகிய காலத்திற்கான தற்காலிக மான ஒப்பந்தங்களாகத்தான் இருக்கும். அண்ணல் நபிகளார் ஸல் லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களும் தொடக்கத்தில் பல்வேறு குலத்தார்களோடு ஒப்பந்தங்களை செய்திருந்தார்கள். பிறகு தொடர்ந்து வாக்குமீறிக் கொண்டே சென்றதாலும் ஒப்பந் தங்களை மதிக்காததாலும் அவை முறிந்துபோயின! அல்லது இடைவிடாத குற்றங்களின் காரணத்தினால் கொலை செய்யப் பட்டார்கள் அல்லது நாடுகடத்தப் பட்டார்கள். அதேபோன்று மற்றமற்ற சமுதாயங்களோடு அவர்கள் செய்திருந்த ஒப்பந்தங் களும் நாளடைவில் அச்சமுதாயங்கள் இஸ்லாமை ஏற்றுக் கொண்டதால் செல்லாது போயின! வேரே இல்லாத மரம் கொழுக் கொம்பல் சாய்ந்து எத்தனைநாள் காலம் தள்ளும்? இன்று யூதர்களுக்காக 'இஸ்ரேல்' (இஸ்ராயீல்) என்றொரு தேசம் 'சொந்தமாக' இருக்கின்றது. அதுவும் இந்த 'இலக்கணங்களுக்கு'

உட்பட்டே இருக்கின்றதே ஒழிய, தனது சொந்தக்கால்களில் நிற்க வில்லை.

*அப்புறம், அவர்களுக்கு எங்கிருந்தும் உதவி கிடைக்காது. அவர்கள் எங்கு போனாலும் இழிவே அவர்கள்மீது அப்பப் பட்டிருக்கும், அல்லாஹ்வோடு அல்லது மனிதர்களோடு ஏதே னும் உடன்படிக்கை செய்திருந்தால் கொஞ்சம் நிம்மதிகிட்டும் (அல்குர்ஆன் 3:112)*

என்பதற்கேற்ப, அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய இரு நாடுகளின் தோள்களில்தான் நின்று கொண்டிருக்கின்றது. வேறொருவன் தோளில் தொங்கிக்கொண்டிருப்பவன் நிற்பதும் ஒன்றுதான் நிற்காமல் கீழே கிடப்பதும் ஒன்றுதான்! (ததப்புருல் குர்ஆன்/ மௌலானா அமீன் அஹ்ஸன் இஸ்லாஹி)

யூதர்களும் தங்கள் சதிவேலைகளை விட்டுவிடவில்லை. அவர்களை கிறித்துவர்கள் முற்றுகையிட்டார்கள், இழிவுபடுத்தி னார்கள், அவமானப் படுத்தினார்கள். எல்லாவகையிலும் நெருக் கடி கொடுத்தார்கள். அவர்கள் எங்காவது நிம்மதியாக வாழ்ந்தார் கள் என்றால் அது, முஸ்லிம்களின் ஆட்சியில்தான். உலக வர லாற்றிலேயே முஸ்லிம்கள் தாம் யூதர்களுக்கு அபயம் கொடுத் துள்ளார்கள். அதுவும் ஒருமுறை இரண்டுமுறை அல்ல, பலப் பல தடவைகள். யூதர்களோடு எச்சரிக்கையாக இருக்கும்படி இறைவன் தன் திருமறையில் முன்கூட்டியே சொல்லியுள்ளான்.

*'திண்ணமாக யூதர்களும், இணைவைப்பவர்களும் மற்ற அனைத்து மக்களையும் விட இறை நம்பிக்கையாளர்களுக்குக் கடும் பகைவர்களாக இருப்பதை நீங்கள் காணலாம். நிச்சயமாக நாங்கள் கிறிஸ்தவர்களே என்பவர்கள்தாம் மற்ற அனைவரை யும்விட இறை நம்பிக்கையாளர்களுடன் நேசம் கொண்டிருப் பதை நீர் காண்பீர்'. (அல்குர்ஆன் 5:82)*

ஆனால் முஸ்லிம் ஆட்சியாளர்கள் இறைவனின் எச்சரிக்கையை பொருட்படுத்தவில்லை. யூதர்களின் பிறவிப்பண்புகளையும் சதி கார மூளையையும் அவர்கள் கவனத்தில் கொள்ளவே இல்லை.

பின்னொரு காலத்தில் தங்கள் சதித்திட்டத்தின் ஒருபகுதியாக யூதர்களில் பலர் கிறித்துவ மதத்தை தழுவத் தொடங்கினர்.

அவர்கள் பொதுவாக கடைப்பிடிக்கும் 'சிறப்புப்பழக்கம்' இது. நேரம் பார்த்து, சமயம் பார்த்து, தங்களுக்குத் தோதாக சமயக் கோட்பாடுகளையும் சடங்குகளையும் நெறிமுறைகளையும் திரித்துவிடுவார்கள்.

கிறித்துவ குருமார்கள் வீடுகளிலும் முஸ்லிம் அறிஞர்கள் இல்லங்களிலும் தங்கள் பெண்களை நுழைத்தார்கள். எப்படியெல்லாம் முடியுமோ அப்படியெல்லாம் தங்கள் சதிவேலைகளை நிறைவேற்றினார்கள். கடைசியில் முஸ்லிம்களின் கடும் விரோதிகளாக கிறித்துவர்களை மாற்றியே விட்டார்கள். முஸ்லிம்களுக்கு எதிராக நீண்ட நெடுங்காலம் சிலுவைப்போர்களை நடத்த வைத்தார்கள்.

கிறித்துவர்களின் நம்பிக்கையை அவர்கள் சம்பாதித்துக் கொண்டார்கள். அதேசமயம், முஸ்லிம்களின் வெறுப்பையும் சம்பாதிக்காமல் புத்திசாலித்தனமாக நடந்துகொண்டார்கள்.

பிற்காலத்தில் ஜெர்மனியின் *ஹிட்லர்*, யூதர்களின் சதிகளையும் சூழ்ச்சிகளையும் உணர்ந்து அவர்களை கருவறுக்கத் தொடங்கிய போது, ஹிட்லருக்கு எதிராக *ஹோலோகோஸ்ட்* கதைகளையும் கேஸ் சேம்பர் கதைகளையும் உலகம் முழுக்க பரப்பினார்கள். யூதர்களை கொத்து கொத்தாக *ஹிட்லர்*கொன்றுகுவித்ததாக கதை கட்டினார்கள்.

மற்ற மற்ற ஆட்சியாளர்களின் நன்மதிப்பை ஏற்கனவே பெற்றிருந்தார்கள். இக்கதைகள் நன்மதிப்பை மேலும் பெற்றுத் தந்தன. ஹிட்லருக்கு எதிரான சக்திகள் கிறித்துவர்களை குற்றவாளிக் கூண்டில் நிறுத்தின. மனித உரிமைகளை மீறியதாகவும் மனிதத்தன்மைக்கு அப்பாற் பட்டு நடந்துகொண்டதாகவும் குற்றம் சுமத்தின.

இக்குற்றச்சாட்டுகளின் உண்மைநிலையை கிறித்துவர்கள் அறிந்திருந்தார்கள். யூதர்களின் சதிகார மூளையை நன்கு உணர்ந்திருந்தார்கள். ஆகவே ஒரேகல்லில் இரண்டு மாங்காய்களை அவர்கள் அடித்தார்கள். ஒருபக்கம் யூதர்களின் நன்மதிப்பையும் பெற்றுக் கொண்டு மறுபக்கம் தமது ஆளான ஹிட்லரையும் குறைகூறினார்கள். இப்படியாக யூதர்களின் கட்டுக்கதைகளை

மறுக்காமல் அவையாவும் உண்மையே என்பதைப் போன்று நடந்துகொண்டார்கள். யூதர்களின் சதிகளில் இருந்தும் சூழ்ச்சி களில் இருந்தும் தங்களைக் காப்பற்றிக் கொள்ளவேண்டும் என்ற காரணத்தால்.

எத்தனை நாள்களுக்குத்தான் இவர்களுடைய தொல்லைகளை சகித்துக் கொண்டே இருப்பது? எங்காவது கண்காணாத தேசத் திற்கு இவர்களை விரட்டி விட்டால்தான் என்ன? என்று கிறித்து வர்கள் யோசிக்கலானார்கள். இன்னொரு பக்கம் சிலுவைப் போர்களின் தோல்வி அவர்களது மனதை உறுத்திக்கொண்டே இருந்தது. எப்படியாவது முஸ்லிம்களை பழிதீர்க்க வேண்டும் என கருவிக் கொண்டிருந்தார்கள். இரண்டையும் முடிச்சுப் போட்டு ஒரு வழி கண்டுபிடித்தார்கள். அதுதான் 'இஸ்ரேல்!'.

தங்கள் பரம எதிரிகளான முஸ்லிம்களின் நிம்மதியைக் குலைக் கும் விதத்தில் யூதர்களை கொண்டுவந்து அரபு நாடுகளுக்கு மத்தியில் குந்த வைத்தார்கள். வளைகுடாவுக்குள் ஒரு அரு வாளைச் செருகினார்கள். எதிரிக்கு எதிரி நண்பன் என்னும் பழ மொழிக்கு ஏற்ப தாங்கள் புனிதமாகக் கருதும் ஜெருஸலேம் நக ரையே யூதர்களின் புகலிடமாகவும் தேசமாகவும் ஆக்கினார்கள்.

முஸ்லிம்களையும் யூதர்களையும் முட்டவைத்து மோதி சிதற டிக்க யூதர்களைக் காட்டிலும் வியூகத்தோடு திட்டம் தீட்டினார் கள், கிறித்துவர்கள். இரு பிரிவினரையும் தூண்டிவிட்டார்கள், பின்னால் நின்று இயக்கினார்கள். ஒருவரை ஒருவர் தீர்த்துக் கட்டிவிடவில்லை என்ற போதிலும் சிலுவைப்போர்களை நடத்திய சிந்தனை, இப்போது சர்வ நிம்மதியை உணருகின்றது.

ஒருபக்கம் மனித குலத்திற்கு சேவை செய்யும் பணிகளில் தங் களை ஈடுபடுத்திக் கொள்கின்றார்கள், மறுபக்கம் யூதர்களைப் பயன்படுத்தி முஸ்லிம்களைக் கொன்று குவிக்கின்றார்கள். தங்கள் ஜென்மப் பகைவர்களின் சூழ்ச்சியைப் புரிந்துகொள்ளாத யூதர்களும் தங்களைப் போன்றே கிறித்துவர்களால் வஞ்சிக்கப் படும் முஸ்லிம்களை மேலும் துன்பத்தில் தள்ளுகின்றார்கள்.

ஆற்றலும் வல்லமையும் மிக்க இறைவனின் கோபத்தையும் சாபத்தையும் விரும்பி சம்பாதித்துக்கொண்ட யூத சமூகம்

இழிவையும் அவமானத்தையும் தங்கள் கழுத்துகளில் தொங்க விட்டவாறு, உலக மக்களின் அபிமானத்தையும் அபயத்தையும் பெற்றுக்கொண்டு சிலுவைப் போர்களை நடத்திய கிறித்துவர்க ளிடமிருந்து ஆயுதங்களையும் கருவிகளையும் வாங்கி, முஸ்லிம் களை கொன்றுகுவிக்கும் திருப் பணியை செய்துவருகின்றது. மனித உரிமைகள் மீறலில் இதுவரை உலகமே காணாத உதார ணங்களை ஃபலஸ்தீனத்தில் நிகழ்த்தி வருகின்றது.

சிலுவைப்போர்களின் நாயகர்களான கிறித்துவர்களின் துணை யோடும் ஒத்தழைப்போடும் இஸ்ரேல் நாட்டை உருவாக்கிய நாள்முதல் அவர்கள் மனித உரிமை மீறல்களை நடத்திவருகின் றார்கள் என்றபோதிலும் கடந்த ஜுலை மாதத்தில் அவர்கள் நடந்துகொண்ட முறை, உலகத்தையே அதிர்ச்சியில் உறைய வைத்துவிட்டது. ஆனால் அதற்கெல்லாம் யூதர்கள் மசிவதாக இல்லை.

ஐரோப்பிய நாடுகளோடு கைகோர்த்துக் கொண்டு, அமெரிக்கா வின் கையசைப்புகளுக்கு ஆடும் ஐ.நா.வை பக்கத்தில் நிறுத் திக்கொண்டு, இஸ்ரேல் நடத்திய மனித உரிமை மீறல்களை அதே ஐ.நா.வின் மனித உரிமைகளுக்கான கூட்டமைப்பு வெளி யிட்டுள்ளது.

அவ்வறிக்கையின்படி, 2014, ஆகஸ்ட் 26 ஆம் நாள் அமுலுக்கு வந்த போர் நிறுத்தம்வரை இஸ்ரேல் நடத்திய உரிமைமீறல்கள் 1967 ஆண்டுமுதல் அது செய்த அனைத்து படுகொலைகள், மனித உரிமை மீறல்களை எல்லாம் தூக்கிச் சாப்பிட்டு விட்டது. காஸா வின் அனைத்து பகுதிகள் மீதும் படு பயங்கர வான்வழித் தாக்கு தல்கள், குண்டுவீச்சுகள் நடைபெற்றன. கொத்து கொத்தாக மனிதர்கள் செத்துப்போனார்கள். நாட்டின் உட்கட்டமைப்பு சித றிப்போனதை எந்த உதாரணத்தின் மூலமும் விளக்க முடியாது. லட்சக்கணக்கான மக்கள் வீடுகளை இழந்தார்கள். வீடு, வாசல், குடிநீர், மின்சாரம், மருந்து, மாத்திரைகள், சிகிச்சை - எல்லா அடிப்படைத் தேவைகளையும் தொலைத்துவிட்டார்கள்.

ஃபலஸ்தீனத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை மட்டும், 2131. இவர்களில் 1473 பேர் பொதுமக்கள். ஆரம்பத்தில் எடுத்த கணக்கின்படி இவர்களில் 501 குழந்தைகளும் அடக்கம். கிட்டத்

தட்ட ஒரு லட்சத்து பத்தாயிரம் பேர் ஐ.நா.சபையின் 'அவசர அகதி முகாம்களில்' தங்கி இருக்கின்றார்கள். காஸாவை விட்டு விட்டு வேறு பகுதிகளுக்கோ வேறு நாடுகளுக்கோ போய்விட்ட வர்களின் எண்ணிக்கை இதில் அடங்காது. 18 ஆயிரம் பேர் வீடு களை இழந்துவிட்டார்கள். உட்கட்டமைப்பு சீர்குலைந்து போனதால் 4 லட்சத்து 50 ஆயிரம் பேர்களுக்கு குடிதண்ணீரோ பிற அத்தியாவசியப் பொருட்களோ கிடைக்கவில்லை. ஜுலை 9ம் தேதி இஸ்ரேல் நடத்திய ஒரு குண்டுவீச்சில் மின்சாரம் முற்றி லும் துண்டிக்கப் பட்டுவிட்டது. அதனை சரிசெய்ய தொடர்ந்து 18 மணிநேரம் பாடுபட்ட பிறகும் சரியாகவே இல்லை. காஸா வும் அதன் சுற்றுப்புறங்களும் இருளில் மூழ்கிக்கிடந்தன. குடி நீரை வழங்கவும் கழிவுநீரை அகற்றவும் முடியாமல் போனதால் 20 முதல் 30 சதவிகித மக்கள் அல்லது 4 லட்சத்து 50 ஆயிரம் மக்களுக்கு நல்ல தண்ணீர் கிடைக்கவில்லை.

போர்நிறுத்தம் அமுலுக்கு வந்தபின்புதான் வீடுகளை விட்டு விட்டு பாதுகாப்பான இடங்களில் தஞ்சம் புகுவோரின் எண்ணிக் கை குறைந்தது. ஆயினும் ஐ.நா சபையின் அகதிமுகாம்களுக்கு வருவோரின் எண்ணிக்கை கொஞ்சமும் குறையவில்லை. இதற்குப்பிறகும் குறைந்தபட்சம் ஒரு லட்சத்து பத்தாயிரம் மக்கள் வானத்துகூரையின் கீழ் வீதிகளில் அங்கும் இங்கும் தங்கி யிருக்கின்றார்கள்.




போரில் பாழடைந்து போன வற்றில் எஞ்சியவற்றை பாது காப்பதும் ஒரு பெரிய சவாலாக உருவெடுத்துள்ளது. கொள்ளை போவதிலிருந்து பாதுகாத்து வீட்டை மறுபடியும் மராமத்து செய்வது வீட்டு உரிமையாளர் களைப் பொருத்தவரை மிகப் பெரிய சுமை. காஸாவில் பெரும்பான்மையான மக்கள் தாங்கள் பிறந்த நிலத்தையும் பிறந்த வீட்டையும் இழந்து விட்டார்கள். ஃபலஸ்தீன் உள்

ளாட்சி நிர்வாகத்தின் தகவலின் படி 419 உற்பத்தி வளாகங்களும் தொழிற்பட்டறைகளும் நாசமாகிவிட்டன. இவற்றில் முற்றிலும் உருக்குலைந்து போனவை 128. ஒன்றிரண் டில் மட்டும் குறைந்த அளவு வேலை நடைபெறுகின்றது.

தனியார் தொழில்துறையோ படுமோசமாக சேதமடைந்துள்ளது. இஸ்ரேலிய தாக்குதலின்போது இவையனைத்தும் மூடிக்கிடந்தன. தாக்குதலின் போது விவசாயிகளும் வேளாண் பெருமக்களும் மீனவர்களும் கால்நடைகளை மேய்ப்பவர்களும் தங்கள் தொழில்களை விட்டுவிட்டு பாதுகாப்பான இடங்களில் தஞ்சம் புகுந்து கொண்டார்கள். விவசாயம், பாசனம், மீன்பிடிப்பு, ஆடு-மாடு பராமரிப்பு, உணவு சேமிப்புக் கிடங்குகள் என அனைத்தும் நிலைகுலைந்து போனது. 17 ஆயிரம் ஹெக்டேர் நிலம் சாகுபடி செய்யப்படாமல் முற்றிலும் பாழ்பட்டுப் போனது. 50 நாள்கள் கடலுக்கே போக முடியவில்லை. 6 கடல் மைல் சுற்றளவு தூரம் பயங்கர பந்தோபஸ்து செய்யப்பட்டிருந்தது. அதை மீறி கடலுக்குள் இறங்கிய மீனவர்கள் சுட்டுப் பொசுக்கப் பட்டார்கள் அல்லது கைது செய்யப்பட்டு சிறையில் தள்ளப் பட்டார்கள். ஏற்கனவே சீர்குலைந்து கிடக்கின்ற, பொருளாதாரத்தையும் நிதிநிலையையும் இந்த இழப்புகள் மேலும் நாசமாக்கி பாதாளத்தில் தள்ளிவிட்டிருக்கின்றன.

ஐ.நா.வின் மனித உரிமைப் பாதுகாப்பு கழகம் தருகின்ற தகவல்களின் படி 66 சதவிகித காஸா பகுதி மக்கள் இதற்கு முன்பிருந்தே ‘உணவுக்கான உதவித்தொகை’யைப் பெற்றுத்தான் வாழ்க்கை நடத்துகின்றார்கள். 72 சதவிகித மக்களோ பாதுகாப்பற்ற சுகாதாரமற்ற உணவு அல்லது உண்ண லாயக்கற்ற உணவைக் கொண்டுதான் வாழ்க்கை நடத்துகின்றார்கள்.

சுரங்கம் வழியாக எகிப்து நாட்டோடு நடைபெற்றுவந்த வியாபாரம் தடை செய்யப்பட்ட பிறகு, 2013 ஆண்டிலிருந்தே வேலையில்லாத திண்டாட்டம் கணக்கில் கொள்ளமுடியாதபடி அதிகரித்துவிட்டிருந்தது. 2013 ஆமாண்டின் மூன்றாவது காலிறுதியில் 28 சதவீதமும் 2014 ஆமாண்டின் இரண்டாம் காலிறுதியில் 45 சதவீதமும் அதிகரித்திருந்தது. 20 வயதுக்கும் 24 வயதுக்கும் இடைப்பட்ட இளைஞர்களில் 70 சதவீதம்பேர் காஸாவில் வேலையில்

லாமல் தவிக்கின்றார்கள்.

ஒரு போரால் ஏற்படுகின்ற பாதிப்புகளை இப்படிப்பட்ட புள்ளி விவரங்களால் விளக்கவேமுடியாது என்பதுதான் உண்மையாகும். போரினால், பொருளாதார பாதிப்புகள், உயிரிழப்புகள் மட்டும் ஏற்படுவதில்லை. உளவியல் பாதிப்புகளும் சிந்தனைக் குளறுபடிகளும் பெருமளவு உருவாகின்றன. அவற்றிற்கெல்லாம் என்ன தீர்வு? எப்படி தீர்வு? என்பதை அதுகுறித்து கட்டுரை எழுதுபவர்களாலோ வாசிப்பவர்களாலோ கண்டறியவே முடியாது.

இந்த போருக்குப்பிறகு, இஸ்ரேல் மற்றும் அதன் அடிவருடிகளான அரை-யூத எகிப்து ஆட்சியாளர்களால் பெருவழிப்பாதைகளும் போக்கு வரத்து தடங்களும் மூடப்பட்டுவிட்டால் இந்த விகிதாச்சாரம் பன்மடங்கு பெருகிவிடும் என்கின்ற பயம் நிலவுகின்றது. பொருளாதார நெருக்கடியை நோக்கி தள்ளுவதற்காக இத்தகைய நடவடிக்கைகள் கண்டிப்பாக எடுக்கப்படும். *'அகதிகள் புனர்வாழ்வு'* என்பது ஏறக்குறைய ஒட்டுமொத்த காஸா மக்களின் பிரச்சனையாக ஆகிவிட்டது.

*'திறந்தவெளி சிறைச்சாலையில் அகதிகளாக'* வாழும் ஒரு தேசத்தை எப்படித்தான் விவரிக்க முடியும்?

## உயிர்க்கொலை குறித்த இஸ்லாமிய வழிகாட்டுதல்!

உலகத்தில் அமைதியோடும் நிம்மதியோடும் வாழும் வழிமுறைகளை இஸ்லாம் கற்றுக்கொடுக்கின்றது. மனித உயிரை இஸ்லாம் கண்ணியப் படுத்தியுள்ளது. எக்காலத்திலும் அதற்கு இழுக்கு ஏற்படுத்தாதீர் என இஸ்லாம் போதிக்கின்றது.

பகைவரை சந்திக்கின்ற போர்க்களத்திலும் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று போதிக்கின்ற ஒரே மார்க்கம் இஸ்லாமாகத்தான் இருக்க முடியும். ஜிஹாதை இன்று மக்கள் பயங்கரவாதமாகக் கருதுகின்றார்கள். ஆனால் இஸ்லாம் கூறுகின்ற ஜிஹாதை நீங்கள் உற்றுக் கவனித்தால் அது *'அமைதி தரும் நிழலாக'* இருப்பதை உணரலாம். ஏனெனில் இஸ்லாம், ஜிஹாதை ஒரு வழிபாடாக கருதுகின்றது.

வழிபாடு என்பதால் அதற்கான அனைத்து நெறிமுறைகளும் துல்லியமாக வகுக்கப்பட்டுள்ளன, வழிகாட்டப்பட்டுள்ளன. இறைமறை குர்ஆனில் தெளிவான சட்டங்கள் கூறப்பட்டுள் ளன. அண்ணல் நபிகளாரின் வாழ்விலும் வாக்குகளிலும் முறை யாக விளக்கப் பட்டுள்ளன. ஒட்டுமொத்த மனிதகுலத்திற்கும் அமைதி தரும் அரு மருந்துகள் விளக்கப்பட்டுள்ளன. இறைவன் கூறுவதைக் கேளுங்கள்.

*‘எவனொருவன் ஒரு மனிதனைக் கொலை செய்ததற்குப் பகரமாக அன்றி அல்லது பூமியில் குழப்பத்தைப் பரப்பிய காரணத்திற்காக அன்றி வேறு காரணத்திற்காக மற்றவனைக் கொலை செய்கின்றானோ அவன் மனிதர்கள் எல்லோரையும் கொலை செய்தவன் போலாவான். மேலும், எவனொருவன் பிறி தொருவனுக்கு வாழ்வு அளிக்கின்றானோ அவன் எல்லா மனிதர் களுக்கும் வாழ்வு அளித்தவன் போலாவான்’. (அல்குர்ஆன் 5:32)*

தண்டனை என்னும் அடிப்படையில் கொலைகாரனையும் பூமியில் சீர்குலைவை ஏற்படுத்துகின்ற படுபாவத்திற்காகவும் தான் ஒருவன் கொலை செய்யப்படவேண்டும் - என்கின்றது, இஸ்லாம். இவைதவிர வேறு எதற்காகவும் யாரையும் கொல் லக்கூடாது.

பகைவர்களின் வயல்வெளிகளை பாழ்படுத்துவது, கால்நடை களை கொல்வது, மரங்களை வெட்டி வீழ்த்துவது, ஆயுதங்களை ஏந்தாத பெண்களையும் குழந்தைகளையும் முதியோரையும் கொல்வது, வழிபாட்டிடங்கள், தேவாலயங்கள் மற்றும் கோவில்களில் இருக்கின்ற மத குருமார்களை, பூசாரிகளை கொல்வது - போன்றவற்றிற்கு இஸ்லாம் கடும் தடை விதிக் கின்றது.

ஃபலஸ்தீன போராளிகள் ஆக்கிரப்பாளர்கள், பகைவர்கள் மீது தொடுக்கின்ற தாக்குதல்களில் இந்த இஸ்லாமிய நெறிமுறை களை முழுக்க முழுக்க பின்பற்றுகின்றார்கள். ஆக்கிரமிப்பு, நில அபகரிப்பு, பயங்கரவாதம், இளஞ்சிறார்கள் படுகொலை, குழந்தைகள் கொன்றொழிப்பு என எவ்வளவோ பாதிப்பு களுக்கு தாங்கள் ஆளாக்கப் பட்ட போதும் ஆயுதம் தரித்துள்ள

படைவீரர்களைத் தவிர வேறு யாரையும் அவர்கள் இலக்காக்கு வதில்லை.

'விளையாட்டின் விதிமுறைகளை நீங்களே தீர்மானிப்பதாக இருந்தால் உங்களை யாருமே வெல்லமுடியாது' என்பார்கள். பத்திரிக்கைகளும் செய்தி ஊடகங்களும் உங்கள் கட்டுப்பாட்டில் இருந்தால் நீங்கள் சொல்வது மட்டும்தான் உண்மையாக இருக்க முடியும்.

இந்த விதி, சர்வதேச அளவில் இன்று யூதர்களுக்கு முற்றிலும் பொருந்துகின்றது. களத்தை அவர்களே உருவாக்குகின்றார்கள், விதிகளையும் அவர்களே வகுக்கின்றார்கள், அவர்களே ஆடுகின் றார்கள், ஆட்டத்தின் ஒரு பகுதியை மட்டும் ஒளிபரப்புகின் றார்கள், வர்ணனையும் அவர்களே செய்கின்றார்கள்.

நாம் வெறும் பார்வையாளர்கள்.

# ஃபலஸ்தீனத்தில் இஸ்லாமிய இயக்கங்கள்!

ஃபலஸ்தீனத்தை, பிரிட்டன் அடிமைப்படுத்திய போதே விடுதலைப் போராட்டம் தொடங்கிவிட்டது. தொடக்கத்தில் மூஸா காழிம், அமீனுல் ஹுஸைனி போன்றோர் தலைமை தாங்கினார்கள். எனினும் புகழ்பெற்ற இஸ்லாமிய இயக்கமான இஃக்வானுல் முஸ்லிமூன் இயக்கம்தான் ஃபலஸ்தீன மக்களை இஸ்லாமியக் கொடியின்கீழ் ஒன்றுதிரள வைத்தது. பிரிட்டிஷ் வல்லரசுக்கெதிராகவும் இஸ்லாமிய மேன்மையை மீட்டெடுக்கும் வகையிலும் இஃக்வானுல் முஸ்லிமூன் இயக்கம் தனது நிகழ்ச்சிகளை வடிவமைத்தது. ஆகையால் பைத்துல் முகத்தஸ் பிரச்சனையின் பக்கம் இயல்பாக அதன் கவனம் திரும்பியது. பைத்துல் முகத்தஸ் பிரச்சனையில் ஆரம்பம் முதலே இஃக்வான்கள் தீவிர கவனம் செலுத்தினார்கள்.

முதலாவதாக, அது அனைத்து முஸ்லிம்களின் பிரச்சனை என்றார்கள். முழு உம்மத்தையும் இவ்விஷயத்தில் விழித்தெழச் செய்யும் முயற்சிகளை மேற்கொண்டார்கள்.

இரண்டாவதாக, இஃக்வான்களின் தலைமையிடம் எகிப்து. ஃபலஸ்தீனப் பிரச்சனையில் ஒரு முக்கிய கதாபாத்திரம், எகிப்து. எனவே நாட்டை ஆளும் அரசை சரியான பாதையில் வைத்திருப்பதும் ஃபலஸ்தீனப் பிரச்சனையில் சரியான நிலைப்பாடு என்ன என்பதை நாட்டு மக்களுக்கு உணர்த்துவதும் எல்லாவற்றிற்கும் மேலாக அரசியல் அரங்கில் அவர்களை ஒன்றுதிரள வைப்பதும் இஃக்வான்களின் செயற்திட்டத்தில் முக்கிய இடம் பிடித்தன.

மூன்றாவதாக, ஆரம்பத்தில் இருந்தே ஃபலஸ்தீன பிரச்சனையில் இஃக்வான்கள் 'தலைமைப் பொறுப்பை' வகித்து வரலாயினர். 1948 ஆமாண்டு நடைபெற்று ஜிஹாதிலும் அதற்குப் பிந்தைய பல்வேறு சம்பவங்களிலும் தங்கள் சொந்தப் பிரச்சனையாக எண்ணி இஃக்வான்கள் தலையிட்டு வந்தனர். எகிப்து,

சிரியா என்றில்லாமல் உலகம் முழுக்க பரவியிருந்த இஃக்வான்கள் தாம் இப்பிரச்சனையை உலக முஸ்லிம்களின் கவனத்திற்கு கொண்டுசென்றார்கள்.

### ஃபலஸ்தீனத்தில் இஸ்லாமிய இயக்கத் துவக்கம்!

முறையான ஆரம்பம் 1935 ஆமாண்டில். அவ்வருடத்தில்தான் இஃக்வான்களின் தலைவரான *ஹஸனுல் பன்னா ஷஹீத்* அவர்களின் சகோதரரான *அப்துர் ரஹ்மான் அஸ்ஸாஆதி*, மற்றும் *முஹம்மத் அஸ்அத் அல்ஹகீம்* ஆகியோர் ஃபலஸ்தீனம், சிரியா மற்றும் லெபனான் பகுதிகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டனர். 1935 ஆகஸ்ட் மாதம் 3ம் நாள் இவர்கள் ஃபலஸ்தீனம் வந்துசேர்ந்தனர். ஃபலஸ்தீனத்து தலைவர்களை குறிப்பாக *அமீனுல் ஹுஸைஃபியை* சந்தித்துப் பேசினர். கருத்துகளைப் பரிமாறிக் கொண்டனர். அதன்பின், இஃக்வான்களின் ஃபலஸ்தீனப் பிரிவின் பொறுப்பாளராக *அமீனுல் ஹுஸைஃபி* நியமிக்கப்பட்டார். இக்குழு எகிப்து போய்ச்சேர்ந்த பிறகு ஃபலஸ்தீனப் போராட்டத்தின் மையமாகவே இஃக்வான்களின் தலைமையகம் மாறி விட்டது.

இதற்கடுத்த வருடம் 1936ல் பல்வேறு முக்கிய பணிகளை இஃக்வான்கள் செய்தனர். (1) ஃபலஸ்தீன மக்களின் துணையோடு தலைமையகத்தில் இமாம் ஹஸனுல் பன்னா அவர்களால் ஃபலஸ்தீன செல் நிறுவப்பட்டது. (2) இளைஞர்களிடையே விழிப்புணர்வை ஊட்டுவதற்கு ஓர் இளந் தலைமுறைப் பிரிவு துவக்கப்பட்டது. இளைஞர்கள், மாணவர்களிடையே எழுச்சியூட்டும் பணியை அது மேற்கொண்டது. (3) 1945 ஆமாண்டு எகிப்து ராணுவத்தின் ஓய்வுபெற்ற அதிகாரியான *மஹ்மூத் லேப்* என்பாரை ஃபலஸ்தீன இளைஞர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக இஃக்வான்கள் அனுப்பினர். இக்காலத்தில் ஏறக்குறைய அனைத்து நாடுகளுக்கும் இஃக்வான்கள் வாயிலாக ஃபலஸ்தீனப் பிரச்சனை போய்ச் சேர்ந்து விட்டிருந்தது. அத்தோடு அனைத்து இடங்களிலும் இதற்காகவே ஒரு முக்கிய இஃக்வான் பொறுப்பாளர் பணிக்கப்பட்டிருந்தார்.

ஒட்டுமொத்த முஸ்லிம்கள் ஒன்றுதிரண்டால் மட்டுமே ஃபலஸ்தீன பிரச்சனையை முடிவிற்கு கொண்டுவர முடியும்

என இஃக்வான்கள் கருதினார்கள். புனிதப்பள்ளியை விடுவிப்பதில் சமூகம் இறங்கியே தீர வேண்டும் என்றார்கள். 1945 ஆண்டு வாக்கில் இஃக்வான்களின் கிளைகள் உலகம் முழுக்க பரவிவிட்டிருந்தன. ஃபலஸ்தீனத்தின் முக்கிய நகரங்களான ஹைஃபா, (Haifa) யாஃபா, கஸ்ஸஹ் (காஸா), குத்ஸ் மற்றும் துஃபைல் போன்ற இடங்களில் இஃக்வான்களின் மையங்கள் செயல்பட்டன. எகிப்து மற்றும் ஃபலஸ்தீன ராணுவத்தோடு இணைந்து ஸியோனிச முயற்சிகளை முறியடிப்பதில் இஃக்வான்கள் பெரும்பணி ஆற்றினர். தெற்கு ஃபலஸ்தீனத்தில் *காமில் ஷரீஃப்* உடைய தலைமையில் ராணுவப்பிரிவு அமைக்கப்பட்டது. அதில் நாலில் ஒரு பங்கினர் இஃக்வான்கள். இதுபோன்றே யாஃபா-வில் முஜாஹிதீன்களுக்கு பயிற்சி அளிக்க ரகசிய பாசறை ஒன்றை இஃக்வான்கள் நிறுவினர். அங்கு முஜாஹிதீன்களுக்கு தீவிரப் பயிற்சி அளிக்கப்பட்டது.

### 1948 ஃபலஸ்தீன ஜிஹாதில் இஃக்வான்கள்!

ஃபலஸ்தீனத்தில் இஸ்லாமிய இயக்கம் தவிர்க்கமுடியாத சக்தி என்பதை 1948 ஆண்டில் ஜிஹாதில் பங்கேற்ற இஃக்வான்கள் உணர்த்தினர். ஃபலஸ்தீனத்து தலைவர்கள் இதனால் உத்வேகம் பெற்றனர். திடமான நெஞ்சுறுதியோடு களத்தில் கலங்காது நின்றால் பகைவர்களை விரட்டி அடிப்பதோடு நிலையான அரசு ஒன்றை நிறுவுவதும் சாத்தியமே என்பதை இஃக்வான்கள் அவர்களுக்கு உணர்த்தினர்.

அரபு நாடுகளின் இரட்டை மனோநிலையையும் ஃபலஸ்தீன் விஷயத்தில் அவர்கள் மனம் தளர்ந்துவிட்டதையும் கண்ட இஃக்வான்களின் தலைவர் ஹஸனுல் பன்னா 1947 ஆமாண்டு அரபுத் தலைவர்களுக்கு ஒரு செய்தியை அனுப்பினார். ஃபலஸ்தீனத்தில் போராட முதல் அணியை இஃக்வான்கள் அனுப்புவதாகவும் அதில் 10 ஆயிரம் இஃக்வான்கள் இருப்பார்கள் என்றும் சொன்னார். அப்போது எகிப்தை *நக்ராஷி* மன்னர் ஆண்டு கொண்டிருந்தார். இதற்கு அனுமதி கொடுக்கமுடியாது என அவர் நிராகரித்துவிட்டார். 1947, டிசம்பர் 15ம் நாள் எகிப்து அரசாங்கத்தை எதிர்த்து இஃக்வான்கள் வலுவான போராட்டத்தை நடத்தினர். இஃக்வான்கள் தன்னார்வத்தோடு இந்த ஜிஹாதில்

ஈடுபடவே உள்ளார்கள் என்பதை அப்போது ஹஸனுல் பன்னா அறிவித்தார்.

ஃபலஸ்தீன போர் தொடங்குவதற்கு முன்பே எண்ணற்ற இஃக்வான்கள் போருக்கு கிளம்பிவிட்டனர். முறையான அறி விப்போடு கிளம்பிய படையணிக்கு புகழ்பெற்ற இஃக்வானிய தலைவர், முஹம்மத் ஃபர்களி தலைமையேற்றார். எகிப்து மட்டுமல்லாமல் இப்படையணியில் லிபியா, துனீஷியா, சூடான், மொராக்கோ மற்றும் யமன் பகுதி இஃக்வான்களும் கலந்து கொண்டனர். ஆயினும் எகிப்து அரசாங்கம் போட்ட முட்டுக் கட்டையால் பலரால் பங்கேற்க முடியவில்லை.

எகிப்திய அரசாங்கத்தில் இடையூறுகளால் வேறுவழியின்ற சினாய் பள்ளத்தாக்கை இஃக்வான்கள் பயன்படுத்தினர். சொல் லாமல் கொள்ளாமல் அங்கிருந்து காஸா பகுதிக்கு போகத் தொடங்கினர். வேறுபல அரபு நாடுகளில் இருந்தும் மக்கள் திரளாக வந்து அப்பகுதியில் இஃக்வான்களோடு சேர்ந்து கொண்டார்கள். இதுவன்றி சிரியா, ஜோர்டான் போன்ற இடங் களில் இருந்தும் இஃக்வான்களால் போர்ப்பயிற்சி அளிக்கப் பட்ட வீரர்கள் வந்து சேர்ந்தனர். இவ்வாறாக இப்படையணி ஃபலஸ்தீனத்தில் அருஞ்செயல்களை நிகழ்த்திக் காட்டியது.



ஒரு கட்டத்தில் ஸியோனிச படையினர் பின்வாங்கத் தொடங்கினர். பல பகுதிகளை காலி செய்யலாயினர். உடனடியாக இஸ்ரேலுக்கு உதவ ஐரோப்பிய படைகள் வந்துவிட்டன. அதே நேரத்தில் எகிப்து அரசும் ஓர் அற்புதமான 'காரியத்தை' செய்து முடித்தது. முதலில் போர்க்களத்தில் இருந்து வீடு திரும்புங்கள் என இஃக்வான்களுக்கு ஆணை பிறப்பித்தது. முடியாது என அவர்கள் மறுத்துவிட்டபோது, உணவு இன்னபிற பொருட்கள் அவர்களுக்கு போகவிடாமல் தடைசெய்தது. வேறுவழியில்லாமல் இஃக்வான்கள் பின்வாங்க நேர்ந்தது.

நாடு திரும்பிய பின், பயங்கரமான சோதனைகளை இஃக்வான்கள் எதிர்கொள்ள நேர்ந்தது. *இமாம் ஹஸனுல் பன்னா* ஷஹீதாக்கப் பட்டார். இயக்கம் தடைசெய்யப்பட்டது. இஃக்வான்கள் கொத்துகொத்தாக சிறைச் சாலைகளில் அடைக்கப் பட்டனர். அங்கே கொடிய சித்திரவதைகளுக்கு ஆளாக்கப்பட்டனர்.

சிறையில் அடைபட்ட பிறகும் காஸா பகுதி மக்களோடு இஃக்வான்கள் தொடர்பிலேயே இருந்தனர். அதற்குரிய வழியை வல்ல இறைவன் ஏற்படுத்திக் கொடுத்தான். ஃபலஸ்தீன மக்களின் ஜிஹாதிய ஆர்வத்தை அணைத்து வேறுவழிகளில் அவர்களது சிந்தனையை முடுக்கிவிடுவதற்காக பல்வேறு குழுக்களை எகிப்து அரசாங்கம் உருவாக்கியது. ஃபலஸ்தீனத்திற்கு போய் மக்களை 'ஆற்றும்' பணியை இவர்கள் செய்தாக வேண்டும். தற்செயலாக இப்பணியில் ஈடுபடுத்தப் பட்டோர் பலர் இஃக்வான்களின் சிந்தனையால் கவரப்பட்டிருந்தனர். அங்கு போய், இவர்கள் 'அந்தப்' பணியைச் செய்யாமல் 'இந்தப்' பணியை செய்யத் தொடங்கினார்கள். அதுமட்டுமல்லாமல் இஃக்வான்களின் தலைமைகத்திற்கும் ஃபலஸ்தீன மக்களுக்கும் இடையே பாலமாகவும் இவர்கள் செயல்பட்டனர்.

## ஜம்இய்யதுல் இஃக்வான் மற்றும் ஜம்இய்யதுத் தவ்ஹீத்!

இயக்கத்தின்மீது தடை விதிக்கப்பட்ட பிறகு, ஃபலஸ்தீன மக்கள் *'ஜம்இய்யத்துல் இஃக்வானில் முஸ்லிமூன்'* என்னும் பெயரில் செயல்படத் துவங்கினார்கள். விடுதலையையும் நீதியையும் கோரும் போராட்டத்தில் ஜம்இய்யா பெரும்பங்கை ஆற்றியது. பெருமளவு *'ஃபிதாஇ'* போராட்டங்களையும் இஸ்

ரேலுக்கு மிகவும் சேதத்தை ஏற்படுத்தும் நடவடிக்கைகளையும் அது, மேற்கொண்டது. ஆனால், 1950 ஆமாண்டில் அதனையும் எகிப்து அரசு தடைசெய்தது. (அச்சமயம் காஸா எகிப்து ஆளுகை யின்கீழ் இருந்தது).

இஃக்வானுக்கும் ஜம்இய்யத்துல் இஃக்வானுக்கும் தடை விதிக்கப் பட்ட பிறகு சகோதரர்கள், *ஜம்இய்யத்துத் தவ்ஹீத்* என்னும் பெயரில் செயல்படத் தொடங்கினார்கள். *உமர் ஸவ்வான்* மற்றும் *ழாஃபிர் அஷ்ஷிவா* ஆகியோர் தலைமை தாங்கினர். சிதறிப்போயிருந்த இஃக்வான்களை இவ்வியக்கம் ஒன்றுதிரட்டி ஓரணியாக்கியது. ஆயினும் அரசியல் களத்தில் ஈடுபடாமல் அழைப்புப்பணி, மக்கள் சேவை, இஸ்லாமிய பண்பாடு போன்றதளங்களில் செயல்பட்டதோடு நின்று கொண்டது. இஃக்வான்கள் மீதான தடை விலகிய பிறகும் *ஜம்இய்யா* இப்பணிகளிலேயே கவனம் செலுத்திவந்தது. அரசியல் நிலைமைகளைக் கருத்தில் கொண்டும் அரசாங்கத்தின் போக்கை மனதில் கொண்டும் இவ்வியக்கத்தை அதன் போக்கிலேயே இஃக்வான்கள் விட்டு வைத்தனர். பல்வேறு இடர்ப்பாடுகளை எதிர்கொண்டவாறு தன் இலக்கை நோக்கி முன்னேறிவந்தது, ஜம்இய்யா. ஆனால் எகிப்து அரசாங்கத்திற்கு இயக்கத்தின் மீது சந்தேகம் வலுத்துக்கொண்டே வந்தது. பொறுப்பாளர்களை சிறையிலடைத்து கடும் வதைகளுக்கு ஆளாக்கியது. இறுதியில் 1958 ஆமாண்டு இயக்கம் தடை செய்யப்பட்டது. 1952 ஆமாண்டு எகிப்துப் புரட்சிக்குப் பின், மறுபடியும் இஃக்வான்கள் எழுச்சி பெற்றனர். அக்காலகட்டத்தில் பல்வேறு முக்கியப்பணிகளை அவர்கள் ஆற்றினர். அவற்றில் ஒரு பணியாக, 1954 ஆமாண்டு காஸாவிலிருந்து வாரயிதழ் ஒன்றை வெளியிட்டனர். 1961 ம் ஆண்டுவரை இடைவிடாமல் அது வெளிவந்து கொண்டிருந்தது.

**ஃபதஹ் மற்றும் இஃக்வான்கள்!**

ஐம்பதுகளில் *ஃபதஹ்* அமைப்பை இஃக்வான்கள் தாம் துவக்கினர். இஃக்வான்களின் சிந்தனையே அங்கும் மையம் கொண்டிருந்தது. போராடினால்தான் வெற்றி கிடைக்கும் என்பதுதான் *ஃபதஹ்* உடைய நம்பிக்கை. *‘ராபிதா துல்லாபுல்*

*முஸ்லிமீன்'* என்னும் மாணவர் அமைப்பில் இருந்து உருவானது தான் *ஃபதஹ்.* இஃக்வான்கள் அதனை 1950 இல் கெய்ரோ-வில் நிறுவினர். எகிப்திலும் காஸாவிலும் இளைஞர்கள், மாணவர் களிடையே அது முனைப்போடு செயல்பட வேண்டும் என இஃக்வான்கள் விரும்பினர்.

இந்த மாணவர் அமைப்பில் இருந்தவர்கள் தாம் பிறகு ஃபதஹ் அமைப்பை ஆரம்பித்தனர். *யாஸிர் அரஃபாத்* போன்றோர் அம் மாணவர் அமைப்பில் முக்கிய பொறுப்பில் இருந்தனர். உலக அரங்கில் எகிப்து மற்றும் காஸாவின் பிரதிநிதிகளாக செயல்பட நிறைய வாய்ப்புகள் மாணவர் அமைப்பின் பொறுப்பாளர் களுக்கு கிடைத்தன. அரபு நாடுகளும் அதனை வெகுவாக ஆத ரித்தன. ஃபலஸ்தீன மக்களின் தலைவராக இருந்த *அமீனுல் ஹுஸைஃபி* போன்றோர் அதனை மிகவும் ஊக்குவித்தனர்.

ஐம்பதுகளில் நிலைமை ஒன்றும் சொல்லிக்கொள்ளும்படி இல்லை. இஃக்வான்களின் பொறுப்பாளர்கள் அனைவரும் சிறைக் கொட்டடிகளில் அடைபட்டுக் கிடந்தனர். அல்லது *ஹிஜ் ரத்* செய்தாக வேண்டிய கட்டாயத்தில் இருந்தனர். 1967 வரை இதேநிலைதான். வெளியில் வந்து பகிரங்கமாக பணியாற்றக் கூடிய சூழலில் இஃக்வான்கள் இல்லை. ஃபலஸ்தீனத்தைச் சேர்ந்த இளைஞர்கள் எப்படியாவது இஃக்வான்களின் தலைமை யோடு தொடர்பு கொள்ள எடுத்த முயற்சிகள் அனைத்தும் வீணாகிப் போயின. அச்சமயத்தில் *அல்ஜீரியாவில்* புரட்சி வெடித்தது. அதனால் இஸ்லாமிய சமூகத்தின் இளைய தலை முறை மிகவும் உற்சாகம் அடைந்தது.

*அல்ஜீரியா* புரட்சியை மனதிற்கொண்டு *யாஸிர் அரஃபாத்* போன்றோர் 1955 இல் ஒரு கருத்தரங்கை ஏற்பாடு செய்தனர். *யாஸிர் அரஃபாத்தோடு அப்துல் ஃபத்தாஹ் ஹமூத், கமால் அத்னான், ஸலாஹ் கலஃப், குமைஸ் ஷாஹீன்* போன்றோர் பங் கேற்றனர். ஃபலஸ்தீன விடுதலைப் போராட்டத்தை முன்னெ டுத்துச் செல்ல புதியதோர் அமைப்பு தேவை என்ற கருத்தை *யாஸிர் அரஃபாத்* முன்வைத்தார். தற்போது ஃபலஸ்தீனத்தில் உள்ள அனைத்து அமைப்புகளும் ஒன்றிணைந்து புது அமைப் பொன்றை நிறுவியாகவேண்டும் என்றார்.

இவர்களுடைய ஆலோசனையின் பேரில் 1957 ஆமாண்டு ரகசியமாக ஃபதஹ் அமைப்பு நிறுவப்பட்டது. ஆரம்ப நாளி லிருந்தே இம்முயற்சிகளில் இஃக்வான்கள் ஆர்வம் காட்டினர். காஸா பகுதியில் பொறுப்பில் இருந்த மூன்று இஃக்வான்களை புதிய அமைப்பில் பங்கேற்கச் செய்தனர். 1963 ஆண்டுவரை எந்த சிக்கலும் எழவில்லை. முழுக்க முழுக்க இஃக்வான்களின் வழிகாட்டுதலின் படியே *ஃபதஹ்* இயக்கப் பொறுப்பாளர்கள் செயல்பட்டனர்.

1963 ஆமாண்டு ஒருசில நடவடிக்கைகளில் *ஃபதஹ்* இறங் கியது. அதைக் கண்ட இஃக்வான்களின் தலைமை புதிய அமைப் பிலிருந்து விலகிவிடும் படி தன் உறுப்பினர்களுக்கு அறிவுறுத் தியது. முற்றிலுமாக அவர்கள் உறவை அறுத்துக் கொண்டார்கள். அதன்பின் *ஃபதஹ்* அமைப்பின் செயல்பாடுகள் வேறுதிசையில் போகத் தொடங்கின. தேசியவாத, கம்யூனிச, சமாதானப் போக் கைக் கொண்ட பலதரப்பினரும் அதில் இடம் பெறத் தொடங்கி னர். அதற்கேற்றாற்போல அமைப்பின் திசையும் போக்கும் மாறத் தொடங்கியது.

இதற்கிடையே 1967 ஆண்டின் கொடிய நிகழ்வுகள் அரங்கே றின. ஃபலதீனர்கள் முற்றிலும் நிலைகுலைந்து போனார்கள். இஃக்வான்கள் மறுபடியும் களம் கண்டார்கள். மக்களின் தளர்ச் சியை போக்கி உத்வேகம் ஊட்டும் முயற்சிகளில் ஈடுபட்டார் கள். வீடுவீடாகப்போய், பள்ளிவாசல், பள்ளிக்கூடம் என எல்லா இடங்களுக்கும் போய் மக்களை சந்தித்துப் பேசினார்கள். 1968 ஆமாண்டு இஃக்வான்களுக்கும் *ஃபதஹ்* அமைப்பிற்கும் இடையே *அமீனுல் ஹுஸைஃபி* சமாதானத்தை ஏற்படுத்தினார். தீவிர எழுச்சியோடு ஃபலஸ்தீன விடுதலைப் போராட்டத்தை இஃக்வான்கள் மறுபடியும் ஒருமுறை முன்னுக்கு கொண்டு சென்றார்கள்.

ஆனால் இந்த *‘உறவும் சமாதானமும்’* வெகுகாலம் நீடிக்க வில்லை. *ஃபதஹ்* அமைப்பின் நினைப்பும் நோக்கமும் வேறாக இருந்தது. பல்வேறு சிந்தனை கொண்டவர்கள் இருந்ததால் அவர்கள் வேறுவிதமாய் யோசிக்கத் தொடங்கினர். கடைசியில் எந்த நோக்கத்திற்காக அமைப்பை இஃக்வான்கள் உருவாக்கி

னார்களோ அந்நோக்கத்தை அது கைவிட்டது. இஸ்ரேல் நாட்டை ஏற்றுக் கொண்டது, போராட்டப்பாதைக்கு பதிலாக பேச்சு வார்த்தைப் பாதையை தேர்வு செய்தது.

1993 இல் ஒஸ்லோ ஒப்பந்தம் 2006 தேர்தல்களில் ஹமாஸின் வெற்றி, இஸ்ரேலுக்கும் ஃபதஹ்விற்கும் இடையிலான உறவும் தொடர்பும் போன்றவை *ஃபதஹ்* அமைப்பை வேறுவடிவத் திற்கு கொண்டுபோயின. மக்கள் மன்றத்திலும் அரசியல் அரங் கிலும் அது பல இழப்புகளைச் சந்தித்தது. இன்றோ *'இருந்து தொலைக்க'* வேண்டியுள்ளதே என்பதற்காக இருந்து வருகின் றது. நம்பிக்கையை இழந்து நாட்டு விடுதலைப் போராட்டத் திற்கு எதுவும் செய்யமுடியாத கையறு நிலைக்கு அது போய் விட்டது.

## ஒரு புதிய இயக்கத்தின் தேவையும் ஹமாஸும்

இஃக்வான்கள் மற்றும் விடுதலை ஆர்வம் கொண்டோரின் குரலாக இருந்தது, *ஃபதஹ்*. ஆனால் வெகுகாலத்திற்கு அதனால் முறைப்படி நடந்து கொள்ள முடியவில்லை. வெறும் அரசியல் லாபங்களுக்காக அது போராடிக் கொண்டிருக்கின்றது என ஃபலஸ்தீன் மக்கள் கருதினார்கள். அதனால் அவர்கள் விரக்தி அடைந்தார்கள். சில ஆண்டுகளுக்குள் ஃபலஸ்தீனத்தில் சிறிதும் பெரிதுமாக பல்வேறு அமைப்புகள் முளைவிட்டன. ஃபலஸ் தீன மக்களின் குரலை பிரதிநிதிப்படுத்தக் கூடிய ஓர் அமைப்பு தேவையாக இருந்தது.

இஃக்வான்களின் முயற்சி மற்றும் *ஷேக் அஹ்மத் யாஸீன் ஷஹீத்* அவர்களின் முன் முயற்சியால் 1987 டிசம்பர் மாதம் 14ம் நாள் *ஹமாஸ் (ஹர்கத்துல் முகாவமத்தில் இஸ்லாமிய்யஹ்)* தொடங்கப் பட்டது. நெடுங்காலமாக *ஷேக் அஹ்மத் யாஸீன்* களத்தில் இருந்தார். ஹமாஸுக்கு முன்னதாக *'அல்ஜம்உல் இஸ்லாமி'* என்னும் அமைப்பை அவர் நிறுவி இருந்தார். அது நன்றாக செயல்பட்டது.

1987 ஆமாண்டு ஹமாஸ் உருவானது. 1987 மற்றும் 1993 ஆண்டு களில் மையம் கொண்ட இன்திஃபாழா மக்கள் எழுச்சியில் மிகவும் சிறப்பாக அது செயல்பட்டது. *முனழ்ழமத்துத் தஹ்ரீருல்*

*ஃபலஸ்தீனிய்யா* தலைமையில் *ஃபதஹ்* இஸ்ரேலை அங்கீ கரித்து விட்டிருந்த காலகட்டம், அது. அங்கீகரித்தது மட்டு மல்ல, ஒன்றிரண்டு ஒப்பந்தங்களையும் செய்திருந்தது. அவை ஃபலஸ்தீனத்திற்கு மிகவும் ஆபத்தானவை.

அதன்பின், *இரண்டாவது இன்திஃபாழா* எழுச்சியிலும் *ஹமாஸ்* அசாதாரணமான பங்களிப்பை வழங்கியது. இஃக்வான் களின் ஃபலஸ்தீன பிரிவு என்றே ஹமாஸ் கருதப்பட்டது. அதனை நிறுவியவர்களில் பெரும்பாலோர் இஃக்வான்கள். ஆயினும், நிர்வாக ரீதியில் அதற்கும் இஃக்வான்களுக்கும் எந்ததொடர்பும் இருக்கவில்லை. செயல்பாடு, வியூகம் என அனைத்து விஷயங்களிலும் ஹமாஸ் தனித்தே செயல்பட்டது.

இஸ்ரேலை, *ஹமாஸ்* ஏற்கவில்லை, போராடியே விரட்ட முடி யும் என்பதில் நம்பிக்கை கொண்டிருந்தது, முழு ஃபலஸ்தீன விடுதலையே தன் மூச்சு என்றது. கடந்த ஃபலஸ்தீன தேர்தல் களில் வெற்றிபெற்றதன் மூலமாக ஃபலஸ்தீனத்தின் பெரிய அர சியல் சக்தியாகவும் மக்கள் மன்றத்தில் மட்டுமல்லாமல் மனங் களிலும் கோலோச்சும் ஆற்றலாகவும் ஹமாஸ் உருவெடுத் துள்ளது. குறிக்கோளிலும் இலக்கிலும் உறுதியான அமைப்பு என *ஹமாஸ்* மதிப்பிடப்படுகின்றது.

ஃபலஸ்தீன மக்களின் உணர்வுகளையும் அவர்களது வலி, வேதனைகளையும் மிகவும் மதிக்கின்றது *ஹமாஸ்*. எந்த வடிவத் திலும் இஸ்ரேலை ஏற்றுக்கொள்ள அது தயாராகவே இல்லை. பேசித் தீர்த்துக் கொள்ளவோ சமாதானம் செய்து கொள்ளவோ இது ஒன்றும் எல்லைப் பிரச்சனை *அல்ல!* - என்கின்றது, *ஹமாஸ்*. ஃபலஸ்தீன மக்களின் உயிர்ப் பிரச்சனை இது.

*கதாஇபுல் கஸ்ஸாம்* - ஹமாஸுடைய ராணுவப்பிரிவு. ஹமாஸின் நிறுவனர்களில் ஒருவரான *முஹம்மத் ழைஃப்* அதன் தலைவர். இஸ்ரேலுடைய நிம்மதியையும் தூக்கத்தையும் பல நாள்களுக்கு கெடுக்கும் வகையில் வேகத்தையும் வலிமை யையும் பெற்றுள்ளது, *கதாயிப்*. எப்படியாவது கதாயிபில் இருந்து நிம்மதி கிடைக்காதா என இஸ்ரேல் ஏங்காத நாளே இல்லை எனலாம்.

மிகவும் நவீன ரக ராக்கெட்டுகளையும் தளவாடங்களையும் கதாயிப் பெற்றுவிட்டிருக்கின்றது. ஏவுகணைகள் ஆயிரன் டோம்களையும் ( Iron Dome batteries) கூட வைத்திருக்கின்றது. அது உருவாக்கியுள்ள சுரங்கங்கள் தாம் இஸ்ரேலுக்கு பெரிய தலை வலியாக இருக்கின்றன. மிருக பலத்தைப் பெற்றிருந்த போதும் இஸ்ரேலால் அதனை சமாளிக்க முடியவில்லை.

முதலாம் இரண்டாம் இன்திஃபாழா எழுச்சிகளுக்குப் பிறகு, 2008, 2012 மற்றும் 2014 ஆண்டுகளில் கதாயிபின் சாதனைகளை உலகமேவியப்போடு பார்த்தது. இதன்விளைவாக ஹமாஸை ஏற்றுக் கொண்டதோடு நில்லாமல் ஹமாஸோடு பேச்சுவார்த் தைக்கும் வந்து உட்கார்ந்தது, இஸ்ரேல்.

மக்கள் ஆதரவைப் பெற்றுள்ள இந்த மகத்தான இயக்கதை உலக வல்லரசுகள் பயங்கர வாத இயக்கம் என அறிவித்துள்ளது மிகவும் ஆச்சரியமாக இருக்கின்றது. அமெரிக்கா, சீனா, ஜப் பான், ஐரோப்பிய கூட்டமைப்பு, கனடா போன்ற நாடுகள் ஹமா ஸையும் கதாயிபையும் பயங்கரவாத அமைப்புகளாக அறிவித் துள்ளன. ஆனால் கடந்த தேர்தல்களும் கடந்த மூன்று போர்களும் மக்களின் மனஓசையே இவ்வியக்கம் என்பதை சந்தேகமின்றி நிரூபித்து விட்டிருக்கின்றன. ஃபலஸ்தீன விடுதலை இவ்வியக் கத்தின்மூலமாகத்தான்கிடைக்கப் போகின்றது. ஃபலஸ்தீன மக்கள் பெருத்த நம்பிக்கையோடு அதனை எதிர்பார்த்திருக் கின்றார்கள்.



# ஃபலஸ்தீன பிரச்சனையில் ஐ.நா.வின் போக்கு!

இறைத்தூதர்களின் பூமியான ஃபலஸ்தீனத்தில் இஸ்ரேல் ஆடி வருகின்ற பேயாட்டத்திற்கு கொஞ்சமும் குறைவில்லாமல் அனைத்து நாடுகளின் கூட்டமைப்பும் (லீக் ஆஃப் நேஷன்ஸ்) ஐ.நா. சபையும் கூட்டாட்டம் ஆடியுள்ளன. அதன் புனிதத்தைக் கெடுத்து அங்கு வாழ்வோரின் உரிமைகளைப் பறித்து அதன் அமைதியைக் குலைத்து நாசமாக்கியதில் ஐ.நா.வுக்கு முக்கிய பங்கிருக்கின்றது. ஆரம்பத்திலிருந்தே ரொம்பவும் ‘நடுநிலை யோடு’ அது, ஒரு தரப்புக்கு சாதகமாக ‘ஆடி’ வருகின்றது.

1918 இல் முதல் உலகப்போர் முடிந்த கையோடு ஐரோப்பிய நாடுகள் தங்கள் கூட்டாளிகளை எல்லாம் கூட்டுச்சேர்த்துக் கொண்டு (மொத்தம் 25 பேர்) 1919, ஜனவரி மாதம் 11ம் நாள் பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் உலகலாவிய அமைதி மாநாடு ஒன்றைக் கூட்டின. பாரிஸ் அமைதி மாநாடு என்றும் அதனைச் சொல்வார்கள். இம்மாநாட்டில் பல்வேறு விஷயங்கள் அலசி ஆராயப்பட்டன, பல ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின. அனைத் திலும் முக்கிய முடிவு ஒன்று எடுக்கப்பட்டது. அனைத்து நாடு கள் அவை (லீக் ஆஃப் நேஷன்ஸ்) அமைப்பதாக முடிவானது. அதன் முதல் கூட்டம் 1920, ஜனவரி, 21ம் நாள் நடைபெற்றது. இரண்டரை ஆண்டுகளாக நடைபெற்று வந்த பாரிஸ் அமைதி மாநாடு அன்றுதான் நிறைவடைந்தது.

பேரே சொல்வதைப் போல நாடுகளுக்கிடையே போர்களை நிறுத்தி ஆயுதங்களை குறைத்து அமைதியை உருவாக்குவதே இந்த அவையில் முக்கிய நோக்கம். உறுப்பு நாடுகளுக்கிடையே பதற்றமோ முரண்பாடோ தோன்றினால் இந்த அவை நடுவராக செயல்பட்டு பேச்சுவார்த்தைகளின் மூலம் தீர்வைத் தேடித்தரும்.

ஆரம்பத்தில் இது என்னவோ சிறப்பாக செயல்பட்டதாக

*சொல்லிக் கொள்கிறார்கள். 1930 களில் சில சிறப்பான நடவடிக்கைகளையும் சில தவறான அடிகளையும் இது எடுத்துவைத்தது. ஆனால் அமெரிக்கா, பிரிட்டன், ரஷ்யா போன்ற ஒருசில உறுப்பு நாடுகளை இதனால் கட்டுப்படுத்த முடியவில்லை என்பதால் ஜெர்மனி, கோஸ்டாரிகா, பிரேசில், ஜப்பான் போன்ற நாடுகள் இவ்வமைப்பை விட்ட விலகுவதாக அறிவித்தன. கடைசியில் இம்முயற்சி தோற்றுப்போனது. விளைவாக, இரண்டாம் உலகப் போர் தொடங்கியது.*

## ஃபலஸ்தீனும் அனைத்து நாடுகள் அவையும்

*ஃபலஸ்தீன் நிலப்பகுதி ஆசியா, ஆப்பிரிக்கா, ஐரோப்பா ஆகிய மூன்று கண்டங்களை இணைக்கும் சங்கமமாக உள்ளது. அரேபியா வளைகுடாவின் ஒரு சிறுநாடு. இறைத்தூதர்களின் பூமி. வரலாறு, சமயம் மற்றும் புவியியல் ரீதியாகவும் மிகவும் முக்கியத்துவம் பெற்ற நாடு.*

*இந்நாட்டை தங்கள் தேசமாக மாற்றியே தீரவேண்டும் என்னும் நோக்கில் யூதர்கள் ஓர் இயக்கத்தை பல நூற்றாண்டுகளாக நடத்தி வந்தார்கள் என்பதைக் கண்டோம். முதல் உலகப் போரில் துருக்கியின் உஸ்மானியப் பேரரசு படுதோல்வியைச் சந்தித்தது. அதன் பின்விளைவாக இப்பகுதி பிரிட்டனின் கட்டுப்பாட்டிற்குள் வந்தது.*

*1917, நவம்பர் 2ம் நாள் பிரிட்டன் வெளிவிவகாரத்துறை செயலரான ஆர்தர் ஜேம்ஸ் பால்ஃபோர் (Arthur James Balfour) என்பார் (யூதரான இவர் 1902 முதல் 1905 முடிய பிரிட்டிஷ் பிரதம அமைச்சராகவும் இருந்தார்) ஓர் அறிக்கையை வெளியிட்டார். பிரிட்டிஷ் ஸியோனிச கூட்டமைப்பின் (Zionist Federation of Great Britain and Ireland) செயலரான ( Baron Rothschild) ரோத்சீல்ட் என்பாருக்கு அவர் எழுதிய ஒரு கடிதத்தின் மூலம் இது வெளிவந்தது. பால்ஃபோர் அறிக்கை (Balfour Declaration) என இது புகழ்பெற்றது.*

*தொடர்ந்து பல்லாண்டுகள் நடந்து முடிந்திருந்த பேச்சு வார்த்தைகள், வாக்குறுதிகளின் பின்னணியில் இவ்வறிக்கை வெளியிடப்பட்டது. 1894ல் இவை தொடங்கி முதல் உலகப்போர் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் சூடுபிடித்து கடைசியில்*

இவ்வறிக்கையின் வடிவத்தைப் பெற்றன. இவ்வறிக்கை என்ன தான் சொல்கின்றது?

ஃபலஸ்தீனத்தில் ஒரு யூதநாட்டை (Homeland for the Jewish people) உருவாக்குவதில் பிரிட்டிஷ் அரசு ஆர்வம் கொண்டுள்ளது. இதற்காக தன்னால் முடிந் தளவு வாய்ப்புகளை அது, உரு வாக்கும்.

கடிதம் குறிப்பிடுகின்ற முக்கிய வாக்குறுதிக்கு பிரிட்டிஷ் அமைச்சரவைக் கூட்டத்தில் 1917,அக்டோபர் 31ம் நாள் இறுதி வடிவம் கொடுக்கப்பட்டது. அதன்பின் அனைத்து நாடுகள் அவையில் முறைப்படி தாக்கல் செய்யப்பட்டது. ஸியோனிச கட்டளைகளை நிறைவேற்றத் தயாராய் இருக்கின்ற பிரிட்டன், அமெரிக்கா, ரஷ்யா போன்றோரே அவையில் அதிகாரம் பெற்றி ருந்ததால் 1922, ஜுலை 22ம் நாள் இதனை ஒப்புக்கொண்டு ஃபலஸ்தீனம் குறித்த சட்டமுடிவை எடுக்கும் அதிகாரத்தை (Man date for Palestine) அவை, பிரிட்டனுக்கு வழங்கியது. இது உண்மை யில், பிரிட்டனுக்கு அல்ல, ஸியோனிச சக்திகளுக்கு கொடுக்கப் பட்ட உரிமையாகும்.

## ஐ.நா. சபை United Nations உருவாக்கம்!

அன்றைய ஐ.நா.வாக திகழ்ந்த அனைத்து நாடுகள் அவை - அமைதியை நிலைநாட்டவும் நாடுகளுக்கிடையே மோதல் களை தடுக்கவும் உருவான அவை- எடுத்தேன் கவிழ்த்தேன் என்று ஃபலஸ்தீன சட்டமுடிவெடுக்கும் உரிமையை பிரிட்ட னுக்கு வழங்கிவிட்டது. முஸ்லிம்களுக்கு கிடைத்தாக வேண் டிய உரிமைகளைப் பற்றியோ நீதியைப் பற்றியோ கொஞ்சமும் கவலை கொள்ளவில்லை. இதன்பின் ‘ஒத்துவராத’ காரணத்தால் அனைத்து நாடுகளின் அவையை கலைத்துவிட்டார்கள்.

இரண்டாம் உலகப்போரின் போது, நேச நாடுகளின் பிரதிநிதி களின் அவையை உருவாக்கும் முயற்சியில் அமெரிக்க ஜனாதி பதி, ரூஸ்வெல்ட் இறங்கினார். ஏப்ரல்-மே மாதங்களில் ஒரு மா நாட்டையும் கூட்டினார். ஐக்கிய நாடுகள் சபைக்கான முன் முடிவு அதில் வரையறுக்கப்பட்டது. கடைசியில் 1945 அக்டோ பர் 24ம் நாள் ஐக்கிய நாடுகள் சபை United Nations அமுலுக்கு வந் தது.

*1922 ஆமாண்டு ஃபலஸ்தீன் விஷயத்தில் அப்போதிருந்த அனைத்து நாடுகள் அவையின் அனுமதியைப் பெற்றிருந்த பிரிட்டன், மக்கள் தொகையை கணக்கெடுத்தது. மொத்த மக்கள் தொகை 8,16,000 பேர். இதில் 7,23,000 பேர் ஃபலஸ்தீனர்கள். வெறும் 93,000 பேரே யூதர்கள். முதலாம் உலகப்போரின் போது மற்ற நாடுகளில் இருந்து ஓடிவந்து ஃபலஸ்தீனத்தில் குடியேறிய யூதர்களும் (22,507) இதில் அடக்கம். இதன் அடிப்படையில் நாட்டைப் பிரிப்பதாக இருந்தால் அது 89:11 என்றே அமைய வேண்டும்.*

*மக்கள் தொகையில் இருக்கும் இந்த விகிதாச்சார வித்தியாசத்தை கணக்கில் எடுக்காமல் அமெரிக்கா, பிரிட்டனின் நிர்ப்பந்தங்களுக்கு பலியாகி ஒட்டுமொத்த சட்டமுடிவெடுக்கும் உரிமையை பிரிட்டனுக்கு வழங்கிவிட்டது, அனைத்து நாடுகள் அவை. சரி, பிரிட்டன் என்ன செய்தது? உலகில் பல நாடுகளில் இருந்தெல்லாம் அடைக்கலம் தேடி ஓடிவந்தவர்களுக்கு அரசியல் ஏகபோக உரிமையை தூக்கிக்கொடுத்தது. மண்ணின் மைந்தர்களை, பூர்வகுடிகளை அநாதரவாக விட்டுவிட்டது. பெயரளவிற்கு கூட அவர்கள் 'ஆட்டத்தில்' சேர்த்துக் கொள்ளப்படவில்லை.*

*உலகில் வல்லரசுகளிடமும் அனைத்து நாடுகள் அவையிலும் ஸியோனிச சக்திகள் எவ்வளவு செல்வாக்கை பெற்றிருந்தார்கள் என்பதற்கு இதுவே உதாரணம்.*

*1947 ஆமாண்டு, ஃபலஸ்தீனத்தில் யூதர்களை நாட்டொன்றை உருவாக்குவதாக பிரிட்டன் தன்னிச்சையாக முடிவெடுத்தது. அதனை ஐ. நா. சபையிலும் தாக்கல் (181ஆ) செய்தது. இதன் பொருள் என்ன? ஸியோனிசத்திற்கு சேவை செய்யும் பொறுப்பு ஒன்றை அனைத்து நாடுகள் அவை, ஏற்கனவே பிரிட்டனிடம் ஒப்படைத்திருந்தது. அதனை சிறப்பாக நிறைவேற்றிய பிறகு, 'அறிக்கையை' இம்மன்றத்தில் வைக்கின்றது என்று தானே பொருள்? இந்த மேற்கத்திய நாடுகள் அனைத்தும் ஒன்றுசேர்ந்து உருவாக்கியது தானே, அனைத்து நாடுகள் அவை? ஆக, அன்று எடுத்த முடிவுதான் இன்று செயல்படுத்தப்படுகின்றது. உலகில் அமைதியை நாட்டுவதற்காக உருவாக்கப்பட்ட இந்த இரண்டா*

வது அவை ஃபலஸ்தீனத்தில் இரத்த ஆற்றை ஓட்டுவதற்கான வாய்ப்புகளை உருவாக்கும் முயற்சிகளையே செய்துவருகின் றது.

கொஞ்சம் கூட நீதியே இல்லாத மக்களின் உரிமைகளை காலில் போட்டு மிதிக்கின்ற ஒரு தீர்மானம் ஐ.நா. பொதுச்சபையில் 1047, நவம்பர், 26ம் நாள் தாக்கல் செய்யப்பட்டது. ஃபலஸ்தீன விஷ யத்தில் பிரிட்டனுக்கு வழங்கப்பட்டிருந்த 'சட்டமுடிவு அதிகா ரம்' முடிவிற்கு வருவதாகவும் ஃபலஸ்தீனத்தை பிரிப்பதாகவும் ஐ.நா. அதில்,அறிவித்தது. இதன்படி மூன்று பாகங்களாக அது, பிரிக்கப்பட்டது. 'அரபுகளுக்கு ஒரு நாடு, இஸ்ரேல், ஜெருஸ லேம் பகுதி ஐ.நா.வின் கட்டுப்பாட்டில்!'.

இதைக்கேட்டு யூதர்கள் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்கள். ஏன், அடைய மாட்டார்கள்? யூத சமயம் தோன்றிய காலம் முதல் வரலாறு நெடுக, நாடுநாடாக அலைந்து கொண்டிருக்கின்றார் கள். எங்கும் நிம்மதியாக வாழ முடியவில்லை. மற்றவர்களின் நிம்மதியைக் கெடுக்காமல் அவர்களாலும் இருக்கமுடியாது. நாடற்ற, நிலமற்ற யூதர்களுக்கு உலக நாடுகளே வலியப் போய் இந்தா, வைத்துக்கொள். ஃபலஸ்தீனத்தை! என்று கொடுத்தால் சந்தோஷம் வராமல் இருக்குமா?

ஆனால், நினைத்தபடி மசோதா தாக்கல் ஆகவில்லை. யூதர் களின் ஒரு குழுவே முட்டுக்கட்டை போட்டுவிட்டது. அவ்வ ளவு எளிதாக தாக்கல் செய்ய அனுமதிக்கவில்லை.

ஏன், என்ன காரணம்? ஐ.நா.வின் எந்த மசோதா தாக்கல் செய் யப்பட்டாலும் அது வாக்கெடுப்புக்கு விடப்படும். முறையான வாக்குகளில் மூன்றில் இரண்டு பங்கு வாக்குகளைப் பெற்றால் தான் எந்த ஒரு மசோதாவும் நிறைவேறும். வாக்கெடுப்பின் போது வராதவர்கள் கணக்கில் கொள்ளப்பட மாட்டார்கள். இப்படி திடுதிப்பென்று மசோதாவை தாக்கல் செய்தால், யார் வாக்களிப்பார்கள்? அன்றைய நிலையில் வெறும் மூன்றே மூன்று நாடுகள்தாம் இஸ்ரேலுக்கு ஆதரவாக வாக்களித்த முன் வந்திருந்தன. மூன்ற வோட்டுகளை வைத்துக்கொண்டு என்ன செய்வது?

*கைகளைப் பிசைந்துகொண்டு யோசித்துக்கொண்டிருக்க வில்லை, அவர்கள். மசோதா தாக்கல் செய்வதை முதலில் தடுத்து நிறுத்தினார்கள். பிற்காலத்தில் தமிழ்நாட்டில் கண்டு பிடிக்கப்பட்ட 'திருமங்கலம்' ஃபார்முலாவை அவர்கள் ஏற்க னவே கண்டுபிடித்து கைவசம் வைத்திருந்தார்கள். உலகின் மிகப் பெரிய விஞ்ஞானிகள் பெரும்பாலோர் யூதர்கள்தானே.*

*'ஆட்சியில் இருப்பவர்கள்தானே இடைத்தேர்தலில் ஜெயிப் பார்கள்?' ஒரு மசோதாவை ஜெயிக்கவைக்க முடியாதா? அமெ ரிக்காவும் ஸியோனிசமும் முன்வைத்த மசோதாவை மற்ற நாடுகள் 'மனமுவந்து' ஆதரிக்க வைப்பதற்கான முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டன. பணம், பதவி, பரிசு (நோபல் வகையறா) எதுவும் முடியவில்லை என்றால் உருட்டுக் கட்டை என பல அமைதி ஆயுதங்களை அவர்கள் வைத்திருக்கின்றார்கள். கடைசி யில், 1947, நவம்பர், 29ம் நாள் என முடிவானது. ஆதரவாக 33 ஓட்டுகளும் எதிர்த்து 13 ஓட்டுகளும் விழுந்தன. 10 நாடுகள் அவைக்கே வரவில்லை (!?). ஐ.நா.வில் ஒரு மசோதா வெற்றி பெறத் தேவையான 'குறைந்த பட்ச' எண்ணிக்கை இது.*

*தன் புஜபலத்தைக் காட்டி ஹெய்தி, பிலிப்பைன், லைபீரியா போன்ற நாடுகளை வாக்களித்த வைத்திருந்தது, அமெரிக்கா. 'இதற்கு ஆதரவாக வாக்களிக்க பெருந்தொகையை ஸியோனிசம் செலவளிக்கின்றது!' என ஐ.நா.விற்கான இந்தியத்தூதர் விஜய லட்சுமி பண்டிட் மன்றத்திலேயே பொதுக்குற்றச்சாட்டை வைத் தார். (இந்தியா ஃபலஸ்தீனத்திற்கு ஆதரவாக எதிர்த்து வாக்களித் தது என்பதை மறந்துவிடக்கூடாது)*

*இவ்வாறு புனித பூமியில் அனைத்து நாடுகள் அவையும் ஐக்கிய நாடுகள் சபையும் நாற்றமெடுக்கும் கேடுகெட்ட உயிரி ஒன்றை கொண்டுவந்து குடிவைத்தன.*

### இஸ்ரேலின் பார்வையில் ஐ.நா.

*உலகத்தில் வரம்பு மீறுகின்ற, வன்முறையில் இறங்குகின்ற நாடுகளை அடக்கிவைக்கவேண்டும் என்பதுதான் இந்த உலக லாவிய அமைப்பின் நோக்கம். பல நாடுகளை இது அடக்கியும் உள்ளது. ஆனால், அவை அனைத்தும் அமெரிக்காவும் இஸ்ரே*

லும் விரும்பாத நாடுகளாகத்தான் இருக்கும். அமெரிக்க வல்லரசின் ஊதாங்குழலாகத்தான் ஐ.நா. செயல்படுகின்றது. அமெரிக்கா செய்யாத அட்டூழியமா? இஸ்ரேல் செய்யாத பயங்கரமா? ஆனால் அப்போதெல்லாம் ஐ.நா வாயே திறக்காது. பிறவி ஊமையாகிவிடும். உண்மையும் அதுதான். அதுவோர் ஊமை. வாயில் மைக்கை திணித்து அமெரிக்கா ஏதாவது பேசினால் அது தான் ஊருக்கே உலகத்திற்கே கேட்கும்.

தான் எதற்காக 'படைக்கப்பட்டோம்?' என்பது ஞாபகத்திற்கு வந்து விட்டால் என்றைக்காவது ஒருமுறை மெல்ல அது முனங்கும். ஆனால் என்ன செய்ய? ஊருக்கு இளைத்தவன் ஊர்க் கோவில் ஆண்டி. பேருதான் ஐ.நா. உண்மையில் அமெரிக்காவின் அமீனா.

உதாரணமாக, 1948 நவம்பர் முதல் 1966 நவம்பர் முடிய இஸ்ரேலுக்கு எதிராக ஏழு தடவை தீர்மானங்களை ஐ.நா. வெளியிட்டுள்ளது. ஆனால், இஸ்ரேலிய பயங்கரவாத அரசு அதில் ஒன்றைக்கூட மதிக்கவில்லை. 1967 ஆமாண்டு என்ன ஆனது தெரியுமா? அரபு-இஸ்ரேல் போர் முடிந்தபின், ஐ.நா. அவை கூடுகின்றது. அப்போதைய இஸ்ரேல் பிரதமர், லெவி இஷ்கோல், (Levi Eshkol) 'ஐ.நா.வின் உறுப்புநாடுகளான 122 நாடுகளில் (அப் போது அவ்வளவுதான்) 121 நாடுகள் இஸ்ரேலை எதிர்த்து வாக்க ளித்து எங்களுக்கு ஆதரவாக ஒரே ஒரு இஸ்ரேலின் வாக்கு மட் டும் இருந்தபோதிலும் வென்ற இடங்களை நாங்கள் திருப்பித் தருவதாக இல்லை!' என ஐ.நா. பொது மன்றத்திலேயே அறிவித்தார்.

ஐ.நா.வால் ஒன்றும் நடக்காது, அது கையாலாகாத அமைப்பு என்பதை அதுவே சொல்லியுள்ளது. 1969, நவம்பர் 11ம் நாள் வெளியிட்ட ஓர் அறிக்கை (எண்: 2546 XXIV) இதனை அப்பட்டமாக வெளிப்படுத்துகின்றது.

*Bearing in mind the provisions of the Geneva Convention relative to the Protection of Civilian Persons in Time of War of 12 August 1949 1/ and the provisions of the Universal Declaration of Human Rights,*

*Recalling the humanitarian resolutions regarding the violations of human rights and fundamental freedoms in the territories occupied by Israel, espe-*

*cially Security Council resolutions 237 (1967) of 14 June 1967 and 259 (1968) of 27 September 1968, Commission on Human Rights resolutions 6 (XXIV) of 27 February 1968 2/ and 6 (XXV) of 4 March 1969,3/ and the relevant resolutions of the International Conference on Human Rights held at Teheran in 1968, the Economic and Social Council, the United Nations Educational, Scientific and Cultural Organization and the World Health Organization,*

*Further recalling its resolutions 2252 (ES-V) of 4 July 1967 and 2443 (XXIII) and 2452 (XXIII) of 19 December 1968,*

*Concerned that the provisions of these resolutions have not been implemented by the Israeli authorities,*

*Gravely alarmed by fresh reports of collective punishments, mass imprisonment, indiscriminate destruction of homes and other acts of oppression against the civilian population in the Arab territories occupied by Israel,*

*1. Reaffirms its resolutions relating to the violations of human rights in the territories occupied by Israel;*

*2. Expresses its grave concern at the continuing report of violation of human rights in those territories,*

*3. Condemns such policies and practices as collective and area punishment, the destruction of homes and the deportation of the inhabitants of the territories occupied by Israel;*

*4. Urgently calls upon the Government of Israel to desist forthwith from its reported repressive practices and policies towards the civilian population in the occupied territories and to comply with its obligations under the Geneva Convention relative to the Protection of Civilian Persons in Time of War of 12 August 1949, the Universal Declaration of Human Rights and the relevant resolutions adopted by the various international organizations;*

*5. Requests the Special Committee to investigate Israeli Practices Affecting the Human Rights of the Population of the Occupied Territories,4/ established under General Assembly resolution 2443 (XXIII) to take cognizance of the provisions of the present resolution.*

‘ஐக்கிய நாடுகள் சபையின் நியதிகளின் படியும் ஆலோசகர்களின் கருத்துகளைப் பெற்றும் போர்க்காலத்தில் பொதுமக்களுக்கான உரிமைப் பாதுகாப்பு தொடர்பான 1949 ஆமாண்டு ஆகஸ்ட் 12ம் நாள் ஜெனீவா-வில் உலக நாடுகளால் ஒப்புக்கொள்ளப்பட்ட மனித உரிமைப் பாதுகாப்பிற்கான உலகநாடுகளின் அறிக்கையிலுள்ள *(Universal Declaration of Human Rights)* ஆலோசனை

களின் படியும் கைப்பற்றப்பட்ட பகுதிகளில் உள்ள அரபுக் களின் அடிப்படை மனித உரிமைகளுக்கோ அவர்களின் சுதந்திரத் திற்கோ எக்காரணத்திலும் ஊறு விளைவிக்கக்கூடாது என இஸ் ரேலுக்கு ஐ.நா.வின் பொதுமன்றம் அறிவுறுத்தியிருந்தது. குறிப் பாக, பாதுகாப்பு கவுன்ஸில் 1967, ஜுன் 14ம் நாள் வெளியிட்ட தீர்மானம், (எண்: 237) 1968, செப்டம்பர் 27ம் நாள் வெளியிட்ட தீர்மானம், (எண்: 259) மனித உரிமைகளுக்கான ஆணையம் (Com mission on Human Rights) 1968, பிப்ரவரி 27ம் நாள் வெளியிட்ட தீர் மானம், (எண்: 6XXIV) 1969, மார்ச் 6ம் நாள் வெளியிட்ட தீர்மானம், (எண்: 6 XXV)

இதுதொடர்பாக, 1968, தெஹ்ரானில் ஒன்றுகூடிய மனித உரி மைகள் பாதுகாப்பிற்கான சர்வதேசிய மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள், ஏற்கனவே ஐ.நா.வின் சமூகப் பொருளாதார கவுன்ஸில், கல்வி, அறிவியல் மற்றும் பண்பாட்டிற்கான அமைப்பு (UNESCO), மற்றும் சர்வ தேசிய சுகாதார அமைப்பு (WHO) போன்றவற்றால் ஒப்புக்கொள்ளப்பட்டிருந்த தீர்மானங் களையே பிரதிபலிக்கின்றன.

மேலும் பொது மன்றம் 1967, ஜுலை 4ம் நாள் வெளியிட்ட தீர்மானம், (V-ES 2252) மற்றும் 1968, டிசம்பர் 19ம் நாள் வெளியிட்ட தீர்மானம், (2443 XXIII) மற்றும் (2452 XXIII) போன்றவற்றை நினைவுபடுத்துகின்றன.

இந்த தீர்மானங்களை நிறைவேற்றிய பிறகும் இஸ்ரேலின் ஆட்சியாளர்கள் இவற்றை நடைமுறைப்படுத்தவில்லை என் பதை பொது மன்றம் அறிவிக்கின்றது. ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள சிவிலியன்கள் அல்லாதவர்களுக்கு பொதுத் தண்டனையை (Collective Punishments) இஸ்ரேல் வழங்கியுள்ளது. கணக்கற்ற மக்களை சிறைகளில் அடைத்துள்ளது. வீடுகளை விட்டு பொதுமக்களை வெளியேற்றியுள்ளது. இதுபோன்றே அது மேற்கொண்டுவரும் இன்னும் பல அநீதமான நடவடிக்கை களை பொது மன்றம் வன்மையாக கண்டிக்கின்றது'. (ஐ.நா. வின் ஆண்டறிக்கை 1969-70 தீர்மான எண்: 2546 XXIV விலிருந்து)

ஆக்கிரமிக்கப்பட்ட அரபுப்பகுதிகளில் மனித உரிமைகள் அள வின்றி மீறப்படுகின்றன என இதற்கு முந்தைய தீர்மானங்களில்

ஒப்புக் கொண்டிருந்ததைப் போன்றே இதிலும் ஐ.நா. ஒப்புக் கொண்டிருந்தது. கூடவே தான் முன்வைக்கின்ற எந்த தீர்மானத் தையும் இஸ்ரேல் கடைப்பிடிப்பதே கிடையாது என்னும் உண் மையையும் ஒப்புக் கொண்டுள்ளது. ஆனாலும் என்ன, முந்தைய தீர்மானங்களைப் போன்றே இதனையும் தூக்கி மூஞ்சியில் வீசி யெறிந்தது, இஸ்ரேல். மனித உரிமைகள் என்றால் கிலோ என்ன விலை எனக்கேட்கும் ரகமல்லவா, அது?.

இவ்வாறே, ஐ.நா.வின் பொதுமன்றம் *(2112th plenary meeting 15 December 1972)* ஒரு தீர்மானத்தை *(A/RES/3005/(XXVII)* முன் மொழிந் தது. ஆக்கிரமிக்கப் பட்ட அரபுப்பகுதிகளில் மனித உரிமைகளை மீறும் வகையிலான அனைத்து நடவடிக்கைகளை யும் இஸ்ரேல் அறவே நிறுத்திவிட வேண்டும் என்பதே அத்தீர் மானம். ஆக்கிர மிக்கப்பட்ட அரபுப் பகுதிகளில் இஸ்ரேல் செய்துவரும் அடா வடித்தனங்கள் ஆராயவேண்டும் என்றும் ஒரு சிறப்புக் கமிட்டி கேட்டுக்கொண்டது.

*Strongly calls upon Israel to rescind forthwith and desist from, all such policies and practices as:*

*(a) The annexation of any part of the occupied territories;*

*(b) The establishment of Israeli settlements in those territories and the transfer of parts of an alien population into the occupied territories;*

*(c) The destruction and demolition of villages, quarters and houses and the confiscation and expropriation of property;*

*(d) The evacuation, transfer, deportation and expulsion of the inhabitants of the occupied territories;*

*(e) The denial of the right of the displaced persons to return to their homes;*

ஃபலஸ்தீன் விஷயத்தில் ஐ.நா. வின் முந்தைய தீர்மானங் களுக்கு ஆளானதே இதற்கும் நேர்ந்தது. ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளின் மனித உரிமை மீறல்களை தடுத்து நிறுத்தவும் முடிய வில்லை, அரபு மக்களுக்கு எந்தவொரு குறிப்பிடத்தக்க பயனை யும் பெற்றுத்தர முடியவில்லை. இஸ்ரேலுடைய மனித நேய மற்ற கொடுங்கோல் நடவடிக்கைகளை தடுத்து நிறுத்தவும் முடியவில்லை.

இதன்பின்பும் பலப்பல தீர்மானங்களை ஐ.நா. நிறைவேற்றியது. அனைத்தையும் காலுக்கடியில் போட்டு பஸ்பமாக்கி விட்டது, இஸ்ரேல். வல்லரசு அமெரிக்காவின் துணையோடு ஸியோனிசம் மேலும் மேலும் வலிமையாகிக் கொண்டே போகின்றது. கடந்த ஆண்டிலும் காஸாவின் மீது அத்துமீறி நுழைந்து பயங்கரவாதத்தை கட்டவிழ்த்துவிட்டது, இஸ்ரேல். பொதுமக்களும் பெண்கள்குழந்தைகளும் குண்டுவீச்சில் அநியாயமாக பலியானார்கள். அதைத் தடுக்கும் விதத்தில் சிறு துரும்பைக் கூட கிள்ளிப்போட முடியவில்லை, ஐ.நா.வால். மாறாக, அது வெளியிட்ட அறிக்கைகளும் செய்ய முன்வந்த உதவிகளும் இஸ்ரேலின் அனுமதியைப் பெற்றபிறகு அல்லது அதன் திருப்தியை அடையும் நோக்கில்தான் செய்யப்பட்டன.

கடந்தகால நிகழ்வுகளையும் நடவடிக்கைகளையும் பார்த்தால், ஸியோனிசத்தின் சிறப்பு உறுப்பினர்தான் ஐ.நா. என்பதை தயங்காமல் சொல்ல முடியும். உலக நாடுகளிடையே அமைதியையும் சமாதானத்தையும் ஏற்படுத்துவது அல்ல, இஸ்ரேலுடைய பாதுகாப்பையும் நிம்மதியையும் உறுதி செய்வதே ஐ.நா.வின் பணி என்பதையும் சந்தேகமில்லாமல் சொல்லமுடியும். இதற்கு முன்னால் ஸியோனிசத்தை வளர்ப்பதிலும் ஆளாக்குவதிலும் இதுபோன்றே அனைத்து நாடுகள் அவையும் செயல்பட்டுக் கொண்டிருந்தது. இஸ்லாமியர்களின் ஒட்டுமொத்த நம்பிக்கைக்குரிய உஸ்மானிய கிலாஃபத்தை வீழ்த்தி விட்டு, ஃபலஸ்தீனத்தை யூதர்களுக்கு தாரை வார்த்துக் கொடுக்கும் அரும்பணியை அனைத்து நாடுகள் அவை தொடங்கி வைத்தது. அதனையே இன்று ஐ.நா. சபை தொடர்ந்து வருகின்றது.

# குயில்களின் வடிவில் சிறகடிக்கும் காகங்கள்!

இலக்கியம் என்பதில் *ஃபேக்* என்பது ஆபத்து என்றால் செய்திகளில் *ஃபேக்* என்பது இன்னும் மோசமான ஆபத்தாகும். உதாரணமாக, *காசா* பிரச்சனையை எடுத்துக்கொள்வோம். இஸ்ரேல் ராணுவத்துக்கும் *ஹமாஸ்* என்னும் இயக்கத்துக்கும் மோதல் என செய்திகள் வெளியாகி நம் மனதில் பதிந்துள்ளது. *ஹமாஸ்* இயக்கத்தை பல நாடுகள் தீவிரவாத இயக்கமாகவே கருதவில்லை என்பதை உண்மை. *காசா* பகுதியை ஆட்சி செய்து வரும் அவர்கள் தம் பகுதி தாக்கப்படும்போது எதிர்த்துப் போராடுகிறார்கள் என்பதே உண்மை. அதை அந்த இயக்கத்தின் மோதலாக சித்தரிப்பதே தவறு.

உதாரணமாக, கார்கிலில் *பாகிஸ்தான்* அத்துமீறியபோது இந்திய ராணுவம் பதிலடி கொடுத்தது. அதை *பிஜேபி* படை பதிலடி கொடுத்தது என எழுதினால் அது தவறான தகவல் அல்லவா? அப்போது *பிஜேபி* ஆட்சி செய்தாலும் போரில் ஈடுபட்டது *பிஜேபி* தீவிரவாதிகள் அல்லர். தம் பகுதியை பாதுகாக்க இந்தியா எடுத்த நடவடிக்கை அது.

அதுபோல, இஸ்ரேலின் தாக்குதலை தடுக்க எடுக்கப்படும் முயற்சிகளை இஸ்ரேலுக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையேயான மோதலாக செய்தி வெளியிடுவது *ஃபேக் ரிப்போர்ட்டிங்* ஆகும்.

சமீபத்தில் *யுக்ரேனில்* ஒரு பயணிகள் விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது அனைவரும் அவசர அவசரமாக அது போராளிகளின் (பிரிவினைவாதிகளின்!?) வெறிச்செயல் என செய்தி வெளியிட்டனர். ரஷ்ய அதிபர் *புடின்* பயணம் செய்த விமானத்தை சுட்டு வீழ்த்த *யுக்ரேன்* செய்த சதியாகவும் இருக்கலாம் என்பதை பலர் சுட்டிக்காட்டவில்லை. காலப்போக்கில் இதுபோன்ற *ஃபேக்* செய்திகள் நம் மனதில் பதிந்து விடுகின்றன.

*தமிழ் மீனவர்கள் சிறைப்பிடிப்பு (இந்திய மீனவர்கள் இல்லை) ஆஸ்திரேலியாவில் இந்திய மாணவர்கள் மீது தாக்குதல் (சீக்கிய மாணவர்கள் இல்லை) போன்றவையும் சிறந்த உதாரணங்கள் ஆகும்.*

ஃபேக் இலக்கியம், ஃபேக் சினிமா, ஃபேக் அரசியல் - பிச்சைக்காரன்

*(நன்றி: உயிர் எழுத்து, மாத இதழ், செப்டம்பர் 2014)*